சைவவித்தியா

சைவவித்தியா விருத்திச் சங்கம்

The Hindu Board of Education

தேசிய சேமிப்பு வங்கி
யாழ்ப்பாணம்

NSB
National Savings Bank

தேசிய சேமிப்பு வங்கியின்
அதிஷ்ட வெள்ளி பரிசூதிய சேமிப்புச் சான்றிதழ்
சேமிக்கும் அதேவேளை

பரிசுகளையும் வெல்லுங்கள்!

ரிதிரேகா தேசிய சேமிப்பு வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட தனிச்சிறப்பு வாய்ந்த சேமிப்புத் திட்டமாகும். அதனூடாக நீங்கள் ஒரே நேரத்தில் சேமிக்கவும் பெறுமதி வாய்ந்த பரிசுகளை வெல்லவும் முடியும். ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் ஒருமுறை நடைபெறும் பரிசுச் சீட்டிழுப்பில் வெற்றிபெறும் 6051 வெற்றியாளர்களுக்கு ரூபா 9.0 மில்லியன்கள் பரிசாக வழங்குகின்றது.

1 வது பரிசு புத்தம்புதிய கார்	1		
பணப்பரிசு	ரூபா		2500000.00
2 வது பரிசு ஒவ்வொன்றும்	ரூபா 10000.00		
பெறுமதியான பணப்பரிசுகள்	50		500000.00
3 வது பரிசு ஒவ்வொன்றும்	ரூபா 1000.00		
பெறுமதியான பணப்பரிசுகள்-6000			6000000.00
	6051		9000000.00

மே 2010இல் 63வது சீட்டிழுப்பு முதன்முறையாக யாழ் நகரத்தில் நடைபெறவுள்ளது. ரிதிரேகா சான்றிதழ்களை கொள்வனவு செய்து பெறுமதி வாய்ந்த பரிசுகளை வென்று வாழ்க்கை முழுவதற்குமான வரப்பிரசாதங்களை மகிழ்ச்சியுடன் அனுபவியுங்கள்.

NSB
National Savings Bank

தேசிய சேமிப்பு வங்கி
யாழ்ப்பாணக் கிளை

சைவ வித்தியா

SAIVA VIDYA

ஆசிரியர் குழு:

[illegible]

[illegible]

[illegible]

வெளியீடு:

சைவ வித்தியா விருத்திச் சங்கம்

திருநெல்வேலி,

இலங்கை.

[illegible]

[illegible]

சைவ வித்தியா

SAIVA VIDYA

ஆசிரியர் ஆயம்:

சோ. பத்மநாதன்

தி. செல்வமனோகரன்

திருமதி சாந்தினி அருளானந்தம்

வெளியீடு:

சைவ வித்தியா விருத்திச் சங்கம்,

திருநெல்வேலி,

இலங்கை.

Journal of The Hindu Board of Education

04.05.2010

மலர்	: சைவ வித்தியா
வெளியீடு	: சைவ வித்தியா விருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி, இலங்கை.
உரிமை	: சைவ வி.வி. சங்கம்
பதிப்பு	: விகிர்தி சித்திரை
தாள்	: 70 Gsm
அளவு	: A/4
பிரதிகள்	: 500
முகப்போவியம்	: ஆசை இராசையா
அட்டை வடிவமைப்பு	: எஸ். கோபிதன்
அச்சுப்பதிப்பு	: குரு பிறிண்டேர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
பக்கங்கள்	: i - viii + 114
விலை	: 400/=

Journal	: Saiva Vidya
Publishers	: Hindu Board of Education
Copyright	: H.B.E
Edition	: May, 2010
Paper	: 70 gsm
Journal size	: A/4
Copies	: 500
Printing	: Guru Printers, 39/2, Adiyapatham Road, Thirunelvely.
Cover	: Asai Rasiah
Cover Layout	: S. Gobithan
Pages	: i - viii + 114
Price	: 400/=



பரசிவ வணக்கம்

அங்கிங் கெனாதபடி யெங்கும் ப்ரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடியெல்லாந்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினில்
தட்டாமல் நின்றதெது சமயகோ டிகளெலாந்
தந்தெய்வம் எந்தெய்வமென்(று)
எங்குத் தொடர்ந்தெதிர் வழக்கிடவும் நின்றதெது
எங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமாய்
என்றைக்கு முள்ளதெதுமேல்
கங்குல்பக லறநின்ற எல்லையுள தெதுவது
கருத்திற் கிசைந்தததுவே
கண்டன வெலாமோன வுருவெளிய தாகவுங்
கருதியஞ் சலிசெய்குவாம்.

-தாயுமானவர்.

மலர் : சைவ வித்தியா

வெளியீடு : சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி,
இலங்கை.

உரிமை : சைவ வி.வி. சங்கம்

பதிப்பு : விகிர்தி சித்திரை

தாள் : 70 Gsm

அளவு : A/4

பிரதிகள் : 500

முகப்போவியம் : ஆசை இராசையா

அட்டை வடிவமைப்பு : எஸ். கோபிதன்

அச்சுப்பதிப்பு : குரு பிறிண்டேர்ஸ்,
39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

பக்கங்கள் : i - viii + 114

விலை : 400/=

Journal : Saiva Vidya

Publishers : Hindu Board of Education

Copyright : H.B.E.

Edition : May, 2010

Paper : 70 gsm

Journal size : A/4

Copies : 500

Printing : Guru Printers,
39/2, Adiyapatham Road, Thirunelveli.

Cover : Asai Rasiah

Cover Layout : S. Gobithan

Pages : i - viii + 114

Price : 400/=



தோரணவாயில்

ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி நிற்கின்ற சைவ வித்தியாவிருத்திச் சங்கத்துக்கு அகவை 87. இந்நாட்டின்- குறிப்பாக, தமிழ் மக்களின் - கல்வி வரலாற்றில் இந்நிறுவனம் தன் முத்திரையை ஆழப் பதித்துள்ளது. கீரிமலையிலிருந்து பதுளைவரையிலும், மன்னார், வன்னி, கிழக்கிலங்கையிலுமாக ஓர் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையையும் 187 பாடசாலைகளையும் நிர்வகித்த மாமனிதர் இந்துபோட் இராசரத்தினம். முன்னே முளைத்த பொன் இராமநாதன், வைத்திலிங்கம் துரைசுவாமி முதலிய செவிகளைவிட வலிமையாக - உறுதியாக - நிமிர்ந்தவர் அவர். க.சி. குலரத்தினம் எழுதிய அவர் வரலாறு இவ்வாண்டுத் தொடக்கத்தில் சங்கத்தால் வெளியிடப்பட்டது.

இல்லப் பிள்ளைகளுடைய ஆக்கங்களைத் தாங்கி 'வானவில்' வருடந்தோறும் வெளிவருகிறது. இப்பொழுது 'சைவவித்தியா' என்னும் இம்மலர் வெளியிடப்படுகிறது. சங்கம் பற்றியும், சைவம் பற்றியும், தமிழ் பற்றியும், கல்வி பற்றியும், சிறுவர் உளநலம் பற்றியும் அரியபல கட்டுரைகளைத் தாங்கி இம்மலர் வெளிவருகிறது. ஆக்கங்களைச் சேர்ப்பதில் உதவிபுரிந்த திரு.அ.தற்பரானந்தனுக்கு நன்றி.

சைவ வித்தியா விருத்தி சங்கம் கூட்டிணைக்கப்பட்ட இலங்கைப் பாராளுமன்றக் கட்டளைச் சட்டம் இல 23 (1926), கௌரவ சு.இராசரத்தினம் அவர்கள் சைவமாணவர் மாநாட்டில் ஆற்றிய உரை, சங்க முகாமைக்குட்பட்டிருந்த பாடசாலைகளின் பட்டியல் முதலிய பெறுமதிமிக்க ஆவணங்கள் பின்னிணைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. இவ்வரிய ஆவணங்களைத் தந்துதவிய திருவாளர்கள் திரு.வீ.சகாதேவசங்கரி, இ.சங்கர் ஆகியோருக்கு நன்றி.

சங்க வரலாற்றில் ஒரு மலர் வெளியிடப்படுவது இதுவே முதல் தடவை. இம்முயற்சிக்கு ஆசிவழங்கிய பெரியோர்க்கும், ஆக்கங்கள் தந்துதவிய அறிஞர்களுக்கும், விளம்பரங்கள் தந்த வங்கிகளுக்கும், வணிகர்களுக்கும், முதற்பிரதி, சிறப்புப் பிரதி பெற்றுப் பேராதரவு நல்கும் புரவலர்களுக்கும், முகப்போவியத்தை வரைந்துதவிய கலைஞர் ஆசை. இராசையாவுக்கும் விளம்பரங்கள் சேகரித்தும் விநியோக ஒழுங்குகளை மேற்கொண்டும் உதவிபுரிந்த திருமதி சிவசக்தி இராதாகிருஷ்ணனுக்கும், எம் குறுக்கீடுகளைச் சகித்துக் கொண்டு மலரை அழகாக உருவாக்கிய குரு அச்சகத்தார்க்கும் எமது நன்றி உரியது.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க!"

– ஆசிரியர் ஆயம்



நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குருமஹா சந்நிதானம் வழங்கிய

அருளாசிச் செய்தி

அன்புசார் பெருந்தகையீர்,

யாழ்ப்பாணம் சைவ வித்தியாவிருத்திச் சங்கம் இன்று தனது 100ஆவது ஆண்டை நோக்கி வெற்றிகரமாக நடைபோடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். யாழ்ப்பாண சமூகத்தின் நீண்ட பாரம்பரியமான சைவ சமயமும் தமிழ் மொழியும் வளர்ந்து ஓங்குவதற்காக அமைக்கப்பட்டதே சைவ வித்தியா விருத்தி சங்கம். இந்நாட்டில் அறியாமையும் ஏழ்மையும் இல்லாத சூழலை உருவாக்க சேர்.பொன் இராமநாதன், சேர்.வை.துரைசுவாமி. இவர்களின் சிந்தனையில் உதித்த சங்கம் இந்து போர்ட் இராசரத்தினத்தினால் கட்டிவளர்க்கப்பட்டு இன்று சைவ ஏழைச்சிறார்களுக்கு கல்வி, உணவு, உறைவிடம் அனைத்தையும் கொடுத்து நிறைவான சமுதாயத்தை உருவாக்கும் பணியில் முன்னனியில் திகழ்வது அனைவரையும் மகிழ்வடையச் செய்கிறது. இப்பணி பல யுத்தங்களுக்கு மத்தியில் சிறப்புடன் நடைபெற்று வந்தமை அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தந்தது.

தொடர்ந்து வரும் இக்காலத்திலும் இப்பணியை சிறப்பாக நடாத்திவரும் அனைத்து அன்புள்ளங்களையும் வாழ்த்திப்பாரட்டுகின்றோம். இப்பணியின் மகுடமாக "சைவ வித்தியா" எனும் மலர் மலர்வது அனைத்து சைவத்தமிழ் மக்களுக்கும் பெருமை தருவதாகும். சைவ வித்தியா விருத்தி சங்கம் பல்லாண்டு காலம் வாழ இறையருளை வேண்டுகிறோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

05-04-2010.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
இரண்டாவது குருமஹாசந்நிதானம்

யாழ் மாவட்ட அரச அதிபரின்
வாழ்த்துச் செய்தி

சைவமும் தமிழும் இரண்டறக் கலந்த, யாழ்ப்பாண மண்ணில், தனித்துவமான பாரம்பரியமும் பண்பாடும் பேணப்பட்டு வந்தமையை யாவரும் அறிவர். அந்நியராட்சிக் காலத்தில் இந்நிலையில் தளர்வு ஏற்பட்ட வேளை, நிலைமையின் விபரீத விளைவினை உணர்ந்த, அந்நாளில் வாழ்ந்த சைவத்தமிழ் அறிஞர்கள் சிலர் கூடி 1923 ஆம் வருடம் மார்கழித் திங்கள் 9ஆம் நாளில் “சைவ வித்தியா விருத்தி சங்கம்” ஒன்றை அமைத்து சைவத்தமிழ் காக்க முனைந்தனர். உன்னதமான சேவையொன்றின் உதயமாய், இவ்வித்தியா விருத்தி சங்கம் இன்று 85 ஆண்டுகளுக்கு மேலான சேவையை எம் மண்ணில் வழங்கி வருகின்றது.

பெயரளவில் செயற்படாது, பேரன்புடன் செயற்பட்ட இவ்வித்தியா விருத்தி சங்கத்தினர், சைவ வித்தியா விருத்திக்குச் சமுதாயத்தில் தடையாயிருந்த நிலமைகளைக் கண்டறிந்தனர். “கொடிது கொடிது இளமையில், வறுமை” என்ற ஔவையின் கூற்றுக்கிணங்க வறுமையில் வாடிய சிறார்களுக்கு உணவு, உடை, உறையுளொடு கல்வியும் தந்து, காப்பதற்காய் அமைத்த காப்பகம், இன்று நாட்டிலேயேபெரும் சிறுவர் இல்லமாக விளங்குகிறது. சைவ வித்தியா விருத்தி சங்கமெனும் பெயரில் அன்று ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கத்தின் செயற்பாடுகள் , சமுதாயத்தின் தேவைக்கேற்றவாறு, விரிவாக்கப்பட்டதன் விளைவாக இதன் நிர்வாகத்தின் கீழ் சைவப்பாடசாலைகள், ஆங்கிலப்பாடசாலைகள், நெசவு நிலையங்கள், கூடை இழைக்கும் நிலையங்கள், அநாதை இல்லங்கள், ஆசிரிய பயிற்சிக் கலாசாலை என்று பல தரப்பட்ட நிறுவனங்களும் இயங்கத் தலைப்பட்டன. சைவத்தமிழ்ப் பற்றும், நல்லுளமும் கொண்ட வள்ளல்களின் உதவியும் சைவவித்தியா விருத்திச் சங்கத்திற்கு உறுதுணையாய் அமைந்தன.

சேர்.பொன். இராமநாதன், சேர். வை. துரைசாமி முதலிய பெரியோர்களினால் தொடக்கப்பட்டு “இந்து போர்ட்” இராசரத்தினால் வளர்த்தெடுக்கப்பட்ட சைவவித்தியா விருத்தி சங்கம் இன்று நூற்றாண்டை நோக்கி, நிமிர்ந்து நடக்கின்றது. சைவப்பெரும் அறிஞரும், சட்டத்தரணியுமான இராசரத்தினம் அவர்களின் தன்னலமற்ற தளராத சேவை சைவ வித்தியா விருத்தி சங்கத்தை எமது மண்ணில் வேரோடி விழுதுவிடச் செய்துள்ளது. “இந்து போர்ட்” அடைமொழி அவரின் பெயருக்கு முன்னின்று, அவர் சைவ விருத்தியா விருத்திச் சங்கத்தோடு இரண்டறக் கலந்தமையை எடுத்தியம்புகிறது.

உன்னத பணியில் ஓயாதுழைக்கும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினால், தனது 85 ஆண்டுகளுக்கு மேலான அரும்பணிகளை ஆவணப்படுத்துமுகமாக வெளியிடப்படும் “சைவவித்தியா” எனும் மலர், மக்கள் மத்தியில் நல்லுணர்வூட்டி, மேலும் வலுவூட்டிடும் வாடாமலராகத் திகழ்ந்திட மனமுவந்து வாழ்த்துகிறேன்.

க. கணேஷ்

05-04-2010.

அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்,
மாவட்ட செயலகம்.

நல்லூர்ப் பிரதேச செயலரின் வாழ்த்துச்செய்தி

நல்லூர்ப் பிரதேச செயலகப் பிரிவிற்குள் அமைந்துள்ள சைவ வித்தியா விருத்திச் சங்கமானது மிக நீண்டகாலமாக தமிழ்ச் சமூகத்திற்கு நற்பணியாற்றி வருகின்றமை யாவரும் அறிந்ததே. எம்மத்தியில் வாழ்ந்து மறைந்த பெருந்தகைகளான சேர்.பொன்.இராமநாதன், சேர்.வை.துரைசாமி போன்றவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, பின்வந்த இந்துபோர்ட் இராசரத்தினம் அவர்களின் பெருமுயற்சியால் வளர்க்கப்பட்ட இந்நிறுவனம், இன்று பெருவளர்ச்சி கண்டு சேவையாற்றி வருகின்றமை சைவ சமயத்தவர்களுக்குப் பெருமை சேர்க்கின்றது.

அந்தவகையில் சமூகத்தில் பெற்றோரால் கைவிடப்பட்ட மற்றும் அநாதைச் சிறுவர்களை ஆதரித்துப் பராமரித்து அவர்களின் எதிர்காலம் வளம்பெற வேண்டுமென்ற பெருநோக்கில் ஒரு சைவச்சிறுவர் இல்லம் இந்நிறுவனத்தால் நடாத்தப்பட்டு வருகின்றது. இவ்வில்லத்தில் உள்ள சிறுவர்கள் சைவ முறைப்படி உணவு, உடை, உறைவிடம் வழங்கப்பட்டு பராமரிக்கப்படுவதோடு அவர்களது அறிவுக்கண்ணைத் திறக்க கல்வி வசதியும் செய்து தரப்படுவது குறிப்பிடத்தக்க விடயமாகும். இச்சிறுவர் இல்லத்தில் வளர்க்கப்பட்டவர்கள் பல்துறைகளிலும் முன்னேற்றமடைந்து தமது எதிர்கால வாழ்வைச் சிறப்பாக நடாத்திச் செல்வதைக் காணமுடிகின்றது.

இவ்வாறாக சமுதாயத்தில் சீரிய பணியாற்றிவரும் மேற்படி சங்கமானது, தனது மற்றொரு பணியாக "சைவ வித்தியா" என்கின்ற மலர் ஒன்றை வெளியிட இருப்பது அறிந்து மகிழ்வடைகின்றேன். கலை, கலாச்சாரம், சமயம் போன்ற பல விடயங்களைத் தாங்கி வருகின்ற இந்த மலர் மாணவர்களுக்கு மட்டுமல்லாது எல்லோருக்கும் பயன்படும் வகையில் அமையும் என நம்புகின்றேன். இப்புதிய முயற்சியில் ஈடுபட்டுள்ள சைவவித்தியா விருத்திச் சங்கமானது இது போன்ற பல பயன்தரும் சேவைகளை ஆற்ற வேண்டுமென கேட்டுக் கொண்டு, "சைவ வித்தியா" மலர் சிறப்புற வெளிவர எனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பா. செந்தில்நந்தனன்

05-04-2010.

பிரதேசச் செயலர்,

நல்லூர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தரின் வாழ்த்துச்செய்தி

கல்வியே எங்களின் அழியாத பெருஞ்செல்வம். அதனைக் காத்தும் வளர்த்தும் எங்கள் சமுக வரலாற்றுடன் இரண்டறக் கலந்துள்ள சைவவித்தியாவிருத்திசங்கம் விரைவில் நூற்றாண்டு காணும் செய்தி மனதிற்கு பெருமையையும் நிறைவையும் தருகின்றது.

சேர் பொன் இராமநாதன் அவர்களின் உயரிய சமுக தரிசனமும் "இந்துபோட்" இராசரத்தினம் அவர்களின் அர்ப்பணிப்பான உழைப்பும் சைவவித்தியாவிருத்திச்சங்க மேன்மைகளின் ஆதார மூச்சாகும். இந்து போட் ஆசிரியரான என் அப்பாவின் வாயிலாக சைவ வித்தியா விருத்திச் சங்கம் எமக்களித்த ஆசிரியத்துவத்தின் மேன்மைகளை இளமைக்கால சமுக மயமாக்கமாகவே பயிலும் பேறு வாய்த்தமையை இவ்வேளையில் பகிர்ந்திட விரும்புகின்றேன்.

"பண்பாட்டின் வழியான கல்வி", "எல்லோருக்கும் கல்வி" என்பன சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் உயரிய இலக்குகளாக தேசமெல்லாம் கல்விச்சாலைகள் அமையப் பெற்றன. சங்கத்தின் தெய்வப்பணியாக வறுமையின் குழந்தைகளாய், சமுக அவலங்களினால் அனாதைகளான பிள்ளைகளுக்கு அடைக்கலம் தரும் நிறைவாழ்வு இல்லப்பணி அமைந்துள்ளது.

சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் மேன்மைக்காய் அதன் உயரிய இலட்சியங்களின் வெற்றிக்காய் நேரிய உள்ளத்துடன் உழைக்கும் அத்தனை பேருக்கும் எல்லையில்லாத எனது அன்பு வாழ்த்துக்கள்.

பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கன்
துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி.

துணைவேந்தர் பணிமனை
05-04-2010.

சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவர் வழங்கிய வாழ்த்துரை

தமிழ் மொழியில் "அ"னா "ஆ" வன்னா "இ" னா என்ற உயிர் எழுத்துக்களில் "அ" னா சைவத்திற்கும் தமிழுக்கும் அருந்தொண்டாற்றிய காரைநகர் அருணாசலம் அவர்களைக்குறிக்கும் என்றும் "ஆ" வன்னா சைவசமய நெறிக்கும் தமிழ் மொழிக்குமே பெருந்தொண்டாற்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களை குறிக்கும் என்றும், "இ" னா நாவலர் வழியில் அவரது இலட்சியங்களை நிறைவேற்ற உழைத்த சைவப்பெரியார் "இந்துபோட்" இராசரத்தினம் அவர்களை குறிக்கும். அவர்களின் நூற்றிஇருபத்தைந்தாம் அகவை நிறைவினையொட்டி வெளிவரும் இம்மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20 ஆம் நூற்றாண்டிலும் வாழ்ந்தவர் கௌரவ சு.இராசரத்தினம் அவர்கள். இவர் புகழ்பூத்த நியாயதுரந்தரர் ஆக இருந்து சைவத்தமிழ்ச்சிறார்கள் தமது சமயச் சூழலிலேயே கற்கவேண்டுமென்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஐயாவின் சிந்தனையை நடைமுறைப்படுத்தத் தனது உடல், பொருள், ஆவி அத்தனையையும் அர்ப்பணித்தவர் என்றால் மிகையாகாது. தனக்கென எதனையும் சேர்க்கவில்லை. சொந்த வீடுகூட இல்லாமல் மைத்துனர் வீட்டில் வாழ்ந்தவர். நியாயவாதி ஆக இருந்தும் அத் தொழிலை மேற் கொண்டு வருமானந்தேடாது தன்னையே தியாகஞ்செய்து சைவத்தமிழ் மக்களால் தெரிவு செய்யப் பெற்ற பிரதிநிதியாகச்சட்டசபையை அலங்கரித்தவர். சட்ட சபையில் அவரது நண்பன் டொன்பரன் ஜயதிலகாவுடன் இணைந்து ஒரு மைல் தூரத்திற்குள் இன்னொரு பாடசாலை ஸ்தாபிக்கக்கூடாது என்ற அரசின் விதியை இல்லாமற் செய்வித்தார். இதன் மூலம் புறமதப் பாடசாலைகளுக்கு அருகிலேயே சங்கம் சைவப்பாடசாலைகளை ஸ்தாபிக்க முடிந்தது.

மேலும் சைவப்பிள்ளைகளுக்குக் கல்விபோதிக்கச் சைவாசிரியர்களை உருவாக்கும் சைவாசிரியர் பயிற்சிக்கலாசாலையையே உருவாக்கினார். இன்று மனித உரிமை பற்றி எல்லோரும் பேசுகின்றனர். ஆனால் அன்று சைவப்பிள்ளைகளின் கல்வி உரிமைக்காக வாதாடி வெற்றியும் கண்டவரே சுப்பிரமணியம் இராசரத்தினம் ஆவர். ஆதரவற்ற சிறுவர்களுக்குத் திருநெல்வேலியில் சைவச்சிறுவர் இல்லங்களை ஸ்தாபித்தார். அத்துடன் தினமும் மூன்று வேளையும் அச்சிறார்களின் சுகம் விசாரித்துத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் கண்ணுங்கருத்துமாயிருந்தார். இவ்வளவுதூரம் சைவச் சூழலில் பிள்ளைகள் வளர்ந்து கற்கவும் சமபந்தியோசனஞ் செய்யவும் வாழ்க்கையில் சமத்துவமாக வாழவும் போதித்தார். அக்காலத்தில் உயர் சாதி எனத் தம்மைக் கூறுவோர் சம ஆசனத்தில் எல்லோரையும் வைத்துக் கற்பித்தற்கு எதிர்ப்புத் தெரிவித்துச் சில பாடசாலைக்கட்டிடங்களை தீயிட்டு எரித்தனர். அதற்கும் அஞ்சாது உடனேயே கொட்டகைகள் அமைத்துப் பாடசாலைகளை நடாத்திய பெருமை படைத்தவர்.

தனக்கென வாழாது சைவத்தமிழ் மக்களுக்கே தன் வாழ்நாளை அர்ப்பணித்து வாழ்ந்த சைவப்பெரியார் கௌரவ சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்களுக்கு நன்றியுடையோராக வாழ்வோமாக. அவரது சேவைகளை இன்றைய மக்கள் அனைவரும் அறியக் கூடியதாக வெளிவரும் இம்மலருக்கு வாழ்த்துரைவழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன். அவர் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்வதே எம் பணியும் கடனும் ஆகட்டும். "சைவ வித்தியா" சிறப்புற மலர வாழ்த்துகிறேன்.

கலாசாலைவீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

அ. தற்பரானந்தன்
தலைவர்,
சைவவித்தியா விருத்திச் சங்கம்

பொருளடக்கம்

	பக்கம்
தோரணவாயில்	i
அருளாசியுரை	ii
வாழ்த்துரைகள்	iii
இல்லக்கீதம்	viii

இயல் - 1

1.	பதிவுகள்	01
2.	சைவசமயம், தமிழ்க்கல்வி, சமுதாய, கலாசாரப் பாதுகாவலர் - க. மகேஸ்வரன்	05
3.	சு. இராசரத்தினம் அவர்களின் கல்விப் பணிகள் - சில குறிப்புக்கள் - கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்	09
4.	இந்து போட் இராசாரத்தினம் அவர்களும் சைவ. வி. வி. சங்கத்துடனான என் தொடர்பும் - சி. இராஜநாயகம்	13
5.	சைவப்பெரியார், இந்து போட் சு. இராசரத்தினம் - வை. க. சிற்றம்பலம்	16
6.	ஓர் ஏழை மாணவனின் கதை - சோ.க. தம்பிப்பிள்ளை	17
7.	சைவ வி. வி. சங்கமும் செயலாளர் சு.இராசரத்தினம் அவர்களும் - ச. சரவணமுத்து	21
8.	நாவலர் கலைத்தொண்டின் காவலன் இந்துபோட் இராசரத்தினம் - க. பேரம்பலம்	22
9.	வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் இந்துபோட் இராசரத்தினம் ஐயா - ச. சுப்பிரமணியம்	25
10.	சைவ வி. வி. சங்க மனேஜர் சு. இராசரத்தினம் அவர்கள் பற்றிய நினைவுகள் - பண்டிதை திருமதி பொன். பாக்கியம்	27
11.	சுதேசியம் காத்த சுத்த வீரர் சு. இராசரத்தினம் ஐயா - செல்வி. இ. சுப்பிரமணியம்	29
12.	அநாதரட்சகர் திரு. சு. இ. ஐயா - க. நாகேஸ்வரி	34
12.	நிறைவாழ்வு இல்லம் தந்த களப்பயிற்சி - ஆறு. திருமுருகன்	35
13.	ஆதரவற்றோருக்கு அள்ளிவழங்குங்கள் - உதயன் ஆசிரியர் தலையங்கம்	37
14.	கர்ம வீரர் இந்துபோட் இராசரத்தினம் கட்டி வளர்த்த இன்றைய சைவச்சிறுவர் இல்லம் - பண்டிதர் வ. நடராஜன்	38
15.	சைவச்சிறார்கள் சமயச்சூழலில் கற்க வசதிசெய்த "இந்துபோர்ட்" - திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்	41
16.	Glimpses of the Great Reformer - **V. Sahadevasangari**	43

இயல் - 2

17.	மெய்ப்பொருளும் மெய்யுணர்வும் - திருமதி நாச்சியார் செல்வநாயகம்	44
18.	கந்தபுராணம் காட்டும் சிவவடிவங்கள் - கலாநிதி மா. வேதநாதன்	46
19.	பெரிய புராணத்தில் பெண்மையின் தனித்துவம் - கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்	49
20.	குமரகுருபரர் - சில குறிப்புக்கள் - பேராசிரியர் சி. சிவலிங்கராஜா	53
21.	ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் ஆளுமை - சாந்தினி அருளானந்தம்,	56
22.	ஈழத்தில் சைவத் தமிழ்க் கல்வியும் நவீனத்துவமும் - ஈஸ்வரநாதபிள்ளை குமரன்	58
23.	ஈழத்தின் சைவக்கல்வி மரபு - சிவ. மகாலிங்கம்	65
24.	யாழ்ப்பாணத்தில் விஷ்ணு வழிபாடு - திருமதி விக்னேஸ்வரி பவநேசன்,	69
25.	கோவில்கள் - ஒரு பார்வை - திருமதி சசிகலா சிவநாதன்	74
26.	குழந்தைப் பருவச் சடங்குகள் - நயினை எஸ். சோமேஸ்வரபிள்ளை	80
27.	காப்பகச் சிறுவர்களின் உளநலம் - கோகிலா மகேந்திரன்	82
28.	பாலுக்குப் பாலகன் (நாடகம்) - குழந்தை ம. சண்முகலிங்கம்	85
29.	"இந்துபோர்ட் இராசரத்தினம் - காலமும் வாழ்வும்" : ஒரு மதிப்பீடு - பேராசிரியர் மா. சின்னத்தம்பி	88
30.	Resources and Opportunities for Private Investment in Post Conflict Jaffna - **S. Vijayakumar**	91

பின்னிணைப்பு

1.	சைவ வித்தியா விருத்திச் சங்கம் தோற்றுவித்த பாடசாலைகளின் விபரம்	96
2.	An Ordinance to incorporate the Hindu Board of Education	98
3.	Hindu Education in Jaffna A paper read by The Hon. Mr. S. Rajaratam, M.L.C Before The Hindu Students' Movement, Colombo.	100
4.	சைவ வித்தியா விருத்திச் சங்க பணிப்பாளர் சபை பற்றிய விபரம்	108

இல்லக்கீதம்

பல்லவி

இறைவா நின் திருக்கோயில் வலம் வந்தோம் - உன்
இரு பாதம் துணை நம்பித் தொழுகின்றோம் (இறைவா)

அநுபல்லவி

நிறைவாழ்வு தரும் இல்ல நிழல் வந்தோம் - எம்
நினைவெல்லாம் ஈடேற விழைகின்றோம் (இறைவா)

சரணம்

அன்புக்கும் பரிவுக்கும் எமதில்லம் - ஆ
தரவற்ற சிறுவர்க்கும் எமதில்லம்
பண்புக்கும் ஒழுங்குக்கும் எமதில்லம் - எமைப்
பாலித்து நிறைவாழ்வு தருமில்லம் (இறைவா)

கலை கல்வி தொழில் யாவும் பயில் கோயில் - எமைக்
கண்காணித் துருவாக்கும் திருக்கோயில்
சிலையாக நிற்கின்ற மூதாதை - அந்த
தெய்வீக மனிதர் நம் வழிகாட்டி (இறைவா)

தொண்டுள்ளம் அன்புள்ளம் துணையாக - இளந்
தோளேந்தித் துணிவோடு நடக்கின்றோம்
என்றென்றும் எமதில்ல நினைவெம்மை
ஈடேற்றும் எம் வாழ்வில் ஒளியேற்றும் (இறைவா)

ஆக்கம்:
கவிஞர் சோ. பத்மநாதன்

உ

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

சைவ வித்தியா விருத்திச் சங்க நிறுவுநர்

உயர்திரு சு. இராசரத்தினம்

04.07.1884 – 12.03.1970

பதிவுகள்

ஒரு காலத்தில் 187 பாடசாலைகளையும் ஓர் ஆசிரிய கலாசாலையையும் பரிபாலித்து வந்த சைவ வித்தியா விருத்திச் சங்கம், 1961இல் அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்ற பின், சைவச் சிறுவர் இல்லத்தை நிர்வகிப்பதோடு தன் பணியை எல்லைப்படுத்திக் கொண்டது.

இலங்கையிலேயே மிகப்பெரிய இல்லமாகிய எமது சிறுவர் நிறைவாழ்வு இல்லம் பல சோதனைகளை எதிர்கொண்டு நிமிர்ந்து இன்று அபரிமிதமான வளர்ச்சி கண்டுள்ளது. வறுமைக் கோட்டுக்கீழுள்ள 200 பிள்ளைகள் இவ்வில்லத்தில் தங்கி உணவு, உடை, உறையுள், கல்வி, தொழிற்பயிற்சி ஆகியன பெற்றுப் பயனுள்ள குடிமக்களாக வெளியேறுகிறார்கள்.

தொண்ணூறுகளில் நிலவிய போர்ச் சூழலும், 1995இல் நிகழ்ந்த இடப்பெயர்வும் எம்மை ஒட்டாண்டிகளாக்கிவிட, நாம் மீண்டும் நிமிர உதவிய நிறுவனங்களுக்கும் அன்பர்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவிப்பது நமது கடனாகிறது.

சமூக சேவைகள் திணைக்களம் ஒரு பிள்ளைக்கு உதவித் தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூபா 300/= வழங்கி வந்தது. 2007ம் ஆண்டு தொடக்கம் இது ரூபா 500/= ஆக அதிகரிக்கப் பட்டுள்ளது. தனிப்பட்ட நன்கொடையாக ரூபா 40,000/= பெறுமதியான தளபாடங்கள், துணிமணிகள், சமையல் பாத்திரங்கள் போன்றவற்றை வருடாவருடம் வழங்கி வருகிறது. அத்துடன் 05 தையல் இயந்திரம், விளையாட்டு உபகரணங்கள், தளபாடங்கள் முதலியன வழங்கியது.

Lanka Agro Action 1993 ம் ஆண்டு தொடக்கம் 2004ம் ஆண்டு வரை நிதி உதவி வழங்கி வந்தது.

UNHCR நிறுவனம் பெண்கள் பகுதியில் 60'× 20' அளவில் பேழைகளோடு கூடிய ஒரு விடுதியும், பெண்கள் தங்கும் பழைய மண்டபத்தில் 60 சிறிய பேழைகளும் 5 குளியலறையும், ஆண்கள் விடுதி இராசரத்தினம் மண்டபத்தில் 60 சிறிய பேழைகளும் கட்டித் தந்தனர்.

Norwegian Lions Club in Trondheim (வட்டுக்கோட்டை அரிமாக்கழகம்) அலுவலகக் கட்டிடம், தங்கம்மா மண்டபம் ஆகியவற்றை நிர்மாணித்ததுடன் 95 வாங்கு, 95 மேசை, தொலைக்காட்சிப் பெட்டி, Hi-ace வான் போன்றவற்றுடன் பிள்ளைகளுக்குத் தேவையான காகிதாதிகளையும் அவ்வப்போது வழங்கி வந்தனர்.

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு (RRAN) பெண்கள் விடுதியில் கிணறு, நீர்த்தாங்கி, சுற்று மதில் உயர்த்திக் கட்டித் தந்ததுடன் ஆண்கள் விடுதியில் களஞ்சிய அறை, சமையலறையுடன் கூடிய சாப்பாட்டு மண்டபத்தை கட்டித் தந்ததுடன் பல திருத்த வேலைகளும் செய்து தந்தனர். 2002ஆம்ஆண்டு ஆண்கள் இல்லத்தில் 60'×20' அளவில் படிப்பு மண்டபம் கட்டுவதற்கும் RRAN உதவி வழங்கியது.

UNHCR கட்டிய மண்டபத்துக்கு மேல் மாடி கட்டுவதற்கு அவுஸ்திரேலிய ஈழத்தமிழர் கழகம் உதவி செய்ததுடன் 5 தையல் இயந்திரங்கள் வாங்கவும் இரண்டு வருடங்களுக்கு தையல் போதனாசிரியர்களின் ஊதியத்துக்கும் நிதி வழங்கியது. அத்துடன் பிள்ளைகளின் உணவுத் தேவைக்காக வருடா வருடம் பண உதவியும் செய்து வருகிறது.

இந்து கலாச்சார அமைச்சு பெண்கள் விடுதியில் உள்ள ஆராதனை மண்டபத்துக்கு பளிங்குத்தளம் பதிக்கவும், மேடை அமைத்துப் புனரமைப்புச் செய்வதற்கும் உதவி செய்தது. அத்துடன் முச்சக்கரவண்டி ஒன்றும் வழங்கியது.

ஆண்கள் இல்லத்தில் கைவிடப்பட்ட நிலையில் இருந்த கழிப்பறைத் தொகுதியை திருத்தியமைக்க G.T.Z நிறுவனம் கட்டிடப் பொருட்கள் தந்துதவியது.

இராசநாயகம் ருத்திரன் அவர்களூடாக SRI LANKA ASSOCIATION OF GREATER WASHINGTON INC (SLAGW'S) நிறுவனம் பழைய தங்கம்மா மண்டபத்தை பிள்ளைகளின் பிரத்தியேக வகுப்புக்கள் நடாத்து வதற்கு ஏற்றவாறு புனரமைப்புச் செய்வதற்கு உதவி செய்தது. இப் பணிக்கென அப்போதைய இந்து கலாச்சார அமைச்சரான கே.என்.டக்ளஸ் தேவானந்தா ரூபா 500,000/= ஒதுக்கீடு செய்தார். இவர்களுக்கு எம் நன்றி.

லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் கோவில் அறநிதியம், லண்டன் சிவயோகம் முத்துமாரி அம்மன் ஆலயம் ஆகியன 2001ஆம் ஆண்டு தொடக்கம் குறித்த எண்ணிக்கையிலான எமது இல்லப் பிள்ளைகளுக்கு வாழ்வாதாரக் கொடை வழங்கி வருகிறார்கள்.

ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த திரு. என்.சிவபாலன் நீண்ட காலமாக எமது இல்லத்துக்கு நிதியுதவி செய்து வருகிறார். அவர் தொண்டுள்ளத் துக்கு நன்றி.

கனடாவில் இருக்கும் எமது பழைய மாணவன் திரு. த.விவேகானந்தன் இல்லத்துக்கு அயராது நிதி சேகரித்து அனுப்பி வருகிறார். எமது தேவைகளை உணர்ந்து அவர் காலத்தினால் செய்யும் நன்றி போற்றுதற்குரியது.

ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த G.C.T.T.A (IMHO) நிறுவனம் பிள்ளைகளுக்குப் பண உதவி செய்து வருகிறது.

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஜப்பானில் 2000இல் 117,000 ஜப்பானிய யென் நிதியைச் சேகரித்து இல்ல வளர்ச்சிக்கு உதவினார். யாழ் தொழில்நுட்பக் கல்லூரியுடன் இணைந்து சங்கம் நடத்திய ஜப்பானிய மொழி வகுப்பில் தொண்டு அடிப்படையில் அவர் ஆசிரியராகக் கடமையாற்றினார்.

இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, மக்கள் வங்கி, கொமேர்ஷல் வங்கி ஆகிய வங்கிகள் எமது பிள்ளைகள்பால் பரிவு கொண்டவை. பிள்ளைகள் பேரில் ஒரு சேமிப்புக் கணக்கைத் திறந்து, ஓர் அடையாளத் தொகையை அவை வைப்பிலிட்டதால், நாம் அந்தக் கணக்குகளைப் பேணி, பிள்ளைகள் சேமிப்பை உயர்த்தியுள்ளோம்.

மக்கள் வங்கி 2007இல் 100 கதிரைகளை அன்பளிப்புச் செய்தது. இலங்கை வங்கி பிள்ளைகளுக்குப் பயன்படக்கூடிய ஒரு தொகுதி காகிதாதிகளை உதவியது. இவ்வங்கிகளுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

Alliance Francaise de Jaffna (ஃப்ரெஞ்ச் நட்புறவுக் கழகம்) இல்லத்துக்கு Digital camera : SONY DSC - W110 Cyber - Shot; CD/DVD Player: Mini Hi Fi Component System SONY MHC - GNZ333 - D போன்ற பொருட்களை அன்பளிப்புச் செய்ததுடன் தொடர்ந்தும் பணவுதவி செய்து வருகின்றனர். அவர்களின் பண உதவியில் ஆண்கள், பெண்கள் விடுதிகளில் ஒலிபெருக்கி வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

2000ஆம் ஆண்டு பெரியார் இராசரத்தினத்தின் சிலை நிறுவி பவள விழாக் கொண்டாடப் பட்டது. அச்சிலைக்கு முன்பாக 2008ம் ஆண்டு ரூபா 400,000/= செலவில் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தைக் கட்டி வளர்த்த இந்துபோர்ட் இராசரத்தினம் அவர்களின் 125 ஆவது பிறந்த தின நினைவை முன்னிட்டு, "இந்து போர்ட் இராசரத்தினம் - காலமும் வாழ்வும்" என்ற நூல் மாசி 2010 இல் வெளியிடப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

ஆண்கள் இல்லத்தில் நீர்த்தாங்கி புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

நூலகம் புதிதாகப் புனருத்தாரணம் செய்யப்பட்டு மிகவும் சிறப்பாக இயங்கி வருகிறது.

சமயம்

சமய அநுஷ்டானத்திற்கு இல்லத்தில் முக்கிய இடம் தரப்படுகிறது. புனரமைப்புச் செய்யப்பட்ட வழிபாட்டு மண்டபத்தில் நாள் தோறும் நடைபெறும் வழிபாட்டில் பிள்ளைகள் பங்கு பற்றுவர். தைப்பொங்கல், தைப்பூசத் திருநாள், சித்திரை வருடப் பிறப்பு, (கைவிசேஷம் வழங்கப்பட்டு அது அவர்களது வங்கிப் புத்தகத்தில் வைப்பிலிடப் படுகிறது) குருபூசைகள், பெரியார் இராசரத்தினத்தின் பிறந்த நாள், ஆடிப்பிறப்பு, நவராத்திரி விழா, (விழாவை முன்னிட்டு மாணவர்களுக்கிடையில் போட்டிகளும், கலை நிகழ்ச்சிகள், தொடர் சொற்பொழிவுகளும்) யாவும் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றன. அத்துடன், தீபாவளிப் பண்டிகையும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

அறநெறிப் பாடசாலை சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சையில் 2007ஆம் ஆண்டு 2 மாணவர்களும், 2008ஆம் ஆண்டு 5 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர். இந்து கலாசாரத் திணைக்களம் புத்தகங்கள், அப்பியாசக் கொப்பிகள், சீருடைகள் போன்றவற்றை வருடந்தோறும் வழங்கி வருகின்றது.

வருடத்தில் ஒரு தடவை மாணவர்கள் சமயம், கல்வி சம்பந்தமான சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

கல்வி

மாணவர்களுக்கு புறநிலைக்கற்கை வகுப்புக் கள் கிரமமாக நடைபெறுகின்றன. 20 ஆசிரியர்கள் கற்பிக்கின்றார்கள். வகுப்பு 6 - 11 வரை கட்டாய பாடங்களான கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம், போன்ற பாடங்களுக்கும், உயர்தர வகுப்பிற்கு சகல பாடங்களுக்கும் மேலதிக

வகுப்புக்கள் நடைபெறுகின்றன. ஆரம்ப பிரிவினருக் கான மேலதிக வகுப்புக் களும் நடைபெறுகின்றன. அதைவிட கற்றலில் பின் தங்கிய மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கான விசேட கற்பித்தல் வழங்கப்படுகிறது.

அண்மையில் வெளியிடப்பட்ட பெறுபேறு களின்படி க.பொ.த (சா/த) மாணவர்கள் 50 வீதமும், க.பொ.த (உ/த) 100 வீதமும் சித்தி பெற்றுள்ளார்கள்.

க.பொ.த (சா/த)

ஆண்டு	அதிகூடிய பெறுபேறுகள்
2006	A2, 2B, 4C, S
2007	3A, 3B, 2C, 2S
2008	3A, B, 2C, 3S
2009	3A, B, 3C, 2S

க.பொ.த (உ/த)

ஆண்டு	அதிகூடிய பெறுபேறுகள்
2006	2B, C
2007	A, 2B
2008	2B, C
2009	A, 2B

உயர் கல்வி அனுமதி பெற்றோர் விபரம் :

ஆண்டு	மாணவர் பெயர்
2001	செல்வி சின்னத்தம்பி சுபதீபா *சப்ரகமுவ பல்கலைக்கழகம்*
2003	செல்வி சுந்தரலிங்கம் யசிந்தா *யாழ் பல்கலைக்கழகம்*
2004	செல்வி சோமசுந்தரம் சுகர்ணஜா *யாழ்பல்கலைக்கழகம்*
2006	செல்வன் விக்னேஸ்வரன் செந்தூரன் *யாழ்பல்கலைக்கழகம்*
	செல்வி யோகராசா சதீசினி *யாழ்தேசிய கல்வியியற் கல்லூரி*
2007	செல்வி செல்லத்தம்பி இலக்ஷி *வவுனியா பல்கலைக்கழகம்* (தற்போது சுன்னாகம் பிரதேச சபையில் முகாமைத்துவ உதவியாளராகப் பணிபுரிகிறார்)

இல்லத்தை விட்டு வெளியேறிய மாணவர்களில் வெளிவாரிப் பட்டப்படிப்புகள் அலகில் பதிவு செய்யப் பட்டவர்களுக்கு மாதாந்த கல்விச் செயற்பாட்டிற்காக புலமைப்பரிசில் வழங்கப்படு கிறது.

சங்கீதம். நடனம், நாடகம், ஆகியவற்றுக்கான பிரத்தியேக வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

வட இலங்கை சங்கீத சபை நடாத்தி வரும் பரீட்சையில் பல மாணவர்கள் பங்குபற்றி சித்தியடைந்து வருகின்றார்கள்.

பாடசாலையில் நடைபெறும் போட்டிகள் யாவற்றிலும் வெற்றிபெற்று எமது இல்ல மாணவர்கள் கோட்டம் மற்றும் வலயம் செல்கின்றனர். இணைப்பாடவிதான செயற் பாடுகளில் முழுமையாகப் பங்குபற்றுகின்றனர்.

2003ல் நடைபெற்ற பதிவு செய்யப்பட்ட இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி யில் எமது பிள்ளைகள் பல வெற்றிகளை ஈட்டினர். 71 பிள்ளைகள் மாகாண மட்டப் போட்டிக்குச் சென்றனர். 06 தங்கப் பதக்கங்களும். 02 வெள்ளிப் பதக்கங் களும் பரிசாகப் பெற்றனர். பலர் சான்றிழ்கள் பெற்றனர்.

தொழிற் பயிற்சி

எமது தையல் பயிற்சி நிலையத்தினால் பெண் பிள்ளைகளுக்கான ஆடைகள் தைத்து வழங்கப்படு கின்றன. வகுப்பு 4 முதல் சகல பெண் பிள்ளைகளுக் கும் தையற் பயிற்சி வழங்கப்படுகிறது. க.பொ.த (சா/த), (உ/த) வகுப்பு மாணவர்கள் தையல் இயந்திரத்தில் தைப்பதற்கு பயிற்சி பெற்று, ஓய்வு நேரத்தில், சிறார்களின் உள்ளாடைகள், வீட்டு உடுப்புக்கள் தைக்கிறார்கள்.

கொடையாளிகள் சிலர் கணினிகள் அன்பளிப்புச் செய்தனர். அக்கணினிகளைக் கொண்டு கணினிப் பயிற்சிக் கூடம் நிறுவப்பட்டது. அதில் ஒரு போதனாசிரியர் தரம் 06க்கு மேற்பட்ட மாணவர்களுக் குப் பயிற்சி வழங்கி வருகிறார். உயர்தர மாணவர்கள் மென் பொருள் தயாரிப்பில் தேறி சான்றிதழ்கள் பெற்றுள்ளனர்.

உடல், உள நலம்

பிள்ளைகள் கிரமமாக மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். ஊட்டச் சத்துக் குறைபாடு உள்ளவர்களுக்கு மாத்திரைகள் வழங்கப்படுகிறது. பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள், மற்றும் சித்த மருத்துவத்துறையினர் செயற்றிட்டத்திற்கு அமைவாக கருத்தரங்குகள், மனிதநேய மேம்பாட்டுச் செயற்பாடுகள் வழங்கப் படுகின்றன.

வருடத்தில் இரு தடவைகள் பெற்றோர்/ பாதுகாவலர் ஒன்று கூடல் நடைபெறுகின்றது.

விசேடமாக பிள்ளைகளின் உளநல குறைபாடு களைத் தீர்க்கும் பொருட்டு எமது இல்லப் பிள்ளைகளுக்கு சீர்மிய அமர்வுகள் (Counselling) நடைபெறுகின்றன.

இணுவிலில் ஓர் இல்லம்

2004ஆம் ஆண்டு இணுவிலில் 10 பரப்புக் காணி சைவ வித்தியா விருத்திச் சங்கக் கிளை நிறுவுவதற் காக கொள்வனவு செய்யப்பட்டது. இதன்பொருட்டு ஈழத்தமிழர் கழகம் 5000 அவுஸ்திரேலிய டொலர் அன்பளிப்புச் செய்தது. அதில் இரண்டு மாடிக் கட்டிடம் நிறுவப்பட்டு வருகிறது. அதற்கு நெதர்லாந்தில் வதியும் திரு. S.ஜெயக்குமார் முயற்சியால் Johan and Anneke Hooglander ரூபா 4,052,177.86 பணம் உதவி செய்துள்ளனர். 2005ஆம் ஆண்டு தொடங்கிய கட்டிட வேலை, போர்ச் சூழலால் தடைப்பட்டு இவ்வாண்டு முழுவீச்சுடன் நடைபெறு கிறது.

பண்ணை

ஒரு காலத்தில் நல்லதொரு செயற்றிட்டமாக இயங்கி வந்த எமது விவசாயப் பண்ணை 1995ஆம் ஆண்டு இடப் பெயர்வின் போது பெரிதாகப் பாதிக்கப்பட்டது. தற்போது படிப்படியாக புனருத் தாரணம் செய்யப்பட்டு வருகிறது. அதில் தென்னை, வாழை, கிழங்கு வகை, கீரை போன்றன பயிரிடப்பட்டு விளைபொருள் இல்லத்தின் தேவைக்கு பயன்படுத் தப்பட்டு வருகிறது. அங்கு கடமை புரிவதற்கு சிரமத்தின் மத்தியில் நாளாந்த அடிப்படையில் ஒரு தொழிலாளி நியமிக்கப்பட்டு அவருடன் சேர்ந்து எம் இல்ல மாணவர்களும் பயிற்சி பெறுகின்றார்கள். அத்தோடு விடுதியில் வீட்டுத் தோட்டம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

நன்றி நவிலல்

நிறைவாக எமது பணிகளுக்குப் பேராதரவு நல்கும் பெருமக்களுக்கும், நிறுவனங்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

சில கொடையாளிகள் ஒரு தொகையை நிரந்தர வைப்பிலிட்டு குறித்த தேவைக்குப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தல் தருகின்றனர். அவர்களின் விருப்பத்திற்கு அமைய கொடை வைப்பிலிடப்பட்டு, வட்டி பயன்படுத்தப்படுகிறது. அவர்களுக்கும் சங்கம் நன்றி பாராட்டுகிறது.

பல அன்பர்கள் நீண்ட காலமாக தொடர்ந்து தமது குடும்ப நிகழ்வுகளின் போது எமது இல்லப் பிள்ளைகளை நினைத்து ஒரு நாள் சிறப்புணவு, ஒரு நாள் மதிய உணவு, போன்றவற்றிற்கு உதவி வருகிறார்கள். இவ்வன்பர்கள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும், உள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இல்லப் பிள்ளைகளுக்கு ஒரு வேளை சிறப்பு மதிய உணவு வழங்கிவரும் அன்பர்களின் ஆதரவு சிறுதுளி பெருவெள்ளமாகி வளம் சேர்க்கிறது. பிறந்தநாள், திருமணநாள், நினைவுநாள், முதலிய கொண்டாட்டங்களுக்கு ஏராளமாகச் செலவு செய்வோர், அதில் ஒரு சிறு பகுதியை பிள்ளைகளின் ஒரு வேளை உணவுக்கு உதவுவார்களாயின் இறையருளுக்குப் பாத்திரமாவார்.

எங்கள் நிறுவனத்துக்கு பேருதவி புரிந்த நிறுவனங்கள், யாழ் மாவட்டச் செயலகம், நல்லூர்ப் பிரதேச செயலகம், நல்லூர்ப் பிரதேச சபை, அரிமாக் கழகங்கள், றோட்டறிக் கழகங்கள், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், UNHCR, UNICEF, ZOA, FORUT, ஆகிய நிறுவனங்கள், எமக்குப் பல வழிகளில் உதவி புரிகின்றன. குறைந்த விலையில் பொருட்களை வழங்கி வரும் நல்லூர் M.P.C.S, முதலிய வர்த்தக நிலையங்கள் செய்து வரும் உதவிக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்.

எமது பிள்ளைகளின் நலனில் மிகுந்த அக்கறை காட்டுவதோடு, வேண்டிய வழிகாட்டல்களையும் ஒத்துழைப்பையும் வழங்கிவரும் நல்லூர்ப் பிரதேசச் செயலர், சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள், கிராம அலுவலர், பொதுச் சுகாதார அலுவலர் முதலியோருக்கு எமது கடப்பாடு பெரிது.

பிரதம லிகிதர் ஒருவர், எழுதுவினைஞர் இருவர், விடுதிக் காப்பாளர் பத்துப் பேர், உதவியாளர் ஒருவர், சிற்றூழியர் இருவர், சாரதி ஒருவர், சமையலாளர் நால்வர், காவலாளிகள் இருவர் கொண்ட ஆளணியினர் மிகச் சிறப்பாக நாம் இயங்க உதவிகள் பலவும் செய்து வருகின்றனர். புத்தாண்டு, தீபாவளிப் பெருநாள்களுக்கு ஊழியர்களுக்குப் புத்தாடைகள் வழங்கப்படுகின்றன.

நிறைவாக, எமது சங்கத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் தமது கடமைகளை அர்ப்பணிப்புடன் செய்துகொண்டிருப்பதால் எமது இல்லம் சிறப்பாக இயங்கிவருகிறது. அவர்களுக்கு இறையருள் பூரணமாகக் கிட்டுவதாக!

சைவசமயம், தமிழ்க்கல்வி, சமுதாய, கலாசாரப் பாதுகாவலர்

இந்து போர்ட் மனேச்சர் திரு. சு. இராசரத்தினம்

க. மகேஸ்வரன்

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலே அந்நிய ஆதிக்கத்துக்கெதிராகத் தொடங்கிய இயக்கங்கள் யாவும் சுதேச மதங்களையும் சுதேச மொழிகளையும் வளர்க்கும் நோக்குடன் ஆட்சியாளரின் மதங்களை, மொழியை, கலாசார ஊடுருவலை மறுக்கும் இயக்கங்களாகவே தோன்றின. தென்னிலங்கையிலே மொஹெற்றிவத்தே குணானந்த, வலிசங்க ஹரிச்சந்திர போன்றவர்கள் பௌத்த மதத்தின் பெருமையைக் காத்திட சிங்கள, பாளி மொழிகளைப் பேணிட உதித்தது போலவே, வட இலங்கையில் இந்துமதத்தையும், தமிழ்மொழிக் கல்வியையும், தமிழரின் கலைகலாசாரத்தை காத்திட எழுந்தார் ஆறுமுகநாவலர் (1822 - 1879). இன்றைய நாட்டை நோக்கினால் 1828 ம் ஆண்டில் வங்களாத்தில் இராஜராம் மோகன்ராயினால் பிரம்மசமாஜம் தோற்றுவிக்கப்பட்டது. குஜராத்திலே சுவாமி தாயனந்தர் (1824 - 1883) தோன்றினார். அவரின் இயக்கம் கிறிஸ்தவ நடவடிக்கை களைக் கண்டித்து வட இந்தியாவில் இந்துமத உணர் வினை வளர்த்தது. இராமகிருஷ்ண பரமஹம்சரின் (1834 - 1886) இயக்கத்தின் மூலம் இந்துமதம் காலத்திற்கேற்ப வலுவினைப் பெற்றது. சுவாமி விவேகானந்தர் (1862 - 1902) சமத்துவ நெறியையும் சகல மதங்களின் அடிப்படை ஒற்றுமைகளையும் இந்து மதத்தின் சிறப்பினையும் அமெரிக்கா வரை சென்று இந்திய மக்களின் மனப்பரப்பை விரித்துப் பண்படுத்தினார். பரசமய கோளரியாகிய நாவலரின் அவதாரமே ஈழத்தமிழ் நாட்டவரின் சைவமதக் கல்வியையும், தமிழ்மொழிச் சிறப்பையும் பேணிக் காத்தது. அவரின் பின் தோன்றியவரே திரு. சுப்பிரமணியம் இராசரத்தினம். சட்டத்தரணியாய் இருந்து சைவவித்தியா விருத்திச் சங்கத்தை நிறுவி நாடெங்கும் நூற்றுக்கு மேற்பட்ட சைவவித்தியாலயங்களை நிறுவி நாவலரின் வழிநின்று அவரின் கல்வித்திட்டத்தைச் செயற்படுத்தினார்.

நாவலர் பணியை முன்னெடுத்துச் சென்று சைவநெறியினைப் பாதுகாத்துப் பேணி வளர்க்கவும் அதனோடு தமிழ்மொழியினையும் தமிழ்ப்பண்பாட்டையும் வளஞ் செய்யும் திட்டங்களையும் வளர்த்தார். இத் திட்டங்களை அடியொற்றி நிறைவேற்றி வைத்த பணி திரு. இராசரத்தினம் அவர்களுக்கு உரித்தாயிற்று. இன்று நாம் சைவப்பாடசாலைகள் சமயப்பிண்ணணிச் சூழலிலே நிலவுவது பற்றிப் பெருமைப்படுகின்றோம் என்றால், எமது பிள்ளைகள் சைவச் சூழலில் சைவர்களாக வளர்கின்றனர் என்றால் திரு.சு. இராசரத்தினம் அவர்களின் தன்னலமற்ற தியாகமும் அயராத் தொண்டும் அர்ப்பணிப்புமே காரணங்களாகும். போற்றுதற்குரிய அன்னாரை என்றும் நாம் நினைவு கூரக் கடமைப்பட்டிருக்கின்றோம். இம் மாபெரும் தமிழ்த் தொண்டனை, சைவக் காப்பாளனை நாம் நினைவு கூர்வதும், அவர் தாம் செயற்கரிய செயற்பாடுகளை உலகம் உற்றுணரச் வைப்பதும் ஈழத்தமிழ் நாட்டு சைவ மக்களை உணர வைப்பதும் நன்றிக் கடனாகும். இதன் மூலம் வேறோர் தூய நோக்கமும் நிறைவேறுகின்றது எனலாம். இந்தத் தலைமுறைக்கும் இனிவரப் போகும் சைவச்சந்ததியினருக்கும் அவர்கள் நெஞ்சங்களில் இராசரத்தினத்தின் நினைவைப் பசுமையாக வைத்திருப்பதும் அவர் வழியில் நடக்க உதவுவதுமே அந்நோக்கமாகும்.

இராசரின் இராசபணிகள்

1. சைவத்தமிழ்க் கல்வி வளர்ச்சியைக் கருதும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் உதயம்.
2. சைவ வித்தியா விருத்திச் சங்கம் நாடெங்கும் சைவப்பாடசாலைகளை நிறுவி சைவக்கல்வியை வளர்த்தமை.
3. சைவநிறுவனங்களில் கல்வி கற்பற்குப் போதிய தகுதியான சைவத்தமிழ் ஆசிரியர்களைப் பயிற்ற சைவ ஆசிரிய கலாசாலை நிறுவியமை.
4. ஏழை அனாதைச் சிறுவர் சிறுமிகளுக்கு சிறுவர் இல்லமும் சிறுவர் பாடசாலையும் நிறுவியமை.
5. பல்கலைக்கழகம் பற்றிய அவர் கருத்துக்கள் திருநெல்வேலியில் இன்றைய பல்கலைக்கழகத்தின் உருவாக்கத்திற்க அத்திவாரமாக அமைந்தன.

வளர்த்து வரும் ஒரு தேசிய சமுதாயத்தின் மொழி, மதம் சார்ந்து, எதிர் கொண்டு நிமிர்ந்து வளம் பெறவும் நாட்டின் அரசபலமோ அன்றி ஒரு சங்கத்தின் செயற்பாடோ அவசியம் தேவையாகிறது. இந்த நிலையில் ஆறுமுக நாவலரின் பின் யாழ்ப்பாணத்துச் சைவத்தமிழ்ப் பெரு மக்கள் சிலர் சேர்.பொன்.இராமநாதன் அவர்களை அணுகி, அன்னார் முன்னர் ஒரு சமயம் சைவத் தமிழர் கல்வி வளர்ச்சியைக் கருதும் அபிவிருத்திச் சங்கம் ஒன்று அமைதல் வேண்டும் எனக் கூறிய கருத்தினை நினைவுபடுத்தி, அத்தகையதொரு சங்கத்தை ஆரம்பிப் பதற்கு ஆவன செய்தார்கள். கோப்பாய் அரசினர் பயிற்சிக் கலாசாலை ஆரம்பிக்கப் பெற்ற காலமது. ஆங்கில அரசாங்கத்தார் பாடசாலை ஸ்தாபிப்பதன் மூலமும் உத்தியோக மோகம் காட்டுவதன் மூலமும் ஆங்கில மொழியையும் கிறிஸ்தவ மதத்தையும் அறிமுகம் செய்யப் புகுந்து நாகரிகம் என்ற போர்வையில் சைவத்தமிழ் அழிப்புச் செய்தனர். விழிப்புணர்வு கொண்ட யாழ்ப்பாணச் சைவர் சிலர் முயற்சியால் சேர்.பொன் இராமநாதன் தலைமையில் 9.12.1923 ஆம் நாளில் உதயமான நிறுவனமே சைவ வித்தியா விருத்திச்சங்கம் இச்சங்கத்தில் ஈடுபட்டிருந்த பெரியவர் பலருள் வைத்திலிங்கம் விஜயரத்தினம், சுப்பிரமணியம், இராசரத்தினம், வட்டுக்கோட்டை மு.சி. இராசரத்தினம், திரு. அட்சலிங்கம் முதலானோர் சிறப்பிடம் வகித்தனர். இச் சங்கம் தனது தலைமை அலுவலகத்தை நல்லூர்க் கந்தசாமி கோவில் வடக்கு வீதியிலும், யாழ்ப்பாண நகர மண்டபத்துக்

கண்மையிலும், திருநெல்வேலியிலும் மாறி மாறி அமைத்து இயங்கி வந்தது. வட்டுக்கோட்டை மு. சி. இராசரத்தினம் அவர்களின் துணிவும், உபகரிப்பும், உடலுழைப்பும் காரணமாக மேற்படி சங்கம் நன்றாகச் செயற்பட்டு ஊர்கள் தோறும் சைவப் பாடசாலைகள் உருவாதற்கு வாய்ப்பும், வசதியும் கிடைத்தன.

அக்காலத்தில் சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்கள் 1924 ம் ஆண்டு முதல் இலங்கைச் சட்டசபையின் பிரதிநிதியாகத் தெரியப் பெற்று அரசாங்கமறிய அதிகாரம் பெற்றிருந்த வகையில் அலுவல்களை விரைவில் நடைமுறைக்குக் கொண்டு வரக்கூடியவராயிருந்தார். அன்றியும் சட்டத்துறையில் வல்லுநராய் இருந்த திரு.சு.இராசரத்தினம் அவர்கட்கு நீதிநியாயமின்றிப் பிறப்பிக்கப்பட்டிருந்த தடையுத்தரவுகளையெல்லாம் ஆங்காங்கே அவ்வப்பொழுதே தவிடுபொடியாக்கி நீதிவழுவா நெறிமுறையில் பணி செய்தல் இலகுவாயிற்று. இந்நிலையில் ஊர்கள் தோறும் சைவப்பாடசாலைகள் எழுந்த போது ஆங்காங்கே கற்ப்பிப்பதற்கு போதியளவு சைவாசிரியர்கள் கிடையாமலிருந்ததைக் கண்டு மேலதிக ஆசிரியர்களைப் பயிற்சி அளித்து தருதல் வேண்டு மென்றும் விண்ணப்பித்து, இலங்கை முழுவதற்கும் கல்விப் பணிப்பாளராய் இருந்த வெள்ளைக்காரை நேரில் கண்டு, உரையாடியும் தம் வேண்டுகோளை விளக்கி வற்புறுத்தி னார். அந்த நேரம் திரு. சு.இராசரத்தினம் அவர்கள் சட்டசபை அங்கத்தவராய்க் கௌரவத்துக்குரிய புருடராய் மட்டுமன்றி சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் செயலாளர் நாயகமாகவும், சங்கப் பாடசாலைகளின் முகாமையாளராகவும் இருந்து செயலாற்றினார். இவற்றிற் கெல்லாம் மசியாத வித்தியாபதி அன்றைய நிதி நிலமையிலும் இட வசதியின்மையிலும் மேலதிக ஆசிரியர்களைப் பயிற்றுவது இயலாத கருமமெனப் பதில் எழுதினார். பதில் அறிந்த இராசரின் கவலை பெரிதாயிற்று தாங்களே தங்களுக்கு வேண்டிய சைவாசிரியர்களைப் பயிற்றுவதற்கு ஒரு சைவாசிரிய கலாசாலையை உண்டாக்கினால் நல்லது என்ற புதிய சிந்தனை அவருக்கு உதயமாயிற்று.

அந்த வேளையில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கு நேர்முகத்தேர்வில் தோல்வியுற்ற காரைநகர் அருணாச்சலம் அவர்களின் மைந்தர் சிவபாதம் என்பவர் அழுதவண்ணம் மனேச்சர் முன் வந்து நின்றார். "நான் உயரம் குறைந்தவன் என்ற காரணம் கூறி என்னை நேர்முகத் தேர்வில் தவிர்த்து விட்டார்கள்" என கூறிய சிவபாதம் மேலும் அழுதார். பதினெட்டு வயதான சிவபாதம் மேலும் வளரலாம் என்பதை பரீட்சையாளர் சிந்திக்க வில்லை போலும், சரி நான் சைவாசிரிய கலாசாலை ஆரம்பிக்கப் போகிறேன். நீ வந்து படிக்கலாம் போய் வரும் என ஆறுதலும் அபயமும் அளித்த இராத்தினம் அவர்கள் அன்றே உடனடியாக சைவாசிரிய கலாசாலையை எங்கே ஆரம்பிக்கலாம் என்று இடத்தைப் பற்றி யோசித்தார். அவ்வேளையில் பெரியார் ஒருவர் அவரிடம் வந்தார். அவர் மலேசியாவில் துவிபாஷகர் என்னும் முதலியார் உத்தியோகம் பார்த்த தம்பையா என்பவரின் மைந்தர். சீமை அப்புக்காத்து என வழங்கிய பரிஸ்டர் இராசேந்திரா அவர்கள். அவர் திருநெல்வேலி என்னும் செம்பாட்டுப் பூமியைச் சேர்ந்த பண்பாட்டுப் பெரியவர். திருநெல்வேலி என்பது நல்லூர், கல்வியங்காடு, கந்தர்மடம், கலட்டி, தலையாளி, கொக்குவில், இருபாலை, கட்டைப்பிராய் முதலிய ஊர்களின் நடுவே அமைந்திருந்தது பழைய காலத்தில் பாண்டி நாட்டு மழவர் குடியினர் வந்து நெருக்கமாகக் குடியேறிய வளமுள்ள பகுதி அது. அங்கேதான் தமிழரசர் காலத்துப் புகழ் பெற்ற ஞானப்பிரகாசத்தம்பிரான் சுவாமிகள் தமிழ்நாடறியச் சைவமும் தமிழும் வளர்த்தவர். சிவஞானசித்தியாருக்குச் சிறந்த உரை எழுதியதோடு வடமொழியில் பல நூல்கள் எழுதியவர். இவர் குடும்பத்தின் வழிவந்தவரே வேதவனத்தார். வேதவனத்தாரின் செல்வப்புதல்வியே ஆறுமுகநாவலர் அவர்களின் தாயார் சிவகாமி. திருநெல்வேலியில் ஒரு சிவாலயம் உள்ளது. அங்கே சைவப்பற்றுள்ள இளைஞர்கள் 1910 ம் ஆண்டிலே இந்து வாலிபர் சங்கம் அமைத்துப் பணி செய்து வந்தார்கள். திருநெல்வேலிலே சேர்.பொன் இராமநாதன் அவர்கள் தமது பரமேஸ்வராக் கல்லூரியை (அது பிற்காலத்தில் 1974 ல்) பல்கலைக்கழகமாக மலரும் வகையில் 1921 ஆம் ஆண்டில் அமைத்தார்.

திருநெல்வேலி சைவப்பண்பாட்டுச் செம்பாட்டு நிலம் ஆங்கிலேயர் காலத்து விவசாயத் திணைக்களத்தை கவர்ந்ததிலும், அங்கேயே மாதிரிக் கால்நடைப்பண்ணை விவசாயப் பாடசாலை அமைந்ததிலும் வியப்பில்லை. சைவவித்தியா விருத்திச் சங்கமும் திருநெல்வேலியிலேயே முளை கொண்டு வளர்ந்து வந்தது. திருநெல்வேலி செந்தமிழ் சிவநேயச் செல்வரின் உறைவிடம். அன்று இராசரத்தினம் அவர்களைக் காணவந்த திருநெல்வேலியூர் பரீஸ்டர் இராசேத்திரம் அவர்கள், அங்குள்ள மாளிகை போன்ற தமது வீட்டை சைவாசிரிய கலாசாலையாக மாற்றி தற்காலிகமாக நடாத்துவதற்கு உள்ளன்போடு உதவ முன்வந்தார். சைவாசிரிய கலாசாலையின் ஆரம்ப வகுப்பு 1928 ம் ஆண்டின் விஜயதசமி நாளில் மங்களகரமாக ஆரம்பிக்கப் பெற்றது. அன்றைய வகுப்பில் வந்திருந் தவர்கள் பதினொருவருள் காரைநகர்ப் பெரியார் அருணாசலம் மைந்தர் சிவபாதமும் அடங்குவர். நிரந்தர கலாசாலைக் கட்டிட அமைப்புக்குக் காணி தேவைப்பட்டது. செம்பாட்டுப் பெருநிலப்பரப்புக்குச் சொந்தக்காரியான மூதாட்டி பொன்னுப்பிள்ளை வல்லிபுரம், அவரின் மருகர் வல்லிபுரம் பொன்னம்பலம், யோகசுவாமிகளின் சீடர், காசிப்பிள்ளை சிங்கப்பூர் வைத்தியர் சபாபதிப்பிள்ளை என்போரின் உபகரிப்பிலும் குறைந்த விலையில் காணி வழங்கியமையாலும் சைவாசிரிய கலாசாலைக்கேற்ற சூழலில் 40 பரப்பு வசதியான நிலம் கிடைத்தது. அதில் கலாசாலை நிறுவப்பட்டு பல சைவப்பெரியார்களின் உழவாரப் பணியாலும் தொண்டாலும் வளர்ச்சியடைந்தது திருநெல்வேலி மக்களை யாவரும் பாராட்டினர். காலா சாலைக்கு வேண்டிய படிப்புமண்டபம், உணவுமண்டபம் நிறுவப்பட்டன. ஒவ்வொரு மதத்தினர்க்கும் அவர் தம் மதப் பெயரில் பயிற்சிக் கலாசாலை உருவாகும் முன்பே திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையை உருவாக்கிய பெருமை, அதிலிருந்து பயிற்சி பெற்று சைவாசிரிய ஆசிரியைகளை வெளியேற்றி, இருபாலாரையும் தம் சைவ இந்து போட் நிறுவனப் பாடசாலைகளிலேயே பணிபுரிய வைத்த பெருமை சங்க மனேச்சர் செயலாளர் நாயகம் சட்டமேதை திரு.சு. இராசரத்தினம் அவர்களையே சாரும்.

அத்துடன் தொடர்புபட்டதாக சிங்கப்பூர் வைத்தியர் சபாபதிப்பிள்ளை அவர்கள் ஆரம்பித்துச் செய்த ஒரு மகத்தான பணி, சைவ அனாதை ஏழைக்குழந்தை களை ஒன்று திரட்டி சைவாசார சூழலில் தம் வாழ்வையும் கல்வி வளர்ச்சியையும் பெறுவதற்கு ஏற்ற வாய்ப்பு அளிக்குமுக மாக ஆசிரியகலாசாலைக்குப் பக்கத்தில் ஓர் அனாதைச் சிறுவர் இல்லம் அமைத்தமையாகும். அச்சைவச் சூழலில் பாதுகாப்புப் பெற்ற சிறுவர்கள் தம் பணிகளைச் செய்து கற்று வளர்ந்தார்கள். திரு.சு.இராசரத்தினம் அவர்களே அவர்களின் பாசத்தந்தையாய், தாயாய் 1970 ல் அவர் பூதவுடலைத் துறக்கும் வரை கண்காணித்து வந்தார். இளமையிலேயே சிரமதானப்பணிகளை பழக்கிய இவர்களை திரு.தம்பிப்பிள்ளை அவர்களுக்குப் பின் மேற்பார்வை செய்து உய்வித்தவர்கள் முருகேசு என்னும் முல்லைக் குமரன், வினாசித்தம்பி, பண்டிதர்துரைசிங்கம், முருகுப்பிள்ளை, சரவணமுத்து, செல்லத்துரை என்னும் ஆறுமுகம் முதலானோராவார். அவர்கள் சேவை அளப்பரியது இச் சிறுவர் சிறுமிகளை சங்கப் பாடசாலையுடன் பராமரித்த பெருமை திரு.ர.செல்லப்பா என்பவரையும், அன்னை திருவாட்டி இ. இராசம்மையார் என்பவரையும் சாரும். இவர்களின் பாதுகாப்புக்கும் வளர்ச்சிக்கும் வேண்டிய நிதியை வரையாது வழங்கி வந்த வள்ளல்கள் பலருள் டாக்டர் பி.எஸ்.சுப்பிரமணியம் அவ்களைளயும், ஈழகேசரிப் பத்திராதிபர் பொன்னையா அவர்களயும் நாம் நினைவில் கொள்ளுதல் நன்றிக் கடனாகும்.

திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை பல்வகைக் கட்டிட வசதிகளுடன் நானாவித வளர்ச்சியும் பெற்றது. வருடா வருடம் நூற்றுக் கணக்கான சைவாசிரியர் ஆசிரியைகள் பயிற்றப்பட்டு வெளியேறினார்கள். பல்வகையான பயிற்சி நெறி புகுத்தப்பட்டது. வயலின் மேதை பரமேஸ்வர ஐயர் என்னும் அந்தணர் அருமையான இசையாசிரியராய் இருந்து சேவையாற்றினார். அவரை அழைத்து வந்து சங்கீதப் பேராசிரியராக நியமித்த பெருமை சு.இராசரத்தினம் அவர்களையேசாரும். அக்காலத்தில் புலோலியூர் சைவப் பெரியார் எனப் புகழப்பட்ட திரு.சு. சிவபாதசுந்தரம் அவர்கள் தமிழ்நாட்டுச் சைவாதீனங்களின் மதிப்புப் பெற்றவர். பரமேஸ்வராக் கல்லூரி, விக்டோரியாக்கல்லூரி மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகிய பெரும் சைவ நிறுவனங்களை சைவமணம் கமழ வளர்த்தவர் அகநூல் படிப்பித்தல், விதிமுறை முதலிய நூல்களில் ஆசிரியர் வேதனம் எதுவும் பெறாமலே சைவாசிரிய கலாசாலையில் சைவமும் தமிழும் கற்பித்துப் பெருமை செய்தார். திரு. கந்தவனம் ஐயாத்துரை என்பவர் நீராவியடியைச் சேர்ந்தவர். சுவாமி விபுலாநந்தரிடம் இளடையில் விஞ்ஞானம் கற்றவர் சைவாவிருத்திச் சங்கத்தில் தனாதிகாரியாய் இருந்து செய்து கொண்டு ஆசிரிய கலாசாலையில் பகுதி நேர விஞ்ஞானம் கற்பித்தவர்.

சவாசிரியர் ஆசிரியைகள் பயிற்றப்பட்டு வெளியேறினார்கள். பல்வகையான பயிற்சி நெறி புகுத்தப்பட்டது. வயலின் மேதை பரமேஸ்வர ஐயர் என்னும் அந்தணர் அருமையான இசையாசிரியராய் இருந்து சேவையாற்றினார். அவரை அழைத்து வந்து சங்கீதப் பேராசிரியராக நியமித்த பெருமை சு.இராசரத்தினம் அவர்களையேசாரும். அக்காலத்தில் புலோலியூர் சைவப் பெரியார் எனப் புகழப்பட்ட திரு.சு. சிவபாதசுந்தரம் அவர்கள் தமிழ்நாட்டுச் சைவாதீனங்களின் மதிப்புப் பெற்றவர். பரமேஸ்வராக் கல்லூரி, விக்டோரியாக்கல்லூரி மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகிய பெரும் சைவ நிறுவனங்களை சைவமணம் கமழ வளர்த்தவர் அகநூல் படிப்பித்தல், விதிமுறை முதலிய நூல்களில் ஆசிரியர் வேதனம் எதுவும் பெறாமலே சைவாசிரிய கலாசாலையில் சைவமும் தமிழும் கற்பித்துப் பெருமை செய்தார். திரு. கந்தவனம் ஐயாத்துரை என்பவர் நீராவியடியைச் சேர்ந்தவர். சுவாமி விபுலாநந்தரிடம் இளடையில் விஞ்ஞானம் கற்றவர் சைவாவிருத்திச் சங்கத்தில் தனாதிகாரியாய் இருந்து செய்து கொண்டு ஆசிரிய கலாசாலையில் பகுதி நேர விஞ்ஞானம் கற்பித்தவர்.

சைவாசிரிய கலாசாலை வரலாற்றில் பண்டிதமணி திரு.சி.கணபதிப்பிள்ளை அவர்கள் சேவைக்கலாம் பொற்காலமாகும். முன்னை நாள் E.O, நவின்டில் திரு. கிருஷ்ணப்பிள்ளை அவர்கள் முதல் அதிபராகக் கடமை புரிந்து கலாசாலையை வளர்த்த பெருமை பெற்றவர். அவரின் பின் மயிலிட்டியூர் திரு. சு.சுவாமிநாதன் அவர்கள் கலாசாலை அதிபரானார். இவர் அகில உலகப் புகழ் ஆங்கில சிறுகதைஎழுத்தாளர் P.G.வூட்தறவுஸ் என்பவரதும் மறைந்த பாரதஜனாதிபதி இராஜேந்திர பிரசாத் அவர்களதும் உடன் மாணவராவார்? தனித்தமிழில் அகநூல் படிப்பித்தல் விதிமுறைகள் கற்பிப்பதில் வல்லுனர் அதிபராய் இருந்து கலாசாலையைப் புகழ் பெறச் செய்தார் அவருக்கு உதவியாக உபஅதிபராக அளவெட்டி தந்த தத்துவ ஞானி "சைவசித்தாந்தச் செம்மல்" திரு. பொ. கைலாசபதி அவர்கள் இருந்து கணிதம், விஞ்ஞானம், வானியல் என்பன கற்பித்தார். அவரே முன்னை நாள் அகில இலங்கை வித்தியாபதிபதி H.S.பெரராவின் கற்பித்தலும் விதிகளும் என்னும் நூலைத் தமிழில் மொழி பெயர்த்தவராவார். இவரைத் தொடர்ந்து இடைக்காடு K.கந்தையா(B.A.) அவர்கள் அதிபராகக் கடமை செய்துள்ளார்.

அக்காலத்தில் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி நிறைவு செய்து கொண்டிருந்த போது அவரை எப்படியும் பிடித்து, சைவாசிரிய கலாசாலையில் புகுத்த திரு. சு.இராசரத்தினம் அவர்கள் திட்டமிட்டார். பண்டிதமணி அவர்களே நகைச்சுவையாக இதைக் கூறியுள்ளார். அக்காலத்தில் ஆசிரிய பயிற்சி பெறும் ஒரு சிறந்த இளம் ஆசிரியனை எப்போ வெளியேறுவார் என ஒரு பகுதியினர் எதிர்பார்ப்பார்களாம். கார் கொண்டு திரிவார்களாம். ஒரு பகுதியார் பாடசாலை முகாமையாளர். மற்றப் பகுதியில் பெண் கொடுக்க முற்படும் மாமன்மார். இந்த வகையில் பண்டிதமணியை எதிர்பார்த்த சைவத்தின் மூன்றாம் கண் எனப் போற்றி வந்த இராசர் அவர்கள் தனது குறிக்கோளில் வென்று விட்டார். நாவலர் பாடசாலையில் தலைமை ஆசிரியராகப் பணியாற்ற வேண்டிய பண்டிதமணி ஆசிரிய கலாசாலைக்கு சைவ - தமிழ்ப் பேராசானாக வந்ததும் சைவ ஆசிரிய உலகம் செய்த புண்ணிய பலனாகும் இளைப்பாறும் வரை சேவை செய்த பண்டிதமணி அவர்கள் கலாசாலை வீதியில் ஒரு குடிசையில் வசித்தார். அது கவின்கலைக் கூடமாகவும் திண்ணைப் பள்ளிக்கூடமாகவும்

அமைந்திருந்தது. குருசிஷ்ய முறைப்படி எத்தனையோ மாணவர்கள் சைவ சித்தாந்தமும், தமிழும், இலக்கியமும் கற்றுத் தேர்ந்தார்கள். பண்டிதரின் பணி விரிவடைந்தது. அவரின் எழுத்துக்களும் நூல்களும் சொற்பொழிவுகளும் அகில இலங்கையிலும் பரவின இலங்கைப் பல்கலைக்கழகம் அவரது திறமையையும் பணியையும் கலாநிதிப் பட்டம் அளித்து தானே பெருமைபெற்றது. அவரின் பேச்சுக்களையும் எழுத்துக்களையும் விமர்சனங் களையும் அவரின் பிரதம சீடனான ஆசிரியமணி திரு. அ. பஞ்சாட்சரமவர்கள் நூல் வடிவமாக்கி அரும்பணி செய்துள்ளார். இலக்கியச் சுவை பொருந்திய சைவாசிரிய கலாசாலைப்பணியை நயம்பட ஆற்றிய கலாநிதி கணபதிப்பிள்ளை அவர்கள் இன்றும் நம்மிடயே இல்லை. அவரின் தமிழ்ப்பணி விட்டுப் பிரகாசிக்கிறது. அதற்கும் மூல காரணம் திரு.சு. இராசரட்ணம் அவர்களின் சுயநலன்கருதா சேவைப் பண்பே ஆகும்.

கௌரவ சு. இராசரத்தினம் அவர்கள் சட்ட நிருபனசபைக் காலத்தில் அங்கம் வகித்த தமிழ்ப் பெருமக்கள் ஆகிய பொன்னம்பலம் - இராமநாதன், வைத்திலிங்கம்துரைசாமி, ஆறுமுகம் கனகரத்தினம் அவர்களோடு கருத்தொருமித்து இந்நாட்டு பல்கலைக் கழகத்தை கருவில் உருவாக்கியவர்களுள் சிறந்த இடம் பெற்றார் 1927 ம் ஆண்டில் நீதிபதி அக்பர் குழு பேராதனையில் பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டும். என்று ஆலோசனை கூறியது. பல்கலைக்கழக மசோதா விவாதிக்கப்பட்ட போது பலகருத்துக்கள் பரிமாறப்பட்டன. தன்நிறைவு பெற்றதோர் பல்கலைக்கழகம் எங்கே நிறுவுவது. இயற்கை எழிலும் சிறந்த சுவாத்தியமும் அமைதிச் சூழலும் மாணவ வாழ்க்கைக்கேற்ற சந்தோச சுகம் நிரம்பிய இடமான பேராதனையைச் சிலர் விரும்பினர். கொழும்பிலுள்ள பல்கலைக்கழகக் கல்லூரியை பெரிதாக்குவது நலம் எனப் பலர் அபிப்பிராயப்பட்டனர். ஆனால் திரு.சு.இராசரத்தினம் அவர்களோ கூட்டுமுறைப் பல்கலைக்கழகங்கள் வசதியான தனிப்பட்ட பாடத்துறை களைக் கொண்டு பிரதேசவாரியாக ஆங்காங்கே அமைதல் நலம். இவ்வாறான பல்கலைக்கழகங்களே சகல தேசிய இனத்தவருக்கும் பயன்தரும் என்ற கருத்தினை வலியுறத்தி இத்தகையதோர் முறையில் பல்கலைக்கழக கல்லூரி களைக் கண்டி, காலி, யாழ்ப்பாணம் மற்றும் இடங்களில் அமைப்பதற்கு ஏன் அனுமதி வழங்கக்கூடாது. என வினாவினார். அக்காலத்தில் இருந்த இலங்கையின் "கவர்ணர் ஹெபேர்டஸ் பின்லி"என்பவர் இராசரத்தினத்தின் நீண்ட பேச்சை ஆதரித்து பல்கலைக்கழகம் அமைப்பதில் நாட்டுப் பற்று அடிப்படையிலும் பொதுநல நோக்கோடும் இம்முக்கிய நிறுவனத்தை அமைப்பதில் தம்முடன் சகலரையும் ஒத்துழைக்குமாறு தேசாதிபதி அவர்கள் வேண்டி நின்றார்கள். திரு.சு.இராசரத்தினம் அவர்களின் தீர்க்க தரிசனத்தின் படி 1942 இல் இலங்கைப் பல்கலைக் கழகமும் 1969 இல் கொழும்பு பல்கலைக்கழகமும் 1974 இல் யாழ்ப்பாண பல்கலைக்கழகமும் - அதுவும் திருநெல்வேலி மண்ணில் - பொன் இராமநாதன் பரமேஸ்வரா நிறுவனத்தில் நிறுவப்பட்டது. அது இன்று பல் துறைகளில் பாட நெறிகளைக் கொண்ட பல்கலைக் கழகமாக வளர்ந்து வருகிறது. 1957 இல் அகில இலங்கைப் பள்ளிக்கூடங்களும் ஆசிரிய கலாசாலைகளும் அரச உடைமையாகி சதி செய்து மூடப்பட்டாலும் திட்டமிட்டு தமிழர் கல்வி நிலை பாதிப்படைய வைத்தாலும் இருள் மறைய ஒரு சுவர் நிற்க ஒளி பிறக்கும் என்பது திண்ணம். அப்போது திரும்பவும் இந்துபோர்ட் திரு.சு.இராசரத்தினம் அவர்களின் ஆன்மா என்றும் எம்மைத் தமிழை சைவத்தை மக்களை வாழவைக்கும்.

"எல்லோரும் வாழவேண்டும் என்ற எண்ணம் எனக்குச் சித்திக்கவில்லையே என் மனவஞ்சனை தொலையவில்லையே இதற்கு என்ன செய்வேன்" என்று ஒருவன் ஏங்குவான் ஆயின் அந்த ஏக்கம் விலைமதித்தற்கரியது.

இப்படி ஒரு ஏக்கம் ஒருவனுக்கு பிறக்க எண்ணிறைந்த கோடி சென்மந் தொலையலாம். அந்த ஏக்கம் பிறந்து விட்டால், அவன் "சமயி" ஆகிறான். அவனுக்கு அந்த நோக்குச் சித்தித்து விட்டது. அறஞ்செய விரும்புதலுக்குத் திரும்பி விட்டான் சமயத்திற் பிரவேசித்துவிட்டான் என்பது கருத்து.

"இந்தப் பூமி சிவனுய்யக் கொள்கின்ற ஆறு" என்கின்றது திருவாசகம். இந்தச் சரீரம் நாம் வசிப்பதொரு பூமியே. முன்னிலையாய்க் கிடக்கின்ற உலகத்தையும், தன்னிலையாயிருக்கின்ற இந்த உடம்பையுங் கண்டவுடன் ஒட்டமெடுப்பது கூடாது. கண்டதுங் கேட்டதுமான பாம்புகளையெல்லாம் வைத்துக்கொண்டு பாம்புகளின் மூல உண்மை என்ன என்று ஆராய்ந்து அறிவதே அறிவுஅதுவே உய்யும் நெறி. கடவுள் நாம் உய்யும்பொருட்டே உலகமாகிய பாம்புகளைத் தந்திருக்கின்றார்.

"வாழ்க்கையை நீதி நெறியில் வைத்துக்கொள்ளுதல்" என்ற பொருளே விரிந்து பரந்த பொருளாகும். "கொடுத்தல் " என்ற பொருள் அப்பொருளின் ஒருசிறு அம்சமாய் அடங்கும். இனி, தன் வாழ்க்கையைக் கொடுத்தல் எனினுமாம்.

– பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

நாவலர் கல்வி வழியில் சைவக்கல்வி ஆர்வலர்,

காவலர் சு.இராசரத்தினம் அவர்களின் கல்விப் பணிகள் – சில குறிப்புக்கள்

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்
முன்னைநாள் பிரதிக்கல்விப் பணிப்பாளர் நாயகம்,
தேசிய கல்வி நிறுவனம்.

ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகளுக்கு மேல் இலங்கையில் ஐரோப்பிய நாட்டவர் ஆட்சியும் ஆதிக்கமும் நிலைபெற்றிருந்தன. அக்காலப் பகுதியில், இந் நாட்டு மக்களின் கல்வி, சமயப் பண்பாடு, கலை, கலாசாரம், வாழ்க்கை முறை என்பவற்றை முற்று முழுதாகத் தாங்கள் விருப்பப்படி மாற்றியமைக்க எத்தனங்கள் மேற்கொள்ளப் பட்டன. பதினாறாம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் வருகையுடன் ஆரம்பித்த எத்தனங்களும் செயற்பாடுகளும் பின்னர் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலும் ஆங்கிலேயர் ஆதிக்கத்திலும் வீறுபெற்று விரிந்தன. தங்களுடைய ஆட்சியை வலுப்படுத்தவும், சுதேசிகளைத் தங்களுடைய மத கலாசாரங்களுக்கு மாற்றவும் பல வகைப்பட்ட முறைகளையும் உத்திகளையும், கையாண்டனர். ஆங்கிலக்கல்வி, அரச உத்தியோகங்கள், சம்பள உயர்ச்சிகள், கௌரவங்கள், புலமைப்பரிசில்கள் போன்ற சலுகைகளை வழங்கி சுதேசிகளை மதம் மாற்றினர். பாடசாலைகளைக் கேந்திர நிலையங்களாக அமைத்துக் கல்வியைக்கருவியாகப்பயன்படுத்தி மக்களை மதமாற்றம் செய்தனர். தொடர்ந்து கலாசார மாற்றமும் செய்தனர். அத்துடன் செய்கைகள், உடை, நடை, முறை, பாவனை களில், அவ்வாறு மதமாற்றம் பெற்றவர்கள், சுதேசிகளி லிருந்து அந்நியப்படுத்தப்பட்டனர். சுதேசிகளின் சமய வழிபாட்டுரிமைகள், பண்பாடு பேணும் உரிமைகள் மறுக்கப்பட்டன. மீறுபவர்கள் கடுமையான தண்டனை களுக்குள்ளாக்கப்பட்டனர்.

வட இலங்கையில், குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில், ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில், புறமதக் குருமார், அரச ஆதரவுடன் ஆங்கிலக் கல்வி என்னும் மோகத்தைச், சைவப் பெற்றோர், பிள்ளைகள் ஆகியோரில் ஏற்படுத்தி, தம்பால் ஈர்த்தனர். சைவசமயமும், தமிழ் மரபுக் கல்வியும், சைவ ஆசார ஒழுக்கங்களும் எங்கே மக்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு விடுமோ என்னும் அச்சம் தோன்றலாயிற்று. பத்தொன்பதாம் நூற்றாண்டில், மோசமடைந்து வந்த நிலைமையைக் கண்ணுற்ற ஆறுமுகநாவலர், சைவசமய, தமிழ்க் கல்விப் பண்பாட்டு மறுமலர்ச்சிக்கு வித்திட்டு, அப்பணிகளுக்குத் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார்.

இலங்கையில் ஆங்கிலம் உத்தியோக மொழியாக, ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தினால் ஆக்கப்பட்டது. உத்தியோகம் பெற விரும்புவோர், ஆங்கில மொழிக் கல்வியையே கற்றாக வேண்டிய நிலை உருவானது. ஆங்கிலக் கல்வியை வழங்கிய பாடசாலைகளும் கல்வி நிறுவனங்களும், கிறிஸ்த்தவ மதக்குழுவினரின் உடமை களாகவும், அவற்றின் நிர்வாகமும் முகாமைத்துவமும் அம்மதக்குழுவினரின் பொறுப்பிலுமே இருந்தன. ஆங்கிலேய ஆட்சியாளர்களும் கிறிஸ்தவமதத்தைச் சார்ந்தவர்கள் என்பதால், அவர்களின் அநுசரணையும் ஆதரவும் மதக் குழுவினரின் ஆங்கிலப் பாடசாலைகளின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின. மதக்குழுவினரின் பாடசாலைகளில் கிறித்தவமதச் சூழ்நிலையே நிலவியது. மத மாற்றம், கலாசார மாற்றம் என்பன மாணவர்களில் ஏற்படுவதற்கு அங்கு போதிக்கப்பட்ட கல்வியும், பாடசாலைச் சூழலும் மிகவும் இதமாகவும் வாய்ப்பாகவும் அமைந்தன. அதே வேளை, பாரம்பரிய சைவ ஆசாரங் களும் தமிழ்க் கல்வி மரபுகளும் பரிகசிப்புக்கும் உதாசீனத்திற்கும் உள்ளாக்கப்பட்டன. சைவ இளையோர் கள் தம் சமயநெறி அனுட்டானங்களைக் கைவிட்டு புறச்சமயச் சூழலில் கல்வி கற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

கிறித்தவம் மனுக்குல நீதிக்காக - அன்பு, சேவையைப் பெருக்குவதற்காகத் தோன்றிய மதம். ஆயினும், கிறித்தவமும் ஏகாதிபத்தியமும் ஒன்றோ டொன்றிணைந்தவை என்ற கருத்தும் மக்களிடையே ஏற்படலாயிற்று.

ஆங்கிலேயர் காலக் கல்விமுறையும், மதமாற்ற மும், மேனாட்டுக் கலாசாரதிணிப்பும், அந்நிய ஆட்சியாளர்களின் நோக்கங்களையும் தேவைகளையும் ஏகாதிபத்திய அபிலாசைகளையும் நிறைவு செய்தற் பொருட்டேயாகும். அதன் பயனாக இளைய சமுதாயம் தமது சைவநெறிமுறைகளையும், பண்பாடுகளையும் மறந்தும், மறுத்துக் கேலி கிண்டல் செய்தும் வந்த நிலைமையைக் காணக் கூடியதாக இருந்தது. எனினும், அத்தகைய நிலையானது, சுதேசிகள் சிலரின் கண்களைத் திறந்தன: விழிப்பினை ஏற்படுத்தின. சைவநெறியினையும், தமிழ்க் கல்வியையும் மீட்டுப் பலப்படுத்துவதிலும், அதற்காகக் கல்விக் கூடங்களைச் சைவச் சூழலில் நிறுவும் பணிகளிலும் ஈடுபடலானர். பாடசாலைகள் மூலமே இது சாத்தியமாகும் என எண்ணினர்.

வட இலங்கையில் ஆறுமுகநாவலர், இவ் விழிப்பினால் உந்தப்பட்டு, சைவசமய மறுமலர்ச்சிப் பணிகளுக்குத் தலைமை தாங்கினார். அந்நிய ஏகாதி பத்தியத்தின் பன்முனைத் தாக்குதல்களுக்கு இலக்கான, சைவநெறியையும், தமிழ் மொழிக் கல்வியையும், சைவத் தமிழ்ப் பண்பாடு விழுமியங் களையும் காப்பாற்றுவது அன்றைய காலத்தின் தேவையும் தமது அன்றியமையாக் கடமையும் என நாவலர் கொண்டார். அதற்கான பிரசாங்கள், பிரசங்கங்கள், கண்டனப் பிரசுரங்கள், எதிர்ப்பு நடவடிக்கைகள் முதலானவற்றில் ஈடுபட்டு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தலானார். சைவ ஒழுக்கம்,

பண்பாடு பேணுமாறும், தமிழ்ப் பண்பாட்டு வாழ்க்கை முறைகளை அனுசரிக்குமாறும்: மதமாற்ற நடவடிக்கை களுக்க இடங்கொடாதிருக்குமாறும் தமிழ் மக்களைக் கோரி முதன் முதலாக இயக்கம் நடத்திய பெருமை நாவலர் பெருமனையே சாரும்.

"கல்வியே கருந்தனம்" எனவும்: சைவசமய, தமிழ் மறுமலர்ச்சிப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்குச் சிறந்த கருவி, கல்வியே எனவும்: பொருத்தமான கேந்திர நிலையங்கள் ஆலயங்களும் வித்தியாலயங்களும் எனவும் நாவலர் துணிந்தார். ஆலயங்கள் தோறும் சைவப்பிரசங்கங்கள், புராணபடனம், என்பவற்றை மேற்கொண்டார். ஊர்கள் தோறும் பாடசாலைகள் நிறுவித் தமிழ்க் கல்வியை வழங்கும் முயற்சிகளிலும் தீவிரமாக ஈடுபடலானார். நாவலர் தமிழ் நாட்டிலும் சிதம்பரத்தைத் தலைமை நிலையமாகக் கொண்டு, மறுமலர்ச்சிப் பணிகளை மேற் கொள்ளலானார்.

நாவலர் தத்துவச் செயல்முறைக் கல்வித்திட்டம் ஒன்றினையும் ஐந்தாண்டுக் கல்வித்திட்டம் ஒன்றினையும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. கல்வித்திட்டமிடல் பற்றி அன்றே சிந்தித்துச் செயற்பட்டவர் நாவலர் என்பதை அறியும் போது, அவரின் கல்விக் கொள்கையும் செயன்முறையும் எத்துணை காத்திரமானது என்பதை அறிய முடிகிறது. அத்துடன் ஆசிரிய பயிற்சி பற்றியும் சிந்தித்தவர் நாவலர் அவரின் கல்வித் திட்டத்தில் ஆசிரிய பயிற்சி - கற்று வல்ல உபாத்தியாயரை உருவாக்குதல் என்பன இடம் பெற்றிருந்தன. பாடவிதானம் அமைத்தல், பாடநூல்களைத் தயாரித்தல்: அச்சேற்றி வெளியிடுதல் என்பன நாவலர் முன்னின்று ஆற்றிய கல்விப்பணிகள் ஆகும். இலவசக் கல்விமூலம் கல்வியை எல்லோர்க்கும் கிடைக்கச் செய்யும் நல்லெண்ணத்தை, விஞ்ஞாபனம் மூலம் வெளிப்படுத்திய நாவலர், சொல்லொணா இடையூறுகளின் மத்தியிலும், அதனைச் செயல் படுத்தினார். பழைய தமிழ் இலக்கிய இலக்கண நூல்கள் சிலவற்றை அச்சுவாகனமேற்றிப் பாதுகாத்தார். செய்யுள் நடையிலிருந்த பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் போன்ற நூல்களை வசனநடையில் எழுதிப் பதிப்பித்தார். பொது மக்கள் கல்வி - வளர்ந்தோர் கல்விக்கு அவை உதவின. பிரசங்கம், புராணபடலம், காவிய பாடசாலை, வசனநடையில் அமைந்த பிரசுரங்கள், பத்திரிகைகள் வாயிலாகப் பொது மக்கள் கல்வியையும், வளர்ந்தோர் கல்வியையும் வழங்க நாவலர் முயற்சிகள் மேற்கொண்டார். நாவலரின் கல்விப் பணிகள், சமூகப் பணிகள், சமயப்பணிகள் அனைத்தும் ஏகாதிபத்திய ஆட்சியாளர் களினதும், புறமதத்தவர்களினதும் கடும் எதிர்ப்புக்கள், சதிமுயற்சிகளின் மத்தியிலேயே நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

1848 ஆம் ஆண்டிலே, தான் மேற்கொண்ட ஆங்கிலக் கல்லூரி ஆசிரியத் தொழிலையும், பரம்பரைச் சொத்துக்களையும் முழுமையாகப் பரித்தியாகஞ் செய்துவிடடு, நாவலர் பொதுப்பணிகளில் முழுநேர ஊழியனாகச் செயற்படலானார். அதே ஆண்டிலே, சைவத்தமிழ் மறுமலர்ச்சியின் சின்னமாக எழுந்ததே, நாவலர் பெருமானின் பெருமுயற்சியால் வண்ணார் பண்ணையில் நிறுவப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலை யாகும். ஆட்சியாளர்களின் ஆதரவு அவருக்குக்கிடைக்க வில்லை. ஆங்கில மோகத்தில் திளைத்து, தன்மான உணர்ச்சியை இழந்து வாழ்ந்த, தமிழ் மக்கள் பலரும் நாவலருக்கு உதவமுன் வரவில்லை: பதிலாக உபத்திரவங்களையும் இடையூறுகளையுமே விளை வித்தனர். இருந்தும் நாவலர் தளர்ச்சியடைய வில்லை. தொடர்ந்து, இணுவில், கந்தர்மடம், கோப்பாய், கோண்டாவில், புலோலி, மூளாய், வேலணை, கொழும்புத்துறை, முல்லைத்தீவு ஆதியாம்இடங்களிலும் சைவப்பிரகாசவித்தியாசாலைகள் எழுந்தன.

நாவலர் பெருமான் வண்ணார்பண்ணையில் 1848 இல் நிறுவிய சைவப்பிரகாச வித்தியாசாலை, இலங்கை யில் கிறித்தவமதக் குழுவினரல்லாதோரால் அந்நிய ஆட்சிக்காலத்தில் எழுந்த முறைசார்ந்த கல்வியை வழங்கும் முதல் வித்தியாலயம் ஆகும். இலங்கையில் அத்தகைய பலகல்லூரிகள் தோன்றுவதற்கு முன்னோடி யாக இவ்வித்தியாலயம் விளங்கியது.

நாவலரைத் தொடர்ந்து, அவர் காட்டிய பாதையில், சைவப்பிள்ளைகள், சைவச்சூழலில் சைவப்பண்பாடு பேணி, ஆரம்ப இடைநிலைக் கல்வியைக் கற்றுக் கொள்ள வாய்ப்பாக, சைவபரிபாலனசபை, இந்துக் கல்லூரிச் சபை, சைவவித்தியா விருத்திச் சங்கம் என்பன கல்லூரிகளையும், பாடசாலைகளையும் நிறுவி நடத்திவரலாயின. சைவக்கல்வி வளர்ச்சிக்கு, நாவலர் வழி நின்று, சேர்.பொன்.இராமநாதன் ஆற்றிய பணிகள் மகத்தானவை. இலங்கைச் சட்டசபை அங்கத்தவராக விளங்கிய அவர் அந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி, சைவக்கல்வியை மேம்படுத்தப் பெரிதும் பாடுபட்டார். திருநெல்வேலியில் பரமேஸ்வராக் கல்லூரியையும், சுன்னாகம் மருதனார் மடத்தில் இராமநாதன் கல்லூரியை யும் தம்முடைய பணத்தை முதலீடு செய்து நிறுவினார்.

ஒருநாடு அரசியல் விடுதலைப் பெறுவதற்கு முன், சமயம் மொழி, கல்வி, கலாசார உணர்வு விடுதலை பெறவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியவர், நாவலர் பெருமான். அத்துடன் தற்காலக் கல்வித்தேவைக்கு ஏற்பத் தமிழ் மொழியும் ஆங்கில மொழியும், இரு விதமுரண்படா நாகரிகப் பண்பினை இணைத்து வளர்க்கமுடியும் எனும் தத்துவத்தையும் எடுத்துக்காட்டுவதாக நாவலரின் கல்விக் கொள்கை அமையப் பெற்றமை, புதுமை நல்லதாயின் ஏற்றுக் கொள்ளும் பண்பும், மாற்றங்களுக்கு நெகிழ்ந்து கொடுக்கும் பாங்கும் அவரிடம் காணப்பட்டமையை சுட்டிநிற்கின்றன. எனினும் பாடசாலைகளில் சைவச்சூழல், தமிழ்ப் பண்பாடு அமையப் பெற வேண்டுமென்பதில் நாவலர் உறுதியாக இருந்தார்.

நாவலர் பரம்பரையினரால் 1888 இல் ஆரம்பிக்கப் பட்டது யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை அதன்

முயற்சியால் 1889 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி நிறுவப்பட்டது. தொடர்ந்து கொக்குவில், உரும்பராய், காரைநகர், சாகவகச்சேரி, மானிப்பாய் ஆதியாம் இடங்களில் இந்துக் கல்லூரிகள் எழுந்தன. அவற்றை முகாமைத்துவம் செய்ய இந்துக் கல்லூரிச் சபை தோற்றுவிக்கப்பட்டது. குடாநாட்டின் பல பாகங்களிலும் தனியார் முயற்சியினால், நாவலர் நெறிப்படி இந்துக் கல்லூரிகள் தோன்றின. அவை, இடைநிலைக் கல்வியை சைவசமயச் சூழலில் ஆங்கில மொழிமூலம் மாணவர் கற்க வாய்ப்பளித்தன. கிறித்தவமதக் குழுவினரின் கல்லூரி களுக்கு, இந்துக் கல்லூரிகள் கல்வித் தரத்திலும், மாணவர் தொகையிலும், இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் சவாலாக விளங்கின. நாவலர் பெருமானின் இலட்சியம் நிறைவு எய்தியது எனலாம்.

ஊர்கள் தோறும் சைவப்பாடசாலைகளை நிறுவுதல், சைவச் சூழலைப் பேணுதல், சைவத்தமிழ்க் கல்வியை சைவப்பிள்ளைகளுக்கு வழங்குதல், மதமாற்றத்தைத் தடுத்தல் போன்ற சைவமறுமலர்ச்சிப் பணிகளை, நாவலர் பெருமான் விட்டுச் சென்ற இடத்திலிருந்து முன்னெடுத்துச் செல்லும் நோக்குடன், 1923 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஒன்பதாந் திகதி, யாழ்ப்பாணத்தில் சைவ வித்தியா விருத்திச் சங்கம் நிறுவப்பட்டது. இதற்கு முன்னின்று உழைத்தவர்களில் சேர்.பொன்னம்பலம் இராமநாதன், சு.இராசரத்தினம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். 1884 ஆம் ஆண்டில் பிறந்த சைவக்காவலர் சு.இராசரத்தினம் அவர்கள் சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் முகாமையாளராகவும் செயலாளராகவும் அதன் ஆரம்ப காலத்திலிருந்து நீண்ட காலம் அரம்பணியாற்றியவர். சட்ட வல்லுநராக விளங்கிய அவர் தேடி வந்த உயர் பதவிகளையெல்லாம் உதறித்தள்ளி விட்டு, முழுநேர ஊழியராக, சைவ வித்தியா விருத்திச் சங்கத்துடன் (இந்து போர்ட்) ஒன்றித்து விட்டவர். "நாவலர்" என்றால் நல்லைநகர் ஆறுமுகசாவலர் அவர்களையே குறிப்பது போல் "இந்து போரட்" என்றால் சு.இராசரத்தினம்அவர்களையே குறிப்பதாக அமைந்தது. அந்த அளவிற்கு அவர் தமது உடல், பொருள், ஆவி, பதவி, அனைத்தையும் அர்ப்பணித்தச் சைவப்பணியாற்றியவர். அவருக்குப் பக்கபலமாக, நிர்வாகஉதவியாளர் திரு.கந்தப்பசேகரம் அவர்களும் கணக்காளர் அப்புத்துரை அவர்களும் ஆற்றிய சேவை வியந்து போற்றுதற் குரியது.

தமிழ் மொழி மூல ஆரம்பக்கல்வி மற்றும் இடைநிலைக்கல்வியைச் சைவப்பிள்ளைகள், சைவசமயச் சூழலில், சைவத் தமிழ்ப் பண்பாடு பேணிக் கற்க வாய்ப்பளிக்கும் வகையில் சைவ வித்தியா விருத்திச் சங்கம் நிறுவிய பாடசாலைகளும், நிர்வகித்த பாடசாலை களும் விளங்கின. சிறந்த சைவ ஆசிரியர்களை உருவாக்கும் பொருட்டு சு.இராசரத்தினம் அவர்களின் பெருமுயற்சியால் திருநெல்வேலியில் சைவாசிரிய கலாசாலை நிறுவப்பட்டது.அதிபர் மயிலிட்டி சுவாமிநாதன், உப அதிபர் பொ.கைலாசபதி, தமிழ்ப் பேராசிரியர் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை ஆகியோர், ஆசிரியகலாசாலையை அணி செய்தனர். அவர்களால் புடம் போடப்பட்டுப் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்ட நல்லாசிரியர்கள் சைவத்தமிழ்ப் பண்பாட்டுத் தூதுவர் களாக நாடெங்கிலும் விளங்கினர். அவர்களின் நடை, உடை, பாவனை, போத்னை, போக்கு, வாக்கு, எண்ணம், சொல், செயல், வாழ்க்கை முறையாவற்றிலும் சைவத்தமிழ்ப் பண்பாட்டு மணம் கமழ்ந்தது. சைவ மறுமலர்ச்சிக்கு அவ்வாசிரியர்களின் பங்கு மகத்தானது.

"தானத்தில் சிறந்தது வித்தியாதனம்", "தருமத்தில் சிறந்த தருமம் பாடசாலைகளைத் தாபித்தல்", என்பார் நாவலர் பெருமான். இக் கூற்றுக்களை அனுசரித்துச் செயலாற்றியவர் கௌரவ சு.இராசரத்தினம் அவர்கள். இலங்கைச் சட்டசபை உறுப்பினராக இருந்த காலப் பகுதியில் அவர் சைவப்பாடசாலைகளின் விருத்தி, கல்விச் சட்டங்களை ஆக்குதல், உதவி நன்கொடை, ஆசிரியர் விருத்தி மற்றும் நியமனம் போன்ற பல விடயங்களில் தகுந்த ஆலோசனைகளை வழங்கி நெறிப்படுத்தினார்.

சாதிப்பாகுபாடின்றி, சைவப்பிள்ளைகளைப் பாடசலைகளில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். என்றும் அவர்களுக்கு சாதி அடிப்படையில் சம ஆசனம், சம போசனம் மறுக்கப்படக் கூடாது என்றும் சு.இராசரத்தினம் அவர்கள் தமது நிர்வாகத்தின் கீழ் இயங்கும் சகல பாடசாலை அதிபர்களுக்கும் சுற்று நிருபம் அனுப்பி, அதனை அமுற்படுத்துவதிலும் உறுதியாக இருந்தார்.

சமூகத்தின் அடிமட்டத்தில் பின்தங்கிய நிலையில் வாழ்ந்த மக்களும்: ஆதரவற்றுக் காணப்பட்ட தாய், தந்தையரை இழந்த சைவப்பிள்ளைகளும் அக்காலத்தில் மதமாற்றத்திற்கு உள்ளாக்கும் முயற்சிகள் தீராமாக நடைபெற்றுவந்தன. கல்வி வழங்குதல், விடுதி வசதிகள் செய்து கொடுத்தல், உத்தியோகம் அரசாங்கத்தில் பெற்றுக் கொடுத்தல், சமூக அங்கீகாரம் பெறுதல் என்னும் போர்வையில், அம்முயற்சிகள் இடம் பெற்றன. பெரியார் சு.இராசரத்தினம் அவற்றைத் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டார். 1930 இல், ஆண்களுக்கும் பெண்களுக்குமான இரு அநாதை விடுதிகளும், கல்வி கற்பதற்கு பாடசாலை வசதிகளும் உருப்பெற்றன. அவை இன்றும் திறம்பட நடாத்தப்பட்டு வருகின்றன சாதி, குலம், சமூக நிலை என்பவற்றிற்கு அப்பால், மனிதாபிமானம், மனிதர்மம் என்ற அடிப்படையில் சிந்தித்துச் செயலாற்றிய பெருந்தகை பெரியார் இராசரத்தினம் ஆவார்.

பிற்பட்ட சமூகத்தினர் என அக்காலத்தில் கருதப்பட்டவர்களின் பிள்ளைகள் கல்வி கற்பதற்கு ஏற்ற வசதிகளை, பலத்த எதிர்ப்புக்களையும் பொருட்படுத்தாது, தமது முகாமையின் கீழ் இருந்த சைவப் பாடசாலைகளில் செய்து கொடுத்தமை, இராசரத்தினம் அவர்களின் சாதனையாகும். ஒரு காந்தீய வாதியாகவும், சமூகச் சீர்திருத்தவாதியாகவும், கர்ம வீரர் ஆகவும் காட்சி தருகிறார். சரி என்று தன் மனதில் பட்டதை எவ்விதத்திலும்

செய்து முடிக்கும் சாதனையாளர். அரசாங்கம் இயற்றும் கல்விச் சட்டங்களிலும் சுற்றுநிருபங்களிலும் விதி விலக்ககளைக் கண்டு பிடித்து, தமக்குச் சாதகமாக்கிப் பாடசாலைகளின் நன்மைக்காகப் பயன்படுத்தும் வல்லமை பெற்றவர். அதனால் சட்டத்திருத்தங்களைக் கொண்டுவர வேண்டிய நிர்ப்பந்தம், ஆங்கிலேய அரசுக்கு ஏற்பட்டமை பற்றிக் கூறப்படுகிறது. பெரும் விவேகியாகவும், சிறந்த சாதுரியம் படைத்த முகாமையாளராகவும், ஆளுமை நிறைந்தவராகவும் பெரியார் இராசரத்தினம் விளங்கினார்.

1957 ஆம் ஆண்டு ஆனிமாதத்தில் ஒரு நாள், பெரியார் இராசரத்தினம் அவர்கள், என்னை வந்து தம்மைத் தமது அலுவலகத்தில் சந்திக்குமாறு எம்மூர்ப் பெரியார் உயர் திரு.வை.விநாயகமூர்த்தி அவர்கள் மூலம் செய்தி அனுப்பியிருந்தார். புவியியல் பட்டதாரியாகப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறி, வேலைதேடும் படலத்தில் நான் ஈடுபட்டிருந்த வேளையில் கிடைத்த அச்செய்தி எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. மறு நாள் காலை, சைவப்பெருமகனார் இராசரத்தினம் அவர்களை அவரது யாழ்ப்பாணம் அலுவலகத்தில் சந்தித்து என்னை அறிமுகம் செய்தேன். புன்னகையுடன் என்னை வரவேற்று, 'செங்குந்த இந்துக்கல்லூரிக்குப் புவியியல் ஆசிரியராக இன்று முதல் உம்மை நியமித்துள்ளேன் வாரும், கொண்டு போய் விடுறன்" என்று சொல்லவும், அவருடைய கார் வந்து நிற்கவும் நேரம் சரியாக இருந்தது. என்னைப் பற்றிய தகவல்களை ஏற்கனவே அறிந்து வைத்திருந்தார் என்பது தெரிந்தது. சிறிது நேரத்தில் செங்குந்த இந்துக் கல்லூரி வாயிலில் கார் போய் நின்றது. அங்கு அதிபர் நா.கணபதிப்பிள்ளை எங்களை வரவேற்றார். என்னை அதிபருக்கு அறிமுகஞ் செய்த பெரியார் இராசரத்தினம் அவர்கள், இவர் புவியியல் பட்டதாரி: நீர் தேடிக் கொண்டிருந்த ஆள், கிடைத்து விட்டார். சரியாகப் பயன்படுத்திக் கொள்ளும்" என்று கூறி விட்டு என்னிடம் கடமையைச் சரியாய்ச் செய்து நீர் நல்ல ஆசிரியராகப் பேர் எடுக்கவேண்டும்' என்றவர் நீர் முத்துத்தம்பி விடுதியில் தங்கலாம் என்றும் கூறினார் தமது புன்னகையால் என்னை ஆசீர்வதித்தார். அவரது வாழ்த்துக்கள் என்னைக் கல்விப் பணிப்பாளர் வரை உயர்த்தியது. அவருக்கு எனது வணக்கமும் அஞ்சலியும் என்றென்றும் உரித்தாகுக.

"எவன் தன் வாழ்க்கையை, நீதி வழுவா நெறிமுறையில் வைத்துக் கொள்கிறானோ- அதற்கே அர்ப்பணம் செய்து விடுகின்றானோ- அவனே எல்லா வகையிலும் உயர்ந்தோனாகின்றான். சமய பரிபாஷையில் அவனை வைதிகன் என்பர். வைதிகம் - அறிவுநெறி. அது சமயத்தின் தொடக்கம்.

நீதிக்குப்புறம்பான வாழ்க்கையுடையோன் அவைதிகன். வைதிகனுக்கும் அவைதிகனுக்கும் இடைத்தூரம், வடக்குக்கும் தெற்குக்கும் உள்ள தூரம். வைதிகன் ஒரு நாளைக்குக் கைலாசவாசி அவைதிகனுக்கு உரிய இடம் சொல்லவேண்டியதில்லை. "அறிவு" கடவுள் தந்த கடவுட் சொத்து. அதனைப் பேணி வளர்க்கும் முறையில் வளர்க்க வேண்டும்.

" சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு"

என்ற குறள் ஈண்டுச் சிந்திக்கற்பாலது.

கந்தபுராண கலாச்சாரம் அருஞ் சந்தர்ப்பத்தில் நமக்கு ஒரு நாவலரைத் தந்தது. அன்றி நாவலர் எடுத்த முயற்சிக்குத் தோன்றாத் துணையாய் அநுகூலமும் செய்தது. நாவலர் அவர்கள் எடுத்த முயற்சிகளைப் போலிச் சைவர்கள் எதிர்க்கிறார்கள் கிறிஸ்தவர்கள் எதிர்க்கவில்லை அப்பொழுது "இஃது என்ன ஆச்சரியம்!" என்று நாவலர் அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். பிறகு ஆச்சரியப்படவில்லை .கிறிஸ்தவர்கள் எதிர்க்காமையின் மூலகாரணத்தை நாவலர் அவர்கள் பின்பு கண்டு கொண்டார்.

– பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

சைவப்பெரியார் இந்து போட் இராசரத்தினம் அவர்களும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்துடனான என் தொடர்பும்

சி. இராஜநாயகம்
ஓய்வுபெற்ற கல்வி அதிகாரி

யாழ். மத்திய கல்லூரி ஒரு கிறிஸ்தவ பாடசாலை. கிறிஸ்தவ பாதிரிமாரால் நிர்வகிக்கப்பட்டது. நல்லை நாவலர் பெருமான் அங்கு மாணவராகவும் ஆசிரியராகவும் இருந்தார். உயர்தரக்கல்விக்குச் சைவப்பாடசாலைகள் இல்லை. ஆங்கிலமும் படிக்க வேண்டும். குடாநாட்டிலும் வேறு ஊர்களிலும் கிறிஸ்தவம் பரப்ப வந்த பாதிரிமார்கள் பாடசாலைகளை ஸ்தாபித் தார்கள். உயர்கல்விக்காகவும் அரச உத்தியோகத்துக் காகவும் சைவப்பிள்ளைகள் கிறிஸ்தவ பாடசாலையில் சேர்ந்தார்கள். கல்விக்காக பட்ட மனவேதனையும் துன்பமும் அவமானமும் அதிகம்.

நாவலர் பெருமான் சைவப்பிள்ளைகளுக்கு ஏற்படும் அவமானத்தை உணர்ந்தார். வேலையைத் துறந்தார். மத்திய கல்லூரியை விட்டார். சைவப் பெற்றோர்கள் மத்தியில் சைவப் பிள்ளைகளின் கல்வி சைவச் சூழலில், சைவப் பாடசாலைகளில் தான் கற்பிக்கப்படவேண்டும் என்றார். வண்ணார் பண்ணையில் சைவப் பிரகாச வித்தியாசாலையை ஆரம்பித்தார். கிராமங்களில் அங்குள்ள கொடை வள்ளல்கள் மூலம் பல சைவப்பாடசாலைகள் ஆரம்பமாயின.

நாவலர் பெருமானின் சிந்தையில் பெரிதும் ஈடுபாடு கொண்ட சிவை தாமோதரம்பிள்ளை, சேர்.பொன்னம்பலம் இராதநாதன், சு.இராசரத்தினம் போன்ற கல்விமான்களுடன் கிராமங்களில் உள்ள சைவ அறிஞர்களும் சேர்ந்து சைவப் பிள்ளைகளுக்காக சைவப் பாடசாலைகளை ஆரம்பித்தார்கள். கிறிஸ்தவ பாதிரிமார் களின் சமய காழ்ப்புணர்ச்சியால் அனுபவப்பட்ட வர்கள் நிவாரணம் வேண்டி வெற்றியும் கண்டனர்.

இலங்கையில் முக்கியமாக யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சைவப் பெரியோர்களால் 1923ம் ஆண்டு மார்கழி மாதம் 9ஆம் திகதி சைவவித்தியா விருத்திச் சங்கம் உதயமானது. சேர் வை.துரைசுவாமி, டாக்டர் எஸ்.சுப்பிரமணியம் எஸ் செல்லப்பா, சு.இராசரத்தினம், ஏ.கே.நவரத்தினம், எஸ்.வி.விஜயரத்தினம், எஸ்.அட்சலிங்கம், செனேற்றரர் எஸ்.ஆர்.கனகநாயகம் போன்ற கல்விமான்களுடன் வேறும் சைவப்பெரியோர்கள் சேர்ந்து ஆரம்பிக்கப்பட்டதுதான் சைவ வித்தியாவிருத்திச்சங்கம். 1923 ம் ஆண்டு ஆரம்பித்த இந்த அமைப்பு எண்பத்தைந்து வருடங்கள் சைவ மாணவர்களின் கல்வியிலும், சைவசமய வளர்ச்சியிலும் செய்த சேவைகள் யாழ் மக்கள் மாத்திரமல்ல உலகசைவப் பெரியோர்கள் அறிந்தவை. இதில் சைவப் பெரியார் சு.இராசரத்தினம் அவர்களின் பங்கு ஆராயப்பட வேண்டியது. செயலாளராகவும் பாடசாலைகளின் நிர்வாகியாகவும் இருந்து தனது 86 வயது வரை சைவப் பெற்றோருக்கும், சைவ ஆசிரியர்களுக்கும் சைவப்பிள்ளைகளுக்கும் அவர் செய்த தன்நலம் விரும்பாத சேவை எழுத்தில் வடிக்க முடியாதவை.

எங்கள் மனேஜர் ஐயா அவர்கள் கோப்பாய் சைவப்பெரியார் கதிரேசு சுப்பிரமணியம் அவர்களுக்கும் வல்வெட்டி கொடைவள்ளல் குமாரசாமி மீனாட்சிக்கும் புத்திரனாக 1884 ஆம் ஆண்டு யூலை மாதம் 4 ஆம் திகதி பிறந்தார். இளம் வயதில் தந்தையை இழந்தார். தாய் மாமன் நீதிபதி வைமன் கதிரவேற்பிள்ளையின் பாதுகாப்பில் வளர்ந்தார். யாழ். வைமன் வீதி இன்றும் நீதிபதி கதிரவேற்பிள்ளையை கௌரவிக்கின்றது. மனேச்சர் இராசரத்தினம் அவர்களும் மாமன் வீட்டில் வைமன் வீதியில் தான் வாழ்ந்தார்.

ஆரம்ப கல்வியை முடித்து யாழ். மத்திய கல்லூரியில் இடைநிலைக்கல்வியைப் பெற்றார். புத்தகக் கல்வியுடன் விளையாட்டுத்துறையிலும் பிரபல்யமானார். துடுப்பாட்ட குழுவுக்கு தலைமை ஏற்று சிறந்த பந்து வீச்சாளர் என்னும் பெயர் எடுத்தார். யாழ்ப்பாணத்தில் யூனைற்றற் விளையாட்டுக்கழகம் ஆரம்பித்தவர்களில் இவரும் ஒருவர்.

உயர் கல்விக்காக கல்கத்தா சர்வகலாசாலையில் சேர்ந்தார். இடைமாணிக் கல்வியை அங்கு பூர்த்தி செய்து இலங்கை சட்டக்கல்லூரியில் படித்து அப்புக்காத்துவாக வெளியேறினார். சிவில் வழக்குகளில் இவருக்கு பெரும் புகழ் இருந்தது. உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் இவர் வாதாடிய நீதிமன்றங்கள் முழுநேரசைவவித்தியாவிருத்திச் சங்க ஊழியராகியபடியால் நீதிமன்றம் போவதை 1931ம் ஆண்டு நிறுத்தினார். சைவ மக்களின் வாழ்வும் சைவப் பிள்ளைகளின் கல்வியும் தான் அவரது குறிக்கோளாக இருந்தது.

இவரது குடும்பமும், சூழலும் சட்டத்தரணிகளால் நிரம்பியது. தாய் வழி மாமன் வைமன் கதிரவேற்பிள்ளை ஊர்காவற்றுறை நீதிவான், தமையன் கார்த்திகேசு சட்டத்தரணி, நொத்தாரிசும், 1909 இல் இவர் “நொத்தாரிசு மனுவல்” என்ற நூலை எழுதினார். மைத்துனர் பாலசிங்கம் பல சட்டப்புத்தகங்களை எழுதியவர். “கௌரவ” (ஒனறபிள்) என்று அறியப்பட்டவர். மனேச்சர் ஐயா அவர்கள் சட்டசபையிலும் அங்கம் வகித்தவர். பாடசாலைச்சட்டங்கள் பலவற்றை நிறைவு செய்வதற்கு சேர்.பொன்.இராமநாதன் அவர்களுடன் சேர்ந்து உழைத்தவர். அவரது சேவையில் கவரப்பட்டவர். இருவரது தொடர்பும் இறுக்கமானது.

இலங்கையின் முதல் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கா, சேர் பரன் ஜெயரத்திலகா கலாநிதி டபிள்யு. டபிள்யு.

கன்னங்கரா போன்ற தலைவர்களுடன் தொடர்பு கொண்டு அரசியல் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் ஸ்தாபகரில் ஒருவராகி யாழ். கிளைக்கு தலைவரானார். அரசியல் கொள்ளைப்பிடிப்புடையவர். பலர் அழுத்தம் கொடுத்தும் 1947 சட்டசபை தேர்தலை விரும்பாது, முழுநேரமும் பாடசாலைகளின் மனேச்சர் ஆனவர். உயர்ந்த தோற்றம் குளோஸ்கோட் தலையில் தலப்பாகை, கம்பீரமான நடை, நல்ல மீசை, அன்பான இரக்கமான கண்கள், தொய்வு நோய் இருந்தும் சேவையில் தொய்வு இல்லை.

குடாநாடு, முல்லைத்தீவு, பதுளை, நாவலப்பிட்டி முதல், புத்தளம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா, தீவகம் முதலான இடங்களில் பாடசாலைகளை ஸ்தாபித்து அரசு பொறுப்பெடுக்கும் வரை நிர்வகித்தார். அதிபரையும், ஆசிரியர்களையும் அவர்கள் பெயர் சொல்லும் அளவுக்கு ஞாபகத்தில் வைத்திருப்பவர். 1923 ம் ஆண்டு முதல் 1961ம் ஆண்டு வரை சைவப்பிள்ளைகள் கல்விக்காக, சைவப் பெரியார்கள், நிலபுலச் சொந்தக்காரர்கள், நலன் விரும்பிகள் கொடையாளிகளின் உதவிகளுடன், ஊர் ஊராக சென்று சைவப் பாடசாலைகளை நிறுவினார். கிறிஸ்தவ பாடசாலைகளுக்கு அண்மையிலும் சைவப் பாடசாலைகள் தோன்றின. இதனால் கிறிஸ்தவ பாடசாலைகளை மூடவேண்டிய நிலையும் ஏற்பட்டது.

174 சைவப் பாடசாலைகள் 7 ஆங்கில பாடசாலைகள் 15 நெசவு நிலையங்கள், 16 கூடை இழைக்கும் பாடசாலைகள், தற்பாலிக அங்கீகாரத்துடன் 63 பாடசாலைகள் 2 அநாதை இல்லங்கள் ஒரு ஆசிரிய பயிற்சிக் கலாசாலை என்பன சைவவித்தியா விருத்திச்சங்க நிர்வாகத்தில் இயங்கின.

தனிமனிதனாக நின்று ஆயிரக்கணக்கான சைவ தமிழ் ஆசிரியர்களுக்கும் பல லட்சத்துக்கு மேல் உள்ள வசதியற்ற ஆங்கில பாடசாலை போகமுடியாத சைவப் பிள்ளைகளுக்கும் வாழ்வு கொடுத்த பெரியார். நாவலர் பெருமானுக்குப்பின் இவர் ஒருவரே யாரும் மறந்துவிடாது என்றும் நினைவு கூரப்படவேண்டியவர்.

சைவ தமிழ் ஆசிரியர்களை வறிய மக்கள் மத்தியில் தெரிந்து பயிற்சி கொடுத்து வித்திவிருத்திச்சங்க பாடசாலைகளில் கற்பிக்க இடம் கொடுத்தார்கள். வசதி குறைந்த சைவப் பிள்ளைகள் ஆங்கில பாடசாலைகளுக்கு செல்வதற்கு பணம் இல்லை. தமிழ் பாடசாலைகளில் பத்தாம் வகுப்பு படித்து சித்தி எய்தியவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை. ஆங்கிலம் பத்தாம் வகுப்பு படித்தவர்களுக்கு நிர்வாக சேவை எழுது விளைஞர் சேவை, ஆங்கில ஆசிரியர் பயிற்சி கல்லூரி போன்றவற்றில் வேலை வாய்ப்புக்கள் கிடைத்தன.

மனேச்சர் செய்த அரும்பணி 1925 ம் ஆண்டு தமிழ் சைவ ஆசிரிய பயிற்சி கலாசாலையைத் தொடங்கியமை. வறியவர்கள் தமிழ் படித்தவர்களில் ஆசிரியர்கள் ஆனார்கள். சைவத் தமிழ் பாடசாலைகளில் நியமனம் பெற்றார்கள். அன்று மூன்று வருட ஆசிரியர் பயிற்சி . பின்பு வருடம் இரண்டானது. ஆண் ஆசிரியர்கள் தான் பயிற்சி பெற்றார்கள். 1950 ம் ஆண்டளவில் பெண்களும் பயிற்சிக்குச் சேர்க்கப்பட்டார்கள். பிற்காலத்தில் 50 பெண்களும், 50 ஆண்களும் பயிற்சி பெற்று சைவ ஆசிரியர்கள் ஆனார்கள். வேறு சமய ஆசிரிய பயிற்சி கலாசாலைகளில் சைவப்பிள்ளைகள் சேரமுடியாது. சமயம் மாறி கிறிஸ்தவராக வேண்டும். பெயரும் மாறும், பயிற்சி முடித்து சைவராக மாறியவரும் உண்டு.

1925 முதல் 1963 வரை சைவ ஆசிரிய கலாசாலையில் பயிற்றப்பட்ட சைவ ஆசிரியர்கள் இன்று சேவையில் இல்லை. அவர்கள் பத்துப்பாடங்களை திறம்பட கற்பிக்கக் கூடியவர்கள். அவர்களது ஆசிரிய தோற்றமே தனி மதிப்படையது. பதுளை, நாவலம்பிட்டி அவிசாவளை, கொழும்பு, புத்தளம் போன்ற பாடசாலைகளில் எல்லா சமூகத்தவருக்கும் தமிழ் இலக்கணம், இலக்கியம், சைவ சமயம் போதித்தவர்கள் இன்றும் போற்றப்படுகின்றார்கள். மாணவர்களுக்கு முன் மாதிரியாக வாழ்ந்து காட்டினார்கள் இக்கால சைவ தமிழ் ஆசிரியர்கள்.

வசதி குறைந்த வறிய பிள்ளைகள் இருபாலாருக்கும் இல்லங்களை உருவாக்கினார். உண்டி, உடை, கல்வி எல்லாம் சங்கத்தின் பொறுப்பு. இன்றும் சிறப்பாக இயங்குகின்றது அது.

நெடுந்தீவில் பிறந்தேன். சைவ வித்தியா விருத்திச் சங்க நிர்வாகத்தில் இருந்த பாடசாலையில் என் தந்தையார் தலைமை ஆசிரியர். தாயார் அதே பாடசாலையில் ஒரு ஆசிரியை. இந்துப்போட் மனேச்சருக்கும் தந்தையாருக்கும் பல ஆண்டுகளாக ஒரு அன்பு பிணைப்பு இருந்தமை எனது நல் ஊழ்வினை 1942 ம் ஆண்டு மனேச்சர் ஐயாவுடன் என்னைச் சேர்த்து விட்டார். உயர் படிக்கு படிக்க ஆசை தமிழ் ஆசிரியர் பயிற்சிக்கு செல்ல வயது போதாது. எனது தாயாரின் ஆண் சகோதரர்கள் இருவர் ஆசிரியர் பயிற்சியில் இணைந்திருந்தார்கள். இது மனேச்சர் ஐயாவிற்குத் தெரியும். பின்னர் நானும் சைவாசிரியர் கலாசாலை விடுதியில் சேர்க்கப்பட்டேன். மாமா இருவரும் எனக்கு பாதுகாப்பு. செங்குந்தா இந்துக் கல்லூரி ஐயாவின் நிர்வாகத்தின் கீழ் இருந்தது. குமாரவாமிப் புலவர் மகன் முத்துக்குமாரசாமிப்பிள்ளை அவர்கள் தான் அங்கு அதிபராக கடமையாற்றினார். அங்கு சென்று ஆறு மாதங்கள் ஆங்கிலக் கல்வியைத் தொடர்ந்தேன். ஆங்கில பாடமோ அங்கு படிக்கலாம். இக்காலத்தில் எனக்காக பல வசதிகள் மனேச்சர் ஐயாவால் செய்யப்பட்டன.

பின் யாழ். இந்துக் கல்லூரியில் சேர்த்தார்கள். விடுதியில் இடம் இல்லை. நான் தொடர்ந்தும் இரு ஆண்டுகள் ஆசிரியர் கலாசாலை விடுதியில் வசித்தேன். ஐயா அவர்களின் மகன் சரவணபவன் எனது வகுப்பு நண்பன். வகுப்பு எட்டில் சேர்ந்து தொடர்ந்து படித்தோம். கலாசாலை விடுதியில் இருந்தபோது அதிபர் சுவாமிநாதன்,

பண்டிதமணி கணபதிப்பிள்ளை, சைவப்பெரியார் கைலாசபதி, கணிதஆசான் செல்லத்துரை, பண்டிதர் துரைசிங்கம், பண்டிதர் தம்பையா, அறிஞர் க.சி.குலரத்தினம், எழுத்தாளர் சு.வேலுப்பிள்ளை, குரும்பசிட்டி கனகசெந்திநாதன் போன்றோரின் தொடர்பு என் அறிவையும், ஆற்றலையும் கூட்டியது. இங்கு பெற்ற துணிவு யாழ். இந்துக் கல்லூரியில் மாணவர்மன்றச் செயலாளர் ஆக்கியது. க.சிவராமலிங்கம் மன்றத்தின் தலைவர். சுவாமி விபுலானந்தர், பண்டிதமணி கணபதிப்பிள்ளை, கலைப்புலவர் நவரத்தினம், அறிஞர் க.சி.குலரத்தினம், சரஸ்வதி பாக்கிரயராசா போன்ற அறிஞர்களை அழைத்து மாணவர் மன்றத்தில் அறிவுரை ஆற்றச் செய்த துணிவு சைவ ஆசிரிய கலாசாலை தொடர்பால் ஏற்பட்டது. மனேச்சர் சு.இராசரத்தினம் அவர்கள் தான் என்னை இந்நிலைக்கு ஆக்கினார்கள். வாழ்வில் கிடைத்த அரும் பேறாகக் இதனைக் கருதுகின்றேன். பிற்காலத்திலும் இவர்கள் தொடர்பு நீடித்தது. சைவப்பிள்ளைகளின் கல்விக்காக தன்னை அர்ப்பணித்தவர். அப்புக்காத்தாக இருந்து சொத்துச் சேர்த்திருக்கலாம். சொந்த வீடும் இல்லை. இவரது பிள்ளைகள் நீதி நிர்வாகத்தில் சேரவில்லை. அப்புக்காத்தாக வரவில்லை. நல்லைநாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை, சேர்பொன்.இராமநாதன் போன்ற பெரியர்கள் செய்த கல்விப்பணியை அழியவிடாது காத்துத்தந்த பெரியார் இந்துப்போட் இராசரத்தினம் ஐயா அவர்களே. 12.03.1970 இல் இவ்வுலக வாழ்வை முடித்துக் கொண்டார். ஒரு தனி அரசு இன்று சரிந்து விட்டது என்றார் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள். ஐயாவின் சைவப் பணியும் தமிழ் பணியும் என்றும் எம் உள்ளத்தில் இருப்பதாக! சைவ வித்தியாவிருத்திச் சங்க மாணவர் இல்லங்களில் 82 வருடம் வாழ்ந்தும் எதிர்காலத்தில் வாழும் சிறார்களின் உள்ளங்களில் சைவப் பெரியார் இராசரட்ணம் ஐயா அவர்கள் வாழ்கின்றார்; என்றும் வாழ்வார்.

ஸ்ரீலங்கா புத்தகசாலை





பாடசாலை உபகரணங்கள்,
புத்தகங்கள், அப்பியாசப் புத்தகங்கள்,
நாவல்கள் அனைத்தையும் மொத்தமாகவும், சில்லறையாகவும்
விசேட கழிவுடன் நிதான விலையில் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே இடம்.

ஸ்ரீலங்கா புத்தகசாலை

இல. 234, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்

T.P: 021 222 2573

சைவப்பெரியார், இந்து போட் சு. இராசரத்தினம்

புலவர்மணி, கலாபூஷணம்
வை. க. சிற்றம்பலம்

இலங்கையில் யாழ்ப்பாண இனிய பெரியராம்
இந்து போட் இராஜரத்தினம் என்றுமே வாழ்க
துலங்கும் தமிழ் சைவம் வளர்ந்த தூய பெரியராம்
சுப்பிரமணியம் இராசரத்தினம் தொண்டுமே வாழ்க

செந்தமி ழோடுசைவம் தேடி வளர்த்துத்
தெய்வமான நாவலர் போல் தானும் வளர்த்த
நம் தமிழ் இந்துபோட் இராசரத்தினம்
நல்ல தொண்டைச் சிவத்தொண்டாய நன்றே யாற்றினார்

அன்பர் இராசரத்தினத்தை அண்டி யூரவர்
ஐயா வென்று தேவைக் கேற்பக் கைகொடுத்திட
இன்பராகி ஊர்கள் தோறும் பள்ளிக் கூடங்கள்
எழுப்பியதில் வெற்றி கண்டார் எங்கள் பெரியவர்

ஆசிரியர் பயிலுமாறு திருநெல்வேலியில்
அழகான கட்டிடமும் அமைப்பித்து விட்டார்
வாசியாக சுவாமிநாதன் கைலாசபதி, பண்டித
மணியோடு ஐயரை முறையே நியமித்தார்

பெற்றோரும் பிள்ளைகளும் சைவத்தில் வாழ
பெரிது திருநீறுடனே தீட்சையும் வளர
கற்றோரும் மற்றோரும் கண்டு களிக்க - கோயில்
கருதுமிடம் சைவம் வளரக் கண்டார் இரத்தினம்

ஆசிரியர் மாணவரின் அரிய தொண்டினால்
ஆலயங்கள் தோறும் திரு முறைக ளோதவும்
மாசிலாத அடியார் வரலாறு சொல்லவும்
வைத்தராச ரத்தினத்தை மறந்திடலாமோ?

தாய் தந்தையை இழந்த சிறார்களுக்காக
தாபித்த சிறுவரில்லம் இன்றும் தளராமல்
வாய்மையுடன் ஆக்கிவைத்த மகான் ரத்தினத்தை
மறக்காமல் அவர்நாமம் வாழ்த்திச் சொல்வோமே

நூற்றியெண்பத் தேழு பள்ளிக் கூடம் கட்டியும்
நோகாதெம் ஆசிரியர் வாழக் காட்டியும்
சாற்றும் பெரிய அநாதையில்லம் தாபித்த அந்த
சைவப் பெரியார் ரத்தினத்தை மறந்திடலாமோ

என்னருமை இந்து போட் இராசரத்தினத்தை
என்பத்தெட்டும் வாழ்ந்தவரை, இனிய தொண்டரை
மன்னி எனக்கு ஆசிரியர் தொழில் அளித்தாரை
மனத்தில் எண்ணிப் பாடிடுவேன் மறக்கமாட்டேனே.

சைவ வித்தியாவிருத்திச் சங்கப் பணிப்பாளர் சபை



திரு. அ. தற்பரானந்தன்
தலைவர்

திரு. க. மகேஸ்வரன்
உப தலைவர்

திரு. கா. நடராசா
உப தலைவர்

திரு. க.வை. குணசேகரம்
செயலாளர்

திரு. சி. பத்மராசா
உப செயலாளர்

திரு. சோ. பத்மநாதன்
நிதிச் செயலாளர்

திருமதி. சி. இராதாகிருஷ்ணன்
திட்டப் பணிப்பாளர் - இல்லம்



திரு. வி. ஸ்ரீசக்திவேல்
திட்டப் பணிப்பாளர் - கல்வி

திரு. தி. செல்வமனோகரன்
திட்டப் பணிப்பாளர் - சமயம்

திரு. நா. நித்தியானந்தன்
திட்டப் பணிப்பாளர் - பயிற்சி

திரு. க. செ. துரைரத்தினம்
திட்டப் பணிப்பாளர் - பண்ணை

Dr.V. வேதநாதன்
திட்டப் பணிப்பாளர் - மருத்துவம்

உறுப்பினர்கள்

திருமதி. சா. அருளானந்தம்

திரு.செ.த. குகானந்தா

திரு. நா. கிருஷ்ணபிள்ளை

திருமதி. ஹே. குணபாலன்

திரு. நா. இராசநாயகம்

திரு. ஆ.வ. கணேசலிங்கம்

திரு. சி. விஜயகுமார்


திரு. ஆறு. திருமுருகன்

திரு. க. நடராசா

செல்வி இ. சுப்பிரமணியம்

திரு. தி. சத்தியபாலன்

ஓர் ஏழை மாணவனின் கதை

சோ.க. தம்பிப்பிள்ளை
ஓய்வு பெற்ற பாராளுமன்ற
சமகால உரைபெயர்ப்பாளர், கொழும்பு.

1946 காரைநகர் சுப்பிரமணிய வித்தியா சாலையில் எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். ஒரு நாள் பண்டத்தரிப்பு மகளிர் உயர் நிலைக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த எனது சகோதரியைச் சந்திக்கச் சென்றபோது கல்லூரி அதிபரின் அலுவலக வாசலில் பிசங்கிக் கொண்டிருந்தேன். அப்போது என்னைக் கண்ணுற்ற அதிபர் அழைத்து விசாரித்தார். சகோதரியைச் சந்திக்க வந்திருப்பதாகக் கூறினேன். அவர் என்னைப் பற்றி விசாரித்தார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது தந்தையை இழந்து வறுமையில் வாடும் விபரத்தைக் கூறிக் கொண்டிருக்கும் போது ஒருவர் அவ்விடத்திற்கு வந்தார்.

அதிபர் என்னைக் குறிப்பிட்டு, "இந்தப் பையனைப் பார்க்க முன்னுக்கு வருவான் போல் தெரிகிறது, படிக்க வசதியில்லாமல் கஷ்டப்படுகிறான், உதவ *முடியுமா?"* எனக் கேட்டார் அங்கே வந்த பெரியவர் என்னோடு உரையாடியதும் அதிபரிடம் ஒரு கடதாசியை வாங்கிக் கடிதம் எழுதித் தந்து அக்கடிதத்தை இந்துபோர்ட் இராசரத்தினம் ஐயாவிடம் கொடுக்கும்படி கூறினார். எனக்குத்திகைப்பாக இருந்தது. என்ன செய்வதென்றே தெரியவில்லை. கடிதத்தைப் பவ்வியமாக வாங்கிக் கொண்டு அவரை வணங்கினேன்.

அதிபருக்கு நன்றி கூறிப் புறப்பட்ட போது கருணை பொங்கக் கவனமாகப் படிக்கும்படி கூறி ஆசீர் வதித்தார். இந்நிகழ்வு இன்றும் பசுமையாகவுள்ளது. பின்வரும் நிகழ்வுகளுக்கு இச்சம்பவம் அத்திவாரமாக அமைந்ததை நீண்ட காலத்தின் பின் உணர்ந்தேன்.

அக் கடிதத்தைப் பெரும் பொக்கிஷமாகக் கருதிக் கவனமாகக் கொண்டு போய்த் தாயாரிடம் கொடுத்து இந்துப் போர்ட் ஐயாவைச் சந்திக்கப் போவோம் எனக் கூறியதும் தாயார் பட்டணம் போய் அவரைச் சந்திக்க வழிதுறை தெரியாதெனக் கூறினார். நான் வழியை விசாரித்து அறிந்து தாயாரோடு புறப்பட்டு பெருஞ் சிரமத்தின் மத்தியில் இந்துபோர்ட் ஐயாவைச் சந்தித்துக் கடிதத்தைக் கொடுத்தேன். எனக்கோ *"ஐயா என்ன பதில் சொல்வாரோ"* என்று பதற்றம் ஐயா கடிதத்தைப் படித்தபோது அவர் முகத்தில் மகிழ்ச்சி காணப்பட்டது அதைப் பார்த்த பின்பே எனக்குத் தென்பு ஏற்பட்டது. "போடிங்கில் போய் இருந்து படி" என்று ஐயா கூறிவிட்டு வேறு அலுவல்களைக் கவனித்தார்.

தாயாருக்கும் எனக்கும் ஒரே திகைப்பு எங்களின் நிலையைக் கவனித்த ஐயாவின் நிருவாக உதவி அலுவலரான கந்தப்பசேகரம் *"என்ன பிரச்சனை"* என்று கேட்டார். ஐயா கூறியவற்றை அவரிடம் கூறிய போது அவர் ஒரு கடிதத்தைத் தந்து போடிங்குக்குப் போய்க் கொடுக்கும்படி சொன்னார். அவரிடமே பாதை விபரங்களைத் தெரிந்து கொண்டு திருநெல்வேலி முத்துத் தம்பி வித்தியாசாலையைச் சேர்ந்து கடிதத்தைத் தலைமை ஆசிரியரிடம் கொடுத்தோம். கடிதத்தைப் படித்த அவர் நான் படித்துக் கொண்டிருக்கும் பாடசாலையிலிருந்து விடுகைப் பத்திரத்தை வாங்கிக் கொண்டு வந்து அங்கு படிக்கும்படி கூறினார். எனக்கோ மட்டற்ற மகிழ்ச்சி எனது தாயார் கரங்கூப்பி அவருக்கு நன்றி தெரிவித்தார்.

பாடசாலை விடுகைப் பத்திரத்தை காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையிலிருந்து எடுத்து வந்து முத்துத் தம்பி வித்தியாசாலைத் தலைமை ஆசிரியரிடம் கையளித்தேன். எனது பெயரைப் பதிவு செய்த பின் எட்டாம் வகுப்பில் படிக்கும் படி கூறினார். வகுப்புக்குச் சென்றபோது எனக்கு நல்ல வரவேற்பு முத்துத் தம்பி வித்தியாசாலை பெரிய பள்ளிக்கூடம். கிராமத்தில் சிறிய பள்ளிக் கூடத்தில் படித்த எனக்குத் திகைப்பும் எல்லையற்ற மகிழ்ச்சியும் ஏற்பட்டது. அங்கு யாவும் எனக்குப் பிடித்துக் கொண்டதோடு எனது எதிர்காலமும் பிரகாசமாகவும் நம்பிக்கையுமாகத் தோன்றித் தென்பனித்தது.

விடுதியில் உடுப்பு, கௌபீனம் உட்பட தேவையான ஏனைய பொருட்களையும் வழங்கினார்கள். கிராமப்பாடசாலைக்குத் துண்டொன்றை உடுத்துச் சென்ற எனக்கு சட்டைகிடைத்ததும் ஆனந்தப்பட்டேன். அன்று அங்கு பழகிய கௌபீனமணியும் பழக்கத்தை இன்று வரை கைவிடவில்லை.

எந்தக் கடின வேலையாயினும் பின் நிற்காது உடன் நிறைவேற்றும் பழக்கம் இருந்தமையால் எல்லோருடைய கவனத்தையும் ஈர்க்கக் கூடியதாக இருந்தது. சிறு சிறு தேவையாயினும் ஈடுபாட்டுடன் திருப்தியாக நிறைவேற்றினேன்.

அப்போது இரண்டாவது உலகப் போர் நெருக்கடி விடுதி மாணவருக்கு உணவுப் பங்கீட்டு புத்தகம் வழங்கப்பட்டிருந்தது. அப்பங்கீட்டுப் புத்தகத்தில் உள்ள புள்ளிகளை வெட்டி உரிய பங்கீட்டுக் கடையில் கையளித்து உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்ய வேண்டும். இப்பணியை விடுதி மேற் பார்வையாளர் செய்து வந்தார். இப்பணி பழுவாக இருந்தமையால் எமது உதவியை நாடினார்.

ஆண்கள் விடுதி பெண்கள் விடுதியென பங்கீட்டுப் புத்தகங்களை ஒழுங்கு செய்து ஞாயிறு தோறும் புள்ளிகளை வெட்டி ஒட்டி விடுதி மேற்பார்வையாளர் கையளிப்பார். அவர் விடுமுறையில் செல்ல நேர்ந்த போது அப்பணியை நான் செய்ய நேரிட்டது. விடுதி

மேற்பார்வையாளர் விடுமுறையில் சென்ற ஒரு சந்தர்ப்பத்தில் பங்கீட்டுப் புத்தகப் புள்ளிகளை ஒழுங்கு செய்து கொண்டு யாழ்ப்பாணம் பெரிய கடையிலுள்ள சாமி கந்தையாவின் கடையில் புள்ளிகளை ஒப்படைத்த போது மனேச்சர் ஐயாவிடம் பணம் வாங்கி வருமாறு கூறினார் யாழ்ப்பாணம் வாடி வீட்டுக்கருகாமையில் உள்ள சைவ வித்தியா விருத்திச் சங்க அலுவலகத்தில் இருந்த மனேச்சர் ஐயாவைச் சந்தித்து விடயத்தைத் தெரிவித்தேன்.

ஐயா மௌனமாக இருந்து யோசித்த பின் ஆனைக் கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலய அதிபர் திரு.கந்தர் அவர்களிடம் பணம் வாங்கிவருமாறு பணித்தார். நேரமானமையால் ஓட்டமும் நடையுமாகச் சென்று கந்தரிடம் செய்தியைக் கூறினேன் அவர் பெருமுயற்சி செய்தும் பணம் பெற முடியவில்லை. பணத்துடன் உடன் வருவதாக மனேச்சர் ஐயாவிடம் தெரிவிக்கும்படி சுறினார். நான் விரைந்து வந்து மனேச்சர் ஐயாவிடம் தெரிவித்தேன் ஐயா யோசித்த வண்ணமிருக்க சிறிது நேரத்தில் திரு.கந்தர் வந்து ஐயாவிடம் பணத்தைக் கையளித்தார். பணத்தைப் பெற்றுக் கொள்ளக் கஷ்டமாக இருந்ததாகவும் ஓர் ஆசிரியையின் சங்கிலியை அடகு வைத்துப் பணம் கொண்டு வந்ததாகவும் கூறியதைக் கேட்டு உளம் நெகிழ்ந்தேன். இராசரத்தினம் ஐயாவிடம் பணம் பெற்றுக் கடையில் கொடுத்து உணவுப் பொருட்களை கொள்வனவு செய்து கொண்டு விடுதி சேர்ந்தேன்.

காவிய பாடசாலை

திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையில் மாலை நேரங்களில் காவிய பாடசாலை நடைபெற்றது இங்கு தமிழ், சமஸ்கிருதம், சிங்களம், பாளி ஆகிய மொழிகளைக் கற்க வசதி செய்யப்பட்டிருந்தது. ஒவ்வொரு மாணவரும் விரும்பிய மொழிகளைத் தெரிவு செய்தனர். நான் சிங்கள மொழியைத் தெரிவு செய்தேன். சிங்கள வகுப்பில் ஐந்து மாணவர்கள் சேர்ந்தனர். யாழ்ப்பாணம் நாக விகாரையில் இருந்த புத்தகுரு சிங்களம் கற்பித்தார். சிறிது காலத்தில் ஒவ்வொரு மாணவராக விலகினர். நான் விலகவில்லை. ஒரு மாணவனுக்காக சிங்கள வகுப்பை நடத்த விரும்பாத புத்தகுரு புத்த விகாரைக்கு வந்தால் சிங்களம் கற்பிப்பதாகக் கூறினார். வகுப்பு நிறுத்தப் பட்டதால் பெரும் ஏமாற்றமடைந்தேன். ஆனால் சிங்களம் படிக்க வேண்டுமென்ற ஆர்வம் முனைப்பாக இருந்தது.

முத்துத்தம்பி பாடசாலை அதிபர் அலுவல் காரணமாக யாழ்ப்பாணம் நகரசபைக்கு அண்மையில் இருந்த சைவவித்தியாவிருத்திச் சங்கத்தில் இராசரத்தினம் ஐயாவிடம் கொடுக்கும் படி கடிதம் தருவார். சைவ வித்தியா விருத்திச் சங்கத்திற்குச் செல்லும் வழியில் ஆரிய குளத்தடியிலுள்ள பௌத்த விகாரையைக் கண்டதும் சிங்களம் படிக்க வேண்டும் என்ற ஆவல் எழும். ஆனால் பௌத்த விகாரைக்குச் செல்லும் துணிவு எனக்கில்லை. பல தடைவை அவ்வழியால் சென்றமையாலும் சிங்களம் படிக்க வேண்டுமென்ற அதீத ஆர்வத்தினாலும் துணிவு ஏற்பட்டு விகாரைக்குச் சென்றபோது புத்த குரு என்னை அடையாளங் கண்டு வரவேற்றதினால் எனக்குத் தென்பு வந்தது. அவருக்குத் தமிழ் தெரியுமாதலால் தமிழில் சிங்களம் படிக்க விருப்பமாவெனக் கேட்டார். "ஆம" என்று கூறியதும் சிங்களப் புத்தகம் ஒன்றைக் கொண்டு வந்து தந்து பாடஞ் சொல்லித் தந்தார். நான் மகிழ்ச்சி கலந்த வியப்புடன் அவரை நோக்க, ஒழுங்காக வந்து படிக்கும்படி கூறினார். எனது இக்கட்டான நிலையை விளக்கிக் கூறினேன் வசதியான எந்த நேரம் வந்தாலும் படிப்பிப்ப தாகச் சொல்ல மகிழ்ச்சியடைந்தேன்.

வாரத்தில் ஒன்று அல்லது இரண்டு தடவை மனேச்சர் ஐயாவைச் சந்திப்பதற்கான சூழ்நிலை உருவாகும். இதனைப் பயன்படுத்தி சிங்களத்தைத் தவறாது தொடர்ந்து படித்தேன். சிங்களம் படிப்பது தொடர்பாக எனது மனதில் பிரச்சனை எழுந்தது. அதிபர் அலுவலாக அனுப்பும் போது இவ்வாறு செய்வது சரிதானா? என்பதே அப்பிரச்சனை. அதிபரிடம் இதைக் கூறினால் படிக்க விடாது தடுத்து விடுவாரோ என்ற அச்சம். வேறு பலநாள் யோசித்த பின் ஓர் தீர்மானத்திற்கு வந்து மனேச்சர் ஐயாவிடம் சிங்களம் படிப்பது பற்றிக் கூறினேன். அவரோ புன்முறுவலுடன் நல்லதெனக் கூறி ஆசீர்வதித்தார். அவரது ஆசீர்வாதத்துடனும் நம்பிக்கையுடனும் விடா முயற்சி யுடனும் கற்றதால் சிங்கள மொழியில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டது.

மண் கும்பான் பாடசாலை

சைவ வித்தியா விருத்திச் சங்கம் மண்கும்பானில் ஒரு பாடசாலையைத் தொடங்கியது. இங்கு கற்பிப்பதற்கு ஒருவரும் முன்வரவில்லை. தீவுப் பகுதியில் அது மிகவும் பின் தங்கிய வசதிகளற்ற கிராமமாக இருந்ததே காரணமாகும். மனேச்சர் ஐயாவிற்கு இது பெரும் பிரச்சனையாக இருந்தது. இச்சந்தர்ப்பத்தில் நான் சிரேஷ்ட தராதரப் பரீட்சையில் சித்தியடைந்து விடுதியிலிருந்து கொண்டு முத்துத் தம்பி வித்தியாசாலையில் நடைபெற்ற ஆசிரிய தராதரப் பத்திரப் பரீட்சை, ஆசிரிய கலாசாலை பிரவேசப் பரீட்சை வகுப்பகளில் சேர்ந்து படித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது ஐயா என்னை அழைத்து மண்கும்பான் பாடசாலையில் ஆசிரியராகச் சேவை செய்யுமாறு கூறினார். ஆசிரியராவது புதிய அனுபவமாக யால் எப்படிச் சமாளிப்பது என்று தயங்கினேன். ஐயா எனக்கு தைரிய மூட்டி வேண்டிய ஆலோசனைகள் வழங்கி அங்கு அனுப்பினார்.

திங்கள் காலை விடுதியிலிருந்து புறப்பட்டு மண் கும்பான் சேர்ந்து ஐந்து நாட்கள் தொடர்ந்து சேவை செய்த பின் வெள்ளி மாலை விடுதி வந்து சேர்வேன் சனி, ஞாயிறு நாட்களில் ஆசிரிய புகுமுகப் பரீட்சைக்கான வகுப்பில் கற்பேன் எனக்கு ஓய்வே கிடையாது.

மண்கும்பான் பிள்ளையாரின் கீர்த்தி பெரிது. தினமும் அடியார்கள் வந்து பொங்கல் பூசை செய்வார்கள். பார்க்கப் பக்தி பரவசமாக இருக்கும். கோயில் ஐயர் வீட்டில் உணவு ஒழுங்கு செய்திருந்தேன். அடியார்கள் அதற்கு

இடமளிக்காது பிரசாதங்களை அள்ளித் தந்து கொண்டி ருந்தார்கள். முத்துத் தம்பி போதனா பாடசாலையில் கற்பிப்பது கடினமாக இருக்கவில்லை.

சனி, ஞாயிறு வகுப்புகளில் அதிக பாடங்களைக் கற்க வேண்டியிருந்தது. கிழமை நாட்களில் சுயமாகவும் கற்க வேண்டும். இவை காரணமாக நான் மண்கும்பான் செல்வதை விரும்பவில்லை. ஒரு நாள் தயக்கத்துடன் ஐயாவிடம் தெரிவித்தேன். *"கொஞ்சம் பொறு தம்பிப்பிள்ளை"* என்றார். அவ்வளவு தான் அடுத்த வாரம் சென்றபோது ஐயா ஆசிரியர் ஒருவரோடு உரையாடிக் கொண்டிருப்பதை அவதானித்தேன். அவரை மண்கும்பான் பாடசாலைக்குக் கடமைக்குச் செல்லுமாறு பணித்தார். அவ்வாசிரியர் தயங்கினார். ஐயா என்னைச் சுட்டிக் காட்டி *"இவர் அங்குதான் படிப்பிக்கிறார், உமக்கு என்ன கஷ்டம்?"* என்று கூறிவிட்டுச் சென்றார். மண்கும்பான் பற்றி ஆசிரியர் என்னிடம் விபரமாகக் கேட்டறிந்தார். பிள்ளையாரின் மகிமையில் மகிழ்ந்து திருப்தியடைந்த அவர் ஐயாவிடம் சென்று நியமனத்தை ஏற்பதாகக் கூறினார். ஆசிரியருக்கு வேலை தந்து எனக்கு விடுதலை அளித்த மண்கும்பான் பிள்ளையாரை நன்றியுடன் மனதார வணங்கினேன்.

கோப்பாய் மகளிர் அரசினர் ஆசிரியர் கலாசாலை

யாழ்ப்பாணத்தில் மகளிருக்கு அரசினர் ஆசிரிய கலாசாலை தொடங்கவேண்டுமென நீண்ட நாட் கோரிக்கை இருந்து வந்தது. கோப்பாய் ஆண்கள் பாடசாலையைப் பலாலிக்கு மாற்றிய பின் அவ்விடத்தில் மகளிர் அரசினர் ஆசிரிய கலாசாலைத் தொடங்குவதெனத் திட்டமிடப்பட்டது. ஆனால் கோப்பாய் ஆசிரிய கலாசாலையை இடமாற்றுவதில் காலதாமதம் ஏற்பட்டது. இதனால் மகளிர் ஆசிரிய கலாசாலை தொடங்குவது தடைப்படக் கூடுமெனச் சந்தேகம் ஏற்பட்டது.

இதனை அவதானித்த மனேச்சர் ஐயா, திருநெல்வேலி பெண்கள் விடுதியை ஒதுக்கித் தருவதாகக் கூறினார். விடுதியின் ஒரு பகுதியை வேலி அடைத்து ஒதுக்க வேண்டும். மனேச்சர் ஐயா என்னை அழைத்து விடுதி மாணவர்களை வேலி அடைக்கும் பணியில் ஈடுபடுத்துமாறு கூறினார். மாணவர் உற்சாகமாக ஈடுபட்டடையால் வேலை விரைவாகவும் சிறப்பாகவும் நிறைவேறியது. மகளிர் ஆசிரிய கலாசாலையம் தப்பிப் பிழைத்தது.

யோக சுவாமிகள்

விடுதியிலும் பாடசாலையிலும் யோக சுவாமி களின் மகிமையைப் பற்றி உரையாடுவதைக் கேட்டிருந் தேன். சுவாமிகளைத் தரிசிக்க வேண்டுமென்ற ஆவல் தோன்றியது. ஒரு நாள் மாலை அதிபர் என்னை அழைத்து நாளை அதிகாலை நல்லூர் வைமன் வீதியிலிருக்கும் இராசரத்தினம் ஐயாவிற்குக் கடிதம் கொடுக்க வேண்டு மென்றார். கடிதத்தை வாங்கிப் பாதுகாப்பாக வைத்திருந்து அதிகாலை புறப்பட்டேன். கலாசாலை வீதி வழியாக (அப்போது இப்பெயர் வழக்கில் இல்லை) வந்து அரசடி அம்மன் சந்தியை அடைந்த போது இருவர் யோக சுவாமிகள் போகிறார் என உரையாடுவதைக் கேட்டேன். நான் எதிர்பார்த்த சுவாமிகளின் தரிசனம் கிடைத்ததென எனக்கு ஆனந்தம்.

சுவாமிகள் திருநெல்வேலிச் சந்திக்குச் சென்று கந்தர்மடம் பக்கமாகத் திரும்பினார். எனது பாதையும் அதுவே நான் சுவாமியாரைப் பின் தொடர்ந்தேன். சந்தியை நெருங்கியதும் சுவாமியார் பழம் வீதியில் சென்றார். நானும் அவரைப் பின் தொடர சுவாமியார் அரசடியைச் சென்றடைந்தார். வைமன் வீதிக்குத் திரும்ப வேண்டிய நிலையில் சுவாமியார் திரும்பிப் பார்த்தார். அற்புதம்! அதிசயம்!! சொல்ல வார்த்தைகள் இல்லை. சுவாமியார் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் பக்கமாகச் செல்ல, நான் வைமன் வீதிவழியாகச் சென்று மனேச்சர் ஐயா இராசரத்தினம் அவர்களிடம் கடிதத்தைக் கொடுத்தேன். பின் யோகசுவாமியாரைச் சந்தித்த நிகழ்ச்சியை பயபக்தி யுடனும் எல்லையற்ற ஆனந்தத்துடனும் கூறினேன்.

அவர் அமைதியாகக் கேட்டபின் *"உனக்கு அதிர்ஷ்டம்"* எனக் கூறினார். இந்நிகழ்வு இன்றும் என் உள்ளத்தில் பசுமையாக இருக்கிறது.

1949 இல் ஆசிரியர் பயிற்சியை முடித்துக் கொண்டு கொழும்புக்கு வந்தேன். அப்போது இலங்கைக்கு வருகை தந்த இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்களைச் சந்திப்பதற்கு அகில இலங்கைக் காந்தி சேவாசங்கம் ஏற்பாடு செய்தது. இக்குழுவில் நானும் சேர்ந்து கொண்டமையால் இந்தியப் பிரதமர் ஜவர்கலால் நேரு அவர்களைச் சந்திக்கும் அரிய வாய்ப்புக் கிட்டியது.

கொழும்பில் இருக்கும்போது குருநாகல்-கவிசிகமுவ சிங்களப் பாடசாலைக்கு தமிழ் ஆசிரியர் தேவையென்ற விளம்பரத்தைப் பார்க்க நேர்ந்தது. விளம்பரதாரரான வில்லியம் பேதிரிஸ் அவர்களைச் சந்தித்தேன். அவர் சிங்களவர். எனக்குச் சிங்களத்தில் உரையாடுவது சிரமமென எண்ணினேன். அப்போது அவர் தமிழில் உரையாடினார். ஆறுதலாக இருந்தது. *"சிங்களம் தெரிந்த ஆசிரியர் தேவை"* என்றார். என்ன செய்வதென்று தெரியவில்லை. என்னைச் சிங்களம் கற்க ஆசீர்வதித்த மனேச்சர் ஐயாவை நன்றியுடன் நினைவு கூர்ந்து கொண்டு சிங்களங் கற்பித்த புத்த குருவை மானசீகமாக வணங்கிய வண்ணம் எனக்குத் தெரிந்த சிங்களத்தில் திரு.வில்லியம் பேதிரிஸ் அவர்களுடன் உரையாடினேன். அவர் இதனை எதிர்பார்க்கவில்லை.

அவர் அலுவலக உத்தியோகத்தரை அழைத்து எனக்கு நியமனக் கடிதம் வழங்குமாறு கூறினார். நிமனக் கடிதத்தை திரு. வில்லியம் பேதிரிஸ் அவர்கள் எம்மிடம் கையளித்து சிங்களமொழியை நன்கு கற்கும்படி ஆசீர்வதித்தார்.

ஆசிரியர் பயிற்சியை முடித்துக் கொண்டு இராசரத்தினம் ஐயா ஆசீர்வாதத்தைப் பெறாமல் வந்தது

குறித்துக் கவலையடைந்தேன். பாடசாலை விடுமுறை தொடங்கியதும் யாழ்ப்பாணஞ் சென்று இராசரத்தினம் ஐயாவைச் சந்தித்த போது எனக்கு ஆசிரியர் நியமனம் தருவதாகக் கூறினார். அப்போது எனக்குச் சிங்களப் பாடசாலையில் நியமனம் கிடைத்ததாகக் கூறி அங்கிருந் தால் சிங்களம் படிக்க வசதி எனக் குறிப்பிட்டேன். அவர் மகிழ்ச்சி அடைந்து நீர் எப்போது வந்தாலும் நியமனம் தருவேன் எனக் கூறினார். அவர் என் மீது வைத்திருந்த பேரன்பை எண்ணி வியந்து உளம் பூரித்தேன்.

ஒரு முறை சைவ வித்தியா விருத்திச் சங்க அலுவலகத்தில் இராசரத்தினம் ஐயாவைச் சந்திக்கச் சென்ற போது, பண்டத்தரிப்பு மகளிர் உயர்நிலைக் கல்லூரி அதிபரின் அலுவலகத்தில் இராசரத்தினம் ஐயாவிற்கு என்னை அப் பாடசாலையில் சேர்க்கும் படி கடிதம் தந்த பெரியவரை மீண்டும் சந்தித்த போது பெருமகிழ் வடைந்தேன். அவர் என்னை அடையாளம் கண்டு சமீபமாக அழைத்து, "விடுதியில் சேர்ந்து படிக்கின்றீரா?" என வினவிபோது ஆமெனப் பதிலளித்தேன். அவர் என்னைக் கவனமாகப் படி முன்னுக்கு வருவாய்" என ஆசீர்வதித்தார். இவ்வாறு என்னில் அக்கறையுடைய பெரியார் யாரென அங்கிருந்த ஒருவரிடம் ஆர்வம் மேலிடக் கேட்டேன். அவர் தான் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி அதிபர் வீர சிங்கமென அவர் கூறினார். அவருடைய பெயரைப் பல தடவை நினைந்து என் மனதில் பதிய வைத்துக் கொண்டேன் பிற்காலத்தில் அவருடைய நட்புக் கிடைத்து பல பொதுப் பணிகளில் ஈடுபடச் சந்தர்ப்பம் கிடைத்தது.

என்னைப் போன்ற சிறுவர் சிறுமியர்களுக்கு ஊண், உடை, உறையுள், கல்வி தந்து எமைப் பேணி வளர்த்த பெரியார் இந்துபோர்ட் இராசரத்தினம் அவர்கள் சமுதாயத்திற்கு முன் மாதிரியாகத் திகழ்ந்தார். இன்றைய எமது சமுதாயத்திற்கு அன்னார் போன்று பல்லாயிரம் இராசரத்தினங்கள் தோன்றி வீழ்ந்து கிடக்கும் சமுதாயத்தை எழுச்சியுறச் செய்ய வேண்டும். இராசரத்தினம் ஐயாவை நாம் என்றென்றும் நன்றியுடன் நினைவு கூர்ந்து அவர் திருநாமம் என்றும் வாழவென வாழ்த்துவோம்.

யாழ் நகரின் மத்தியில் ஓர் புதிய உதயம்

மாணவர்களுக்கோர் நற்செய்தி!



ஆரம்ப வகுப்பு முதல் அனைத்து வகுப்புக்களுக்குரிய பிரபல ஆசிரியர்களின் தமிழ், ஆங்கில *(ENGLISH MEDIUM)* புத்தகங்கள் பயிற்சிகள், வினாப்பத்திரங்கள், காகிதாதிகள், பாடசாலை உபகரணங்கள், உட்பட இலங்கை, இந்திய நாவல்கள், சஞ்சிகைகள் உங்கள் தேவைகள் அனைத்தையும் நீங்களே தெரிவுசெய்து பெற்றிடக்கூடிய வகையில் (விசாலமான இடவசதி) காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. பிந்திய பதிவுகளை முந்திப் பெறக்கூடிய வகையில் விரைவான விநியோகம், வினாப்பத்திரங்களை தபால்மூலம் பெறக்கூடிய வசதி நியாய விலை அத்துடன் விசேட விலைக் கழிவு.

அன்னை புத்தககாலை

இல.7, ஆஸ்பத்திரி வீதி, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

தொலை பேசி : 021 222 9881

சைவ வித்தியா விருத்திச் சங்கமும்
செயலாளர் உயர்திரு. சு.இராசரத்தினம் அவர்களும்

ச. சரவணமுத்து
இளைப்பாறிய அரசகரும
மொழித்திணைக்கள அத்தியட்சகர்.

பெருங்கனவான் சு.இராசரத்தினம் அவர்கள் நாவலர் வழியில் சைவத்திற்கும் தமிழுக்கும் அருந் தொண்டாற்றியவர் ஆவார். ஸ்ரீலஸ்ரீஆறுமுக நாவலரின் கனவுகளை நனவாக்க ஆரம்பிக்கப் பெற்ற சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் முதலாவது தலைவர் சேர்பொன். இராமநாதன் ஆவார். இச்சங்கத்தின் செயலாளராக இருந்து சைவப் பிள்ளைகள் சைவச் சூழலில் கற்க வேண்டுமென்ற நாவலரின் எண்ணத்தை நிறைவேற்றியவர் உயர் திரு.சு.இராசரத்தினம் என்றால் மிகையாகாது. இவரது நிர்வாகத்தில் 187 பாடசாலைகளும் ஒரு சைவாசிரியர் பயிற்சிக்கலாசாலையும் இருந்தன. இச்சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலையிலேயே யான் ஈராண்டுகள் பயிற்சி பெற்று வெளியேறினேன்.

உடனே எனக்கு பதுளை சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் சில காலம் வேதனமின்றிக் கற்பிக்க ஆசிரியர் நியமனம் தரப்பட்டது. அந்நேரம் யான் அதனை விடுத்து யாழ்குடா நாட்டிற்குள்ளேயே சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் ஆங்கில ஆசிரியர் நியமனக் கிடைத்தமை யால் அங்கேயே கற்பிக்கத் தொடங்கினேன். அதேவேளை அஞ்சல் அதிபர்களுக்கான தெரிவுப்பரீட்சையில் சித்தி பெற்று ஆசிரியத் தொழிலை விட்டு அஞ்சல் அதிபராக இணைந்து கொண்டேன். அங்கு கடமையாற்றிய போது அரச கரும மொழித் திணைக்களத்தில் மொழி பெயர்ப்பாளராக நியமனம் பெற்றேன். அப்பதவியிலிருந்து மேலும் பதவி உயர்வு பெற்று அரச கரும மொழித் திணைக்கள அத்தியட்சகராக்கப்பட்டேன். இவை எல்லா வற்றுக்கும் மூல காரணம் அன்றைய ஆசிரியர் பயிற்சி என்றால் மிகையாகாது.

திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலையின் அதிபராக விளங்கியவர் திரு சுவாமிநாதன் அவர்கள். உப அதிபராக விளங்கிவர் சைவப்பெரியார் பொ. கைலாசபதி அவர்கள். சைவ சமயம், தமிழ்மொழி விரிவுரையாளராக விளங்கியவர் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள். இப்பெரியார்களை எல்லாம் தேடி அழைத்துவந்து சைவாசிரியர் கலாசாலையில் சைவத்தமிழ் ஆசிரியர் பயிற்சி சிறப்புற நடைபெறவழிவகுத்தவர். பெரியார் இராசரத்தினம் அவர்களே இப்பணிமூலம் சைவாசிரியர்கள் தமிழ்ப்பாடசாலைகளில் சைவம், தமிழ் மொழி இலக்கியம் முதலியவற்றை திறம்படப்போதிக்க வேண்டும் என்றும் அத்துடன் புவியியல், வரலாறு, கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களையும் அவர்கள் போதிக்கப் பயிற்சியும் கொடுத்துக் கற்பிக்க வைத்தார்.

அன்றைய காலகட்டத்தில் இவர் செய்த பணி போற்றுதற்குரியதாகும். இப்பெரியார்களிடம் கற்கும் வாய்ப்பு சைவாசிரியர் கலாசாலையில் பயின்றமையால் எனக்குக்கிடைத்தது. இவர்களிடம் கற்றமையை ஒரு பேறாகவே கருதுகிறேன். இப்பயிற்சிக்கலாசாலையை ஆரம்பித்துத் திறம்பட வளர்த்துவந்த திரு.சு.இராசரத்தினம் அவர்களைச் சைவத்தமிழ் உலகம் என்றும் நினைவில் நிறுத்தும்.

இலங்கையில் யாழ்ப்பாணக் குடாநாடு தீவகம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, புத்தளம், சிலாபம், மன்னார், வவுனியா, நாவலப்பிட்டி, பதுளை போன்ற பல இடங்களில் 187 பாடசாலைகளை நிறுவியும், நிறுவுவித்தும் பணிபுரிந்தவர் பெரியார் இராசரத்தினம் அவர்களே. இதேவேளை தாய் தந்தையரை இழந்த, வறுமைக் கோட்டிற்குள் வாழ்ந்த பிள்ளைகளுக்குவாழ்வளிக்கிறோம் என்று கூறி மத மாற்றத்தில் ஈடுபட்ட மிஷனறிமார்களுக்கு பேரிடி விழுந்தாற்போல ஆண்களுக்கும் பெண்களுக்கும் எனத்தனித்தனி இருசைவச் சிறுவர் இல்லங்களை நிறுவி அப்பிள்ளைகளை அவற்றில் சேர்த்தார். அவர்களுக்கு இலவசமாக உணவு, உடை, கல்வி ஆகியவற்றை வழங்கி அநாதரவான சிறுவர்களுக்குத் தந்தைபோல இருந்து சேவை செய்தார். நாவலர் காட்டிய வழியில் தொண்டாற்றிய பெரியாரின் சேவையினால் சைவத்தமிழ் மக்கள் தமது பண்பாடு, சமயம் ஆகியவற்றைப் பாதுகாக்க முடிந்தது என்றால் மிகையாகாது. அவரது நூற்று இருபத்தைந்தாவது பிறந்த ஆண்டில் அவரை நினைவு கூருவோமாக.

நாவலர் கலைத்தொண்டின் காவலன் இந்துபோட் இராசரத்தினம்

க. பேரம்பலம்
உதவிக்கல்விப் பணிப்பாளர் (ஓய்வு)

*நாவலர் கோமான் நயந்த கலைத்தொண்டின்
காவலன னாயமைந்து கல்விசைவம் - மேவவைத்த
ஏந்தல் இராசரத்தினம் மேன்மை எய்தினார்
மாந்தரில் மாணிக்கம் ஆய்.*

"இறை ஒளி"

சைவப்பிள்ளைகள் கிறீஸ்தவ பாடசாலைகளில் கற்பதால் ஏற்படும் தாக்கங்களை நன்கறிந்த நாவலர் பெருமான், 1848 ஆம் ஆண்டு சைவப்பெரியார்களுக்கு ஒரு விஞ்ஞாபனத்தை வெளியிட்டார். கிராமங்கள் தோறும் சைவப் பாடசாலைகளை அமைத்து எமது சைவப் பிள்ளைகளை சைவச்சூழலில் கல்வி கற்கச் செய்யுங்கள், இப்பணியால் எமது சைவசமயமும் சைவகலாசாரமும், தமிழ்மொழியும் பாதுகாக்கப்படும் என்பதே இவரின் விஞ்ஞாபனமாகும்.

இதன் முன்னோடியாக நாவலர் பொருமான் 1848 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் சைவப் பிரகாச வித்தியாசாலையை (தற்போது இது நாவலர் ம.வி) ஆரம்பித்து நடாத்தினார். இதைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைத் தாபித்தனர். நாவலர் பெருமானின் தூண்டுதலால் சைவப்பெரியார் சேர்பொன்.இராமநாதன் அவர்கள் 1911 ஆம் ஆண்டும் சைவப் பெண்பிள்ளைகள் கற்பதற்காக இராமநாதன் கல்லூரியை மருதனார்மடத்தில் நிறுவினார். இதனோடு இணைந்து பெண்களுக்கு ஆசிரிய கலாசாலையும் நடாத்தினார். இவ்வாசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்றவர் தான் எமது சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியவர்கள். 1921 ஆம் ஆண்டு ஆண்பிள்ளைகளின் நலன் கருதி சேர்பொன். இராமநாதன் அவர்கள் திருநெல்வேலியில் பரமேஸ்வராக் கல்லூரியையும் (தற்போது யாழ் பல்கலைக்கழகம்) இக்கல்லூரியுடன் இணைந்து ஆண்களுக்குரிய ஆசிரிய கலாசாலையையும் இதைத்தொடர்ந்து 1926 ஆம் ஆண்டில் தென்மராட்சி கிழக்கில் உள்ள உசன் கிராமத்தில், ஒரு சைவ வித்தியாசாலையையும் (தற்போது இது உசன் இராமநாதன் ம.வி) நிறுவினார். இம்மூன்று பாடசாலை களையும் தனது நிர்வாகத்தில் வைத்துக் கொண்டு ஏனைய பத்துக்கு மேற்பட்ட பாடசாலைகளை நடாத்தும் பொறுப்பைச் சட்டத்தரணி திரு.சு.இராசரத்தினத்திடம் ஒப்படைத்தார்.

சைவவித்தியா விருத்திச்சங்கம்

கிராமங்கள் தோறும் சைவப் பாடசாலைகள் அமைக்கும் நோக்கத்துடன் சேர்பொன்.இராமநாதன் அவர்களால் 12.09.1923 ஆம் திகதி சைவவித்தியா விருத்திச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இச்சபைக்கு பொறுப் பாகச் சட்டத்தரணி திரு.சு.இராசரத்தினம் இவர்களை நியமித்தார். இச்சபையின் அங்கத்தவர்களாக சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி, திருவாளர்கள் அ.சபாபதி, எஸ்.சிவபாதசுந்தரம், எஸ்.கந்தையா ஆகியோரையும் நியமித்தார். பிற்காலப்பகுதியில் கோப்பாய்ச் சட்டத்தரணி சுப்பிரமணியம், நல்லூர் அச்சலிங்கம், சட்டத்தரணி எஸ்.ஆர்.கனகநாயகம் ஆகியோரும் இச்சபையில் முக்கிய பதவியில் இருந்தனர்.

சைவப்பெரியார் சு. இராசரத்தினம் அவர்கள் கோப்பாய் சைவப் பெருங்குடியைச் சேர்ந்த கதிரேசு சுப்பிரமணியம் அவர்கட்கும், வல்வெட்டியைச் சேர்ந்த கொடைவள்ளல் குமாரசாமி மீனாட்சிக்கும் புத்திரராக 1884 ஆம் ஆண்டு யூலை மாதம் 4ம் திகதி பிறந்தார். இளம் வயதில் சொந்த மாமனார் நீதிபதி வைமன் கதிரவேற்பிள்ளையின் அரவணைப்பில் வளர்ந்தார். வைமன் கதிரவேற்பிள்ளை சிறந்த தமிழ் அறிஞர். நாவலர் கொள்கையில் ஈடுபாடுடையவர். அக்காலத்தில் சுங்கத் திணைக்களத்தில் பணிபுரிந்தவரும் இராசரத்தினத்தின் மைத்துனருமான செந்தமிழ் ஆசான் சின்னத்தம்பியிடமும் மற்றும் நல்லூரில் திண்ணைப் பள்ளிக் கூடம் நடாத்திவந்த சட்டம்பி அம்மாவிடமும், தமிழ் இலக்கண, இலக்கியங்கள், சைவசமயம் ஆகிய பாடங்களைக் கற்றார். பின்பு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கல்வி கற்று முடித்தபின் இந்தியா சென்று கல்கத்தா சட்டக்கல்லூரியிலும், இலங்கைச் சட்டக் கல்லூரியிலும் சட்டக்கல்வியை நிறைவு செய்தார். இலங்கைச் சட்டக்கல்லூரி இறுதித் தேர்வில் முதலாம் வகுப்பில் சித்தியடைந்த காரணத்தால், மாமன் நீதிபதி வைமன் கதிரவேற்பிள்ளையால் பாராட்டப்பட்டார். யாழ்ப்பாணத்தில் பிரபல சட்டத்தரணியாகவும், பதில் நீதிபதியாகவும் கடமையாற்றினார்.

நலிந்த மக்கள் மேல் பரிவும், ஆதரவற்ற சிறுவர் மேல் கருணையும், தரும சிந்தனையும் கொண்டவர். உயர்ந்த தோற்றம், நேர் கொண்ட பார்வை, நெற்றியில் திருநீறு, சைவப்பாரம்பரிய உடை, சைவப்பாரம் பரியங்களில் நாட்டம், சுறுசுறுப்பு என்பன இவரை இனங்காட்டும் குறிகளாகும். நாவலர் பணியில் நாட்டங் கொண்ட காரணத்தால் இவர் பணியைத் தொடர, தமது சொந்தத் தொழிலைத்துறந்து, திரிகரண சுத்தியோடு பசிநோக்காது கண்தூங்காது, தமது சொந்தவாகனத்தைப் பயன்படுத்தி, சைவப் பிள்ளைகளின் எதிர்கால நன்மை கருதி கிராமங்கள் தோறும் உள்ள சைவப் பெரியார்கள், கொடையாளிகள், நிலபுலச்சொந்தக்காரர்கள் ஆகியோரின் உதவி பெற்று சைவப் பள்ளிக்கூடங்களை நிறுவத் தொடங்கினார்.

நெடுந்தீவு தொடக்கம், தீவுப்பகுதி, வலிகாமம், யாழ்ப்பாணம், தென்மராட்சி, வடமராட்சி, பச்சிலைப்பள்ளி,

கிளிநொச்சி, பூநகரி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், புத்தளம், நாவலப்பிட்டி, புசலாவை வரை 1924 - 1960 வரை 163 சைவப்பாடசாலைகள் (இவற்றில் 7 ஆங்கிலப் பாடசாலைகள்) 31 தொழில் பயிற்சிப் பாடசாலைகள். ஒரு சைவாசிரிய கலாசாலை, இரண்டு சைவச்சிறுவர் இல்லங்கள் ஆகியவற்றைத் தாபித்தார். இவர் ஆரம்பித்த இருபது பாடசாலைகள் வரை அரசு அங்கீகரிக்கவில்லை. இவரது இச்சாதனை வரலாற்றுச் சிறப்புடையது. 1961 ஆம் ஆண்டு அரசாங்கம் பாடசாலைகளைச் சுவீகரிக்கும்போது இந்துபோட் இரசரத்தினம் அவர்களின் முகாமையில் 163 அதிபர்களும், 1500 ஆசிரியர்களும், 40000 மாணவர்களும் இருந்தனர். இச்சேவை காரணமாகத்தான் ஓர் நிறுவனத்தின் பெயர் மதிப்புக்குரிய இராசரத்தினம் அவர்களுடன் சேர்ந்து கொண்டது. இதனால் எல்லோரும் அவரை அன்பாக "இந்துபோட் இராசரத்தினம்" என அழைத்தனர்.

திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை

தாம் நிறுவிய சைவப்பாடசாலைகளில் சைவப்பாரம்பரியங்களைக் கொண்ட ஆசிரியர்களை நியமனம் செய்ய ஒரு சைவாசிரிய கலாசாலையை 1925 ஆம் ஆண்டு விஜயதசமி தினத்தில் திருநெல்வேலியில் நிறுவினார். இதற்குரிய காணி நாற்பது பரப்பையும் இதற்குள் இருந்த ஓர் பெரிய கல்வீட்டையும் நியாயவாதி இராசேந்திரம் அன்பளிப்புச் செய்தார். இக்கல்லூரியில் பணிபுரிய புகழ்பூத்த அதிபர்களாக மயிலிட்டி சுவாமிநாதன் அவர்களையும், இவரைத் தொடந்து இடைக்காட்டைச் சேர்ந்த கந்தையா அவர்களையும் நியமித்தார். உப அதிபராக தத்துவஞானி அளவெட்டி பொ. கைலாசபதி யையும், விரிவுரையாளர்களாக பண்டிதமணி கணபதிப்பிள்ளை மற்றும் திருமதி செல்லத்துரை, திருவாளர்கள் நடராசா, செல்லத்துரை, சண்முகலிங்கம், இராசையா ஆகியோரையும் நியமித்தார்.

இங்கு வருடந்தோறும் ஐம்பது பயிற்சி ஆசிரிய மாணவர்கள் (ஆண், பெண்) பரீட்சைத் திணைக்களத்தால் போட்டிப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவர். எழுபத்தைந்து மாணவர்கள் எழுத்துப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டு, நேர்முகப்பரீட்சை மூலம் ஐம்பது மாணவர் தெரிவு செய்யப்படுவர். நேர்முகப்பரீட்சையில் பலவிதமான தமிழ், சைவ வினாக்கள் வினாவப்படும். இந் நேர்முகப் பரீட்சைக்குழுவில் பரீட்சைத் திணைக்கள அதிகாரிகளுடன், இந்துப்போட் இராசரத்தினம் அவர்களின் பிரதிநிதியும் இருப்பார். அக்காலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு ஆறு மாதங்கள் வரை கருத்தரங்குகள் பிரதேசங்கள் தோறும் நடைபெறும். இங்கு பயிற்சி பெறும் மாணவர்கள் சைவபாரம்பரிய உடையில், விடுதியில் தங்கி இருந்து பயிற்சி பெற்றனர்.

சனிக்கிழமை பிற்பகல் இரண்டு மணிவரை வகுப்புகள் நடைபெறும். ஞாயிற்றுக் கிழமைகளிலும் சிலவேளைகளில் வகுப்புகள் நடைபெறும். விசேட காரணங்களில் மட்டும் ஞாயிற்றுக்கிழமை அதிபர் அனுமதி பெற்று வீடு செல்லலாம். திங்கள் காலை ஏழு மணிக்கு வகுப்புக்களுக்கு முக்கியமாக உடற்கல்வி, சங்கீதம் ஆகிய பாடங்களுக்குச் சமுகமளிக்க வேண்டியிருக்கும். இக் கலாசாலை மூலம் 1500 ஆசிரியர்கள் வரை அரசு பாடசாலைகளை சுவீகரிக்கும் வரை பயிற்சி பெற்று வெளியேறினர். சைவாசிரிய கலாசாலை மூடப்பட்டாலும் கலாசாலை வீதி என்ற பெயர் இன்னும் இருந்து வருகின்றது.

காவியப்பாடசாலை

சைவாசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மேலும் தமது தராதரத்தை உயர்த்த பிரவேச பண்டிதர், பாலபண்டிதர் ஆகிய பரீட்சைகளில் சித்தியடைவதற்கேற்ற வகுப்புக்களை நடாத்துவதற்காக 1930 ஆம் ஆண்டில் இக்கலாசாலை வளாகத்தில் ஒரு காவியப் பாடசாலையை இந்துப்போட் இராசரத்தினம் அவர்கள் தொடக்கி வைத்தார். இவ்வகுப்பில் மாணவர்கள் தொகை அதிகரிக்கவே இதற்கென முத்துத்தம்பி வித்தியாசாலையில் ஒரு விசாலமான மண்டபத்தைக் கட்டினார். ஒரே நேரத்தில் 300 பிள்ளைகள் இருந்து படிக்கக்கூடியதாக இம்மண்டபமிருந்தது. இத்துடன் இணைந்தால் போல் இரு அறைகளும் விரிவுரை யாளருக்குக் கட்டப்பட்டது. இதன் விரிவுரையாளராகவும், பொறுப்பாளராகவும் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் நியமிக்கப்பட்டார்.

வருகை விரிவுரையாளர்களாக பண்டிதமணியின் மூத்த மாணவர்களாகிய பண்டிதர்கள் செ.துரைசிங்கம், சி.கா.தம்பையா, சு.இராசையா ஆகியோர் கடமை யாற்றினர். இவ்வகுப்புக்கள் இரவு பகலாக இலவசமாக நடைபெற்றன. சமயவேறுபாடில்லாமல் எல்லாச் சமய ஆசிரியர்களும் பங்குபற்றினர். தூர இடங்களிலிருந்து வருபவர்களின் நன்மை கருதி மனேச்சர் அவர்கள் உணவு, விடுதி வசதிகளும் செய்து கொடுத்தார். பண்டிதமணியின் பெரு முயற்சியால் இங்கு சம்ஸ்கிருதம், சிங்களம் ஆகிய பாடங்களும் போதிக்கப்பட்டு வந்தன. சமஸ்கிருத பாடத்தை வியாகரண சிரோன்மணி பிரம்ம ஸ்ரீ.கி.சீதாராம சாமஸ்திரிகளும், சிங்கள பாடத்தை யாழ்ப்பாணம் விகாராதிபதியும் போதித்து வந்தனர். அந்தணச் சிறுவர்கள் பலர் இங்கு கல்வி கற்று வந்தனர். இம்மும்மொழிக்காவியப் பாடசாலையைப் பார்வையிடுவதற்குத் தென்னிலங்கையில் அப்போதைய அரசியல் பிரமுகர் கலாநிதி என்.எம்.பெரேரா தலைமையில் அறிஞர் குழாம் சமுகங்கொடுத்து, சொற்பொழிவும் ஆற்றிச் சென்றது. இவர்களைச் சட்டத்தரணி இராசரத்தினம் அவர்கள் வரவேற்று விருந்துபசாரம் அளித்தார்.

தொழிற்பாடசாலைகள்

படித்துவிட்டு வேலையற்றிருக்கும் பெண் பிள்ளைகளின் நலன்கருதி பதினைந்து தையல் பயிற்சிப் பாடசாலைகளையும் (நெசவு நிலையங்கள் உட்பட) பதினாறு பன்ன வேலைப் பாடசாலைகளையும் ஆரம்பித்து நடாத்தினார். இதனால் பல நூற்றுக்கணக்கானவர்கள் தொழில் வாய்ப்பைப் பெற்றனர்.

சைவச்சிறுவர் இல்லம்

ஆதரவற்ற சைவச்சிறுவர்களின் நலன் கருதி திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையுடன் இணைந்தாற்போல் ஆண், பெண் பிள்ளைகளுக்கென்று தனித்தனி சிறுவர் இல்லங்களை 1930 ஆம் ஆண்டு ஆரம்பித்து நடாத்தி வந்தார். இப்பிள்ளைகளை விடுதியில் தங்க வைத்து உணவு, உடை, கல்வி என்பவற்றை இலவசமாக வழங்கி இவர்களையும் சமூகத்தில் வேண்டப்படும் நற்பிரசைகளாக்கும் பணியில் பெரியார் இராசரத்தினம் அவர்கள் ஈடுபட்டு வந்தார். இப்பணியைத் தொடர்ந்து அரசாங்கம் பாடசாலைகளை சுவீகரித்த பின்பும் தொடர்ந்து நடாத்தி வந்தார். இன்றும் இச்சிறுவர் இல்லத்தில் இருநூறு பிள்ளைகள் தங்கியுள்ளனர்.

அரசாங்க சபை அங்கத்தவர் 1938 - 1941

அரசாங்க சபையில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதியாக 1936 ம் ஆண்டு தொடக்கம் 1941 ஆம் ஆண்டு வரை இருந்தார். இக்காலப்பகுதியில் சேர் பொன் இராமநாதனுடன் சேர்ந்து, தமிழ்ப் பிள்ளைகளின் கல்வி, சமூக நலன்கள் பற்றி பல சட்டவாக்கங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றினார். குறிப்பாகச் சைவப் பிள்ளைகள் சிவ சின்னங்கள் அணிந்து எந்தப்பாடசாலைக்கும் செல்லலாம். அதே போல் சகலரும் சமச்சீராக சகல உரிமைகளுடனும் கல்வி கற்கலாம் என்பன இவற்றில் சிலவாகும். இந்துப்போட் இராசரத்தினம் அவர்களின் அறிவாற்றலை அறிந்த இலவசக்கல்வியின் தந்தையும் கல்வி மந்திரியுமான சி.டபிள்யூ.டபிள்யூ கன்னங்கரா அவர்கள் தாம் கொண்டு வந்த கல்விச் சீர்திருத்தத்திற்கு தனிமையில் இவரிடம் வந்து நல்ல பல ஆலோசனைகளைப் பெற்றார். தான் நிறுவிய சைவப் பாடசாலைகளை அரச உதவி பெறும் பாடசாலைகளாக்க தனது அங்கத்துவத்தைப் பெரிதும் பயன்படுத்தினார்.

இவரது கல்விச் சேவைக்கு உதவியோர்

இவரது மதிநுட்பத்தையும், துடிப்புடன் சேவையாற்றும் தன்மையையும் அறிந்த கிராமங்கள் தோறும் கடமையாற்றிய அதிபர்கள் மற்றும் கொடையாளிகள், நிலபுலச் சொந்தக்காரர் நிழல் போல் இவரைத் தொடர்ந்து உதவினர். நெடுந்தீவைச் சேர்ந்த சின்னையா, பண்டிதர் பசுபதி வேலணையைச் சேர்ந்த செல்லையா, பொன்னையா, பண்டிதர் பொன்னுத்துரை சரவணையூர் பண்டிதர் மருதையினார், சுழிபுரம் நல்லதம்பி, கீரிமலை கந்தையா, கல்வயல் தொழில் நுட்ப அதிகாரி விநாயகமூர்த்தி, மட்டுவில் சுப்பையா, மீசாலை பண்டிதர் தம்பையா, புத்தூர் சந்தி நிலபுலச் சொந்தக்காரர் வீரசிங்கம், இதே இடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி, கொடிகாமம் மடாதிபதி அருணாசலம், பதிவாளர் சிதம்பரப்பிள்ளை எருவன் பண்டிதர் முருகேசு, வரணி வேலுப்பிள்ளை, முல்லைத்தீவு நமசிவாயம், வவுனியா சிதம்பரப்பிள்ளை, நாவலப்பிட்டி ஆத்மசோதி முத்தையா, கந்தர்மடம் சதாசிவம், கரவெட்டி கந்தவனம், கட்டுடை மதியாபரணம் என்போர் இவர்களில் சிலராவார். சைவவித்தியா விருத்திச் சங்கக் கணக்காளராகவும், நிர்வாக அதிகாரியாகவும் கந்தரோடை திரு.சு.அப்புத்துரை கடமையாற்றினார்.

சைவப்பெரியார் இந்துப்போட் இராசரத்தினம் அவர்கள் 1970 ஆம் ஆண்டு 86 வது வயதில் இயற்கை எய்தினார். இவரது சைவத்தமிழ்த் தொண்டையும் சமூகத் தொண்டையும் இலங்கையில் உள்ள கல்விமான்களும் மதித்தனர். இவருடைய பிரிவினால் யாழ்ப்பாணம் ஒரு சிறந்த சைவாபிமானியையும், தொண்டனையும் இழந்தது. இந்துப்போட் இராசரத்தினத்தின் கல்விச் சேவையை, இவர்தாபித்து அரசிடம் கையளித்த 163 பாடசாலைகளில் ஒரு சில பாடசாலைகள் பெயர் மாற்றம் பெற்றிருக்கின்றன. ஐம்பது பாடசாலைகளுக்கு மேல் மகா வித்தியாலயங்களாக தரம் உயரப் பெற்றிருக்கின்றன. தற்போதிருக்கும் சைவவித்தியாவிருத்திச் சங்க நிர்வாகம் வலயக் கல்வித்திணைக்களங்கள் மூலம் இந்துப்போட் இராசரத்தினம் அவர்களின் நிழல் படத்தை அவர் தாபித்த பாடசாலைகளில் இடம்பெறச் செய்யும் நல்ல முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

சைவச்சிறுவர் இல்லத்தை இந்துப்போட் இராசரத்தினத்திற்குப் பின் 1970 ஆம் ஆண்டு தொடக்கம் 1987 ஆம் ஆண்டு வரை சட்டதரணி திரு.எஸ்.ஆர். கனகநாயகம் அவர்கள் ஏற்று நடாத்தினார். இவர் இதற்கென்று ஓர் நிர்வாகத்தையும் ஏற்படுத்தினார். இவரைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி ச.வை.பரமேஸ்வரனும், பின்பு விவசாய பீடாதிபதி அ.நவரத்தினராசாவும் அதைத் தொடர்ந்து பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆகியோர் தலைவர்களாகவும், உபதலைவராக ஆறு.திரு முருகனும், செயலாளர் பொருளாளர்களாக முறையே ஓய்வு பெற்ற அதிபரும் எழுத்தாளருமான சோ.பத்மநாதன், திருமதி. மனோன்மணி சண்முகதாஸ், டாக்டர் நடராசா திருவாளர்கள் கிருஷ்ணானந்தசிவம், வீ.சகாதேவசங்கரி, சு.பசுபதி, நா.குழந்தைவேல் ஆகியோர் கடமையாற்றினர்.

தற்போது தலைவராக திரு. அ.தற்பரானந்தம் ஓய்வு பெற்ற உதவிக்கல்விப்பணிப்பாளர் அவர்களும், உபதலைவராக ஓய்வுபெற்றதிபரும், இந்துப்போட் இராசரத்தினத்தின் மருமகனுமான திரு.க.மகேஸ்வரன், ஓய்வு பெற்ற நிர்வாக அதிகாரி திரு.க.நடராசா, செயலாளராக நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர், திரு.கே.வி.குணசேகரம், பொருளாளராக ஓய்வு பெற்ற ஆசிரிய கலாசாலை அதிபர் திரு.சோ.பத்மநாதன் ஆகியோர் கடமையாற்றுகின்றனர்.

பெரியார் இந்துபோட் இராசரத்தினம் அவர்கள் கட்டிக் காத்த சைவப் பணியை - கல்விப் பணியைத் தொடர்வது கட்டாயமும் காலத்தின் தேவையுமாகும்.

வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

இந்துபோட் இராசரத்தினம் ஐயா அவர்கள்

ச. சுப்பிரமணியம்
இளைப்பாறிய மேலதிக மாகாண
கல்விப் பணிப்பாளர், வ. கி. மா.

காலஞ் சென்ற இந்துபோட் இராசரத்தினம் அவர்கள் ஆதரவற்ற தமிழ்ச் சிறாருக்கு இருப்பிட வசதியுடன் கல்வி வாய்ப்பும் வழங்கி உயர் வழி காட்டிய பெருமகனார் என்றால் மிகையாகாது. அவரின் பணிபற்றி எனது நினைவிலிருந்து 1955 காலப்பகுதியில் எனது தந்தையார் காலமாகினார். எனது பெற்றோருக்கும் சகோதரருக்கும், ஆதரவளிக்க யாருமற்ற வேளையில் இந்து போட் நிறுவனத்தின் சேவைகளை அறிந்த தாயார் உரிய ஆவணங்களைச் சேகரித்து இராசரத்தினம் ஐயாவைச் சந்தித்து எனது மூத்த சகோதரியை திருநெல்வேலியில் உள்ள முத்துத்தம்பி வித்தியாலயத்தில் முதலில் சேர்த்தார். கல்வியங்காடு சைவ வித்தியாலயத்தில் கற்றுக் கொண்டிருந்த நான் அடுத்த ஆண்டு சித்தியடைந்து உயர் கல்விக்காக வேறு பாடசாலையில் சேரவேண்டிய நிலையில் இருந்தேன். எனது தாயார் முத்துத்தம்பி வித்தியாலயத்தின் சேவைகளை எடுத்துக் கூறி உடனேபோய் இராசரத்தினம் ஐயாவைச் சந்திக்கும் படி எனக்குக் கூறினார். அதன் பிரகாரம் உரிய ஆவணங் களுடன் காலை 8 மணிக்கே பாடசாலை முகப்பில் சென்று காத்திருந்தேன். அங்கிருந்த காவலர் பெரிய ஐயா 8 மணிக்குவருவார் அவருடன் கதையுங்கள், என்று கூறினார். அவர் சொல்லிய பிரகாரம் 8 மணியளவில் பச்சை நிற மொறிஸ்மைனர் காரில் ஒரு வயோதிபர் வந்து இறங்கினார். பச்சை நிற கோட்டும் வேட்டியும் அணிந்திருந்த பிரமுகர் இராசரத்தினம் ஐயா அவர்களே வந்தவர் என்னைக் கண்டு என்ன விடயம்? என்று கேட்டார். நானும் பாடசாலையில் சேரவந்துள்ளதைச் சொன்னேன். எனது குடும்ப உறுப்பினர்கள் எவரும் கற்கின்றார்களா எனக் கேட்டறிந்த பின் எனது முதுகில் தட்டி, முன்னால் உள்ள பாடசாலை அதிபரின் காரியாலயத்தைக் காட்டி, அங்குபோய் அதிபர் அவர்களைச் சந்தித்து "தான் சொன்னதாகக் கூறவும்" என்று எனக்குக் கூறி அனுப்பி வைத்தார். அங்கு போய் அதிபர் சரவணமுத்து அவர்களிடம் ஆவணங்களைக் கொடுத்து விடயத்தைக் கூறியதும் அருகிலிருந்த மாணவர் தலைவனைக் கூப்பிட்டு என்னை விடுதிக்கு அழைத்தச் செல்லமாறு கூறினார். அவர் என்னை அழைத்துச் சென்று எனது இடத்தைக் காட்டி இடஒழுங்கு செய்து தந்தார். எனது புது வாழ்க்கை இங்கு தொடங்கியது.

இராசரத்தினம் ஐயா அவர்கள் தனது பிள்ளைகள் போலவே விடுதியில் உள்ள பிள்ளைகளையும் பாதுகாத்தார், பராமரித்தார், வளர்த்தார், கல்வியூட்டினார் என்றே கூறலாம். கனிவான பேச்சு, கண்டிப்பான குணம், கண்ணியமான நடத்தை சிறுவர்களின் தேவை, விருப்பு அறிந்து அவற்றை நிறைவு செய்வதில் தாய், தந்தை போன்றே செயற்பட்டார். காலை, மதியம், மாலை எந்த வேளையிலும் வந்து பாடசாலை வேலைகள் ஒழுங்காக நடைபொறுகின்றதா எனக் கண்காணித்து வழி நடத்துவது அவரது இயல்பான முகாமைத்துவ நுட்படுமாகும். அங்கு பணியாற்றும் அதிபர் ஆசிரியர் ஏனைய ஊழியர்களும் அவருக்க உரிய மரியாதையும் பணிவும் கொண்டவர்களாக தமது கடமைகளைச் சரிவரச்செய்பவர்களாக விருந்தனர்

விடுதிக்கு நாளாந்தம் கொள்வனவு செய்யப்படும் காய்கறிகளையும் காலைவேளையில் வந்து பார்வை யிடுவதும் அவற்றின் தரம் பற்றிப் பரிசோதிப்பதும் அவரின் பணியாகும். அவருக்கு உதவியாக மாணவர் சிலரை அழைப்பித்து அவற்றைப்பரிசோதிக்கவும், நிறையைக் கணக்கிடச் செய்வதும் அவரது வழக்கம். அவ்வேளையி லேயே மாணவருடன் கலந்துரையாடி சாப்பாட்டின் தரம், அளவு பற்றியும் தகவல்களைச் சேகரித்து அவற்றை சிறப்பாகச் செய்ய ஏற்பாடு செய்வார். தீபாவளி, பொங்கல் பண்டிகைக் காலங்களில் மாணவர்களுக்கான விசேட உடைகள், உணவு ஏற்பாடுகளைச் செய்துதவுவார். பண்டிகை வேளையில் தானும் வந்து பங்கேற்று சிறுவர்கள் மகிழ்வித்து ஊக்குவிப்பார். குழப்படியான மாணவர் களுக்கு ஆலோசனைகள் கூறி வழிப்படுத்துவர்

சிறுவர்கள் விடுதியில் தொற்று நோய்க்குள்ளாகி யுள்ளனர் என்று அறிந்தால் உடனேயே விடுதிக்குப் போய் நிலமையை ஆராய்ந்து காரணிகளை நிரற்படுத்தி சுற்றாடல் பிரச்சினையெனில் அவற்றைச்சீர்படுத்த விடுதிப் பொறுப்பாளரை வழிப்படுத்துவார். தொற்றுநோய்க்கான மருந்துகளைப் பெற வைத்திய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு ஏற்பாடுகள் செய்வார். விடுதி, படுக்கைகளைச் சுத்தம் செய்யும் மருந்து வசதிகளை ஏற்பாடு செய்வதோடு காலத்துக்கு காலம் சுகாதார ஏற்பாடுகளைச் செய்யவும் ஏற்பாடுசெய்வார். சிரங்கு, சொறி போன்ற சரும நோய்கள் உள்ளவர்களுக்கு வைத்திய சேவையும் பெற்றத் தருவதோடு தொற்று நீக்கி சவர்காரமும் தந்து சுக நலமாக வாழ வழிகாட்டிய பெருந்தகை. காலத்துக்குக் காலம் சிறுவர்களுக்குபேதி வழங்கவும் வழி நடத்தவர்.

தவணை விடுமுறையிலும் மாணவர் விடுதியில் தங்கியிருப்பவர்களுக்கும் வசதிகள் உரிய அளவில் கிடைக்க ஆவன செய்வார். தவணை ஆரம்பத்தில் பாடசாலை உபகரணங்களான கொப்பி, புத்தகங்கள், பென்சில்கள் கிடைக்க ஏற்பாடு செய்வார். தவணை முடிவில் தவணைப்பரீட்சை முடிவுகள், பொதுத் தேர்வு முடிவுகளைக் கொண்டு மாணவர்களைப் பாராட்டி ஊக்குவிப்பதும் வழிப்படுத்தவதும் அவரது பண்பாகும்.

கிடைக்கக் கூடிய ஆசிரிய வளத்தைக் கொண்டு கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்தவர். ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை இருந்ததே தவிர ஏனைய பாடங்களுக்கு எல்லா ஆசிரியர் சேவையையும் பெறக் கூடிய வகையில் பாடசாலை அதிபரும், இராசரத்தினம்

ஐயா அவர்களும் கற்பித்தல் ஏற்பாடுகளை செய்தனர். திருநெல்வேலிப் பிரதேசத்திலேயே ஆயிரத்திற்கும் அதிக மாணவர்களைக் கொண்டிருந்தாலும், சிறந்த பெறுபேற்றைக் கொண்டதாக விருந்தது. முத்தத்தம்பி வித்தியாலயம் பரமேஸ்வராக் கல்லூரிக்கு அடுத்த தரமான பாடசாலையாக இருந்தது இல்ல விளையாட்டுப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள், மொழித் தேர்ச்சிக் கூட்டங்கள், போட்டிகள் என்பவற்றை நடாத்தி மாணவரை ஊக்கப்படுத்தினார். காலத்துக்குக் காலம் மூத்த அறிஞர்களைக் கொண்டு வெள்ளிக்கிழமை, தினங்களில் சரஸ்வதி பூசைத் தினங்களில், நல்வழி, அறிவுரை சொல்லக்கூடிய சொற்பொழிவுகளை ஆற்றச் செய்வார். அக்காலத்தில் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் ஆற்றிய பிரசங்கங்கள் மறக்க வொண்ணாதவை. இங்கு கற்ற மாணவர்கள் சமூகத்தில் உயர்ந்த பண்பு களுடனும், உயர் பதவிகளுடனும் வாழ்வதும் உதாரணம்.

என்னுடன் கற்ற மாணவர்களை நான் சந்தித்த போது அவர்கள் கிராம அலுவலராகவும், எழுது வினைஞராகவும் ஆசிரியராகவும் கல்வியாளர்களாகவும் வைத்தியர்களாகவும், பொறியியல் வல்லுநராகவும், பஸ் நடத்துனராகவும், தொழில்களில் உயர்ந்து நிற்பது மட்டுமல்ல, பண்பாட்டு ரீதியாகவும் சிறந்து வாழ வழி செய்தவர் இராசரத்தினம் ஐயா என்றால் மிகையாகாது. வாழ்க அவர் பெயர் புகழ் அவர்பணி செய்வோம் அவர்வழி நடப்போம் அவரின் நினைவு நாளில் அவரைப்பற்றி ஒரு கட்டுரை எழுத கிடைத்த, சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்கிறேன்.

வறியவர்களுக்கும், ஆதரவற்றோருக்கும் அவர் செய்த பணிகள் தமிழ் உலகமே மறக்காது அவரின் பணிகளைத் தொடர்ந்து செய்யும் தற்போதைய இந்து போட் முகாமைத்துவ அணியையும் பாரட்டுவதில் மகிழ்ச்சியடைகிறேன். தொடரட்டும் பணிகள். இன்றைய காலத்தின் தேவையறிந்து புதிய கட்டிடங்கள் அமைத்து, மாணவருக்கு புறநிலைக் கற்கை வகுப்புகளை ஏற்பாடு செய்துள்ளதும் பாராட்டத்தக்கது.

வள்ளல் இராசரத்தினம்

சோ. பத்மநாதன்

ராகம்: சங்கராபரணம்
தாளம்: திஸ்ர ஏகம்

பல்லவி

வள்ளல் ராச ரத்தினம் நாமம் வாழ்க வாழ்கவே
வானும் மண்ணும் உள்ள மட்டும் வாழ்க வாழ்கவே (வள்ளல்)

சரணங்கள்

சைவ வித்தி யாவிருத்திச் சங்கம் தன்னையே
தாங்கி நின்ற உண்மை தொண்டன் என்று போற்றுவோம்
மெய்வருத்தம் பார்த்திடாது பாடுபட்டவன்
மேன்மை கொள்ளும் சைவநீதி விளங்க வைத்தவன்
(வள்ளல்)

கல்விச் சாலை ஊர்கள் தொறும் கட்டித் தந்தவன்
கண்முன் காணும் கடவுளென்று கருத நின்றவன்
செல்வச் சீமான் ஆனபோதும் கல்வி ஒன்றையே
சிறந்த செல்வமாக நம்பிச் சேவை செய்தவன்
(வள்ளல்)

வறுமை நோயின் பிடிக்குள் சிக்கி வாடும் பிள்ளைகள்
வாழ இல்லம் கண்ட மேன்மைத் தொண்டு பாடுவோம்
உறுதியோடு அண்ணல் இட்ட பாதை செல்லுவோம்
ஓய்வதில்லை சாய்வதில்லை உச்சம் எட்டுவோம்
(வள்ளல்)

இறவாப் புகழ்படைத்த பெரியார் சைவவித்தியா விருத்திச்சங்க மனேஜர்

சுப்பிரமணியம் இராசரத்தினம்

அவர்கள் பற்றிய நினைவுகள்

பண்டிதை திருமதி பொன். பாக்கியம்
ஓய்வுபெற்ற சைவவித்தியா விருத்திச்சங்க ஆசிரியை.

"கன்னியை நாயகனிடத்து ஒரு துட்டாயினும் வாங்காது வீடு, விளைநிலம், தோட்டம், ஆபரணம் முதலியவற்றோடு விவாகம் செய்து கொடுக்கும் வழக்கம் உடையது என்சென்ம தேசமாகவும், நான் இல் வாழ்க்கையிலே புகவில்லை. இவைகளெல்லா வற்றிற்கும் காரணம் சைவசமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டுமென்னும் பேராசையேயாம்" என்பது யாழ்ப்பாணத்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் விஞ்ஞாபனமாகும்.

1822 ம் ஆண்டு மார்கழிமாதம் 5ஆம் தேதி திருவவதாரம் செய்த நாவலர் பெருமான் தமது தமிழ்க்கல்வியை முறையாகப் பெற்றுக் கொண்டு, இன்று யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியாக விளங்குகின்ற பீற்றர் பார்சிவல் துரை அவர்களது பாடசாலைக்கு ஆங்கிலம் கற்கச் சென்றார். அங்குகற்கும் பொழுது தமிழ்ப் பிள்ளைகளுக்கு எவ்வாறு ஆங்கிலமும் கிறிஸ்தவமும் ஊட்டப்படுகின்றது என்பதைக் கண்டு மனம்வெந்தார். அதன் வெளிப்பாடே நாவலர் பெருமானின் தமிழ், சமயப்பணியாகப் பரிணமித்து சம்பளத்துக்கு அடிமைப் பட்டு யாழ்ப்பாணச் சைவசமயிகள் தமது மதத்தை மறந்து கிறிஸ்தவமதத்தில் ஈடுபட்டமையைக் கண்டு பொறுக்க இயலாமையால் ஏற்பட்ட வெளிப்பாடே இன்று நாம் காணும் சைவப்பாடசாலைகளும் தமிழ்க்கல்வியுமாகும். ஐம்பத் தேழு ஆண்டுகள் இப்பூவுலகில் வாழ்ந்து செயற்கரிய காரியங்கள் பலவற்றைச் செய்து வாழ்ந்த நாவலர் பெருமானுடைய எழுச்சிச் சிந்தனைகள் யாழ்ப்பாணத்தி லுள்ள ஒவ்வொரு மனிதனது உள்ளத்தையும் ஊடுருவிப் பாய்ந்தது. அத்தகைய பெரியார்களில் ஒருவரே காரைநகர் அருணாசல உபாத்தியார்.

காரைநகர் அருணாசல உபாத்தியாயர் கிறிஸ்தவர் களால் நடத்தப்பட்ட ஆசிரியபயிற்சிக் கலாசாலையில் பயிற்சிபெறச் சென்றவர். அங்குள்ள நடைமுறைகள் காரணமாக இரவோடு இரவாக மதிலேறிக் குதித்து வீடுவந்து சேர்ந்து விட்டார். இந்த நாட்டிலே கற்றுவல்ல ஆசிரியர்களையும் சமயபோதகர்களையும் உருவாக்க வேண்டுமெனில், பாடசாலைகளை உருவாக்குவதுடன் ஆசிரியபயிற்சிக்கலாசாலை ஒன்றையும் உருவாக்க வேண்டும் என்பது நாவலர் பெருமானின் எண்ணக்கரு. இந்த எண்ணக்கரு ஈடேறுவதன் முன்னர் அவர் விட்டார். இதனை நிறைவு செய்யும் காலத்தைக் காரைநகர் அருணாசல உபாத்தியாயர் எதிர்பார்த்துக் கொண்டிருந் தார்.

அருணாசல உபாத்தியாயர் கீரிமலைக்குச் செல்வது வழக்கம். அதேபோன்று இளம் அப்புக்காத்தர் ஒருவரும் கீரிமலைக்கு வருவதுண்டு. இளம் அப்புக்காத்தர் வல்வெட்டியிலிருந்து பொழுது போக்குவதற்காகக் கீரிமலைக்கு வருவார். அருணாசல உபாத்தியாயரும் அப்புக்காத்தர் திரு. சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்களும் பல விடயங்களைப் பற்றியும் கலந்துரையாடு வார்கள். யாழ்ப்பாணம் செய்த மாதவத்தின் பேறாக நாவலர் பெருமானின் எண்ணக்கரு நிறைவுறும் காலம் உதயமாகியது.

யாழ்ப்பாணச் சமயவளர்ச்சி, கல்வி வளர்ச்சி என்பனவற்றை நோக்கும் பொழுது நாம் இங்கு பல பெரியார்களை நினைவு கூரவேண்டியவர்களாக உள்ளோம். தமிழ்ப்பாடசாலைகள், ஆங்கிலப் பாடசாலை கள், ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகள் என்பவற்றை நிறுவிய பெரியார்கள், அவற்றை வளர்த்த பெரியார்கள் என்ற வரிசையில் பல பெரியார்களை நாம் நினைவுகூரக் கடமைப்பட்டவர்கள். இன்று நாம் திரு.சு.இராசரத்தினம் ஐயா அவர்களைப்பற்றிச் சிந்திக்கக் கடமைப்பட்டவர் களாக இருக்கின்றோம். நாவலர் பெருமானின் கனவை நனவாக்கிய பெரும்பங்காளன். எங்கள் மனேஜர் ஐயா அவர்கள். நெடுந்தீவு தொடக்கம் பதுளைவரை சைவப் பாடசாலைகளை ஆக்கி, சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலை ஒன்றைத் திருநெல்வேலியிலே உருவாக்கி, சைவ அநாதைச் சிறுவர்கள் நன்கு வாழ்ந்து கல்வி கற்பதற்குச் சைவ அநாதைச் சிறுவர்கள் இல்லமும் முத்துத் தம்பி வித்தியாசாலையும் நிறுவி உழைத்த அந்தமகான் செய்த உதவி காலத்தினாற் செய்த உதவி. இதனை ஞாலம் முழுவதும் நாளும் போற்ற வேண்டும். அருணாசல உபாத்தியாயரின் வேண்டுகோளின் பிரகாரமும், திருவருளின் கருணையினாலும், சைவசமயத்தவரும் தமிழ் இனத்தவரும் செய்த தவப்பயனாலும் எங்கள் மனேஜர் ஐயா அவர்கள் நூற்றெழுபத்தைந்து பாடசாலைகளை உருவாக்கினார். ஒரு சைவாசிரிய பயிற்சிக்கலாசாலையை உருவாக்கினார். நூறுகிடுகுகளும் நான்கு கப்புகளும் மரந்தடிகளும் அகப்பட்டதும் பாடசாலை உருவாகிவிடும். உழைத்து உழைத்துக் குவிக்கக் கூடிய நியாயதுரந்தரர் வேலையைத் துச்சமென உதறிவிட்டுச் சைவத்தை வளர்த்தெடுப்பதற் காக உழைக்கத் தொடங்கினார். பாடசாலைகளை உருவாக்கி விட்டுத்தான் அரச அங்கீகாரத்தை நாடுவார். இதில் அவரது மதிநுட்பம் மிகுந்த உதவிபுரிந்து வந்தது. கிராமந்தோறும் பாடசாலை களை உருவாக்கினார். தமிழ்ப் பாடசாலைகளோடு ஆங்கில பாடசாலைகளையும் உருவாக்கினார். சைவாசிரிய பயிற்சிக் கலாசாலையிற் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள், பட்டம் பெற்ற ஆசிரியர்கள் நல்ல தகுதியும்

அறிவாற்றலும் நிரம்பிய அதிபர்கள் எனப் பலர் பதவியில் இருத்தப்பட்டனர்.

ஆங்காங்கே நிறுவப்பட்ட பாடசாலைகளுக்கு மனேஜர் ஐயா அவர்களே பொறுப்பாக இருந்தாலும் அவ்வக் கிராமத்தவரும் பாடசாலை நிர்வாகத்தைப் பொறுப்பேற்று நடத்தி வந்தனர். சைவச் சிறுவர்களது பராமரிப்பு இல்லம் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தில் இடம் பெற்றிருந்தது. அந்த வளாகத்தில் ஒரு காவிய பாடசாலையும் இயங்கி வந்தது. சைவாசிரி பயிற்சிக்கலாசாலை அதிபர் திரு.சி.சுவாமிநாதன், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, மௌன தவமுனிவர் திரு.பொ.கைலாசபதி இவர்களிடம் கற்று, ஆசிரிய நியமனம் பெற்று முத்துத்தம்பி வித்தியாலயத்திற் கற்பித்த பண்டிதர் சிறுப்பிட்டி கா.தம்பையா, பண்டிதர் நீர்வேலி செ.துரைசிங்கம், பண்டிதர் கல்வியங்காடு சு.இராசையா போன்றோர் அயராது பாடுபட்டு உழைத்தார்கள். நெசவுப்பயிற்சி, பன்ன வேலைப் பயிற்சி தமிழ், சமஸ்கிருத, பண்டித வகுப்புக்கள், ஆங்கிலம், சிங்களம் கற்பித்தல் என்று முத்துத்தம்பி வளாகம் பொலிவுற்று விளங்கியது. விவசாய உற்பத்தி சொல்லிலடங்காது. அந்தக் காலத்தில் சமதர்மவாதி N.M.பெரேரா வருகை தந்து சிறப்பித்ததாக எங்கள் பண்டிதரையா சி.கணபதிப்பிள்ளை அவர்கள் கூறுவார்கள்.

முத்துத்தம்பி வித்தியாலயத்தில் ஆசிரியப்பணி புரியும் பேறு எனக்குக்கிடைத்தமையால் எங்கள் மனேஜர் ஐயாவின் சிறப்பியல்புகள் பலவற்றைக்காணும் வாய்ப்புக் கிடைத்தது. அநாதைச் சிறுவர்களுக்கு மனேஜர் ஐயா அவர்கள் ஒரு தெய்வமாக மிளிர்ந்தார்கள். ஐயா அவர்கள் மிக இரக்க சுபாவம் கொண்டவர்கள். ஒவ்வொருநாளும் பாடசாலைக்கு வருகை தருவார்கள். காரின் ஒலிகேட்டதும் மாணவர் ஓடிச்சென்று பார்ப்பார்கள். அவர்களோடு அன்பாக அளவளாவிச் செல்வார். மாணவர்களின் உடல் உள ஆரோக்கியத்தை நன்கு கவனித்த பின்பே கற்பித்தல் நடக்க வேண்டுமென்பது அவரது கொள்கை. இக்காலத்தைப் போன்று வெளிநாட்டு உதவிகள் அப்பொழுது இருந்ததில்லை. அதனால் அநாதை சாலையை நடத்துவதிற் சில சிரமங்கள் ஏற்படுவதுமுண்டு. எல்லாவற்றிற்கும் முகம் கொடுத்து வெற்றி கண்ட பெருமை ஐயா அவர்களுக்கு உண்டு. சைவ வித்தியா விருத்திச் சங்கத்திற் கடமையாற்றிய அனைவரும் கூட்டுணர்வுட னேயே உழைத்தார்கள்.

சைவாசிரிய பயிற்சிக்கலாசாலையிற் பயிற்சி பெற்றநாம் அனைவரும் தனித்தமுத்திரை பதிக்கப்பட்ட வர்களாகவே விளங்கினோம். கல்வியிலே, கலைகளிலே, விளையாட்டுத் துறைகளிலே மற்றைய கலாசாலைகளை முந்தியே நின்றோம். தமிழ் கூடறும் நல்லுலகம் போற்றும் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப் பிள்ளை அவர்களையும் சைவ சித்தாந்த நுண்பொருள்களை புதிய முறையிற் கண்டு தெளிந்த மௌனதவ முனிவர் பொ.கைலாசபதி அவர்களையும் காணவும் அவர்களிடம் கல்விகற்கவும் வழிவகுத்தவர் எங்கள் மனேஜர் ஐயா அவர்களன்றோ! திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியால யத்திற் கல்வி கற்ற எத்தனையோ மாணவர்கள் பல உயர்ந்தபதவிகளில் இருக்கின்றார்கள். நன்றியும் பக்தி உணர்வும் கொண்டவர்களாக விளங்குகின்றார்கள். இவர்கள் வாழ்வு சிறக்க வழிவகுத்த பெருந்தகையாளர் எங்கள் மனேஜர் ஐயா அவர்களல்லவா?

தமது எண்ணம் செயல் யாவற்றையும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் வளர்ச்சிக்கே அர்ப்பணித்த மனேஜர் ஐயா அவர்கள் தமது குடும்பத்துக்கெனச் சுயநலமாக எதுவுமே செய்யவில்லை. சங்கம் ஆசிரியர்க ளது சம்பளத்தில் இருந்து நான்கு வீதம் அறவிட்டது. அப்பணம் பாடசாலைகளின் அபிவிருத்திக்கே செலவிடப் பட்டது. புதிய பாடசாலைகளை உருவாக்கி ஆசிரியர்களை நியமிக்கும் சந்தர்ப்பங்களில் தூரஇடத்து ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டால் அவர்களுக்குச் சம்பளம் கிடைக்கும் வரை சங்கமே செலவுக்குப்பணம் கொடுத்து உதவும். சம்பளம் கிடைத்ததன்பின் ஆசிரியர்கள் மீளக் கொடுப் பார்கள். இத்தகையதொரு கூட்டுறவான வாழ்க்கையை வேறெந்த நிர்வாகத்திலும் நாம் கண்டு கொள்ள இயலாது. இதற்கு அச்சாணியாக இருந்த மனேஜர் ஐயா அவர்களைப் போற்ற நாம் என்றும் கடமைப்பட்டவர்கள்.

1960ம் ஆண்டு புதிய சட்டப்பிரமாணத்தின் படி சகல பாடசாலைகளும் அரசுடைமை ஆக்கப்பட்டன. சைவவித்தியா விருத்திச் சங்கப்பாடசாலைகளும் அரசுடைமையாயின. சைவாசிரிய பயிற்சிக்கலாசாலை மூடப்பட்டது. அநாதைச் சிறுவர்கள் வாழும் முத்துத்தம்பி வித்தியாசாலையைப் பிரிய மனேஜர் ஐயாவால் முடியவில்லை. அருணாசல உபாத்தியாயர் அடிகோல எத்தனை படிக்கட்டுகள் ஏறித் தடைதாண்டி வளர்த்த பெரியார் சு.இராசரத்தினம் அன்றோ. அவருக்கன்றோ பட்டசிரமங்கள் புரியும். பிரியமனமின்றிப் பிரியாப் பிரிவானார். ஒருகுடைக்கீழ் வாழ்ந்த பல்லாயிரம் ஆசிரியர்கள், அதிபர்கள் நேருக்கு நேருக்கு உருகினர். மன்னா உலகில் மன்னிய குறித்தோர் தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந்தனர்". இது புறம்கூறும் உண்மை. இறவாப் புகழ்ப்படைத்த மனேஜர் ஐயா அவர்கள் என்றுமே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவரால் ஆக்கப்பட்ட அநாதைச் சிறுவர் இல்லம் நன்கு பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. காலத்தின் கோலத்தினால் பல தோன்றலாம். பல அழியலாம். சேர்.பொ.இராமநாதன் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரி இன்று யாழ்ப்பாணப்பல்கலைக் கழகமாக மிளிர்கின்றது. எங்கள் மனேஜர் ஐயாவால் உருவாக்கப்பட்ட சைவாசிரிய பயிற்சிக் கலாசாலைக்கும் ஒரு பொற்காலம் தோன்றவேண்டும். அங்கு கற்றநாம் பழைய மாணவர் என மகிழ்வோடு கூறக் கூடியதாக மலரவேண்டும். அன்றுதான் எங்கள் மனேஜர் ஐயாவின் ஆத்மா இன்புறும். இதுவே எனது பிரார்த்தனை. இறவாப் புகழ்படைத்த பெரியார் எங்கள் சைவவித்தியா விருத்திச்சங்க மனேஜர் அப்புக்காத்தர் சுப்பிரமணியம் - அராசரத்தினம் அவர்கள் நாமம் என்றும் எங்கும் ஒலிக்கட்டும்.

சுதேசியம் காத்த சுத்த வீரர் சு. இராசரத்தினம் ஐயா

செல்வி. இ. சுப்பிரமணியம்
வழக்கம்பரை,
பண்ணாகம், சுழிபுரம்.

போத்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆகியோர் பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை ஈழத்தின் மீது ஆட்சி அதிகாரம் செலுத்தினர். கிட்டத்தட்ட நானூற்றைம்பது வருடங்கள் அவர்களின் ஆளுகைக்கீழ் மக்கள் அடிமைப்பட்டு பாமரராய் விலங்குகளாய் மிதிக்கப்பட்ட காலமது மேலைத் தேசத்தவர் இங்குள்ள நிலைமையைப்புரிந்து கொண்டு அரசு செலுத்த முற்பட்டனர். அவர்கள் இங்குவரும் போது இங்குஆட்சி செய்த அரசர்களின் பலவீனத்தையும் ஒற்றுமையின்மை யையும் ஒருவர் மீது ஒருவர் பொறாமை கொண்டு சூழ்ச்சிகள் செய்வதையும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் வேணவா கொண்டவர்களாயுமிருந்த நிலையைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு வந்தநோக்கத்தோடு ஆட்சி செய்யும் நோக்கத்தையம் சேர்த்துக் கொண்டனர். முதலில் இங்கு வந்த போர்த்துக்கேயர் சுதேசிகளைத் துன்புறுத்தித் தமது மொழி மதம் கலாசாரம்என்பவற்றைப் பலாத்காரமாகத் திணித்தனர். சைவ, பௌத்த கோயில்களை இடித்துக் கோட்டைகள் கட்டினர். மக்களைப் பலவந்தமாகத் தங்கள் கத்தோலிக்க மதத்தில் சேர்த்தனர். பாடசாலைகளை உருவாக்கி சைவர்களையும், பௌத்தர்களையும் மதம் மாற்றி நாமும் மாற்றித் தங்கள் பள்ளிகளில் படிக்க வைத்தனர். அவர்களின் இயற்பெயரோடு கிறீஸ்தவப் பெயரும் முன்னொட்டாக வைத்தனர். இவர்களின் கொடுமையைத் தாங்கமுடியாது மக்கள் தவித்தபோது மேலும் ஒரு மேலைச்சாதியர் - ஒல்லாந்தர் - வந்திறங்கினர்.

போர்த்துக்கேயரின் கொடுமையினின்றும் மீளும் பொருட்டுச் சில சுதேசமன்னர்கள் ஒல்லாந்தரை நாடி ஆதரவு கொடுத்து அவர்களை இலங்கையின் ஆட்சியாளராக்கினர். அவர்களம் அவ்விதமே நாட்டின் செல்வத்தைச் சூறையாடித்தம் நாட்டுக்குக் கொண்டு செல்வதையும் வாசனைத்திரவியங்கள் யானைத்தந்தம் இரத்தினக்கல் போன்ற விலையுயர்ந்த பொருள்களை இந்த நாட்டிலிருந்து தங்கள் நாட்டிற்குக் கொண்டு சேர்ப்பதோடு தங்கள் புரட்டஸ்தாந்து மதத்தை இலங்கையில் பரப்புவதற்கும் பேரார்வம் காட்டினர். தங்கள் மதம் மொழி கலாசரத்தைச் சுதேசிகளிடம் பரப்புவதற்கு ஒல்லாந்தரும் கிராமந்தோறும் பாடசாலைகளை உருவாக்கிச் சுதேச மாணவர்களை மதம் மாற்றி தங்கள் மொழியைக் கற்கச் செய்தனர். கற்றுத் தேர்ந்த சுதேசிகளுக்குப்பட்டம் பதவியோடு அரசாங்கத்தில் உயர்பதவிகளும் வேதனங் களும் அளிக்கப்பட்டன. சிலர் மத போதகர்களாவும் மதிக்கப்பட்டனர். இது கண்டு ஐரோப்பாவின இன்னொரு சாதியினரான பிரித்தானியர் 18 ஆம் நூற்றாண்டின் முடிவில் வியாபார சோக்கத்தோடு இலங்கைவந்தனர். இவர்கள் சிறிது வித்தியாசமான போக்குடையவர்களாகவும் நாகரிகமுடையவர்களாகவும் காணப்பட்டனர் ஆனாலும் இவர்களும் தங்கள் மதம் மொழி என்பவற்றைச் சுதேசிகளிடம் பரப்புவதில் பேரார்வமுடையவர்களாக இருந்தனர் ஆனால் முந்திய இரு சாதியாரையும் போலன்றி இவர்கள் சுதேசிகளை மதம் மாற்ற எடுத்துக்கொண்டு உத்தி - தந்திரம் நோகாமல் வேலை செய்தது. தங்கள் மத்ததைப்பரப்புவதற்கு மாணவர்களுக்கு இலவசமாகக் கல்வி, உடை, உணவு, உறையுள் என்பவற்றை அளித்தனர் அத்துடன் அப் பாடசாலைகளில் ஆங்கிலம் கற்றுப் பட்டம் பதவி பெற்ற மாணவர்களக்கு அரசாங்கத் தொழில்களும் வேதனமும் வழங்கப்பட்டன. அதனால் பல சுதேசிகள் வயிற்றுக்குச் சோறு போடும் இந்தக் கல்வியை விரும்பிக்கற்றதோடு தங்கள் மதத்தையும் மாற்றிக் கொண்டு நாமத்தையும் ஒட்டிக்கொண்டனர். இது ஆங்கிலேயருக்கு மிக இலகுவாக மத மாற்றம் செய்வதற்கு ஏற்புடையதாயிற்று. சிலர் குடும்பத்தோடேயே மதம் மாறினர் சிலர் படிப்பதற்கு மாத்திரம் மதம் மாறிவிட்டுப் படித்து முடிந்த பின் தங்கள் மதத்திற்குத் திரும்பினர்.

இன்னும் சிலர் மதம் மாறிப்படித்துப்பட்டம் பெற்று அரச தொழில் பெற்றுக் கொண்டபின் தங்கள் சொந்த மதத்தை விட்டு மேலும் சுதேசிகள் கிறீஸ்தவர்களாக மாறாதிருப்பதற்காகத் தங்கள் சொந்த நிதியில் சொந்த நிலத்தில் பாடசாலைகளை உருவாக்கி அங்கே சுதேசிகள் மதமாறாது ஆங்கிலக் கல்வியைக் கற்க உதவினர். அக் காலத்தில் உவெஸ்லியன் அமெரிக்கன் மிஷன் சேர்ச் மிசன் மற்றும் கத்தோலிக்க குருமார் கிராமங்கள் தோறும் பாடாலைகளை உருவாக்கித் தங்கள் மொழியையும் மதத்தையும் பரப்பினர். இந்தக் காலகட்டத்தில் ஆங்கில அரசு சுதேசிகளும் பாடசாலைகளை நிறுவலாமென அனுமதி வழங்கியது. இதனைச் சாதகமாகக் கொண்டு படித்து வல்ல சுதேசிகளும் சைவ ஆங்கில பாடசாலைகளைத் தங்கள் செலவிலே நிறுவிச் சைவப்பிள்ளைகள் ஆங்கில மொழியைச் சைவ ஆங்கில பாடசாலையில் பெறும் வாய்ப்பை உருவாக்கினர். இதனால் மேலும் பல சைவர் கிறீஸ்தவர்களாகாது தடுக்கப்பட்டனர். கிறீஸ்தவ ஆங்கில பாடசாலையில் கல்வி கற்ற சைவப் பெரியவர்கள் தங்கள் ஊர்கள் தோறும் நிறுவிய பாடசாலைகள் இன்று மிகப் பிரபல்யம் உடையவைகளாக விளங்குகின்றன அவற்றுள் சில.

1. சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஸ்தாபகர் - நிற்சிங்கம் கனகரத்தினம்
2. யாழ் இந்துக் கல்லூரி ஸ்தாபகர் - நெவின் செல்லத்துரை
3. கந்தரோடை ஸ்கந்தவரோதயா - கந்தையா உபாத்தியாயர்
4. மானிப்பாய் இந்துக் கல்லூரி - சங்கரப்பிள்ளை

5. மருதான மடம் இராமநாதன். கல்லூரி - பொன். இராமநாதன்

6. திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி - பொன். இராமநாதன்

7. சுதுமலை சிந்மயபாரதி - சின்னையா

இவை போன்று மேலும் பல பாடசாலைகள் இலங்கைச் சுதேசிகளினால் கிறீஸ்தவப்பாடசாலைகளக்கு எதிராக நிறுவப்பட்டன. இப் பாடசாலைகளை நிறுவிய கல்விமான்கள் அப்பாடசாலைகளைச் செவ்வனே நிர்வகிப்பதற்கு கல்விமான்கள், திறமை மிக்கோர், நாட்டுப்பற்றாளர், சமூக மேம்பாடு கருதுவோரையே அதிபர்களாக நியமித்தனர். அவர்கள் சமூகத்தில் பேரும் புகழும் பெற்று விளங்கினர் சமூகம் அவ்வதிபர்களைத் தெய்வமாக மதித்தது. விக்ரோறியாவில்சைவப்பெரியார் சிவபாதசுந்தரம் வைத்தீஸவரா - அம்பிகைபாகன், மானிப்பாய் இந்து - திரு வீரசிங்கம், பரமேஸ்வரா கு.சிவப்பிரகாசம், மகாஜான, ஜெயரட்ணம், யாழ் மத்திய கல்லூரி - தம்பர் போன்ற அதிபர்கள் இன்றும் மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கும் பெரியார்களாவர்.

இக் காலகட்டத்தில் பௌத்த சிங்களசுதேசிகளும் தங்கள் மதசார்புடைய பாடசாலைகளை உருவாக்கினர். கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அவற்றுள் ஒன்று. அதே போன்று இஸ்லாமியரும் தங்கள் மதசார்பான பாடசாலை களை உருவாக்கினர்.

இக்காலத்தில் கிழக்கிலங்கையிலும் யாழ்ப்பாணம் வலிமேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் மட்டக்களப் பில் வாழ்ந்தவருமான வைத்திலிங்கம், மார்க்கண்டு முதலியார் என்பவர்களால் 1910 - 1918 வரை பதினைந்து பாடசாலைகள் நிறுவப்பட்டன. பின் இவை இராமக்கிருஷ்ண சங்கத்திடம் கையளிக்கப்பட்டன.

இது இவ்வாறிருக்க சைவக் காவலனாம் நல்லை நகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருடைய சிந்தனை மேலுமொரு படி சென்று "சைவப்பிள்ளைகள் சைவச் சூழலில் தமிழ் மொழியைக் கற்பதே முறையும் தருமமும்" என ஆங்கில அரசுக்கு யதார்த்தமாக எடுத்துரைத்ததோடு நின்று விடாது 1848 ம் ஆண்டு நாவலர் சைவத் தமிழ்ப்பாடசாலையையும் உருவாக்கினார். சுதேசிகள் உணவுக்கும், உடைக்கும் மதம் மாறுவதைத்தடுக்கும் பொருட்டு இலவசக் கல்வி, கஞ்சித் தொட்டித் தருமம் முதலியவற்றை மேற்கொண்டார். அச்சியந்திரசாலை ஒன்றைத் தொடங்கி ஏடுகளிலிருந்த நூல்களை அச்சுவாகன மேற்றினார். சைவ சமய அறிவை எல்லோரும் பெறும் பொருட்டு சைவவினாவிடை, பெரிய புராண வசனம் ஆகியவற்றை சைவத் தமிழர் எல்லோர் கைகளிலும் தவழவிட்டார். தனியொருவனாக நின்று ஆங்கில கிறீஸ்தவர்களுக் கெதிராக கண்டனப் பிரசுரங்கள் வெளியிட்டார். பேனா முனையால் அவர் ஆங்கில அரசிடம் சாதித்தவை அநேகம் எனலாம் ஊர்கள் தோறும் சைவத் தமிழ்ப் பாடசாலைகள் நிறுவிச் சுதேசித்தமிழர் கல்வி கற்கச் செய்தல் வேண்டுமென விழைந்தார்.

சுதேசிகள் சலுகைகளுக்கு ஆசைப்பட்டு மதம் மாறி மேலைக் பலாச்சரத்தைப் பின்பற்றுவதை எதிர்த்தார். சில உயர் குல சுதேசிகள் கூடக்குடும்பத்தோடு மதம் மாறி ஆங்கிலக்கல்வி கற்று அரசிடம், உயர்பதவிபெற்று உல்லாச வாழ்வு வாழத் தலைப்பட்டனர். சில சுதேசிகளின் வீடுகளிலிருந்து சைவமும் தமிழும் விடைபெற்றுக் கொண்டிருந்தன. கிறீஸ்தவ மதமும் ஆங்கிலமும் செல்லப் பிள்ளைகளாய் சுதேசிகள் வீடுகளில் நுழைந்துகளிநடம் புரிந்தன இவற்றைக் கண்ட நாவலர் பெருமானுக்கு மனம் கொதித்தது. சுதேசிகளுக்கு அந்நியர் செய்யும் அநியாயத்தையும் அடாவடித்தனத்தையும் தடுக்க - நியாயமான - நீதியான கருத்துக்களை அள்ளி வீசிக் கண்டனப் பிரசுரங்களை அவ்வப்போது வெளியிட்டு வந்தார். இச்செயற்பாடுகளினால் சுதேசிகளின் மதமாற்றத்தைமுழுக்க முழுக்கத் தடுக்க முடியாது விட்டாலும் இன்று ஈழ நாட்டிலே விபூதி நெற்றியில் தரித்துச் சிவன் கோவிலுக்குச் செல்லும் ஒரு பகுதியினரையாவது காப்பாற்றியுள்ளார் என்பதையாவரும் ஏற்றுக் கொள்வர்.

நாவலர்பெருமானின் மறைவுக்குப்பின் காரைநகர் திரு. அருணாசலம் உபாத்தியாயர் அவர் விட்டுச் சென்ற தோண்டைத் தொடர்ந்தார். அவரும் சுதேசிகளின் மதமாற்றத்தைத் தடுக்கத் தன்னால் ஆனவரை ஏடுகளிலிருந்த நூல்களை அச்சு வாகனமேற்றினார். முன்னின்றுழைத்தார். ஆனாலும் அவருக்குச் சில தடைகள் இருந்தன. நாவலரைப் போலப் போதியளவு ஆங்கில அறிவு அவருக்கிருக்கவில்லை. அதனால் அவரால் தன்னிடம் எழுகின்ற எண்ணக்கருவுக்குச் செயல் வடிவம் கொடுக்க முடியவில்லை. தன் எண்ணங்களுக்குச் செயல் வடிவம் கொடுக்கும் ஒராங்கில அறிவு நிரம்பிய சுதேசச் சமூகத் தொண்டனைத்தேடினார். அந்தவேளை இறைவன் அறிவும் துணிவும் சமூகப்பணி செய்யும் விருப்பும் தமிழும் சைவமும் காப்பாற்றப்பட வேண்டுமென்ற துடிப்பும் வாய்ந்த இளைஞன் திரு.சு.இராசரத்தினம் அவர்களை அருணாசல உபாத்தியாயருக்கு அறிமுகம் செய்து வைத்தார். அதன் பின் உபாத்தியாயரும் ஐயாவும் சேர்ந்து தங்கள் சேவையை முட்டின்றிமுடித்தனர். உபாத்தியாயரின் எண்ணங்கள் இராசரத்தினமையாவால் செயல் ரூபம் பெற்றன. இருவரும் சேர்ந்து பிரித்தானிய அரசுக்கு அவ்வப்போது தலையிடி கொடுத்துக் கொண்டிருந்தனர்.

1920 ஆம் ஆண்டு அருணாலம் உபாத்தியாயர் இறைபதம் அடைந்தபின் 20 ஆம் நூற்றண்டின் முற்பகுதியில் மேலும் பல சுதேச - படித்த பெரியார்கள் தங்கள் இருப்பை நிலை நாட்ட விரும்பினர். ஆறுமுகநாவலரைப் பின்பற்றி சேர். பொன் இராமநாதன் போன்றோருடன் சைவத்தமிழ்ப் பாடசாலைகளின் காவலனாம் இந்துபோட் திரு.சு.இராசரத்தினம் அவர்களும் இணைந்து மேலும் பல சைவத்தமிழ்ப் பாடசாலைகளை ஊர்கள் தோறும் நிறுவினர். "தமிழ்க்கல்வியும் சைவநெறியும் வளர்ச்சியடைவதற்கு முக்கிய தலங்கள் தோறும் சைவத்தமிழ்ப் பள்ளிக் கூடங்கள் நிறுவுதல் அவசியம்" என்ற நாவலரின் கூற்றுக்கிணங்க 1848 ல்

அலுவலகப் பணியாளர்கள்

இடமிருந்து வலமாக இருப்போர்.
திரு. இ. தருமரத்தினம், திருமதி. செ. ஞானேந்திரன், திரு. மு. முத்துக்குமாரசாமி
இடமிருந்து வலமாக நிற்போர்.
திருமதி. வி. ஜெயந்தி, திருமதி. சு. விஜயமதன், செல்வி. இ. தாட்ஷாயினி

உப விடுதிக் காப்பாளர்கள்

இடமிருந்து வலமாக இருப்போர்.
திருமதி. செ. மல்லிகா, செல்வி. க. தேவதயாநிதி, செல்வி. த. சின்னக்கிளி, திருமதி. க. செல்வமலர்
இடமிருந்து வலமாக நிற்போர்.
செல்வி. ம. அனுஷியா, செல்வி. ந. சங்கீதா, செல்வி. கு. ஹர்சலா, செல்வி. சி. ஜெயந்தினி,
செல்வி. கீ. விஜயா, செல்வி. க. சந்திரிக்கா

சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் பவளவிழாக் காட்சிகள்
11-03-2000

1

2

3

முன்னாள் தலைவர் அமரர்
எஸ். ஆர். கனகநாயகம் அவர்களின்
நூற்றாண்டு விழா - 2004

அறநெறிக் கல்வி பயிலும் மாணவர்கள்
(ஆண்கள்)

அறநெறிக் கல்வி பயிலும் மாணவர்கள்
(பெண்கள்)

நாவலர் சைவத்தமிழ்ப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. கிராமங்கள் தோறும் மிசனரிமாரால் அமைக்கப்பட்ட கிறீஸ்தவ ஆங்கில பாடசாலைகள் சுதேசிகளை மதமாற்றம் செய்தன. அதனால் அப் பாடசாலைகளுக்கு அருகிலேயே சைவத்தமிழ்ப்பாடசாலைகளை நிறுவிச் சுதேசிகள் மத மாற்றம் செய்யப்படுவதைத் தடுக்க அரும்பாடுபட்டனர்.

தனித்து நின்று இப்பாரிய மதமாற்ற அழிவினைத் தடுக்க முடியா தெனக் கண்ட இக்கற்று வல்ல அறிஞர் பெருமக்கள் ஒன்று கூடி ஒரு சங்கம் அமைத்தனர் அச்சங்கம் சேர். பொன். இராமநாதன் அவர்களைத் தலைவராகக் கொண்டு 1923 ஆம் ஆண்டு மார்கழித்திங்கள் 9 ஆம் நாள் சைவ வித்தியா விருத்திச் சங்கம் என்ற பெயரோடு ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இவ்வமைப்பில் முப்பத்தாறு படித்த சைவத்தமிழ்ப் பெரியார்கள் அங்கம் வகித்தனர். இச்சங்கம் யாழ்ப்பாணம் முழுவதுமன்றி இலங்கையின் பிற மாவட்டங்களிலும் மாகாணங்களிலும் ஊர்கள் தோறும் சைவத்தமிழ்ப் பாடசாலைகளை நிறுவி நிருவகித்து வந்தது. 1926 ஆம் ஆண்டில் எழுபத்தாறு பாடசாலைகள் நிறுவப்பட்டன. இப்புனிதகைங்கரியத்திற்கு முன்னின்று முழுமுச்சுடன் உழைத்தவர். திரு. சு. இராசரத்தினம் என்றால் மிகையாகாது. அன்னாரின் அயரா உழைப்பையும் விடா முயற்சியையும் கண்ணுற்ற சைவ வித்தியா விருத்திச் சங்கம் 1928 ஆம் ஆண்டு அவரை சங்கப் பொது முகாமையாளராக்கியது. அன்ற தொடக்கம் அன்னாரின் தொண்டு இறுதி மூச்சுவரை தங்கு தடையின்றிப் பிரவாகித்தது. தொடர்ந்து வருடா வருடம் கணம் தோறும் ஆங்கில மிசனரிமாரின் பள்ளி எங்குண்டோ அங்கெல்லாம் நான்குகப்பும் ஒரு கிடுகுக் கூரையுடன் கூடிய ஒரு சைவத்தமிழ்ப் பாடசாலை தலை நிமிர்ந்து நிற்கச் செய்வர்.

இந்தக் கொட்டிற் பள்ளியில் கல்விகற்பிப்பவர் அச்சூழலில் வாழும் அவ்வூர் சி.பா.த (S.S.C) வகுப்புச் சித்தியெய்திய சாதாரண வறுமைக் கோட்டின் கீழ் - வருமானம் குறைந்த - குடும்பத்தைச் சார்ந்த சைவத்தமிழ் மகனாகலோ மகளாகவோ இருப்பர். அரசாங்கம் அப்பாடசாலையைப் பதிவு செய்து உதவி நன்கொடை அளிக்கும் வரை - அப்பள்ளியவ்விடத்தில் நிலை கொள்ளும் வரை - அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்குத் தன் முகாமைத்துவத்துக்குக் கீழுள்ள ஏனைய பாடசாலைகளின் வருமானத்திலொரு பகுதியை வேதனமாக வழங்குவார். இரண்டொரு வருடங்களில் அப்பாடசாலையை உதவி நன்கொடைபெறும் பாடசாலை யாக்கிவிடுவார். அவ்வாசிரியர்களும் நிரந்தர ஆசிரியபதவி பெறுவர். இச்செயற்பாடுகளினால் அவர் சமூகத்திற்கும் சைவத்திற்கும் தமிழுக்கும் பெரும் தொண்டாற்றினார். ஏழைக் குடும்பங்களைப் பொருளாதார நிலையில் உயர்த்தினார்.

இலங்கை வாழ் சுதேச சைவத்தமிழ்ப் பிள்ளைகள் அனைவரும் சைவப்பாடசாலைகளில் சைவாசிரியர்களி னாற் சைவச்சூழலில் கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்று சைவமக்களிடம் வேண்டுகோள் விடுத்தார். சைவப் பிள்ளைகளில் ஒருசாராரான தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர் கிறீஸ்தவப்பாடசாலைகளுக்குச் சென்று அங்கு மதம் மாற்றப்படுவதை அறிந்து நெஞ்சம் துடித்தார். அதனை நிவிர்த்தி செய்யும் பொருட்டுக் அரசினர்களுக்குக் கல்வி கற்க அனுமதி கொடுக்காத பாடசாலைகளுக் கருகிலேயே அவர்களுக்கான பள்ளிகளை நிறுவி உதவினார். எல்லா வசதிகளையம் அளித்துச் சமகல்வி பெறும் வாய்ப்பினை நல்கினார். இதனால் ஆரம்பத்தில் பலவிதமான எதிர்ப்புக்களை எதிர் நோக்கினார். கல்லெறிகூட வாங்கியிருக்கிறார். இப்படியான சமூக எதிர்ப்புக்களின் மத்தியிலும் மனம் தளராது அவற்றை யெல்லாம் சமாளித்து வெற்றியும் கண்டார். தாழ்த்தப்பட்ட இனம் உயர வேண்டுமானால் கல்வியே சிறந்த சாதனம் என உணர்ந்த அவர் அக்காலத்தில் தாழ்த்தப்பட்டோருக்குச் சம ஆசனம், சம போசனம் அளிக்கப்பட வேண்டுமென்று அன்றைய அரசாங்கத்தின் தீர்மானத்தை அமுல் நடத்துவதில் தீவிரமான எதிர்ப்பு எழுந்தது. கொதித் தெழுந்த மக்கள் ஏழு பள்ளிகளைத் தீக்கிரையாக்கினர். பொதுமக்களின் இந்த மிரட்டலுக்கு மசிந்து கொடுப்பாரா, என்ன? தன்னுடைய கொள்கையினின்றும் இம்மியளவும் அசைந்தாரில்லை. அரச தீர்மானத்தைத் தன் முகாமைத்து வத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் நிலை நிறுத்தினார்.

அதி தீவிரமாகச் சைவத்தமிழ்ப் பாடசாலைகளை உருவாக்கி நிருவகித்து வந்த அவருக்குப் பயிற்றப்பட்ட சைவத் தமிழ் ஆசிரியர்கள் போதியளவு கிடைக்கவில்லை. எனவே தானே ஒரு சைவாசிரிய சலாசாலையை உருவாக்கினால் சைவப்பிள்ளைகளைக் கற்பிக்கத்திறமை மிக்க சைவாசிரியர்கள் கிடைத்துவிடுவார்களென எண்ணினார். அச்சந்தர்ப்பத்தில் இருபாலையில் சைவாசிரிய கலாசாலைக்கு வித்திட்டு அல்லும் பகலும் அயராது உழைத்து வந்த திரு. அருணாசல உபாத்தியாயரின் மகன் திரு. அ. சிவபாதம் சோகம் தோய்ந்த முகத்தோடு திரு. இராசரத்தினம் ஐயாவின் முன்றிலில் தோன்றினார். சோகத்தின் காரணத்தை வினவினார் ஐயா. தனக்கு உயரம் போதாமையாற்றன்னை ஆசிரிய பயிற்சிக்குக் கலாசாலை தெரிவு செய்ய மறுத்து விட்டனரென்று கூறினார் திரு. சிவபாதம். மனவேதனை கொண்ட இப்பெரியார் தன்னுடைய முந்திய சிந்தனையும் தூண்ட உடனடியாக ஒராசிரிய பயிற்சிக் கலாசாலையை 1928 ம் ஆண்டு ஐப்பசி மாதம் திருநெல்வேலியில் திரு. இராசேந்திரம் அவர்களின் வீட்டில் 27 மாணவர்களுடன் ஆரம்பித்தார். அன்று தொடக்க 1960 ம் ஆண்டு அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்கும் வரை அறிவும் ஆற்றலும் சீலமும் நேர்மையும் நிரம்பிய நல்லாசிரியர் பலரை உருவாக்கி வெளியேற்றித்தன் நிருவாகத்திலுள்ள பாடசாலைகளிலேயே தொழில் வாய்ப்பினையும் அளித்து ஆதரித்து வந்தார்.

சைவாசிரிய கலாசாலையில் ஆசிரியர்களுக்குச் சிறந்த பயிற்சியளிப்பதற்கு திறமையும் சீலமும் அறிவும் பொருந்திய விரிவுரையாளர்களைத்தேடிக் கண்டு கொண்டார். மயிலிட்டி திரு.சுவாமிநாதன் B.A, அளவெட்டி

கலாநிதி திரு. பொ. கைலாசபதி, மட்டுவில் பண்டிதமணி திரு.சி.கணபதிப்பிள்ளை போன்ற அறிஞர் பெருமக்கள் பேராசிரியர்களின் சேவையைப்பயன்படுத்தித் தரமான சைவாசிரியர்களை உருவாக்கினார். "ஆறுமுகநாவலர் இட்டவித்தை அருணாசலம் உபாத்தியார் முளைகொள்ளச் செய்தார். திரு.சு.இராசரத்தினம் அவர்கள் அதனை வளர்த்துப்பெருவிருட்சமாககினார்" எனப் பண்டிதமணி திரு.சி.கணபதிப்பிள்ளை கூறுவார். சைவவித்தியா விருத்திச்சங்கம் தமிழ் நெடுங்கணக்கின் உயிரெழுத்து முதல் மூன்றிலும் அ, ஆ, இ உருவாகிய தென்பர்.

இவரின் அயரா உழைப்பின் மிகுதியால் இலங்கையில் சைவத்தமிழர் வாழும் பகுதிகளிலெல்லாம் பிர தேசங்களில் மாகாணங்களிலெல்லாம் சைவவித்தியா விருத்திச் சங்கம் என்ற அமைப்பின் பேரில் திரு.சு. இராசரத்தினமவர்கள் தன் உடல் பொருள் ஆவியத் தனையும் அர்ப்பணித்துச் சைவத்தமிழ்ப் பாடசாலைகளை உருவாக்கி நிருவகித்துப் பரிபாலித்தார். 1945 ம் ஆண்டு 119 பாடசாலைகள் இச்சங்க நிருவாகத்தின் கீழ்ச் செயற்பட்டன. 1958 ஆம் ஆண்டு 187 பாடசாலைகளாக உயர்ந்து விட்டன. 1960 ஆம் ஆண்டு அரசாங்கம் இலங்கையிலுள்ள எல்லாப் பாடசாலைகளையும் பொறுப்பேற்றபோது மனமுவந்து எல்லாவற்றையும் கையளித்தார். ஆண்டுக்காண்டு பாடசாலைகளின் எண்ணிக்கை உயர்ந்து சென்றமைக்குக் காரண கர்த்தாவாக விளங்கியவர் மனேச்சர் ஐயா என்றால் மிகையாகாது.

சைவ அநாதைப்பிள்ளைகளுக்காகச் சைவ அநாதையில்லம் ஒன்றை அமைக்க விழைந்தார் ஐயா. அதன் பயனாக முதலில் ஆண் பிள்ளைகளுக்காக ஒன்றை ஆரம்பித்து ஏழை அநாதைகளை இல்லத்திற் சேர்த்து உணவு, உடை, உறையுள் இலவசமாக அளித்துக் கல்வியும் போதித்துப் பாதுகாத்து வந்தார். ஆரம்பத்தில் திருநெல்வேலியிலுள்ள சைவாசிரிய கலாசாலைக்குப் பக்கத்திலுள்ள வீடொன்றை வாடகைக்கு எடுத்து அதில் அநாதைச் சிறாரைப் பராமரித்துவந்தார். பின் இரண்டு கைகளும் வெட்டுண்ட நிலையிலிருந்த சைவ அநாதைக் குழந்தையைக் கண்டு மனமுருகிக்கருணை கூர்ந்து பெண் அநாதைக் குழந்தைகளுக்கும் ஓரநாதைச்சாலையைத் தொடக்கினார் அநாதைப் பிள்ளைகளைக் கண்ணை இமை காப்பதுபோலக் காத்து வந்தார் இந்த ரட்சகர். அநாதைக் குழந்தையொன்றுக்கு ஆசிரியர் பிரம்பாற் தீண்டி விட்டற் போதும் உருத்திரமூர்த்தியாகி அவ்வாசிரியருக்கு உடனடியாக இடமாற்றக்கடிதம் கிடைக்கச் செய்வார். அநாதையில்லத்திலிருந்து கல்விகற்று உயர்ந்தவர்கள் பற்பலர். இன்று அவர்கள் பெரும் பெரும் பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகித்து ஓய்வு பெற்றுமுள்ளனர். பலர் பட்டதாரிகளாகவும், வைத்தியர்களாகவும் பொறியியலாள ராகவும் கணக்காளராகவும் விரிவுரை யாளராகவும் எழுதுவினைஞர்களாகவும் பேராசிரியர் களாகவும் ஆசிரியர்களாகவும் வேறுபல பணிகளை மேற் கொண்டவர்களாகவும் நல்ல நிலைக்கு உயர்ந்தார்கள். அவர்களினுள்ளங்களிலெல்லாம் இப்பெருமகனார் வாழ்ந்து கொண்டிருப்பாரென்பதில் ஐயமில்லை. பலர் நன்றிப் பெருக்காற்கண்ணீரும் உகுத்தனர். இந்த சிறுவர் அநாதையில்லம் சைவவித்தியா விருத்திச்சங்கத்தினால் தொடர்ந்து தொண்டுள்ளத்தோடு நடத்தப்பட்டு வருகிறது.

இவரின் தொண்டு மேலும் விரிவடைந்து வாழ வழியின்றித் தவித்த அங்கவீனர்களுக்கும், ஆதரவற்ற முதியோருக்கும் வாழ வழிகாட்டித் தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொடுத்தது. காய்கறித் தோட்டம் அமைத்தும் பண்ணைகள் நிறுவியும் உதவினார். குடிசைக் கைத்தொழில்களான பன்ன வேலை, தும்பு வேலை, நெசவு வேலை போன்றவற்றைப் பாடசாலைகளிலே ஒரு பாடமாகக் கற்பிக்க அறிமுகம் செய்தார். இதனால் பாடசாலைகளிலே படிப்பை முடித்துக் கொண்டு வெளியேறுமொரு மாணவன் உழைக்கும் திறனுடனும் தன்னம்பிக்கையுடனும் வெளியேறிக் கௌரவத்தோடு வாழ வழிசெய்தார். கைத்தொழில் ஆசிரியர் பலருக்குத்தன் நிருவாகத்திலுள்ள பாடசாலைகள் பலவற்றில் வேலை வாய்ப்புக் கொடுத்து மாதாந்த வருமானமும் மாணவர் களுக்குத் தொழிற்பயிற்சியும் அளித்துச் சமூக பொருளாதாரத்தை உயர்த்தி நாட்டின் பொருளாதாரத்தை யும் செழிப்படைய வைத்தார்.

சைவாசிரிய கலாசாலையில் பயிற்சி பெறம் சிலர் விடுதிக்கான கட்டணத்தைச் செலுத்த முடியாது கஷ்டப்பட்டபோது பணம் வாங்காமலே பயிற்சி பெற வைத்தார். பயிற்சி முடிந்த பின் உடனடியாக வேலை வாய்ப்பையும் கொடுத்தார். வேறுமத மாணவர்களுக்கும் வாய்ப்பும் வசதியும் அளித்து வாழ வைத்தார்.

நாவலர் பெருமானால் வித்திடப்பட்ட காவிய பாடசாலைக்குப் புத்துணர்வூட்டி 1936 ம் ஆண்டு அதை மும்மொழிக் காவியப்பாடசாலையாக புணருத்தாரணம் செய்தார். இலங்கையின் இன ஏற்றுமைக்கு இது ஒரு பாலமாக அமையுமென எண்ணினார். தமிழ், சமஸ்கிருதம் மொழிகளில் உயர்கல்வி பெறும் ஒரு பாடசாலையையும் சிங்கள மொழிப்பிற்சி பெறும் ஒரிரவுப் பாடசாலையையும் இணைத்து இயக்கிவந்தார். இஃது ஆறுவருடங்கள் வெகுசிறப்பாக நடைபெற்றுது. அக்காலத்தில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த திரு. என். எம் பெரேரா அவர் இப்பாடசாலை மூலம் ஐயா செய்யும் சேவையைப் புகழ்ந்து பாராட்டியிருந்தார்.

1945 ம் ஆண்டு திரு. C.W.W. கன்னங்கரா ஒரு சட்டத்தைச் சட்டசபையிற் கொண்டு வந்தார். இலங்கை யிலுள்ள பாடசாலையிற்கல்விகற்கும் மாணவர்கள் அனைவருக்கும் முதலாம் ஆண்டு தொடக்கம் பல்கலைக்கழகம் வரை இலவசக்கல்வி கொடுக்கப்பட வேண்டுமென்பதே அச்சட்டம். இச்சட்டத்திற்கு முற்று முழுதாக ஆதரவும் வரவேற்பும் கொடுத்தார். இதன் காரணமாக பணக்காரவர்க்கத்தினரின் பிள்ளைகளே வசதிப்பணம் செலுத்தி வேதனம் கொடுத்துக் கற்ற உயர்தரமுடைய கல்லூரிகளும் வித்தியாசாலைகளும் ஏழை மாணவர்களும் கற்கும் நிலையங்களாக மாறின.

கல்வியை சமூகத்தின் எல்லா மட்டங்களிலுமுள்ளவர்கள் சமமாகப் பெறுவதற்கு இச்சட்டம் வழிசெய்தது எனலாம். இலவசக்கல்விச் சட்டம் சட்டசபையிற் கொண்டு வரப்பட்டபின் ஏழையெளியவர்களுக்கும் பணக்காரர் களுக்கும் உயர்சாதி தாழ்ந்தசாதி என்பவர்களுக்கு மிடையேயிருந்த ஏற்றத்தாழ்வுகள் இடை வெளிகள் ஓரளவு நீக்கப்பட்டனவெனலாம். ஏழைகள் வாழ்விலும் ஏற்றம் ஏற்படத் தொடங்கியது.

1941 ஆம் ஆண்டு சுதேச தமிழ் சிங்கள ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகள் மூடப்பட்டன. அரசாங்கத்தின் இச்செயலைக் கடுமையாகக் கண்டித்து எதிர்த்துச் சட்டசபையில் குரல் கொடுத்தார். அக்காலத்தில் ஆசிரியர்கள் அரசாங்கத்திடமிருந்து நேரடியாகச் சம்பளத்தைப்பெற முடியாது பள்ளிக்கூடங்களை நிருவகிக்கும் முகாமையாளர்களிடமிருந்தே வேதனத்தைப் பெறவேண்டும். அதுவும் மாதாந்தம் கிடைப்பதில்லை. இந்த அநீதியை எதிர்த்து வாதாடி 1941 ஆம் ஆண்டு தொடக்கம் மாதா மாதம் நேரடியாக அரசாங்கத்திடமிருந்து ஆசிரியர்கள் வேதனத்தைப் பெறும் வாய்ப்பினை நல்கினார்.

1960 ம் ஆண்டு பாடசாலைகளை இலங்கை அரசாங்கம் பொறுப்பேற்றபோது சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் கீழ் அரசநன் கொடைபெறும் 187 பாடசாலைகளையும் மனமுவந்து கொடுத்தார். சைவ அநாதையில்லத்தை தன் வாழ் நாள் பணிக்காக மிகக் கவன மாகத்தன்னோடு வைத்துக் கொண்டார். தனது இறுதி மூச்சுவரை அவ்வில்லத்தைக் கண்ணும் கருத்துமாகப் பேணிவந்தார்.

"அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்" எனும் மகாகவியின் கூற்றுக்கிணங்க ஏழைகளுக்கு எழுத்தறிவித்தலைத்தாரக மந்திரமாகக் கொண்டும் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என நினைந்தும் "மக்கள் சேவையே மகேசன் சேவையென மதித்தும்" மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" எனப்பரப்பியும் வாழ்ந்த இப்பெரியார் உயிரோடிருந்தபோது அவரின் சிந்தனையின் முழுத்திட்டங் களையம் அனுபவிக்கமுடியாதது சைவத்தமிழ் உலகிற்குப்பெரும் கவலையாகும். கடைசி மூச்சுவரை மக்கள் சேவையைப் போற்றி வந்த அவர் 1970 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 12 ஆம் திகதி நல்லூர்க் கந்தன் கண்டாமணியோசை அதிகாலை ஒலித்துக் கொண்டிருந்த வேளை காலைக் கடன்களை முடித்துக்கொண்டு நெற்றியில் திரு நீறு அணிந்து முருகா! முருகா! என்ற சொற்களுடன் அவர் உயிர் உடலைவிட்டுப் பிரிந்து நல்லூர்க்கந்தன் திருவடியில் இரண்டறக்கலந்து கொண்டது.

அந்தோ! எண்பத்தாறு ஆண்டுகளாக யாழ்ப்பாண மண்ணிலே நடமாடி அறுபத்தைந்தாண்டு களுக்கு மேல் மக்களுக்குத் தொண்டாற்றிய அந்தத் தன்னலமற்ற தியாகியின் பூதவுடல் அழிந்த போதும் புகழுடம்பு சைவத்தமிழ் உள்ளளவும் வாழ்ந்து நிலைக்குமென்பது உண்மை

நல்லதொருமைந்தனாய், கணவனாய், தந்தையாய், மாமனாய், பேரனாய், உறவினனாய் அரசியல் வாதியாய் இலட்சிய வாதியாய் கொள்கைப்பிரியனாய், உழைப்பாளி யாய், செயல் வீரனாய், தியாகியாய், விளையாட்டு வீரனாய் அநாத ரட்சகனாய் தன்னிகரில்லா முகாமையாளனாய் தன்னுயிர் போல் மன்னுயிரோம்பும் பெரியோனாய் வாழ்ந்த இப்பெரியோனைப்போல் இனியொருவன் எம் சமூகத்திற்குக் கிடைப்பாரா?

மனித உடம்பு ஒரு சிறு பூமி. உயர்ந்த சிறந்த பூமி. கருத்துச் சொற்பிரபஞ்சங்களின் கூட்டரவு இந்த உடம்பு. எண்ணங்கள் உதிக்கின்றன. அவை ஓசை வடிவில் வெளிவருகின்றன. ஓசை கருத்தைப் பற்றியிருக்கின்றது. கருத்துக்குணி, ஓசை குணம், ஓசை எழுத்தாய்ச், சொல்லாய் விருத்தியடைகின்றது. இந்த இரு பிரபஞ்சங்களாகிய உடம்பால் ஆன்மாவுக்கு அறிவு பிரகாசிக்கின்றது. ஆத்மா அறியாமையோடு கூடியது. தானே உடம்பைக் கூடமாட்டாது. இரண்டையும் கூட்டி வைப்பதே சிருட்டி. இரண்டையும் கூட்டி வைக்கும் வல்லபம் நம் அறிவைக் கடந்தது, கடவுள். இந்தப் பூமி சிவனுய்யப்பெறுகின்ற ஆறு, இதனைக் கட்டிவைத்த கடவுளின் கருத்தறிந்து நடப்பதே தர்மம். "அரன்றன் பாதம் மறந்து செய்யறங்கள் எல்லாம் வீண் செயல்". "எனக் கென்ன தெரியும். என்னிலும் இனியான் ஒருவன் உளன்" என்கிறார் நாவுக்கரசர். அந்த இனியான் கருத்தே இனியது. அதுவே செய்யத்தக்கது. தர்மம்.

– பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

அநாதரட்சகர் திரு. சு.இ.ஐயா

க. நாகேஸ்வரி
பழைய மாணவி

இலங்கையில் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலப்பகுதியிலே சைவம் வளர்த்த சான்றோர்களில் திரு.சு.இராசரத்தினம் அவர்கள் குறிப்பிடத்தக்கவராவார். ஆறுமுகநாவலரதும் அருணாசல உபாத்தியரதும் மரபினை பின்பற்றி சைவத்தமிழ்க்கல்விப் பாரம்பரியம் தழைத்தோங்க அரும்பணியாற்றியவர் ஆவார்.

இவர் 1884 ம் ஆண்டு ஆடிமாதம் 04 ம் திகதி யாழ்ப்பாணத்தில் பிறந்தார். இவர் யாழ்ப்பணம் மத்திய கல்லூரியில் ஆரம்பக்கல்வியையும், கல்கத்தா பல்கலைக்கழகத்தில் உயர் கல்வியையும் கற்றார். கொழும்பு சட்டகல்லூரியில் பயின்று சட்டத்தரணியானார். இவர் குடியியல் சட்டத்துறையில் சிறந்த நீதியரசராக விளங்கியதோடு யாழ் நீதி மன்றத்தில் பதில் நீதியரசராகவும் கடமை புரிந்தார். சைவத்தையும் தமிழையும் இரு கண்களெனக் கொண்ட இவர் இவற்றை வளர்ப்பதற்காக தான் வகித்த உயர் பதவியில் இருந்து விலகினார். இவர் ஆற்றிய சேவைகளை நோக்குவோ மாயின் அவை அளப்பெரியன.

அதாவது சைவப்பாடசாலைகளையும் தமிழ் ஆங்கிலம் கற்பிக்கும் இருமொழிப் பாடசாலைகளையும் இலங்கையின் பல்வேறு பகுதியில் உருவாக்கினார். இவரால் சைவவித்தியா விருத்திச்சங்கம் 1923 ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இச் சங்கத்தின் தலைமையில் 187 நன் கொடை பெறும் பாடசாலைகள் காணப்பட்டன. சிறந்த சைவாசிரியர்களை உருவாக்குவதன் மூலம் நல்ல ஒழுக்கமுள்ள மாணவர்களை உருவாக்கலாம் என்ற நோக்கினை நிறைவேற்றுவதற்காக 1928 இல் ஆண்டில் சைவாசிரிய கலாசாலை ஒன்றைத் திருநெல்வேலியில் நிறுவினார்.

பல்வேறு வசதி வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளும் நோக்கில் சைவ மாணவர்கள் கிறிஸ்தவ பாடசாலைகளில் மதம்மாற்றம் செய்யப்பட்டு கற்பிக்கப் பட்டனர். இதனைக் கண்ணுற்ற இவர் மிகவும் வேதனை யடைந்து கிறிஸ்தவ பாடசாலையில் கற்றாலும் விபூதி தரித்து செல்லாம் என்ற சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தார்.

அநாதரவான பிள்ளைகளும் சமூகத்தில் பின்தங்கிய பிள்ளைகளும் வறுமைகாரணமாக தமது கல்வியை மேற்கொள்ள சிரமப்படுவதை பார்த்த இவர் அவர்கள் தமது கல்வியை சிறப்புற மேற்கொள்வதற்காக 1930 ஆம் ஆண்டு திருநெல்வேலியில் ஆண், பெண் அநாதை விடுதிகளை உருவாக்கினார்.

அந்த வகையில் நானும் 1966 ஆம் ஆண்டு தாய் தந்தையை இழந்த போது என்னை என் உறவினர்கள் ஆதரிக்க முடியாத காரணத்தால் அவ்விடுதியில் சேர்த்து என்னைப் போன்ற சக மாணவர்களை விடுதியிலே பிள்ளைகள் போல் ஆதரித்துக் கல்வியினைப் பயிற்று வித்தார். நான் தொடர்ந்து 1971 ஆம் ஆண்டு க.பொ.த வகுப்புவரையிலிருந்து கற்பித்தேன். பின் நெசவுத் தொழிலில் ஈடுபட்டு வாழ்க்கையை ஓட்டினேன். நாம் நாள் தோறும் நேர அட்டவணைப்படி காலைக் கடன்களை முடித்து பிரார்த்தனை செய்து, பின் பாடசாலை சென்று, பின்னர் செய்யவேண்டிய கடமைகளை முடித்து, மாலை பிரார்த்தனை செய்து வாழ்ந்து வந்தோம். பிள்ளைகள் பிழைகளை செய்யும்போது அவர்களைக் கண்டிக்காது அன்பினால் திருத்தினார். பழவகைக் காலங்களில் பல வேறுபட்ட பழங்களையும் வேறு உணவுப் பண்டங்களை யும் உண்ணத் தந்தார். பண்டிகைகள் தோறும் புத்தாடை அணிவித்து ஆலயங்களுக்குக் கூட்டிச் சென்று மகிழ்ச்சி யுடன் வாழச்செய்தார்.

நோய் நொடிகள் ஏற்படும்போது தகுந்த முறையில் வைத்தியர்கள்மூலம் சிகிச்சையளித்து உடல் நலமுற்றவர்களாக வாழவைத்தார். பல்வேறுபட்ட மாணவர் கள் பட்டம் பெற்றவர்களாகவும் அரச ஊழியர்களகவும் வெளியேறினர். ஏனைய மாணவர்கள் மீண்டும் பின் தங்கியவர்களாக வாழாது இருப்பதற்காக அவர்களுக்கு தொழிற்பயிற்சிகளைப் பயிற்றுவித்து உதவி புரிந்தார். இங்கிருந்து ஒழுக்கமுள்ள சிறந்த நன்மாணவர்களும் பல் வேறுதுறைகளில் ஆற்றல் உடையோரும் வெளியேறு வதைக் கண்ணுற்ற மக்கள் தாம் வசதிபடைத்தவர்களாக இருந்த போதும் தமது பிள்ளைகளை நற் பிரஜைகளாக உருவாக்குவதற்காக அங்கு குறைந்தளவிலான பணத் தைச் செலுத்திக் கல்வி கற்பதற்காக அங்கு சேர்த்தனர்.

இவர் இவ்வாறு தனது சேவையை செய்யா விட்டால் அம் மாணவர்களின் திறமையினது பாசியால் மூடிய பவளத்தைப் போலவும் முத்து சிப்பியில் உள்ள முத்தின் ஒளிபோலவும் மறைந்து காணப்பட்டிருக்கும். இவர் திருமுறைகள் பேணப்பட வேண்டும் அவற்றை பண்ணோடு பாட வேண்டும் என்பதிலும் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார். இவர் பண்ணிசை ஆசிரியர்களை பாடசாலையில் பயிற்சி பெற உதவினார். ஆலயங்களில் கிரிதைகளை செய்வதன் மூலம் மட்டும் சைவத்தை நிலைநாட்டலாம் என்ப விடுத்து அவர்களை சைவநெறிமுறைப்படி வாழ்வதன் மூலம் சைவத்தை நிலை நட்டலாம் என்பதை தன் வாழ்க்கைமூலம் எடுத்து காட்டினர்.

மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற திருநாவுக்கரசரது கூற்றுக்கேற்ப வாழ்ந்தார், அவரது அரும் பெரும் பணிகளை இந்துபோர்ட் என்ற பெயரே உணர்த்தி நிற்கின்றது. அவர் உடல் அழிந்தாலும் இன்றும், இன்னும் பல நூற்றாண்டுகளும் வாழ்ந்து கொண்டே இருக்கின்றார். அவரை முன்னுதாரணமாகக் கொண்டு எம் மலான வரை சைவப்பணிகளை வளர்ப்போம்.

நிறைவாழ்வு இல்லம் தந்த களப்பயிற்சி

செஞ்சொற்செல்வர்
ஆறு. திருமுருகன்

1992 ஆம் ஆண்டளவில் சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் செயற்பாட்டில் இணையுமாறு கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்கள் என்னை வற்புறுத்தி னார்கள். இந்துபோட் நிறுவனம் பற்றி எந்நாளும் பெருமை யோடு பல கதைகள் சொல்பவர் எனது தந்தையார். திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையிற் கற்ற எனது தந்தையார் அன்றைய சைவவித்தியாவிருத்திச் சங்க மேன்மையைப் பற்றித் தனது சமகால ஆசிரியர்களோடு மீள நினைவுகூர்ந்து மகிழ்வதை யான் கண்டிருக்கிறேன்.

எனவே திருநெல்வேலி வாழ்வில்லப் பணிகளில் இணைவதில் யானும் ஆர்வங்கொண்டேன். பேராசிரியர் சண்முகதாஸ் தம்பதிகள், கவிஞர் சோ. பத்மநாதன், திரு. நா.குழந்தைவேல் முதலியோரை முதன்மை நிர்வாகி களாகக் கொண்ட நிர்வாக சபையில் யானும் ஓர் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டேன். அன்று முதல் திருநெல்வேலி சைவச்சிறுவர் இல்லத்தின் வளர்ச்சிக்கு இயன்ற பங்களிப்பு வழங்க ஆவல் கொண்டேன்.

சமயச் சொற்பொழிவுக்காக யாழ். குடாநாட்டில் உள்ள பல்வேறு ஆலயங்களிலும் அடியவர்கள் என்னை அழைப்பார்கள். தொடர்விரிவுரைகள் பல கோவில்களில் நிகழ்த்தும் வாய்ப்பு ஏற்பட்டது. என்னை எனது சகபாடிகள் *"காளாஞ்சிப் பேச்சாளர்"* என வருணிப்பர். பேச்சுக்கு எவ்விதவேதனமும் யான் பெறுவதில்லை. இவ்வேளை யிலே தான் சிலர் எனக்கு அறிவுரை கூறினார்கள். *"கோயில் திருவிழாக்காரர் எவ்வளவோ பணம் வேடிக்கையாகச் செலவு செய்கிறார்கள். அவர்களுக்கு அறப்பணம்பற்றிய போதனை உடனடியாகப் பயன்தரு வதும் இல்லை. எனவே தொடர்விரிவுரைக்குச் செல்லும் நீங்கள் சில நிபந்தனைகளை விதித்து அறப்பணிக்கு அவர்களை ஆற்றுப்படுத்தல் அவசியம்"* என்றனர்.

அந்நிலையிற் சைவச்சிறுவர் இல்லத்தைப் பொறுப்பேற்ற எமது நிர்வாகம் மறுநாட் செலவுக்கே பணம் இல்லாத நிலையிலே தடுமாறியது. இவ்வேளையிலே தொடர் விரிவுரைகளுக்கு வருபவர்களுக்கு யான் நிபந்தனை ஒன்றை விதித்தேன் *"பத்துநாள் தொடர் விரிவுரை ஆற்றுவேன். 2மூடை அரிசி திருநெல்வேலி சைவச்சிறுவர் இல்லத்திற்கு நீங்கள் வழங்க வேண்டும்"* எனக் கேட்டுக் கொண்டேன். பலர் ஏற்றனர். ஒரேநாளில் மூன்று கோவில்களிலே தொடர்விரிவுரை ஆற்றிய காலம் அது. பல மூடை அரிசி நிறை வாழ்வு இல்லத்தை நோக்கி வந்தது. என் வாழ்வில் மறக்க முடியாத வளர்ச்சிக்காலமாக இக்காலம் அமைந்தது. எனது பணியும் தொடர்ந்தது. இதனைப் பலரும் பாராட்டினார்கள். எனது சமய வாழ்வின் தர்மகாரியங்களுக்கு சைவவித்தியா விருத்திச்சங்கம் அடியெடுத்துக் கொடுத்தது.

சைவச் சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்குப்பட்டுப் பாவடை உடுத்து நல்லூர் திருவிழாவுக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என இல்லத்திட்டப்பணிப்பாளராக இருந்த கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் கூட்டமொன்றிற் குறிப்பிட்டார். யான் அப்பொறுப்பை எடுத்தேன். அன்னை சிவத்தமிழ்ச் செல்வி அம்மாவிடம் உதவி கேட்டேன். அவர்கள் துர்க்காதேவி தேவஸ்தானம் சார்பில் உதவினார்கள். நல்லூர் சிவன் கோவிலில் அம்மனுக்கு சாத்திய பட்டு சேலைகள் பல பிரம்மஸ்ரீ க. கிருஷ்ணஜயர் தந்தார். சிற்பச்சக்கரவத்தி ஆ. ஜீவரத்தினம் அவர்களை நாடினேன். சகல ஆண் பிள்ளைகளுக்கும் நாலுமுழ வேட்டி வழங்கினார். நல்லூரை நோக்கி ஆவணித்திருவிழா நாளில் பிள்ளைகள் அழகாக அணிவகுத்து வந்த காட்சி அகத்தை நிறைத்தது. நிறைவாழ்வு இல்லப் பிள்ளைகள் தலையணை இல்லாது படுக்கின்ற காட்சியைக் கண்டு சாவகச்சேரி கச்சாய் வீதி, முருகமூர்த்தி கோவில் தொடர் விரிவுரை ஒழுங்குபடுத்த வந்தவர்களுக்கு 178 தலையணை தரவேண்டும் என அன்புக் கட்டளை இட்டேன். சாவகச்சேரி நகர் வர்த்தகர், *"கிரியோன் சூல்பார் இராசநாயகம்"* எனது வேண்டு தலை கோவில் விழாக்காரருக்கு விளக்கினார். பத்தாம் நாள் உரை முடிந்து லாண்ட் மாஸ்டரில் 178 தலையணை யோடு நிறைவாழ்வு இல்லத்துக்குத் திரும்பினேன். நிறைவாழ்வு இல்லப்பணிகள் சிறப்பாக நடைபெற வேண்டும் என்ற சிந்தனையின் பரிமாணம் அதிகரித்தது. இல்லத்துக்குத் தையல் இயந்திரங்கள் வேண்டும் எனக் கூறினார்கள். சில அன்பர்களின், உதவியை நாடி தையல் இயந்திரங்கள் சேகரிக்கும் பணி நிறைவேறியது. கல்வித் திணைக்களத்தில் பிரதிக்கல்விப் பணிப்பாளராக பணியாற்றிய திரு சிவகுமாரன், வவுனியா மகா வித்தியாலய அதிபராக மாறிச் சென்ற வேளை மிகவும் நவீன தையல் இயந்திரத்தை அன்பளிப்பாக வழங்கியமை மறக்கமுடியாதது. இல்லத்தில் நால்வர் குருபூசை சிறப்பாக நடாத்துவதில் அவ்வேளை மிகுந்த அக்கறை செலுத்தப் பட்டது. நாயன்மார்களின் படங்களை ஓவியமாக வரைவித்து காலஞ் சென்ற திருமதி ஞானலஷ்சுமி ஸ்ரீஸ்கந்தமூர்த்தி ஞாபகமாக வழங்கிக் குருபூசை மெருகூட்டப்பட்டது. அலுவலகத்தில் பிள்ளைகள் முதன் முதலாக சேர வரும்போது இல்லம் மகிழ்வான இடம் என்பதை உணர்த்துவதற்கான காட்சிப்படுத்தல் அவசியம் என்று சிலர் கருத்துத் தெரிவித்தனர். கொழும்புத்துறை அன்பர் ஒருவரின் உதவியைப் பயன்படுத்தி ஞானகுரு என்ற பிரபல ஓவியர் மூலம் பிள்ளைகள் மகிழ்வுடன் விளையாடும் காட்சியை தத்துருவமாக வரையவைத்தேன். அவ்வோவியம் இன்றும் அலுவலகத்தில் அழகாகக் காட்சியளிக்கிறது. இடப் பெயர்வுகள் யாவற்றையும் தாண்டி அவ்வோவியம் நிலைபெற்றிருப்பது பெருமகிழ்வைத் தருகிறது.

மிக நேர்த்தியாக, சிறப்புள்ள நிறைவாழ்வு இல்லத்தில் வாழும் பிள்ளைகள் ஒவ்வொருவரின் சரித்திரமும் ஒவ்வொரு நாவல் எழுதக் கூடிய வரலாற்றைக் கொண்டது. ஒரு சமயம் காலைப் பொழுது நிறைவாழ்வு இல்லத்தில் நின்றேன். இல்ல மேற்பார்வையாளர் ஒரு சிறுவன் தலையிலிருந்து ரத்தம் வழியும் நிலையில் அலுவலகம் கொண்டு வந்தார். திகைத்தேன். என்ன நடத்தது என்ற வினவினேன். *"செந்தீபன் இரும்பால் அடித்து விட்டான்"* எனக் கதறிய சிறுவனை வைத்திய சாலை அனுப்பி ஐந்து இழை போட்டு கொண்டு வந்து

ஆறுதற்படுத்தி விட்டு செந்தீபன் தொடர்பான விசாரணை தொடர்ந்தது. எல்லா மேற்பார்வையாளர்களும் சிறுவன் செந்தீபனின் குளப்படிகளை அடுக்கிக் கொண்டே போனார்கள். இவனது தொல்லை தாங்கமுடியாது என பணியாளர்கள் ஏகமனதாகக் கூறினார்கள். சிறுவன் செந்தீபன் இச்சம்பவத்துக்கு சிலநாள் முன்பு இளங்கலைஞர் மண்டபத்திறப்பு விழாவில் தேவாரம் உருக்கமாகப் பாடிப் பாராட்டுப் பெற்றவன். அழகான சிறுவன் ஏன் இப்படிச் செய்தான்? எனக்குள்ளே பல கேள்விகள் தொடர்ந்தன. அவன் அருகே சென்று அரவணைத்து ஏன் இரும்பால் அடித்தாய்? நீ நல்ல பிள்ளை. உள்ளதைச் சொல்" என்றேன். அழுதழுது அவன் சொன்ன செய்தி: விடுமுறைக்கு எல்லாரும் வீட்டுக்குப் போகிறார்கள். என்னை யாரும் அழைத்துச் செல்ல வருவதில்லை. விடுமுறைக்குப்போய் வந்தவன் பொக்கேற்றில் எள்ளுருண்டை எடுத்தேன். கண்டவன் என்னைக் கள்ளன் என்று பழித்தான். தாங்க முடியவில்லை... செந்தீபனின் உளத்தாக்கம் புரிந்து கொண்டேன். வீட்டுக்கு ஒப்பமிட்டு அழைத்துச் சென்றேன். அவனது தேவாரம் கேட்டவர்கள் திகைத்தனர். *"மீளா அடிமை உமக்கேயாளாய்...."* என்ற தேவாரம் அவனது வாயால் கேட்டதுபோல் இன்றுவரை கேட்டதில்லை.

எங்கள் வீட்டில் விடுமுறை காலத்தை மகிழ்வாய்க் கழித்தான். ஒரு இடத்தில் அவனை இருத்த முடியாது. சைக்கிள் ஓடிப்பார்க்க ஆசைப்பட்டான். வீட்டு முற்றத்தில் பழகியவன் வீதியில் ஓடத் தொடங்கி விட்டான். மருதனார் மடத்தில் எங்கள் வீட்டு வாசல் தெருவில் ஓடியவன், எனக்குத் தெரியாமல் கே.கே.ஸ் வீதிவழியாக ஒரு நாள் நெடுந்தூரம் சென்று விட்டான். புத்தகம் வாசித்து அயர்ந்து போன யான் செந்தீபனைத் தேடத் தொடங்கினேன். துடித்துப்போய் விட்டேன். அகப்பட்டான். எங்கே எனக்குச் சொல்லாமல் சென்றாய் என்று ஏசினேன். அவனது வாய் சொக்கலேட்டால் நிறைந்து இருந்தது. முதல் நாள் இவனது தேவாரம் கேட்டு கம்பவாரிதி கொடுத்த நூறு ரூபாவுக்கும் கச்சான் அல்வா வாங்கி இணுவில் ஆஸ்பத்திரிக்கு அருகே சாப்பிட்டு முடிக்காத நிலையில் அகப்பட்ட செந்தீபன் ஓ என்று அழுதான். பாவம் கடைக்குச் சென்ற எந்த அனுபவமும் இல்லாதவன். அவனது நிலை உணர்ந்தேன். இனிமேல் தெருவுக்குப் போகாமல் வீட்டு வளவிலேயே சைக்கிள் ஓட வேண்டும். இல்லையேல் சைக்கிள் ஓடத்தரமாட்டேன் எனக்கட்டளையிட்டேன். வீட்டு வளவில் சுற்றிச் சுற்றி ஓயாமல் ஓடிய செந்தீபன் எனது அத்தானின் தந்தையார் முதுமையானவர் பொல்லுடன் உடற் பயிற்சிக்கு முற்றத்தில் நடமாடியவரை செந்தீபனின் சைக்கிள் ஓட்டம் பதம்பார்த்தது. அத்தானின் தந்தை முழங்கால் சிரட்டைஉடைய விழ்ந்தார். பின் பல நாள் படுக்கையில் இருந்தார். செந்தீபனின் விடுமுறை நாளின் நிறைவில் வீழ்ந்தார் பெரியவர். எனக்கு போதிய மங்களம் வீட்டில். தீபனை விடுதியில் மீள ஒப்படைத்தேன். வீழ்ந்தவர் விதி பின் எழுந்து நடமாடாது விடை பெற்றார் விண் நோக்கி. நிறைவாழ்வு இல்லத்தொடர்பின் இனிய நினைவுகளில் மறக்க முடியாத இந்நிகழ்வை அடிக்கடி மீட்டுவேன். 1995 இடப்பெயர்வு. நிறைவாழ்வு இல்லச் சிறார்கள் முதலில் நல்லை ஆதீனம் வந்தார்கள். பின் பேராசிரியர் அருணாசலம் வீட்டில் மீசாலையில் தங்கினார்கள். மிகப் பெரிய நிலையமாகிய நிறைவாழ்வு இல்லம் ஊரோடு ஒத்து உலாவியது. தேடிய பொருட்கள் யாவும் தொலைந்தன. எனது A-30 சிறிய காரில் மிஞ்சிய சிறு பிள்ளைகளுடன் வதிரி ஆச்சிரமம் சென்ற நாள் பின் பேராசிரியர் தம்பதிகளோடு பிள்ளைகள் கிளாளியால் சென்ற நாளெல்லாம் நேற்றுப் போல் இருக்கிறது. மீளவும் நாம் 1996 ஊர் திரும்பினோம். நிறைவாழ்வு இல்லம் சென்றேன். பார்க்க முடியவில்லை. எல்லாமே சூறையாடப்பட்டிருந்தது. துடித்தோம். கவிஞர் சோ.பாவை அழைத்து வந்து இருப்பவற்றைக் காப்பதில் யானும் பணிப்பளர் சபை உறுப்பினர் திரு. செந்திலும் மிகக் கஷ்டப்பட்டோம். பல்வேறு சிரமங்களைச் சந்தித்தேன். இருபாலை வீதியில் நிறை வாழ்வு இல்லக் கட்டில்கள் சென்றியில் அடுக்கப்பட்டதை அறிந்து அங்கு சென்று எவ்வளவோ கஸ்ரங்களை அனுபவத்து வண்டியில் அவ்வளவு கட்டில் மேசைகளையும் கொண்டு வந்து சேர்த்தோம். வளவைத் துப்பரவு செய்தேன். எவரது துணையுமின்றி யானும் சோ.பாவும் சில நாட்கள் பட்டதுன்பம் எல்லையற்றது. நான் போட்ட பூட்டுக்கள் தினமும் உடைபடும். மீளவும் முயற்சி.... நாள்கள் நகர்ந்தன. மீள இல்லம் திறக்கப்பட்டது. யான் அமைதியாக இருந்தேன். உறுப்பினர்கள் வீடு தேடி அழைத்தனர். உதவ முற்பட்டேன். 1999 முதல் இங்கிலாந்து, கனடா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா எனப் பலநாடும் செல்லும் வாய்ப்பு இறையருளால் கிடைத்தது. சைவச் சிறுவர் இல்லத்துக்காகக் குரல் கொடுத்தேன். பலர் உதவ முன்வந்தனர். ஆலயங்கள், நிறுவனங்கள் இன்று வரை பலலட்சங்களை வழங்குகின்றனர். லண்டன் சிவயோகம், லண்டன் கனகதுர்க்கை அம்மன், அவுஸ்திரேலியா ஈழத்தமிழர் கழகம், நிறைவு வாழ்வு இல்லத்துக்குச் செய்த உதவி எல்லையில்லாதவை. பல தனிப்பட்ட அன்பர்களின் உதவியைத் தொடர்பை ஏற்படுத்தினேன். இவை இறையருளே.

சைவ வித்தியா விருத்திச் சங்கத்துக்கு இணுவிலில் கிளை நிறுவ வேண்டும் என ஆசைப்பட்டேன். அவுஸ்திரேலியா சொற்பொழிவால் கிடைத்த பணத்தை ஒப்படைத்து கட்டுமாணப்பணிகளை ஆரம்பித்து வைத்தேன். இரண்டு மாடிக் கட்டிடவேலைக்கு ஹொலண்ட் நாட்டில் பணி செய்யும் நண்பர் ஜெயக்குமாரின் உதவியைப் பெற்று அடித்தளமண்டபத்துக்கான பல லட்சம் ரூபா வேலையை நிறைவேற்றும் வாய்ப்புக் கிட்டியது. தண்ணீர்த் தாங்கி அமைக்க எனது உறவினர் இணுவில் ஏ.சி.சண்முகலிங்கம் அவர்களின் உதவியை நாடி வெற்றி பெற்றேன். காலப்பிழை, கட்டிடவேலை நாட்டுச் சூழலால் தடைப்பட்டது. தற்போது சில வருட இடை வெளியின் பின் நிர்மாணப்பணி தொடர்கின்றது. இல்லத்துக்கு வான் வாங்கும் முயற்சியில் வட்டு. லயன்ஸ் கழக உதவியால் நோர்வே லயன்ஸ் உதவி பெற்று கொழும்பு சென்று வான்வாங்கி நந்திக் கொடி ஏற்றி இல்லத்துக்கென வாகனம் ஓட வைத்த நாளும் மறக்க முடியவில்லை. இந்து போட் இராஜரட்ணம் ஐயா சிலை முன்னால் நந்தவனம் அமைக்க ஆசை கொண்டு அன்பரை அப்பணியில் இணைத்து அதனால் நந்தவனம் தரும் அழகு உள்ளம் பூரிக்க வைக்கிறது. சைவ வித்தியா விருத்திச் சங்க வாழ்வில் சிறு அளவிலேனும் பங்குபற்ற இறையருளும் பெரியவர்களும் தந்த வாய்ப்பை மறக்க முடியாது. இன்று பல சுமைகளைச் சுகங்களாகக் கருதி வாழும் வாழ்வுக்கு நிறை வாழ்வு இல்லம் தந்த சந்தர்ப்பம் பெரும் களப்பயிற்சி என்றே கூறுவேன். நிறை வாழ்வு இல்லம் நீடுழி வாழ இறையருளை வேண்டி அமைகிறேன்.

தையற் கண்காட்சி - 2004

தையற் கண்காட்சி - 2004

சர்வதேச சிறுவர் தினம் - 2006
தலைவர், யாழ் வர்த்தகவங்கி முகாமையாளர், உபதலைவர், மற்றும் மருத்துவத் திட்டப் பணிப்பாளர்

சிறுவர் நாடகம்
சர்வதேச சிறுவர் தினம் - 2007

Winners of the Art Competition sponsored by Alliance Francaise de Jaffna with Dr. Gerard Robuchon and Monsieur Bertrand Dufieux
2008



Dr. Gerard Robuchon presents a DVD Player and a Digital Camera to the Children's Home on behalf of the French Women of the French Embassy
2008

தீபாவளி - 2008

தீபாவளி - 2008



பஞ்சவர்ண நரியார்
நாடகத்தில் ஒரு காட்சி
தீபாவளி - 2008

மாணவ உளநல மேம்பாட்டுக் கழக
வானவில் சஞ்சிகை
வெளியீட்டு விழா - 2008

விளக்கேற்றல்
தீபாவளி - 2009

இல்ல உயர்தர மாணவர்கள் - 2009/2010

ஆதரவற்றோருக்கு அள்ளிவழங்குங்கள்

ஊரில் ஓர் ஆலயத்தைக் கட்டுவதைவிட ஒரு பாடசாலையை கல்விச்சாலையை அமைப்பது ஆயிரம் மடங்கு கஷ்டமான பணி.

பாடசாலையை ஒருவாறு கட்டிவிட்டாலும் கூட, அதனை நிர்வகித்து ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி அளிப்பது என்பது இமாலயச் சேவையாகும். இத்தகைய சேவையை மனந்தளராது நிறைவேற்றியவர் "இந்துபோர்ட்" (சைவ வித்தியா விருத்திச் சங்கம்) இராசரத்தினம் அவர்கள்.

குடாநாட்டுப் பிள்ளைகள் தமிழ், சைவப் பாரம்பரியங்களைப் பயின்று அந்தச் சூழலில்கல்வி அறிவு பெறவேண்டும் என்ற பெருநோக்கோடு, சைவப் பள்ளிக்கூடங்கள் என்று சொல்லப்படும் "கல்விச் சாலைகளை ஊருக்கு ஊர் நிறுவிப் பராமரித்தவர் அவர். அந்தந்த ஊர்களைச் சேர்ந்த வள்ளல்கள், கல்வி மான்களின் பெருந்துணையோடு, பெருங்கல்விச் சேவை புரிந்தார். கல்வியில் மறுமலர்ச்சி செய்தார்.

குடாநாட்டில் ஊர் தோறும் அவர் அமைத்த கல்விச்சாலைகளிலேயே அன்றைய கிராமத்துச் சிறுவர்கள் ஆரம்பக் கல்வியை ஆரம்பித்து தமது கல்விக்கு அத்திவாரம் இட முடிந்தது. அவர்கள் கல்வி அறிவு பெற இயன்றதனாலேயே அவர்தம் சந்தியினரும் கல்விபெற்று முன்னேற முடிந்தது.

அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்ற பின்னர் கல்வி முறையில் பலப்பல மாற்றங்கள் வந்துவிட்டன. ஆகப்பிந்திய புதிய கல்விக் கொள்கையின் விதிமுறை ஒன்றின் பிரகாரம், பல சிறிய பாடசாலைகளை மூடுவதற்கு ஏற்பாடாகிறது இதன்போது "இந்து போர்ட்" நிறுவிய பல பாடசாலைகள் அடையாளம் இல்லாமற் போகும் ஆபத்து உண்டு.

குடாநாட்டின் உயர்கல்வி அதிகாரிகள் சைவப்பள்ளிக் கூடங்களின் மகிமையை மேலிடத்துக்கு எடுத்துச் சொல்லி அவற்றை மறைத்து விடும் ஆபத்து வராமல் தடுக்க வேண்டும். இது அவர்கள் ஆற்ற வேண்டிய ஒரு வரலாற்றுப் பணியாகும்.

பாடசாலைகளை நிறுவிப்பராமரிப்பது போலவே அநாதைச் சிறுவர் இல்லங்களை உண்டாக்கி சேவை செய்வதும் கஷ்டம் நிறைந்த பணியாகும். "இந்துபோர்ட்" அந்தக் காலத்திலேயே அநாதைச் சிறுவர் இல்லம் ஒன்றை நிறுவி நிர்க்கதியான சிறுவர், சிறுமியர்களுக்கு ஆதரவளித்தது. வாழவழி செய்தது. இப்போதும் அப்பணி தொடர்கிறது.

சாதாரண காலங்களை விட இப்போது போரின் விளைவாக ஆதரவற்றோரின் எண்ணிக்கை இங்கு பெருகிவிட்டது. அதனால் அநாதை இல்லங்களின் தேவையும் அதிகரித்து விட்டது. இவற்றை அமைக்கவும் பராமரிக்கவும் உள்நாட்டு, வெளிநாட்டுப் பரோபகாரி களிலேயே முழுக்க முழுக்கத் தங்கி இருக்க வேண்டியுள்ளது.

குறிப்பாக வெளிநாடுகளில் வதியும் எம்மவர்கள் இப்பணிக்கு நிறைய உதவ வேண்டும். சேவையும் அர்ப்பணிப்பும் உள்ள தலைமைத்துவங்களின் கண் காணிப்பில் இயங்கும் ஆதரவற்றோர் இல்லங்களுக்குத் தாராளமாக உதவ வேண்டும். அந்தத் தானம் ஆலயத்தில் செய்யும் பூசைகளை விடவும் புண்ணியம் தரும்.

ஆலயங்களில் போட்டிக்கு ஆடம்பரச் செலவு செய்யாமல் ஆதரவற்றோருக்கு உதவுவது ஆண்டவன் தரிசனத்துக்குச் சமம். இதனை இங்குள்ளோரும், வெளிநாடுகளில் வாழ்வோரும் உணர்வாராக.

உதயன் ஆசிரியர் தலையங்கம்,
12-03-2000

கன்னியாய் வெந்நீர் ஊற்று

காதலனைப் பிரிந்தவளின் மனம்போல ஒன்று
கவிபாடிப் பரிசுபெறான் மனம்போல ஒன்று
தீதுபழி கேட்டவன்தன் மனம்போல ஒன்று
செய்தபிழைக் கழுங்குமவன் மனம்போல ஒன்று
நீதிபெறா ஏழைதுயர் மனம்போல ஒன்று
நிறைபழித்த கற்புடையாள் மனம்போல ஒன்று
காதுமழுக் காறுடையான் மனம்போல ஒன்று
கனலேறு மெழுநீர்கள் உண்டுகன்னி யாயில்

– **நவாலியூர் சோமசுந்தரப்புலவர்**

கர்ம வீரர் இந்துபோட் இராசரத்தினம் கட்டிவளர்த்த இன்றைய சைவச்சிறுவர் இல்லம்

பண்டிதர் வ. நடராஜன்.

ஆரணியத்திலே, இராமனுஞ் சீதையுந் தங்குவதற்காக, இலக்குவனாலாக்கப் பட்ட பன்னசாலையை ஸ்ரீராமன் பார்த்தான். அரச குமாரனொருவன் அத்தகைய சிறந்த பன்னசாலை ஒன்றை அமைத்ததைக்கண்டு, அவன்மனம் வியப்படைந்தது. பூவிலும் மெல்லியனவாய சீதையின் பாதங்கள் பரற்கற்களுள்ள கானில் நடந்துவந்தமை அரிய காரியந்தான்! ஆனால், தன் தம்பியின் கை இப்பன்னசாலையை சமைத்தது அதைவிட அரிய காரியம்! "உலகில் எதுவுமற்றவர்க்கு எவ்வித துணையுமில்லாத வர்க்கு அரியதான ஒரு காரியமுமில்லைப்போலும்! என்னும் பொருளில் இராமன் கூற்றாக "யாவை யாது மிலார்க்கரிதாயவே" எனக் கம்பர் கூறியுள்ளார்.

ஆம்; உலகிற் பெரிய காரியங்கள் பல, அநாதைகளாலேயே சாதிக்கப்பட்டிருக்கின்றன. உலகப் பிரசித்திபெற்று விளங்கும் ஐக்கிய இயக்கம் ஏழைகளின் இயக்கமே. ஆயினும் அதற்குக்கருணையுள்ளம் படைத்த பெருமக்களின் தொண்டும் இன்றியமையாதிருந்தது. இத்தகைய கருணைவள்ளல்களால் எத்தனையோ புண்ணிய கைங்கரியங்கள் நடைபெற்றிருக்கிறன!

இரு பேருள்ளங்கள்

யாழ்ப்பாணச் சைவ அநாதை சாலையை அறிந்தோர் திருநெல்வேலி டாக்டர் எஸ். சபாபதிப்பிள்ளை அவர்களை நினையாதிருக்க முடியாது இந்த டாக்டர்களின் மனந்தான் எவ்வளவு மென்மையானது! எவ்வளவு இரக்கமுடையது! இத்தகைய இரண்டு அன்புள்ளங்கள் இல்லையெனில் இன்று சைவ அநாதைசாலையை நாம் காணமுடியுமோ என்பது சந்தேகமே. துர்ப்பாக்கிய சாலிகளான ஏழை அநாதைச் சிறுவர்களதுவாழ்வின் கொடும் பரிதாப நிலைமை டாக்டர் சபாபதிப்பிள்ளை அவர்களது மனத்தை புனிதமான இளகிய உள்ளத்தை - வாட்டியிருக்க வேண்டும்! இம்மனவியல்பு வறுமை காரணமாக அநாதரவு காரணமாக மதம் மாறும் சிறுமையை நீக்க வேண்டுமென்னும் நோக்கங்கொண்ட திருவாளர் சு.இராசரத்தினம் (இந்துபோட்) அவர்களுக்குத் தெரிந்தால் அவர் சும்மாவிடுவாரா? ஆகவே, 1928 ஆம் ஆண்டு விஜயதசமித் தினத்தன்று சைவ அநாதைசாலை ஆரம்பமாயிற்று சிறிது சிறிதாக வளரத் தொடங்கியது. இதன் வளர்ச்சிக்குப் பேருதவி புரிபவரும் ஓர் டாக்டரே. இக்காலத்துப் பேருபகாரியாய் விளங்கும் டாக்டர் சுப்பிரமணியம் அவர்கள் சைவ அநாதைசாலையிலுள்ள நூற்றுக்கணக்கான சிறுவர்களின் வாழ்வுக்கு, பொருளுதவியம் இலவச வைத்திய உதவியும் புரிந்து வருகிறார். சைவ அநாதைச் சிறுவர்கள் அதிஷ்டசாலிகள் போலும்! வாழ்க டாக்டர்கள்! வாழ்க அவர்களது இரக்கம் வாய்ந்த பேருள்ளங்கள்!

ஒரு கடிதம்

சில ஆண்டுகளின் முன்னர், ஒரு நாள் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையில் எட்டாம் வகுப்பிலே தமிழ் வியாச பாடம் நடந்து கொண்டிருந்தது. விடுதியில் வதியும் மாணவர்கள் வருட ஆரம்பத்தில் வகுப்புப் பாடநூல்கள் வாங்குவதற்காக பணம் பெறும் பொருட்டு அவரவர்களின் பெற்றோர்களுக்குக் கடிதமெழுதுமாறு அவ்வகுப்பு மாணவருக்குக் கூறப்பட்டது. எழுதப்பட்ட அப்பியாசப் புத்தகங்களை ஆசிரியர் திருத்திக்கொண்டிருந்தார். அவற்றில் ஒரு புத்தகத்தில் விலாசதாரரின் விலாசம் கீழ்வருமாறு எழுதப்பட்டிருந்தது. **திரு............ அவர்கள் 111. அருணகிரிரோட்கயிலாயம் போஸ்ற் பெருஞ்சுடலை வழி.** இதனை வாசித்த ஆசிரியர் ஆச்சரியத்துடன் கடிதத்தை வாசித்தார் அதில் -

"அன்புள்ள தந்தையார் அவர்களுக்கு, ஐயா, உம்மைப் படத்திலன்றி நேரேபார்த்தறியேன். என்னையும் என் சகோதரர்களையும் பாதுகாக்கும் பொறுப்பேற்ற நீர், அதற்குப் பயந்து எங்களைப் பிரிந்துவீட்டீர். தயவு செய்து இந்த அநாதைசாலைக்கு ஒருமுறை வாருங்கள். என்னைப்போல நூற்றுக்கணக்கான அநாதைகளுக்கும் வாழ்வு உண்டு என்பதைச் செய்கை முறையிற் காட்டும் எங்கள் "அப்பு" வை ஒருமுறை பாருங்கள் அவர் தான் திருவாளர் சு. இராசரத்தினம் அவர்கள்; சைவ வித்தியாவிருத்திச் சங்கக் காரியதரிசி ".... எனக்கடிதம் எழுதப்பட்டிருக்கிறது.

வாழ்க்கைக்கு வேண்டிய உதவிகள்

ஆசிரியர் அப்பியாசமெழுதிய மாணவியை அழைத்து விசாரித்தார். துன்பக்கதையொன்று வெளிவந்தது. துர்ப்பாக்கியக் குழந்தை ஒன்று இம்மாய உலகில் முதற்குரலிட்ட இரண்டு மாதங்களுக்கு முன்னரே தன் தந்தையை இழந்துவிட்டது. ஐந்து ஆண்டுகளுக்குள் தாயையும் இழந்தது. யாரோ புண்ணியசீலர்களின் உதவியால் அக்குழந்தை சைவ அநாதைசாலையை அடைந்தது. அங்கே அது உணவு, உடை, புத்தகம் என்பவற்றை இலவசமாகப் பெற்றுக் கல்வி கற்றுவருகிறது. அக்குழந்தை வேறு யாருமன்று சாட்சாத் அம்மாணவியே தான்!

இங்ஙனமாக அங்கே நூற்றுக்கணக்கான அநாதையான ஆண்களும் பெண்களும் வாழ்கிறார்கள். ஆம்; வாழ்கிறார்கள் ஏனெனில் அநாதைப் பிள்ளைகளுக்குக் கல்விபெற வசதி செய்து வரும் திருவாளர் இராசரத்தினம் அவர்கள் அநாதைகளை ஒழுக்கமுள்ளவர்களாக்கி ஆசிரியர்களாக்கி

பட்டதாரிகளாக்கி சங்கீதபூஷணங்களாக்கி அரசாங்க உத்தியோகத்தர்களாக்கி வருவாய் பெற்று வாழச் செய்வதோடமையாது அவர்களுக்குத் திருமணமும் செய்வித்து வாழ வைக்கிறார்! வாழ்வுக்கு வேறென்ன வேண்டும்!

வாடகை வீட்டில்

1928 ஆம் ஆண்டு வாடகை வீட்டில் ஏழு மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட அநாதைசாலை அடுத்த ஆண்டு 63 மாணவர்களுடைய சாலையாய் வளர்ந்துவிட அவர்களைப் பராமரிக்கும் பொறுப்பைத் திருவாளர் சி.முருகேசு ஆசிரியர் அவர்கள் ஏற்றுக் கொண்டாராம்! உண்மையில் அவர் அவ்வநாதைகளின் தந்தை போலவே தொண்டுகள் செய்ததாக அக்காலத்தில் அநாதை மாணவர்களாயிருந்து இப்போது பல்வேறு தொழில் புரியும் பலர் வாழ்த்துகிறார்கள்!

ஒரேயொரு கிணறு; பாதாளக்கிணறு நாற்பதடி ஆழம்; அதுவும் வல்லூற்றுவரி "கயிறுகுறுமுகவை" எனப் பதிற்றுப்பத்தில் வருணிக்கப்படும் "வாளி" போன்ற வாளியால் பாதாளத்திலிருந்து நீர் பெறவேண்டும்! 63 மாணவர் அதுவும் தண்ணிர் அள்ள முடியாத சிறுவர் அக்கிணற்றினுதவியாற் குளிக்கவும் வேண்டும்! ஒருமுறை கற்பனை செய்து பாருங்கள் ஆயினும் சிறுவர் கைநிறைய முத்தும் பவளமும் போன்ற சிரங்குள்ள பாலர் முறை தவறாது குளித்தனர்! சீலை துவைத்னர்! எப்படிப் பாடினரோ என்றொரு பாடல் ஞாபக முள்ளவர்கள் "எப்படி நடத்தினரோ" அந்தக் காலத்தில் என ஒரு பாடல் பாடிவிடலாம்; ஏன்? ஒரு புராணமும் பாடிவிடலாம் போலத்தோன்றுகிறது!

பத்தாண்டுகளுக்கு பின்

1938 ஆம் ஆண்டில், அதாவது அநாதைசாலை ஆரம்பித்துப் பத்து வருடங்களின் பின் திருவாளர் ஏ. செல்லப்பா அவர்களின் முயற்சியால் (அக்காலத்து சைவ வி.வி. சங்கமுகாமைக்காரராயிருந்தவர்) அநாதைகளான பெண்களும் சேர்க்கப்பட்டனர். பெண் குழந்தைகளின் மேற்பார்வையாராக முதன் முதல், ஈழகேசரி ஆசிரியர் திரு. இராஜ அரியரத்தினம் அவர்களின் தாயாராகிய இராசம்மையார் அவர்கள் கடமையாற்றினார்கள். திருமதி இ.இராசம்மா அவர்கள் நுணாவில் சைவ வித்தியா விருத்திச் சங்கத் தமிழ் வித்தியாசாலைகளில் ஆசிரியையாகக் கடமையாற்றி இளைப்பாறியவர்கள்.) இவ்வாறு பலரின் உதவியால் சைவ அநாதைசாலை வளர்ந்தது. இன்று பலரின் உதவியால் சைவ அநாதைசாலை வளர்ந்தது. இன்று சை.வி.வி.ச முகாமைக்காரராகிய திரு. எஸ். அட்சலிங்கம் அவர்களது முகாமையின் கீழ் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலைத் தலைமையாசிரியர் திரு.பொ. செல்லத்துரை அவர்களதும் உதவியாசிரியைகளதும், மேற்பார்வையில் அநாதைசாலை வளர்கிறது. இன்று சைவ அநாதைசாலையிற் பெண்களின் தொகையே அதிகம். அகில இலங்கையிலும் முதன்மையான அநாதை சாலையாக விளங்குவது சைவ அநாதைசாலையே!

அதிசயமான காரியம்

ஒரு ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடத்துவ தென்பது சாதாரண காரியமன்று. அதுவும் அநாதை ஸ்தாபனமொன்றை ஆரம்பித்து நடத்துவது எத்துணைக் கஷ்டமான வேலை! அதுவும் பொருளாதாரத்தில் கீழ் நிலையிலுள்ள சைவ வித்தியா விருத்திச் சங்கம் இம்முயற்சியிலிறங்கி இதனை நடத்துவது எவ்வளவு அதிசயம்! ஆனால் இந்த அதிசயங்கள் எல்லாம் திரு. இராசரத்தினம் போன்ற கருமவீரர்களின் முன் எம்மாத்திரம்! அரிசியும் விறகும் தேடிக்கொண்டு சமையல் வேலையை ஆரம்பிப்பவரல்லர் ஸ்ரீமான் இராசரத்தினம் அவர்கள். அவர் உலைவைத்து அது கொதிக்கும் பொது அரிசியை எப்படியாவது இரவல் வாங்கி உணவாக்கும் கருமவீரர் கோஷ்டியைச் சேர்ந்தவர்! இதனாலேயே அவர் பலவெற்றிகளை அடைந்தார். அவ்வெற்றியின் ஒரு சின்னமே சைவ அநாதைசாலையின் வளர்ச்சி இவ்வநாதைசாலையின் வளர்ச்சி இன்று அகில இலங்கையினதும் நன்மதிப்பைப் பெற்று விளங்கிறது என்று நான் கூறினால் நீங்கள் ஆச்சரிய மடைவீர்களா?

தயவுசெய்து கீழேவரும் சம்பாசணையைப் படியுங்கள் இதிலுள்ள வினாக்கள் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலைத் தலைமையாசிரியரால் வினாவப்பட்டவை; விடைகள் ஓர் அநாதை சிறுவனுடையன;

1. தம்பி! உன்னை இங்கே கொண்டுவந்தது யார்?
   பொலீஸார் கொண்டு வந்து செர்த்தார்கள்.
2. எங்கேயிருந்து அவர்கள் உன்னைக் கூட்டிக் கொண்டு வந்தார்கள்?
   யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்திருந்து கூட்டிவந்தார்கள்.
3. உனது சொந்த ஊர் எது?
   பூவரசங்குளம்
4. அது எங்கேயுள்ளது?
   வவுனியாவிலிருந்து மன்னாருக்கப் போகும் வழியிலுள்ளது.
5. நீ எப்படி யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்தை அடைந்தாய்?

இவ்வாறு வினாவும் விடையுமாய் வந்த கதை பின்வருமாறு:

அநாதைச் சிறுவன் நகுலனின் தந்தை நகுலனுக்கு ஆறுவயதான போது இறந்து விட்டார் நகுலனுக்கு இரண்டு சகோதரரும், ஒரு சகோதரியுமிருந்தனர் இந்நிலையில் நகுலனின் தாயார் மறுதாரம் மணமுடித்தார். சிறிய தந்தையார் குடிப்பழக்கமுடையவர். அவரின் கொடுமை

அக்குழந்தைகளால் தாங்கமுடியவில்லை. முக்கியமாக நகுலனாற்றாங்க முடியவில்லை. அவன் பிஞ்சுள்ளம் வீட்டிலிருந்து வெளியேறுமாறு அவனைத் தூண்டிற்று. ஒருநாள் புறப்பட்டேவிட்டான்; மனம் போனபடி நடந்தான். ஒரு பைசிக்கிள் வண்டி வந்தது அவள் பின்புறமாக ஏறி வவுனியாவை அடைந்தான். ஒரு மோட்டார் லொறியைக் கண்டான்; அது பாரம் ஏற்றியபடி நின்றது; அதன் சாரதியின் உதவியால் லொறி மூலம் கெக்கிராவையை அடைந்தான். ஒரு பெற்றோல் நிலையத்தண்டை படுத்திருந்தான். நித்திரையாயிருந்த அவனை யாரோ எழுப்பினர்கள். பொலீஸார்! அவர்களுக்குத் தன் கதையைச் சொன்னான் நகுலன். அவர்கள் அவனை அழைத்துச் சென்று அநுராதபுரி கோட்டில் ஒப்படைத்தனர். நீதிவான் நகுலனது துன்பக் கதையைக் கேட்டு யாழ்ப்பாணம் சைவ அநாதைசாலைக்கு பொலிசாருடன் அனுப்பி வைத்தார். சைவ அநாதைசாலையின் சிறப்பு அநுராதபுரிக் கோட்டுக்குச் சென்றமை ஆச்சரியமன்று. ஆயின் கால்போன வாக்கிற் சென்ற நகுலன் மகிழ்ச்சியோடு கல்விவசதி பெற்று வாழ வசதி கிடைத்தது ஆச்சரியந்தான்!

இன்னுமொன்று: -

திருநெல்வெலி முத்துத்தம்பி வித்தியா சாலையின் இப்போதைய தலைமையாசிரியர் இனி வரவிருக்கும் தலைமையாசிரியர்கள் அத்தனை பேரதும் சுவீகாரப் புத்திரன் ஒருவன் இப்பொழுது சைவ அநாதைசாலையில் வளர்கின்றான். அவன்தான் முத்துலிங்கம்!

அவன் தன் பெற்ற தாயையும் அறியான். தந்தையையும் அறியான். கொழும்பு மாநகரில் கந்தலுடையுடன் எச்சிலிலை பொறுக்கியுண்ட முத்துலிங்கம் அரசினர் உத்தியோகத்தர் ஒருவருடைய (Probation Officer) உதவியாற் சைவ அநாதைசாலையை அடைந்தான். அரசாங்க உதவியோடு ஒரு நிபந்தனையுடன் அனுப்பி வைக்கப்பட்டான். அரசாங்கம் மாதம் 30 ரூபா வீதம் சில காலத்துக்கு அவனுக்கு உபகாரப் பணம் அனுப்பி வைக்கும் ஆயின் அவன் முத்துத்தம்பி வித்தியாசாலைத் தலைமையாசிரியரின் "சுவிகாரப் புத்திரன்" என்பது அந்நிபந்தனை. அவன் தான் இலங்கையின் எதிர்கால ஆட்சித்தலைவனோ யாரறிவர்! ஆனால் அவன் இப்பொழுது குஷியாய் வாழ்கிறான்.

அநாதைகளுக்கு ஆண்டவன் துணை உண்டு; சைவ அநாதைசாலை உண்டு என்றாவது ஒரு சிறு மன நிம்மதி உண்டல்லவா சைவ அநாதைசாலையால். ஆனால் அவ்வநாதைசாலைச் சிறுவர் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு சிறுமிகள் நீராட ஒரு தொட்டியும் ஆராதனை மண்டபமொன்றும் இப்போதைக்குக் கிடைத்து விட்டால்" என்ற கூறிக்குறைப்பட்டார் தலைமையாசிரியர் கடைசியாக.

(நன்றி: உதயன் - 12-03-2000

இலக்கியங்களுக்கும் கவிதைகளுக்கும் உரிப்பொருளே உயிரான பொருள்: சிறந்த பொருள், இந்த உரிப்பொருளை எடுத்து வளர்க்கிற பொருள் கருப்பொருள். உரிக்குக் கரு செவிலித்தாய். முதற் பொருள் உரிக்குத் தந்தையும் தாயுமாய் இருக்கும்.

முதற் பொருள் காலமும் இடமும் என இரு வகைப்படும். ஒரு விசேட காலத்திலே பொருத்தமான ஓர் இடத்திலே மாசு நீங்கிய புலமையுள்ளத்திலே ஒரு நல்ல இனிய உணர்ச்சி உண்டாகலாம். அந்த மறுவற்ற உணர்ச்சியே உரிப்பொருள். அது பேணற்பாலது, உருவம் இல்லாதது, புலவன் உருவமற்றதும் நல்லதும் இனியதும் ஆன அந்த உணர்ச்சியைக் கருக்கட்டிக் கருப்பொருள்கள் மூலம் புலப்படுத்த முயல்கின்றான். இதனை ஓர் உதாரணத்தில் வைத்து நோக்குவோம்.

"அன்பிற்கு முண்டோ அடைக்குந் தாழ்" என்பது, எல்லாருமறிந்தது. அன்பு இருவேறு பொருள்களை ஒரு பொருள் செய்வது, ஒன்றாக்குவது. இப்படிப்பட்ட அன்பை, காதல் இருவர் கருத்தொருமித்து ஆதரவு என்கிறார் ஔவையார். அன்பர்களுக்குக் கருத்து ஒன்றே; இரண்டில்லை.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

சைவச்சிறார்கள் சமயச்சூழலில் கற்க வசதிசெய்த "இந்துபோர்ட்"

திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்
முன்னாள் விரிவுரையாளர்,
திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலை.

சைவச்சிறார்கள் சமயச் சூழலில் கல்வி கற்பதற்கு வசதியாக பலப்பல சைவப் பாடசாலைகள் நிறுவப்படுவதற்கு மூலகாரணராக இருந்து மிகப் பெருந்தொண்டு செய்த "இந்துபோட்" இராஜரத்தினத்தின் 120 ஆவது நினைவு தினம் இனறு. அந்தப் பெருவள்ளலையும் அவர்தம் சேவைகளையம் நினைவு கூரும் வகையி இக்கட்டுரையைப் பிரசுரிக்கின்றோம்.

இருபதாம் நூற்றாண்டில் இணையற்ற கல்விப் பணியாற்றிச் சைவமக்களுடைய, கல்விமான்களுடைய, பாராட்டுக்குரியவராக விளங்கியவர் மதிப்புக்குரிய இந்துபோட் இராஜரத்தினம். அன்னார் ஆற்றிய பணிகள் யாழ்ப்பாணம், வன்னி மாவட்டம், தீவுப்பகுதி ஆகிய பெருநிலப்பரப்பில் பரந்திருந்தது.

இதன்மூலம், மேற்கூறிய இடங்களில் வறுமை காரணமாகப் பாடசாலை சென்று கற்கமுடியாத சிறுவர் சிறுமியர்கள் பலரும் சைவ சமய மரபுகளைப் பேணி, சமயச் சூழலிலே வளரவும், கலை, கலாசாரத்தை வளர்த்துக் கல்வி கற்கவும் ஓர் அரிய சந்தர்ப்பம் கிடைத்தது. இன்று அரசும், அரச சார்பற்ற நிறவனங்களும் பாடசாலைக்குப் பல துறைகளில் உதவி செய்கின்றன. வேற்று மதத்தவர்களுக்கு மதச்சார்புள்ள நிறுவனங்கள் ஆதரவு வழங்குகின்றன. ஆனால் மக்கள் வாழுமிடங்களில் பாடசாலைகளை நிறுவிய பெருமை இந்துபோட் சு.இராஜரத்தினத்தையே சாரும்.

யாழ்ப்பாணத்திலுள்ள தலை சிறந்த அறிஞர்களும், கல்வியில் ஈடுபாடுடையவர்களுமாகிய சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி, அ.சபாபதி, எம்.எஸ்.இராஜரத்தினம், எஸ். கந்தையா ஆகியோர் சேர். பொன்னம்பலம் இராமநாதன் தலைமையில் கூடி 09.12.1923 இல் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தை ஸ்தாபித்தனர். இதுவே "Hindu board of Education" என ஆங்கிலத்தில் கூறப்படுகிறது. சங்கத்தின் நோக்கம் நாட்டின் பல பகுதிகளிலும் சைவப் பாடசாலைகளை நிறுவிச் சைவச் சூழலிலே கல்வி வழங்குவது (விசேடமாக ஏழைப்பிள்ளைகளுக்கு) ஆகும்.

"இந்துபோட்" இராஜரத்தினம் கோப்பாயைச் சேர்ந்த கதிரேசர் சுப்பிரமணியத்துக்கும் வல்வெட்டியைச் சேர்ந்த பெருவள்ளல் குமாரசுவாமி மீனாட்சிப்பிள்ளைக்கும் அருந்தவப்புதல்வராகப் பிறந்தார். இளமைப் பருவத்தில் இவரது தாய்மாமன் நீதிபதி வைமன் கதிரவேற்பிள்ளை சு. இராஜரத்தினத்தையும் சகோதரர்களையும் வளர்க்கும் பொறுப்பை ஏற்றார். இவர் யாழ். மத்திய கல்லூரியில் கற்ற காலத்தில் கிரிக்கெட் விளையாட்டில் மிக ஆர்வமுடையவராக விளங்கினார்.

திண்ணைப் பள்ளிக்கூட முறையில் சட்டம்பி அம்மாவிடம் சமயம், தமிழ்க் கலாசாரப் பண்புகள் என்பவற்றைக் கற்ற இராஜரத்தினம், பல்கலைக்கழகத்தில் சக மாணவர்களிடையே சகல விதத்திலும் முன்னணியில் நின்றார் என்றால் மிகையில்லை. அத்துடன் பல்கலைக்கழக முதல் நிலைப்பட்டப் பரீட்சையில் சிறப்புச் சித்திபெற்று பெற்றோரையும், மாமனாரையும் பெருமிதம் அடையச் செய்தார்.

இருமரபுப் பெருமையும், சைவாசாரசீலமும், பல்கலைக்கழகப் பட்டமும், கிரிக்கெட் விளையாட்டில் திறமையும் ஒருங்கே அமையப் பெற்ற இராஜரத்தினம் அவர்கள் 24 ஆம் வயதில் சட்டத்தரணியாக அப்புக்காத்து திறமைச் சித்திபெற்றார். ஓய்வு காலங்களில் கீரிமலை சென்று நீச்சலிலும் வல்லவராகினர். அக்காலத்தில் கீரிமலை அருணாசல உபாத்தியாரின் தொடர்பு இவருக்குக் கிட்டியது. வித்தியா பகுதியினருக்கு அருணாசல உபாத்தியாயர் மூலம் மொழி பெயர்த்து உதவியாதால் கல்வி தொடர்பான சட்ட திட்டங்கள் பற்றியும் இவர் அறிந்து கொண்டார்.

நீதிபதி வைமன் கதிரவேற்பிள்ளை நாவலர் பெருமானுடன் மிக நெருங்கிய தொடர்புடையவர். எனவே, தாய் மாமன் பராமரிப்பில் வளர்ந்த இராஜரத்தினம் அவர்களும் நாவலருடைய சமயப் பணிகளாலும் பிரசாரத்தினாலும் நன்கு கவரப்பட்டதில் வியப்பில்லை. இதனால் நாவலர்பெருமான் வழிநின்று சமயப்பணியாற்ற விரும்பிச் செயற்படத் தொடங்கினர்.

பரம்பரை பரம்பரையாக சைவ மக்கள் வாழும் மாதகல் கிராமத்தில் முதன்முதலாகச் சைவவித்தியாவிருத்திச் சங்கம் விக்கினேஸ்வரா பாடசாலையை அமைத்தது. இதனைத் தொடர்ந்து நெடுந்தீவு, புங்குடுதீவு, மண்டைதீவு, வேலணை, சங்கானை, இளவாலை, எழுவைதீவு, காரைநகர், நாகர்கோயில், உருத்திரபுரம், வவுனியா, புத்தளம், முந்தல், வட்டக்கச்சி, பல்லவராயன்கட்டு ஆகிய இடங்களில் பாடசாலைகள் நிறுவப்பட்டன. இவ்வாறு 1953 ஆம் ஆண்டு 121 பாடசாலைகள் நிறுவப்பட்டன.

இத்துடன், குடிசைக் கைத்தொழில் நிலையங்களும், பன்னவேலை நிலையங்களும் அமைக்கப்பெற்றன. நாட்டின் பலபாகங்களிலுமுள்ள பிரபுக்கள், சைவ அபிமானிகள், கொடை வள்ளல்கள் ஆகியோரை அழைத்துச் சைவமக்களின் முக்கிய தேவை கல்வி எனவும், அதற்குப் பல பாடசாலைகளை அமைக்க

வேண்டும் எனவும் எடுத்துக்கூறிப் பணம், பொருள் என்பவற்றைப் பெற்றுக்கொண்டார்.

இவ்வாறு வருடந்தோறும் பாடசாலைகளின் தொகை அதிகரித்து வந்தது. பெண்கள் கல்விக்கும் ஆங்கில மொழிக் கல்விக்கும், முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. செங்குந்த இந்துக் கல்லூரி, அராலி இந்துக்கல்லூரி, இடைக்காடு மகாவித்தியாலயம், கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி, யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலடி ஆங்கிலப் பாடசாலை என்பன ஆங்கில மொழிக்கல்வி புகட்டுவதற்கென ஆரம்பிக்கப்பட்டன. வித்தியா பகுதியினருக்கு மொழிபெயர்த்து பல ஆவணங்களைத் தயாரித்துக் கொடுத்ததனால் சட்டதிட்டங்களை நன்கு நுட்பமாக அறிந்து பாடசாலைகளை நிர்வகிக்க முடிந்தது.

இந்துபோட் இராஜரத்தினம் அவர்கள் அடக்கமாகவும் அமைதியாகவும் திரிகரண சுத்தியுடனும் தன்னையே கல்விப்பணிக்கு அர்ப்பணித்தார். கல்வியில் ஆர்வமுள்ளவர்களை நாடித் தங்கள் தங்கள் ஊரிலேயே பாடசாலைகளை அமைக்குமாறு உற்சாகப்படுத்திப் பல பாடசாலைகள் உருவாக வழிவகுத்து பெருமை அவரைச் சாரும்.

தனது பணிகளைத் திரம்படச் செய்யத் தனது மோட்டார் வாகனத்தையம், நியாயவாதித் தொழிலையும் அர்ப்பணித்தமை அவரின் சேவை மனப்பான்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். சைவ வித்தியாவிருத்திச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு முப்பத்தைந்து வருடங்களின் பின்னர் 187 பாடசாலைகள் அமைக்கப்பெற்றன. எனவே, சைவ ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவியது. திருநெல்வேலியைச் சேர்ந்த அட்வகேட் ரி. இராசேந்திரம் அவர்கள் நாற்பது பரப்பில் தனது பெயரில் அமைந்துள்ள இல்லத்தைக் கொடுத்துதவ, சைவாசிரியப் பயிற்சிக் கலாசாலை 1925 ஆம் ஆண்டு விஜயதசமியன்று ஆரம்பிக்கப்பட்டது.

இந்துபோட் இராஜரத்தினம் அவர்கள் ஆற்றிய பணி காரணமாக ஓர் நிறுவனத்தின் பெயர், மதிப்புக்குரிய இராஜரத்தினம் அவர்களைக் குறிக்க எல்லோரும் அவரை அன்பாக "இந்துபோட் இராஜரத்தினம்" என அழைத்தனர். இறுதியாக "இந்துபோட்" என்றால் பெரியார் இராஜரத்தினம் எனலாம். இரண்டாவது அரச சபைக் காலத்தில் (1936-1941) சி.டபிள்யூ.டபிள்யூ கன்னங்கரா கல்வி மந்திரியாக விளங்கினர். கல்வித்துறையில் மாற்றம் செய்ய நியமிக்கப் பெற்ற கல்வி ஆணைக்குழு சி.டபிள்யூ.டபிள்யூ கன்னங்கராவின் பெருமதிப்புக்குரிய இந்துபோட் இராஜரத்தினம் ஒரு பிரபல்யமானவராக விளங்கிய காரணத்தினால் அவரைச் சந்தித்து அவருடைய உயர்ந்த கருத்துக்களைப் பெற்றது.

1935 ஆம் ஆண்டு தொடக்கம் பிரதி சனிக்கிழமைதோறும் மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்கான வகுப்பும், யாழ். ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தின் பாலபண்டித வகுப்புக்களும் இலவசமாக நடைபெற்றன. நான் சிறுமியாக இருந்த காலத்தில் மிக உயர்ந்த ஒருவர் நெற்றில் விபூதி, சந்தனப்பொட்டு, முடிந்தானைத் தொடத்தக்கதாக "கோட்" வேட்டியணிந்து மீசையுடன் கம்பீரமாக மோட்டார் வாகனத்தில் எமது இல்லம் வந்து தந்தையாருடன் கதைப்பது வழக்கம். ஆனால், நான் சைவாசிரிய கலாசாலையில் விரிவுரையாளராகக் கடமையாற்றிய காலத்தில் இந்துபோட் பற்றி நன்கு அறிந்து பெருமைப்பட்டேன்.

கலாசாலைக்கு அருகில் அமைந்த சைவச் சிறுவர்களுக்கான அநாதை இல்லம் மீது அவர் மிக அக்கறையுடன் செயற்பட்டார். அங்குள்ள பிள்ளைகளைத் தமது சொந்தப் பிள்ளைகள் போல நடத்தினார். அவர் நிறுவிய கல்விச்சாலைகளும், சிறுவர் இல்லமும் என்றும் அவர் பெருமையைப் பேசுவனவாகவுள்ளன. எனவே, எழுத்தறிவித்தவன் என்றும் இறைவனாகப் போற்றப்படுவார் என்பது முற்றும் உண்மை.

(நன்றி: உதயன் 04-07-2004)

*மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையின் மாணவருள் **வன்றொண்டச் செட்டியார்** என்பவர் ஒருவர், மிகப் படித்தவர். இவரைப்பற்றி உ.வே.சாமிநாதையார் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். இந்த வன்றொண்டச் செட்டியாருக்குப் பிற்காலத்திற் கண்பார்வை மங்கிப் போனது. கண்ணின் சக்தி அனைத்தும் செவிக்குப் போய்விட்டது. அவர் செவி, நுண் செவி. "செவிக்குணவு இல்லாத போழ்து" என்ற திருக்குறள் செட்டியாருக்குப் பொருத்தமானது. **செவிக்குணவு தேடி ஒருமுறை செட்டியார் யாழ்ப்பாணம் வந்தார்.** வந்தவர் பொன்னம்பல பிள்ளை புராணத்துக்குப் பொருள் விரிக்கும் இடத்துக்குப் போய் ஒருபுறத்தில் இருந்தார். வியாக்கியானந் திரை எறிகின்றது. செட்டி யாருக்குத் தெவிட்டாது தித்தித்து அமுது ஊறுகின்றது. உடம்பு வெடிக்கிறது போன்ற ஆனந்தம் மேலிடுகின்றது. **செட்டியார் இருந்தபடி மெல்ல மெல்ல இடம் பெயரத் தொடங்கிவிட்டார். ஒரு சந்தர்ப்பத்தில் எட்டிப் பொன்னம்பல பிள்ளையைக் கட்டித் தழுவி விட்டார்.** ஆராமையின் ஆற்றாமை அது.*

– பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

சேக்கிழார் குருபூஜை - 2005

உள்ளூராட்சி வாரத்தையொட்டி நல்லூர்ப்
பிரதேசசபை நடாத்திய கட்டுரை, கவிதைப்
போட்டிகளில் முதற்பரிசு பெறும் உயர்தரவகுப்பு
மாணவி செல்வி. ஆர். ரஜீவனா - 2009

"இந்துபோட் இராசரத்தினம் காலமும் வாழ்வும்"
நூல் வெளியீட்டு விழாவில்
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
மங்கல விளக்கேற்றுகிறார் - 2010

"இந்துபோட் இராசரத்தினம் காலமும் வாழ்வும்"
நூல் வெளியீட்டு விழாவில்
கலை நிகழ்ச்சி - 2010

திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலையம்
நடாத்திய சமய அறிவுப் போட்டியில்
தங்கப் பதக்கம் பெறுகிறார்
செல்வி. வி. சயனா - 2009

திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலையம்
நடாத்திய சமய அறிவுப் போட்டியில்
தங்கப் பதக்கம் பெறுகிறார்
செல்வி இ. கனிதா - 2010

நவராத்திரி விழா - 2007
தொடர் சொற்பொழிவாற்றிய
சைவவாரிதி ச.லலீசனுக்கு கௌரவம்

நவராத்திரி விழா - 2009
தொடர்சொற்பொழிவாற்றிய
செஞ்சொல்வாணர்
இரா.செல்வவடிவேலுக்குக் கௌரவம்

இராசரத்தினம் நினைவுப்
பேருரைக்கு வருகை தந்தோர்
2009

இல்லத்துக்கு
ஸ்ரீ தொண்டுநாத சுவாமிகளின்
வருகை - 2009

நவராத்திரி காலக் கொலு - 2009

லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன்
அறநிதியத்தின் உறுப்பினர்
ஏ. தேவசகாயமும் துணைவியாரும்
இல்லத்துக்கு வருகை - 2010

Glimpses of the Great Reformer

V. Sahadevasangari
Former Treasurer, HBE

The Veteran leader, the late Mr. Subramaniam Rajaratnam was an intimate friend of my father, the late Mr. Sangarappillai Veerasingham. Both were humanists to the core and great socialists bound by their idealism. These two reformers were bent on creating a casteless and creed - free ideal society among the Tamils. To achieve these aims they used schools and education as powerful and effective media.

The dyad's relationship, in course of time, brought the two families closer to each other. Mr.Rajaratnam frequently visited my father at Atchuvely to discuss matters of importance. During these visits he never failed to spend some time with us, the children. This unique quality of this great personality, to relate heart and soul at two levels, enticed me in my childhood which later developed into deep - rooted affection and awe, the depth of which words cannot fathom. As Manager of Hindu Board Mr.Rajaratnam spent considerable time with the children at 'Thirunelvely Children's Home' These children would have had the privilege of basking in his love and kindness.

On retirement, I became fully immersed in social activities which inevitably brought me in close contact with the Hindu Board. My pleasure knew no bounds and I felt honoured when I got elected to the board as Treasurer in 1998, a position that my father had held until his demise. This provided me with the opportunity to follow in my father's footsteps.

Mr.Rajaratnam's yeoman service to Hindu Education reached its peak with the founding of Mannar Sithy Vinayagar Maha Vidyalam in 1960. This event was historical in many ways. It was the last establishment of the Hindu Board, yet the first Hindu School in Mannar Town.

During this time there was a grave need for a Hindu school in Mannar. But affiliations to a Hindu Institution remained sensitive and daring issue here due to two ill - fated actions of the last King of the Jaffna Kingdom. As such, establishing a Hindu school in this area would have been like 'walking on a bed of quick sand' The Hindu Board, to be true to its aim and purpose had to face this challenge.

Mr.Rajaratnam, the veteran leader who was well aware that the success of this mission depended on meticulous planning and committed leadership turnd to my father for support as well as for stewardship on this perilous journey.

Their daring and untiring efforts bore fruit. As one of the most popular leading schools in the mannar District, Mannar Sithy Vinayagar Maha Vidyalam stands as a monument proclaiming their achievements.

I wonder, whether it was Mr.Rajaratnam' s intention to show his appreciation to my father for the part he played in establishing this institution that much against my father' s wish and unheeding his protest Mr. Rajaratnam appointed my sister, Mathy as a teacher in the same institution paving the path for her to follow in our father' s footsteps. That was the diplomacy of this great soul.

மெய்ப்பொருளும் மெய்யுணர்வும்

திருமதி நாச்சியார் செல்வநாயகம்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இந்து நாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

மெய்ப்பொருள் என்பது என்ன?

மெய்ப்பொருளாவது காலதேச வர்த்தமானங்களின் அளவுக்கப்பாலாய் யாண்டும் உள்ள நித்தியப் பொருள் என்பர் ஞானியர். அவர்கள் இந்த நித்தியப் பொருள் ஸத்-சித்-ஆனந்தம் என்று கூறுவர். ஸத் என்பது உள்ளது. சித் என்பது எல்லையற்ற ஞானத்தையுடையது. ஆனந்தம் என்பது சதா பேரின்பத்தைக் கொண்டிருப்பது. இத்தகைய மெய்ப்பொருளை அறிவதும் பின் உணர்வதும் பின் அப்பொருளேயாய் மெய்யின்பமாகிய பேரின்பத்தை அனுபவித்தலும் மெய்யுணர்வென்பர் ஞானியர்.

நாம் பொருளுலகமாகிய இவ்வுலகில் பொருட்களை அறிந்து வாழ்வில் அனுபவிப்பதற்கு நமக்குத் துணைபுரிபவை புலன்கள். இந்தப் புலன்கள் வரையறைக்குட்பட்டவை. கண் குறிப்பிட்ட தூரம் வரையும் பார்க்கும் காது குறிப்பிட்ட அளவு தூரத்து ஒலியை மட்டும் கேட்கும். மூக்கு குறிப்பிட்ட அளவே நுகர்ச்சியைச் செய்யும். இவ்வாறு புலன்கள் வரையறைக்குட்பட்ட நிலையில் கடமையாற்றும் போது அவற்றால் பெறப்படும் அறிவும் வரையறைக்குட்பட்டதாகவே அமையும். எனவே இந்தப் பிரபஞ்சத்தை முழுமையாகப் பார்க்கும் தகமையில்லாத புலன்களால் பெறும் பகுத்தறிவைக் கொண்டு நாம் மெய்ப்பொருளை அறியமுடியும் என்பது முடியாத நடவாத காரியமாகும் பகுத்தறிவு நமது புலன்களுடைய வழி அமைந்து நடப்பது. புலன்களுக்கெட்டாத உண்மைகளை அது அறிய முடியாது. இப்படி இருக்கலாம் அப்படி இருக்கலாம் என்று ஒருவாறு ஊகிக்கலாம். ஆனால் இதுதான் உண்மை என்று உறுதியாக அது நேருக்கு நேர் காண முடியாது.

"எதனால் மனம் அறியும் ஆற்றல் பெறுகின்றதோ,
எதை மனம் அறிய முடியாதோ,
அதை மெய்ப்பொருள் என்று தெரிந்துகொள்வாயாக"

என்று கேன உபநிடதம் கூறுகின்றது. இம் மெய்பொருளை அறியும் வழிதான் என்ன? இவ்வுலகில் மெய்யறிவாளர் பற்றிப் பேசப்படுகின்றது. இந்த மெய்யறிவாளர் யார்? சாந்தோக்கிய உபநிடதத்தில் "மெய்ப்பொருள் ஒன்றே. அது இரண்டற்றது. அதுவே எல்லாவற்றிலும் ஆத்மாவாகவும் இருக்கின்றது." என்று கூறப்பட்டுள்ளது. உண்மையை நேருக்கு நேர் பார்த்து அதை உணர்ந்து பிறருக்குச் சொன்னவர்கள் தான் சத்திய தர்சனம் பெற்றவர்களான ரிஷிகள் ஞானிகள் அனுபூதிமான்கள் என்று கூறப்படும் மெய்யறிவாளர்கள். இவர்களால் சமைக்கப்பட்டவையே சமயங்கள். எனவே உண்மையை நேருக்கு நேர் பார்ப்பதற்கான வலிமையை - சக்தியை எப்படிப் பெறலாம் என்ற வழியைக் கூறுபவைகளே சமயங்கள். உலகில் இன்று நின்று நிலை பெற்றிருக்கும் சமயங்கள். அனைத்தும் காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப ஞானிகளால் வேறு வேறாக விளக்கப் பெறுகின்றன. வெளிப்படையாக அவை வேறுபட்டவையாகக் காணப்படினும் அவை போதிக்கும் உண்மை ஒன்றே.

மெய்யறிவாளர் பற்றி அறிவதற்கு மெய்யறிவாளர்களாக அவர் தோற்றம் பெறுவதற்கான காரணிகளை ஆராயவேண்டும். மனதைத் தூய்மைப்படுத்துவதால் மனிதன் மெய்யறிவைப் பெறமுடியும் என்பதை உலகில் உள்ள சமயங்களை வெளிப்படுத்திய மெய்யறிவாளர்கள் எடுத்துக் கூறுகின்றனர். ஆன்மா என்பது ஒளி உள்ள பொருள் அவ்வொளியை பிரகாசிக்கவிடாமற் தடுப்பது அகவிருள் ஒளி உள்ள பொருள் அவ்வொளியை பிரகாசிக்க விடாமற் தடுப்பது அகவிருள். அகவிருள் நீங்கும் போது உள்ளொளி பிரகாசிக்கின்றது. எனவே மனத் தூய்மையே உள்ளொளி பெறுவதற்கான காரணியாக அமைகின்றது. மனத்தை அசுத்தபடுத்துபவை யாதெனில் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்பனவாகும்.

உள்ளம் ஒளிபெறவேண்டுமேயானால் அங்கே அழுக்காறு, அவா, வெகுளி இன்னாச்சொல் என்பன விடப்பட்டு அன்பு பேணப்பட வேண்டும். உள்ளத்தை ஒளிபெறச்செய்யும் சக்தி அன்பு ஒன்றுக்கே உண்டு. அன்புள்ள இடத்தில் பொறாமை, பேராசை, கோபம், கொடிய சொற்கள் என்பன தோற்றம் பெறா. மெய்யுணர்வு என்பது தன்னை உணர்தல் என்றும் தன்னுணர்வே பிரபஞ்ச உண்மையை உணரும் வழியாக அமைவ தென்றும் மெய்யறிவாளர்களால் எடுத்துரைக்கப் படுகின்றது.

தன்னை அறிதல் சற்குருவின் மூலமாக இடம் பெறுவதை சமயங்களின் வாயிலாக அறியமுடிகின்றது. தன்னை உணர்ந்த மேலான சத்தியப் பொருளை அனுபவமாக்கியாகிய சற்குரு பிரபஞ்சமனைத்தையும் அன்பு செலுத்தும் பிரபஞ்ச மனதைக் கொண்டிருப்பவன். தெளிந்த உள்ளத்தில் ஆன்மப் பிரகாசமும் உண்மைக் காட்சியும் சித்திக்கின்றது. உண்மையான அன்பு மனதைப் பளிங்காக்குகின்றது. உள்ளத் தூய்மையைக் கொடுக்கும். பேராற்றல் அன்பு ஒன்றுக்கே உண்டு. மெய்மையைத் தர்சனம் பண்ணவேண்டுமேயானால் அதாவது மெய்யுணர்வு பெறவேண்டுமேயானால் எதிர்பார்ப்புக் களற்ற எல்லையற்ற அன்பைக் கொண்டிருக்கவேண்டும். எனவே மெய்ப்பொருளை அனுபவமாக்குவதில் அடிப்படை யாகவும் முடிவாகவும் இருப்பது பேரன்பே. "அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே" என்பது மணிவாசகரின் மெய்யுணர்வுக் கூற்றாகும்.

"அன்பின் வழியது உயிர்நிலை"

என்று கூறும் வள்ளுவர் கூற்று நோக்கப்பட

வேண்டியது. உயிர்நிலை பெறுவது உண்மையான அன்பில் என மெய்யுணர்வாளராகிய வள்ளுவர் கூறியிருக்கின்றார். அன்பில் ஒருமை உணர்வும் ஒருமைக் காட்சியும் ஏற்படுகின்றன. வேறாகவும் பலவாகவும் பகுத்துப் பிரித்து பார்க்கும் புலன்வழிப்பெறும் பௌதீக அறிவு உலக நிலைப்பட்டது. ஆனால் வேறுபாடனைத திலும் ஒன்றையே காணும் ஒருமையுணர்வு அன்பின் விளைச்சலாகும் அன்பு பெருகப் பெருக மனிதன் ஆனந்தப் பரவசமடைகின்றான். வாழ்வின் பேறு மாறுதலற்ற பேரின்பம் அதை அநுபவமாக்குவதே மெய்யுணர்வாகும். இவ்வுணர்வு வாழ்வில் அன்பினைப் பேணி எல்லா வுயிர்களுடனும் தன்னைப் பங்கிட்டுக் கொள்ளும் அன்புணர்வால் விளைவதொன்றாகும். அன்பினில் விளைந்த ஆரமுதம் பேரின்பம். மெய்யறிவை விடப் புனிதமானது உலகில் இல்லை.

சூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார்" என்பது மாணிக்கவாசகரின் அநுபூதி வாக்கு. சூரியப் பிரகாசத்தில் இருள் நிலைப்பதில்லை. ஆன்மாவிடம் ஞானம் விளக்கும்போது முழுமை பெறுகின்றது.

இதயவெளியில் களங்கமற்ற அன்பில் மெய்ப் பொருள் சிறப்பாக விளங்குகின்றது. மெய்ப்பொருளை அனுபவமாக்கும் பூரண அன்பு குடிகொண்டிருக்கும் இடமே இதயம் எனச் சொல்லப்படுகின்றது. உடலைத் தனது பட்டணமாகக் கொண்டு இதயத்தாமரையைத் தனது அரண்மனையாகக் கொண்டு மெய்ப்பொருள் விளங்குகின்றது.

இறைவன் உயிர்களின் இதயப் பிரதேசத்தில் வசிக்கின்றார் என்று கண்ணன் கீதையில் கூறுகின்றான். அன்பின் மூலம் மெய்யறிவைக் கண்ணாகக் கொண்டவன் எங்கும் நிறைந்ததும் ஸத் - சித் வடிவமானதுமான மெய்ப்பொருளைக் காண்கின்றான். ஒளி வீசுகின்ற சூரியனைக் குருடன் காணமாட்டான். அதேபோன்று அன்பில்லாதவன் உண்மையை உணரமுடியாது.

நம்முடைய உலகியல் வாழ்க்கை பெரும்பாலும் உண்மையறியாத ஒரு தூக்கம் என்றார் கௌடபாதர். மாயையைப் பெருந்தூக்கம் (மஹாஸப்தி) என்று சங்கரர் குறிப்பிடுகின்றார். பன்மைப் பார்வை என்பது உலகியற் பார்வை. எல்லாவற்றுள்ளும் நீக்கமற நிறைந்திருக்கும் உண்மையை சத்தியத்தை அறியும் ஒருமைப்பார்வையே மெய்யுணர்வு ஆகும். இதனையே மேல்வருமாறு திருமூலர் என்னும் அனுபூதியாளர் விளக்குகின்றார்.

"மரத்தை மறைத்தது மாமதயானை
மரத்துள் மறைத்தது மாமதயானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்துள் மறைத்தது பார்முதற் பூதம்."

மெய்யுணர்வென்பது எல்லாவற்றுள்ளும் எல்லாவற்றையும் இறைவனாகக் காணுவதாகும். இத்தகைய மெய்யுணர்வுடையோர் ஒருமையாளர் என அழைக்கப்படுவர். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பது ஒருமையாளரின் கூற்றாகும். உயிர்க் குலம் ஒன்று இந்த உயிர்கள் அனைத்தின் பரம்பொருள் ஒன்றே என்பதே மெய்யுணர்வாகும்.

இன்பத்தை நாடுவதிலும் துன்பத்தைத் தவிர்ப்பதிலும் மனம் எப்படிப் போராடுகிறது என்பதிலிருந்து நீங்கள் எந்த அளவு கட்டுண்டு கிடக்கிறீர்கள் என்று தெரிந்துகொள்ளலாம். உங்களைச் சார்ந்த எல்லாமே நன்றாக அமைந்து, உங்களை உங்கள் மனைவி நேசிக்கிறாள், நீங்கள் உங்கள் மனைவியை நேசிக்கிறீர்கள், நல்ல வசதியான வீடு, நல்ல குழந்தைகள், வேண்டிய செல்வம் என இவை எல்லாம் இருக்கும் போது உங்கள் மனம் கட்டுண்டு கிடப்பதை நீங்கள் தெரிந்துகொள்வதில்லை. மனைவி பிரிந்துவிட்டாள், செல்வம் போய்விட்டது, போர் வரப்போகிறது என்ற பயம், மனவலி, விசாரம் போன்றவை நிகழ்ந்து மன அமைதி குலையும் போதுதான் மனம் எப்படிக் கட்டுண்டு கிடக்கிறது என்று புரியும். மன அமைதியை எது கெடுக்கிறதோ அதைத் தடுக்கும் முயற்சியிலும் அல்லது வெளியிருந்தோ உள்ளேயிருந்தோ ஏதோ ஒரு அபாயமோ அச்சுறுத்தலோ வரும் சமயத்திலும் மனம் கட்டுண்டு கிடப்பதைக் காணலாம். மனத்தில் மேலோட்டமாகவோ அல்லது ஆழமாகவோ நம்மில் பெரும்பாலோர் சதாகாலமும் அமைதி குன்றியிருப்பதிலிருந்து நாம் கட்டுண்டு கிடப்பது தெரிகிறது. செல்லமாகத் தட்டிக் கொடுக்கும் வரை மிருகங்கள் நன்றாக நடந்து கொள்ளும். கொஞ்சம் கோபப்படுத்தப்பட்டால், அவற்றின் மிருகத்தனம் வெளிப்படும். அதேபோல்தான் கட்டுண்ட மனமும்.

– ஜே. கிருஷ்ணமூர்த்தி

கந்தபுராணம் காட்டும் சிவவடிவங்கள்

கலாநிதி மா. வேதநாதன்
தலைவர், இந்துநாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

அறிமுகம்

சைவப் பேரிலக்கியங்களுள் ஒன்றாகக் கருதப்படும் கந்தபுராணம் காஞ்சிபுரத்தில் வாழ்ந்த கச்சியப்ப சிவாச்சாரியர் என்பவரால் கி.பி 14 ஆம் நூற்றாண்டில் அருளப்பட்டதாக அறிஞர் கருதுகின்றனர். கந்தபுராணம், முருகக்கடவுளது பரத்துவத்தினையும், மகத்துவத்தினையும், முருகனது திருக்கோலச் சிறப்பினையும் சிறப்பாகச் சித்தரிக்கும் தமிழ் இலக்கியமாக மட்டுமன்றி சிவபரத்துவத்தினையும் மற்றும் சிவவடிவங்கள் பற்றியும் குறிப்பிடும் நூலாகவும் விளங்குவது குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும். கச்சியப்ப சிவாச்சாரியர், "சிவனே முருகன், முருகனே சிவன்" எனும் கருத்தை கந்தபுராணத்தில் பல இடங்களில் குறிப்பிடுகின்றார். சிவனைப் பரம்பொருளாகக் கொண்ட சைவசித்தாந்த தத்துவஞானத்தை நிலைநிறுதத்துவதே கச்சியப்ப சிவாச்சாரியரின் உட்கிடை என்பதால், சிவனும் முருகனும் ஒருவரே என்று கூறவேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டுள்ளதெனலாம். இதனால் கந்தபுராணத்தில் முருகனின் பல்வேறு திருக்கோலங்கள் சித்தரிக்கப் பட்டிருப்பதுடன் சிவவடிவங்கள் பற்றியும் கூறப் பெற்றுள்ளது. சிவவடிவங்கள் ஒவ்வொன்றும் சிவனின் தெய்வீகச் செயல்களையும், உயரிய தத்துவப் பொருளையும் உணர்த்தி நிற்கின்றன. இக்கட்டுரையானது கந்தபுராணத்தில் கூறப்பட்டுள்ள சிவவடிவங்களை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது.

சதாசிவ வடிவம்

ஆகமங்கள் கூறும் அறுபத்திநான்கு சிவ வடிவங்களுள் ஐந்து முகங்களையும், பத்துத் திருக்கரங்களையும் கொண்டு விளங்குவது சதாசிவ வடிவமாகும். இவ்வடிவம் பெருந்தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டது. இச்சதாசிவவடிவமே பிற சிவவடிவங்கள் தோன்றுவதற்கும் மூலமாக விளக்குகின்றது. உலகில் உள்ள பொருட்கள் அனைத்திற்கும் இவ்வடிவமே பிறப்பிடமாகும். இறுதியில் அனைத்தும் இவ்வடிவத்தினுள்ளேயே ஒடுங்கும். மகாபிரளய காலம் ஏற்படும்போது யாவும் மாயையில் ஒடுங்குமென்பதும் மாயை சத்தியில் ஒடுங்குமென்பதும் சிவம் மட்டுமே எதனுள்ளும் ஒடுங்காது, ஒடுங்கியதாகத் தனித்து நிற்கும் என்பதும் சைவசித்தாந்தத்தின் அடிப்படைக் கருத்தாகும். சைவசித்தாந்தம் கூறும் இக்கருத்தினைச் சுட்டி நிற்கும் உயர் வடிவமே சதாசிவ வடிவமாகும். இதனைக் கருத்தில் கொண்டே கச்சியப்ப சிவாச்சாரியர் கந்தபுராணத்தின் முதற்பாட்டின் முதல் அடியில் இவ்வடிவத்தைச் சுட்டும் விதத்தில் *"திகட சக்கரச் செம்முக மைந்துளான்"*[1] என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் இவ்வடிவம் கந்தபுராண உற்பத்தி காண்டத்தில் *"ஐம்முகத்து ஒருவன்"*[2] என்ற சொல்லால் சுட்டப் பட்டுள்ளது. இங்கே இறை ஒன்று என்ற சைவசித்தாந்த தத்துவ நிலைப்பாட்டினையே "ஒருவன்" என்று சொல்லால் கச்சியப்ப சிவாச்சாரியர் சுட்டியுள்ளார்.

மகா சதாசிவ வடிவம்

இருப்பத்தைந்து தலைகளும், ஐம்பது கைகளும் உள்ள சிவவடிவம் மகா சதாசிவ வடிவமாகும். உயரிய தத்துவப்பொருள் கொண்ட இவ்வடிவத்தையே கந்த புராணம், *"யாவருமுய்ந்திடச் ச தாசிவவுரு வைந்துற்றதும்"*[3] என்று குறிப்பிடுகின்றதெனக் கொள்ளலாம். தமிழிலக் கியங்களில் கந்தபுராணத்திலேயே மகா சதாசிவ வடிவம் பற்றிய குறிப்பைக் கண்டுகொள்ள முடிகின்றது.

சோமாஸ்கந்த வடிவம்

சத்தாகிய சிவத்திற்கும், சித்தாகிய உமைக்கும் நடுவே ஆனந்தமே வடிவமாகிய கந்தக் கடவுளோடு விளங்கும் சிவவடிவமே சோமாஸ்கந்த வடிவமாகும். சத்து சித்து ஆனந்தம் என்று உபநிடதம் கூறும் இறைக் குணங்களின் விரிவே சைவசித்தாந்தத்தில் எண் குணங்களாகக் கூறப்பெறும். எனவே இக்குணங்களின் குறியீடாகவே சோமாஸ்கந்த வடிவத்தைக் கொள்ளலாம். சிவனுக்கும் உமைக்கும் நடுவில் கந்தன் வீற்றிருக்கும் இவ்வடிவத்தினை இரவுக்கும் பகலுக்கும் நடுவே தோன்றும் மாலைப்பொழுதுடன் ஒப்பிட்டு அழகியல் உணர்வோடு சிறப்பாக விளக்குவது.

"ஏலவார்குழல் இறைவிக்கும் எம்பிரான் தனக்கும்
பாலன் ஆகிய குமரவேள் நடுவுறும் பான்மை
ஞாலமேலுறும் இரவொடு பகலுக்கும் நடுவாய்
மாலையான தொன்று அழிவின்றி வைகு மாறொக்கும்"[4]

என வரும் கந்தபுராணத்தின் உற்பத்தி காண்டப் பாடலாகும். பல்லவர் காலம் முதலாகச் சோமாஸ்கந்த வடிவம் பற்றிய சிற்பங்கள் காணப்படுகின்றபோதும் தமிழ் இலக்கிய மரபில் சோமாஸ்கந்த வடிவத்தைச் சுட்டும் இதுபோன்றதொரு பாடல் இல்லையெனலாம்.

இலிங்கோற்பவ வடிவம்

திருமாலும், நான்முகனும் தாம்தாம் பரம் பொருள் என நினைந்து ஆணவவயப்பட்டனர். அவர்களுக்கு ஏற்பட்ட அகந்தையை அடக்கி, அவர்களுக்கு நல்லறிவு தோற்றுவிக்க சிவன் மண் முதல் விண்ணளவும் ஜோதிப் பிளம்பாய் நின்ற வடிவம் இலிங்கோற்பவ வடிவமாகும். ஆணவமுனைப் புடையவர்கள் ஆண்டவனை அணுகவோ அடையவோ முடியாதென்பதை இந்த வடிவம் சுட்டி நிற்கின்றது. நீலகண்டத்தையும், மான்மழு, வரதம், அபயம் ஆகியன பொருந்துகின்ற திருக்கரங்களையும்,

சர்ப்பங்களாலாகிய வளைவு பொருந்திய ஆபரணங்களையும் கொண்டு சந்திரனை அணிந்த சடைமுடியுடன் உமாதேவியாரை ஒரு பாகமாகக் கொண்டு மூன்று திருக்கண்களுடன் பிரம்மா, விஷ்ணு என்போருக்கு அருள்புரியும் இந்த வடிவத்தை அங்க அமைதியுடன் மிகவும் சிறப்பாக விளக்கி நிற்பது.

"மைக்களமு மான்மழுவும் வரதமுடன் அபயமுறும்
மெய்க்கரமு நாற்புயமும் விளங்கு பணிக்கொடும் - பூணுஞ்
செக்கருறு மதிச்சடையுஞ் சேயிழை யோர்பாகமுமாய்
முக்கணிறை யாங்காண முன்னின்றே யருள் புரிந்தான்"[5]

என வரும் கந்தபுராணப் பாடலாகும். இலிங்கோற்பவ வடிவத்தின் திருச் சிறப்பைச் சித்தரிக்கும் இத்தகைய பிறிதொரு பாடலை தமிழிலக்கியங்களில் வேறெங்கும் காணமுடியாது. மேலும், இவ்வடிவத்தில் சிவனுடன் உமாதேவியாரும் வீற்றிருப்பதாகக் குறிப்பிடுவது வேறெங்கும் காணமுடியாத ஓர் அரிய செய்தியாகும்.

தட்சிணாமூர்த்தி வடிவம்

சைவசித்தாந்தத்தில் குருவுக்கு உயர் இடம் கொடுக்கப்பட்டுள்ளது. சைவசித்தாந்தம் கூறம் இக்குரு வடிவமே சிவவடிவங்களுள் தட்சிணாமூர்த்தி வடிவமாகச் சுட்டப்படுகின்றது. திருக்கைலாசமலையில் தென் கோட்டிடை நின்ற ஒரு கல் ஆல நிழலின்கீழ் இருந்துகொண்டு சனகர், சனந்தனர், சனாதனர், சனக்குமாரர் என்ற நால்வருக்கும் "ஞானபோதம்" உரைக்க அந்த நால்வரும் மௌனமாக இருந்து கொண்டு அதனைக் கேட்டுணர்ந்ததாகக்கூறும் கந்தபுராணக் குறிப்பும்[6] இவ்வடிவத்தை தெய்வீக வரலாற்றுடன் வெளிப்படுத்துவதாகவுள்ளது. சிவன் தட்சிணாமூர்த்தி எனும் குருவடிவில் இருந்து நால்வருக்கும் அறமுரைத்த செய்தி சைவ இலக்கியங்களில் இடம்பெற்றிருப்பினும் அந்த நால்வரும் எவரெவரென்ற குறிப்பு தமிழில் கந்தபுராணத்திலேயே முதன்முதலில் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். கந்தபுராணம் கூறும் இவ்வடிவத்தை ஞான தட்சிணாமூர்த்தி வடிவம் அல்லதுஉபதேச தட்சிணாமூர்த்தி வடிவம் என்று கூறலாம். இவ்வடிவமே கந்தபுராணத்தில், "ஆலமர் கடவுள்"[7] ஆல்வரு கடவுள்"[8] எனும் பெயர்களாலும் கூறப்பெற்றுள்ளது. இவ் வடிவத்தையே மெய்கண்ட தேவரும் "கல்லால் மலையமர்" என்று சிவஞான போதக் கடவுள் வாழ்த்தில் மொழிகின்றமை நோக்கற்பாலதாகவுள்ளது.

ஆறுமுகச் சிவன் வடிவம்

சிவனுக்கு ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோயாதம் என்று ஐந்து முகங்கள் உள்ளதாகவே கூறப்படும். ஆனாலும், ஆறுமுகங்களை உடைய சிவவடிவம் பற்றிய செய்தி தமிழில் கந்தபுராணத்திலேயே முதன் முதல் காணப்படுகிறது. இதனைக் கச்சியப்ப சிவாச்சாரியர் *"......அறிஞர் சிந்திக்கும் தனது தொல்லைத் திருமுகம் ஆறு"*[9] எனக் குறிப்பிடுவார்.

காலாந்தகர் வடிவம்

சிவபெருமான் மார்கண்டேயனுக்காக யமனை உதைத்தருளிய சிவவடிவம் இதுவாகும். யமன் மார்கண்டேயன் மீது பாசத்தை எறிந்தபோது சிவலிங்கத்தைப் பற்றிப் பிடித்துக் கொண்டிருந்த மார்கண்டேயனைக் காப்பாற்றுவதற்காக சிவன் தனது இடது பாதத்தினால் யமனை உதைத்துக் கொன்றதாகவும், பின் யமன் தன் பிழை உணர்ந்து சிவனைத் தொழுவதாகவும் கந்தபுராணத்தில் கூறப்பட்டுள்ளது.[10] இதுவே சிவனின் காலாந்தகர் வடிவமாகும். யமனை சிவன் தனது இடது பாதத்தினால் உதைத்த செய்தி தமிழ் இலக்கியங்களில் கந்தபராணத்திலேயே முதன்முதல் காணப்படுகின்றது.

சரபேஸ்வரர் வடிவம்

சிவபெருமான் நரசிங்கத்தை அடக்குவதற்காக கொண்டது சரபேஸ்வரர் வடிவமாகும். பிரம்மா முதலிய தேவர்கள் அஞ்சும்படி சரபப் பறவை வடிவம் கொண்டு வந்து அருள்புரிந்த சரப வடிவத்தினை வீரபத்திரவுருத்திரன் எனக் கந்தபுராணம் குறிப்பிடுகின்றது. இதனைக் கந்தபுராணம்,

"........சதுர்முகன் முதலோர்
ஆருமச் சுறச் சரபமாய் வந்தருள்புரிந்த வீர
பத்திரவுருத்திரன்"[11]

என்று கூறும்.

பிட்சாடனர் வடிவம்

தென்னாட்டுக்கேயுரிய சிறந்த சிவவடிவம் பிட்சாடனர் வடிவமாகும். சிவபெருமான் நரசிங்கத்தின் தோலுடைய நீக்கி, நிர்வாணியாக சூலத்தினையும், பிக்ஷா பாத்திரத்தினையும் கையில் ஏந்திக் கொண்டு மோகினியாகிய திருமால் பக்கத்தில் வர தாருகா வனத்திற்குச் சென்றார் என்ற கந்தபுராணக் குறிப்பு இவ்வடிவத்தை நம் கண்முன்னே நிறுத்துகின்றது. இவ்வடிவத்தின் திருவுருவச் சிறப்பை விளக்குவது,

"நராரியின் உரிவை நீத்து நக்கனேயாகி முக்கட்
பராபரன் சூலத்தோடு பலிகலன் அங்கைகொண்டு
முராரிதன் பாங்கர் செல்ல முனிவருக்கிருக்கையாகத்
தராதல மதிக்கநின்ற தாருவனத்திற் புக்கான்"[12]

என வரும் கந்தபுராணப் பாடலாகும்.

சலந்தராரி வடிவம்

சலந்திரன் என்பவனை அழித்த சிவவடிவம் இதுவாகும். இந்த வடிவத்தினை ஜலத்திரவதமூர்த்தி, சலந்தாரி, ஜலந்தரஹரமூர்த்தி எனப் பல பெயர்களினால் வழங்குவர். இவ்வடிவத்தின்போது சிவபெருமான் தூங்குகின்ற கமண்டலம், நரைத்த திருமேனி, ஊன்றிய கோல், ஓசைக் குடையினை ஏந்திய கை என்பவற்றுடன் முனிவர் வேடத்தில் தோன்றியதாகக் கந்தபுராணம் குறிப்பிடுகின்றது.[13]

சங்கர நாராயண வடிவம்

வலதுபாகம் சங்கரனாகவும், இடதுபாகம் நாராயணராகவும் ஒரே வடிவில் காட்சி தரும் சிவவடிவம் இதுவாகும். இந்த வடிவம் பற்றிய செய்தியினைத் திருமாலின் கூற்றாகவே "சங்கரன் பாதி நான்"[14] என்று கச்சியப்ப சிவாசாரியார் மொழிவர்.

அர்த்தநாரீசுவரர் வடிவம்

வலது பாதி ஆணும் இடது பாதி பெண்ணுமாக ஒரே வடிவில் அமைந்த சிவவடிவம் இதுவாகும். பார்வதி கேதார திருத்தலத்தில் சிவனை பூசனை பண்ணியதன் பயனாகவே சிவனின் இடபாகத்தை பெற்றதாக கந்தபுராணம் குறிப்பிடுகின்றது.[15] மேலும் கந்தபுராணத்தில் வரும் "பாதியோர் மாதர்", "உமையொரு பாகர்" போன்ற தொடர்கள் அர்த்தநாரீஸ்வரர் வடிவத்தைச் சுட்டி நிற்கின்றன.

விருத்த வேதியர் வடிவம்

பார்வதி தேவி செய்த தவத்தின் பெருமை யினையும், அவருடைய அன்பையும் உலகிற்கு வெளிப்படுத்த வேண்டி, சிவவெருமான் வேதங்களை ஓதுகின்ற ஒரு விருத்த வேதியரைப்போல வேடம் கொண்டார். இதனை விளக்குவது,

"செறிதுவ ருடையாளன் சிகையினன் அணிநீற்றின்
குறியினன் ஒளிர்நூலன் குண்டிகை யசைகையன்
உறைபணி கதிர்போற்று மோலையன் உயர்கோலன்
மறைபயில் முதியோர் போல் வடிவிது கொடு
போனான்"[16]

எனவரும் கந்தபுராணப் பாடலாகும்.

நடராசர் வடிவங்கள்

சிவவடிவங்களுள் நடராசர் வடிவங்கள் தனிச் சிறப்புடையவை. நடராசர் ஐந்து சபைகளில் நடனம் செய்கின்ற சிறப்பான செய்தியை முதன் முதலில் கந்தபுராணமே குறிப்பிடுகின்றது. சிவன் இரத்தினசபை (திருவாலங்காடு), கனனசபை (தில்லை), வெள்ளிசபை (மதுரை), தாமிரசபை (திருநெல்வேலி), சித்திரசபை (திருக்குற்றாலம்) ஆகிய பஞ்ச சபைகளில் நிகழ்த்திய நடனங்களையே கந்தபுராணம், *"ஐவகை மன்று தொறாடிய வள்ளல்"*[17] எனக் குறிப்பிடுகின்றது.

பிற சிவவடிவங்கள்

"நிறத்திடுவன் நினைந்தவுரு நிமலன் றானே" என்ற சித்தாந்த சாத்திர கருத்துக்கமைவாகக் கந்தபுராணத்தில், சிவன் தனது மார்பில் பன்றியின் ஒரு கொம்பினை அணிந்து விளங்கும் வராகசம்ஹாரவடிவம், கூர்மவடிவம் எடுத்து திருமாலின் ஆமை ஓட்டினை அணிந்துள்ள கூர்மசம்ஹாரவடிவம், சிவனை மதிக்காது யாகம் செய்த தக்கன் என்பவனைத் தண்டித்த வீரபத்திரவடிவம், மன்மதனை எரித்த காமதகனவடிவம், திருமாலுக்குச் சுதர்சனம் என்ற சக்கரத்தை சூடியுள்ள சக்ரதானவடிவம், பிரம்மதேவனது தலையைக் கொய்த பைரவர்வடிவம், கங்கையை தலையில் சூடியுள்ள கங்காதரவடிவம், முப்புரம் எரித்த திரபுராந்தகவடிவம், சிவன்நஞ்சுண்டவடிவம், முயலகனை அடக்கி மிதிக்கும் சிவவடிவம், சிவகோசரியாரும், கண்ணப்ப நாயனாரும் வணங்கும் சிவவடிவம், சிலந்தியும், யானையும் வழிபடும் சிவவடிவம் ஆகிய சிவவடிவங்கள் பற்றி அறிய உதவும் தெய்வீக வரலாற்று கதைகள் இடம் பெற்றுள்ளன.

முடிவுரை

இவ்வாறாக சிவவடிவங்கள் பற்றிய செய்திகளைப் புலப்படுத்தும் சைவ இலக்கியமாக கந்தபுராணம் விளங்குவது தெரியவருகின்றது. மேலும், கந்தனின் மகத்துவத்தைக் கூறுவதையே பிரதான நோக்கமாகக் கொண்ட கந்தபுராணத்தில் சிவவடிவங்கள் பற்றிய பல செய்திகள் இடம்பெற்றிருப்பது கந்தபுராணத்திற்கே உரிய தனிச்சிறப்பாகக் கருதமுடிகின்றது. இத்தகைய சிவவடிவங்கள் பற்றிய செய்திகள் கந்தபுராணத்தில் இடம்பெறுவதை நோக்கும்போது அப்புராணம் தோன்றிய காலத்தில் சிவவழிபாடும் உயர்நிலையில் இருந்தமையை விளங்கிக் கொள்ள முடிகின்றது.

அடிக்குறிப்புகள்

1. கந்தபுராணம், பாயிரம், விநாயகர் காப்பு, பா.1
2. மேலது, உற்பத்திகாண்டம், துணைவர்வருபடலம், பா.7
3. மேலது, தக்ஷகாண்டம், உமையிலைநீங்குபடலம், பா.4
4. மேலது, உற்பத்திகாண்டம், சரவணபடலம், பா.26
5. மேலது, தக்ஷகாண்டம், அடிமுடிதேடுபடலம், பா.87
6. மேலது, உற்பத்திகாண்டம், மோனநீங்குபடலம், பா.31,32
7. மேலது, யுத்தாண்டம், இரணியன்யுத்தப்படலம், பா.7
8. மேலது, பாயிரப்படலம், பா. 48
9. மேலது, உற்பத்திகாண்டம், திருவவதாரபடலம், பா. 43
10. மேலது, அசுரகாண்டம், மார்க்கண்டேயபடலம், பா. 251 - 253
11. மேலது, உற்பத்திகாண்டம், கணங்கள் செல்படலம், பா. 7
12. மேலது, தக்ஷகாண்டம், ததீசியுத்தரபடலம், பா.37
13. மேலது, பா. 253
14. மேலது, அடிமுடிதேடுபடலம், பா. 38
15. மேலது, உற்பத்திகாண்டம், வழிநடைப்படலம், பா. 3
16. மேலது, உற்பத்திகாண்டம், தவங்காண்படலம், பா. 2
17. மேலது, கடவுள் வாழ்த்து, பா. 16

பெரிய புராணத்தில் பெண்மையின் தனித்துவம்

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

தமிழில் தோன்றிய பேரிலக்கியங்களில் பெரியபுராணம் சைவ சமயத்தின் பெருமையை உலகிற்கு உணர்த்தவெனச் சேக்கிழாரால் இயற்றப்பட்டது. காப்பியம் எனப்பேசப்படும் இந்நூல் புதுமையான அமைப்புடையது. தொண்டு என்னும் பண்பு நலனையே முதன்மையாகக் கொண்டு 63 அடியார் வரலாற்றைப்பாடுவது. சைவ சமயக் கொள்ளைகளைப் பாடுவதற்குத் தனிமனிதனின் வரலாறு போதாது எனச் சேக்கிழார் எண்ணியுள்ளார். திருத்தொண்டர் புராணம் என வழங்கப்படும் பெரிய புராணத்தைப் பாடுவதற்குச் சேக்கிழார் விரும்பியதற்குப் பிறிதொரு காரணமும் உண்டு. அவருடைய காலத்தில் சமணசமயக் கொள்கையைப் பரப்பவெனத் திருத்தக்க தேவரால் இயற்றப்பட்ட சீவகசிந்தாமணி என்னும் பெருங்காப்பியம் நாட்டில் பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்தது. அதனால் சைவசமயத்தின் பெருமையை எல்லோரும் அறியச் செய்ய வேண்டிய தேவையுமிருந்தது. அவருடைய நோக்கை நிறைவேற்றுவதற்குச் சுந்தரர் பாடி திருத்தொண்டத்தொகை உதவிற்று. நம்பியாண்டார் நம்பிபாடிய தொகுத்த செய்திகளையும் சேர்த்துப் பெரிய புராணத்தை," மாக்கதை" என்ற பெயரில் இயற்றினார்.

அடியார் வரலாற்றை வரையறை செய்து பாடுவதற்குச் சுந்தரரும் நம்பியாண்டார் நம்பியும் முன்னோடிகளாயிருந்தனர். தொண்டுப்பணியையே வாழ்வியலாகக் கொண்ட அடியார்களின் பக்திநெறியைப் பாரறியப் பக்திச்சுவை சொட்டச் சொட்டச் சேக்கிழார் பாடிய நூல் சைவக் காப்பியம் என்ற புகழையும் பெற்றது. சமய அநுபவத்தில் ஆழ்ந்த அடியார்களை அறிமுகம் செய்யும் சேக்கிழதர் அவர்கள் அத்தகைய அநுபவத்தைப் பெறுவதற்குக் காரணமாக இருந்த பெண்மையைப் பற்றித் தனித்துவமாகப் பாடியுள்ளார்.

பெரியபுராணத்தில் பேசப்படும் பெண்கள்

பெரியபுராணத்தில் சேக்கிழாரால் பேசப்படும் பெண்களும் மெய்யடியார்களே. 63 நாயன்மார்களில் மூவர் மட்டுமே சேக்கிழாரால் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியார், இசைஞானியார் என்னும் மூவருமே இவ்வாறு குறிப்பிடப்பட்டவர்களாவர். இம் மூவரையும் தவிர ஏனைய அடியாகளின் வாழ்வியலோடு தொடர்புற்றிருந்த பல பெண்களைப் பற்றியும் சேக்கிழார் தாம் பாடிய பெரியபுராணத்தில் குறிப்பிட்டுள்ளார். பக்திநிலையால் பணிசெய்த பெண்கள் பற்றி உலகறியச் செய்ய வேண்டும் என்ற உயர்ந்த நோக்குச் சேக்கிழாரிடம் இருந்தது. பெண்மை பற்றிப் பேசும் மரபான நிலையிலிருந்து வேறுபட்டு அவர் புதுமையான நிலையில் வாழ்வியலூடாகப் பெண்மையின் தொண்டுப் பணியை எடுத்துக் கூற விழைந்துள்ளார். காரைக்காலம்மையார் வரலாற்றை 65 பாடல்களிலும் மங்கையர்க்கரசியார் பற்றி 2 பாடல்களிலும் இசைஞானியார்பற்றி ஒரு பாடலிலும் சேக்கிழார் செய்திகளைக் கூறுகிறார். காரைக்காலம்மையின் பக்திநெறியை விரிவாகப் பாடியுள்ளார். ஏனைய இருவரும் சம்பந்தர்வரலாற்றிலும் சுந்தரர் வரலாற்றிலும் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். காரைக்காலம்மையார் வரலாறு வெறுமனே தொண்டுப்பணியாக மட்டும் அமைந்திருக்க வில்லை. அவருடைய தமிழ்மொழிப் புலமையால் இறைவனைப் பாடிப்பரவும் சிறப்பியல்பையும் பெற்றிருந்தது. அதுமட்டுமன்றிக் காரைக்காலம்மையின் வரலாற்றைச் சேக்கிழார் விரிவாகப் பாடுவதற்கு சிலப்பதிகாரத்தைப் பாடிய இளங்கோவும் வழிகாட்டியாய் இருந்துள்ளார். வணிகர் குடியிற்பிறந்த கண்ணகியின் தெய்வீக ஆற்றல் காரைக்காலம்மையாரிடமும் இருந்த தைச் சேக்கிழார் வெளிப்படுத்த விரும்பினார்.

மங்கையர்க்கரசியின் தொண்டு தனித்துவமானது. அதனைச் சேக்கிழார் முதற்பாடலிலே குறிப்பிடுகிறார்.

"மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர் திருக்குலக் கொழுந்து வளைக்கைமானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர் குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள் பிரான் சண்பையர்கோன் அருளினால்
இருந் தமிழ்நாடுற்ற இடர்நீங்கித் தங்கள்
பொங்கொளி வெண் டிருநீறு பரப்பினாரை
போற்றுவார் கழல் எம்மால் போற்றவாமே"

இதே போன்று இசைஞானியார் பண்பும் தனித்துவமானது எனச் சேக்கிழார் எடுத்துரைக்கிறார். சுந்தரரைப் பெற்ற தாய் என்பதால் இசைஞானியார் சேக்கிழாரால் பெருமைப்படுத்தப்படவில்லை. தனது அன்புக்குழந்தையை இன்னொருவருக்கு உவந்தளித்த உன்னதமான தாய் என்பதாலும் ஒரு பாட்டால் சிறப்பித்துக் கூற எண்ணியுள்ளார்.

"ஒழியாப் பெருமைச் சடையளார்
உரிமைச் செல்வத்திருமனையார்
அழியாப் புரங்கள் எய்தழித்தார்
ஆண்ட நம்பிதனைப் பயந்தார்
இழியாக் குலத்தின் இசைஞானிப்
பிராட்டியாரை என் சிறுபுன்
மொழியாற் புகழ்முடியுமோ?
முடியா தெவர்க்கும் முடியாதால்"

இம்மூவரையும் விடப் பெரியபுராணத்திலே அடியார்கள் வரலாறுகளில் தொடர்புற்ற பெண்கள் பலர். உறவு நிலையால் அவர்கள் உயர்ந்து நிற்கின்றனர். தாய், தமக்கை, மனைவி என்ற உறவு நிலையிலே அவர்களு

டைய சிறப்பைச் சேக்கிழார் பாடியுள்ளார் 60 ஆண் அடியார்களின் வாழ்வியலோடு இந்த உறவுநிலையில் தொடர்பு கொண்ட பெண்களைப்பற்றிய பதிவினைச் சேக்கிழார் தாய் என்ற நிலையில் உலகறியச் செய்துள்ளார்.

உறவுநிலையில் பெண்மையின் பெருமை

பெரிய புராணம் அடியார் பெருமைபற்றிப் பேச எழுந்த நூலாக இருந்தபோதும் பெண்மையின் பெருமையையும் பேசும் நூலாக அமைந்துள்ளது. பெண்ணைச் சேக்கிழார் பாடல்களிலே அறிமுகம் செய்யும் பாங்கு இதனை நன்கு விளக்கிநிற்கிறது. தாய் என்ற உறவு நிலையில் செய்யப்படும் அறிமுகத்திற்கு எடுத்துக் காட்டாகச் சிலவற்றைக் காட்டலாம்.

"ஏதமில் கற்பின் வாழ்க்கை மனை இசைஞானி"
"மாதினியார் திருவயிற்றின் மன்னிய சீர்ப்புகழனார்"

தொண்டுப்பணியிலே சிறந்து விளங்கிய அடியாரைப் பெற்றெடுத்த பெருமையைத் தாய் என்றநிலையில் பெண்கள் பெற்றதைச் சேக்கிழார் சுட்டிக்காட்டுகிறார். இசைஞானி சுந்தரரைப் பெற்றமையாலும் மாதினியார் நாவுக்கரசரைப் பெற்றமையாலும் பெருமை பெற்றனர். தாய்மார்களின் வளர்ப்புநிலையால் சுந்தரரும் நாவுக்கரசரும் சம்பந்தரும் இறைவனைப் பாடிப்பரவும் பக்திநெறியில் செல்லும் குணவில்லைப் பெற்றனர்.

அடுத்து மனைவி என்ற நிலையில் பெண்மை பற்றிக் குறிப்பிடும் சேக்கிழார் "தாய்க்குப்பின் தாரம்" என்ற முதுமொழியின் பொருண்மையையும் மிகச் சிறப்பாக விளக்கிக் காட்டியுள்ளார். தாயின் வளர்ப்பு நெறியிலே பக்தி நெறியிலே நின்றவர் அதனைத் தொடர மனைவி துணைநிற்கும் நிலை பெரியபுராணத்தில் வெகு சிறப்பாகவும் நுணுக்கமாகவும் விளக்கப்பட்டுள்ளது. மனைவி என்ற நிலையில் செய்யப்படும் அறிமுகத்திற்குச் சில எடுத்துக்காட்டுகளைக் காட்டலாம்.

"மனைவியாரும் அருந்ததிக் கற்பின் காட்டலாம்"
"மனைவாழ்க்கைக் கற்பின் மேம்படு காதலி"
"தாரமாதா"
"திருமகள் என்ன நின்ற தேவியார்"
"குறிச்சி வாழ்க்கை மனைவி"
"காதல் செய் மனைவியார்"
"சுற்றம் விரும்பும் இல்வாழ்க்கைத் தொழிலாள்"
"கற்புமேம்படுசிறப்பால் கணவனார் கருத்தமைந்தார்"

அடியார்களின் சிவத்தொண்டு சிறப்பாக நடை பெறுவதற்கு அவர்களுடைய மனைவியரும் ஒருப்பட்டு உதவியாக நிற்கும் பெண்மையின் பெருமையைச் சேக்கிழார் பெரிய புராணத்தில் குறிப்பிடத்தவறவில்லை. இக்கட்டான நிலைகளில் தமது கணவன்மாருக்கு தொண்டுப்பணியிலே உறுதுணையாக மனைவியர் நின்றுள்ளனர்.

தமக்கை என்ற உறவுநிலையில் திலகவதியார் பெரியபுராணத்தில் சிறப்பிடம் பெற்றுள்ளார். அவரை "மனைத்தவம்புரி திலகவதியார்" எனச் சேக்கிழார் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். தனது தம்பியை வளர்க்கும் தாய்மைப் பணியைத் திலகவதியார் ஏற்று மனையிலே வாழும் வாழ்க்கையை ஏற்றுக் கொள்கிறார். பெண்மையின் தொண்டுப்பணி வாழ்வியலில் எவ்வாறு சிறப்புற இணைந்துள்ளது என்பதைச் சேக்கிழார் திலகவதியாரின் வரலாற்றின் மூலம் சிறப்பாகக் காட்டியுள்ளார்.

சேக்கிழார் காட்டும் பெண்மையின் தனித்துவம்.

சேக்கிழார் பெரிய புராணத்தைப் பாடும் போது சைவசமயததின் வளர்ச்சி நிலைக்கு ஏற்ற நிலைகளையும் மனதுள் கொண்டுள்ளார். குறிப்பாகப் பெண்மையின் தனித்துவமான பண்புகளால் சைவத்தை எவ்வாற வளர்ச்சி பெறச் செய்யலாமென்பதையும் குறிப்பிட முனைந் துள்ளார். அதனால் பெண்மையின் தனித்துவத்தைப் பல இடங்களிலே சுட்டிக் காட்டியுள்ளார். குறிப்பாகச் சில பெண்களின் செயற்பாட்டின் மூலம் இதனை விளக்கி யுள்ளார்.

இசைஞானியார், காரைக்காலம்மையார், திலகவதியார், மங்கையர்கரசியார் சிறுத்தொண்டர் மனைவி, இயற்பகையார் மனைவி, திருநீலகண்டர் மனைவி, குங்கிலியக்கலயர் மனைவி என்போரைச் சிறப்பாகச் சேக்கிழார் காட்டுகிறார். இசைஞானியார் தனது அன்புக்குரிய குழந்தையை இன்னொருவருக்கு மனமு வந்து கொடுத்த கொடையாளி. அதனால் தாய்மைக் குணத்தின் சிறப்பை எல்லோரும் நன்கு அறியச் செய்தவர். இதனால் இசைஞானியாரை மெய்யடியாரில் ஒருவராகச் சிறப்பித்துள்ளனர். அவரை எல்லோரும் நினைவு கூரச் செய்துள்ளார்.

காரைக்கலாம்மையார் பெண்மையின் அற்புத ஆற்றலை உலகம் அறியச் செய்தவர். சிவவழிபாட்டு வாழ்வியலின் சிறப்பைச் சேக்கிழார் அவரது வாழ்வின் மூலம் விளக்கியுள்ளார். பெரிய புராணத்தில் தனித்துவ மான இடம் காரைக்கலாம்மையாருக்கு உரியது. தனித்துவமாக அவரது வரலாறு பாடப் பெற்றுள்ளது. வணிகர்குல வாழ்வியலுக்கூடாக புனிதவதி என்ற பெண் ஒரு புதிய பக்தி நெறியைப் பரப்பியவராக வளர்ச்சி பெறுகிறார். தம்முடைய சமய வாழ்வு சவாலுக்குள்ளாகிய போதும் மனவுறுதி தளர்ந்துவிடாமல் இறைவழிபாட்டைத் தொடர்ந்தவர். முதன்முதலாகச் சிவனுக்குப் பத்தியோடு பாமாலை சாத்தும் புதிய மரபைத் தொடக்கி வைத்தவர். மனையறத்தின் பண்புவழுவாமல் நின்றவர். சிறுவயது முதலே சித்தத்தில் சிவனை வைத்து வழிபட்டவர். அடியார்க்கு விருந்தளிக்கும் அருந்தொண்டு செய்து வாழ்ந்தவர். அவருடைய தெய்வீக ஆற்றலைக் கண்டு வணிகனான கணவன் பயந்து அவரை விட்டு ஓடிவிடுகிறான். இத்தகைய நிலையில் பெண்மை எவ்வாறு செயற்படுகிறது என்பதைச் சேக்கிழார் விளக்கியுள்ளார். குலமுதல் மனைவியைத் துறந்து சுயநலமாகச்

செயற்பட்டது. கணவனை உலகோர் முன்னிலையில் இகழாமல் தன்னை இறைபணியில் இணைத்துக் கொள்கிறார். பெண்மையின் உயர்ந்த குணத்தை இங்கே சேக்கிழார் இனங்காட்டுகிறார். மனையறத்தைக் காரைக்காலம்மையார் மாசுபடுத்தாமல் தானே துறவறத்தை ஏற்றுக் கொள்கிறார். சேக்கிழார் துறவு பற்றிய ஒரு பண்பான செயற்பாட்டை இதன்மூலம் பதிவு செய்துள்ளார். மனைவி ஏறுமாறாக நடந்தால் கணவன் கூறாமல் சந்நியாசம் கொள்வதே உலகமரபாக இருந்தது. ஆனால் கணவன் ஏறுமாறாக நடந்தால் மனைவி இல்லறத்தைத் துறந்து இறையடியாராக வாழ்வதே சாலச்சிறந்ததெனக் காரைக்காலம்மையார் காட்டும் வாழ்க்கை நெறி பெண்மையின் தனித்துவத்தை உலகறியச் செய்து நிற்கிறது. அதே வேளையில் கற்பு நெறியைப் பேணமுடியாத ஆண்மையின் சுயநலத்தையும் மிகத் தெளிவாக விளக்கி நிற்கிறது.

திலகவதியார் தம்பியின் வாழ்வுக்காகத் தன்னை அர்ப்பணித்தவர். இளவயதில் அவர் எதிர் கொண்ட துன்பங்கள் பல. திருமணவாழ்க்கைக்காகக் காத்திருக்கும் போது மணம் முடிக்க இருந்தவர் போர்க்களத்திலே இறக்கப் புதியதொரு பக்திவாழ்க்கையை மேற்கொள் கிறார். அது மட்டுமல்ல பெற்றோர் இழப்பையம் தமக்கைக்கு ஏற்பட்ட அவலத்தையும் கண்டு சைவசமய நம்பிக்கையைத் துறந்து சமணத்தைத் தழுவிய நாவுக்கரசசர் மீண்டும் சைவசமயம் சாரத்தொண்டு செய்தவர். மருணீக்கியார் வாயினால் சேக்கிழார் திலகவதியார் பெருமையை எடுத்துரைக்கிள்றார் "நந்தமது குலஞ்செய்த நற்றவத்தின் பயன் அனையீர்" எனத் தம்பியார் திலகவதியின் குலப்பணியைப் பாராட்டுகிறார். திலகவதியார் திருநீறு அளித்துத் தம்பியாரை நாவுக்கரசராக மாற்றுகிறார். திலகவதியார் மூலம் சேக்கிழார் காட்டும் பெண்மை தனித்துவமானது. சமணசமயத்தின் செல்வாக்குப் பரவியிருந்த நாட்டில் சைவத்தின் பெருமையைக் காத்த திலகவதியார் நாவுக்கரசரை மெய்யடியாராக மாற்றிய பெருமையைப் பெறுகிறார்.

மங்கையர்க்கரசியார் சைவசமயம் பாண்டி நாட்டிலே நிலைபெறத் தொண்டு செய்தவர். கணவனான பாண்டிய மன்னனும் மக்களும் சமணசமயத்தை தழுவிநின்ற போது மந்திரி குலச்சிறையும் மங்கையர்கரசி யும் மட்டுமே சைவவாழ்வியலில் நின்றனர். மன்னனும் மக்களும் மீண்டும் சைவத்திற்குத் திரும்ப வேண்டும் என வழிபாடு செய்த மங்கையர்க்கரசியின் சைவப்பணியைச் சேக்கிழார் திருஞானசம்பந்தர் வாயால் எடுத்துரைக்கிறார்.

"சூழுமாகிய பரசமயத்திடைத் தொண்டு
வாழு நீர்மையீர் உம்மைக் காண வந்தனம்"

என்னும் சம்பந்தர் கூற்று மங்கையர்க்கரசியின் மன உறுதியை விளக்கி நிற்கிறது. அவரது தனித்துவமான சைவப்பணியைச் சம்பந்தர் உலகறியச் செய்ய "மங்கையர்க்கரசி" என்ற தொடக்கமாகப் பதிகம் ஒன்றைப் பாடியுள்ளார். பெண்மையின் வழிபாட்டுத்திறத்தைச் சேக்கிழார் மங்கையர்க்கரசியார் வரலாற்றில் தனித்துவ மாக எடுத்துக் காட்டியுள்ளார். கோயிற்பணி செய்து நாள் தோறும் பரவும் வழிபாட்டு நடைமுறையை மங்கையர்க்கரசியார் மேற்கொண்டமையாலேயே பாண்டி நாட்டில் சைவம் அழியாது பாதுகாக்கப்பட்டது. கணவன் வழிசெல்லாமல் பெண்மை தனித்து இயங்கிய மையை மங்கையர்க்கரசியாரின் வாழ்வியல் மூலம் சேக்கிழார் எடுத்துக் காட்டியுள்ளார்.

பெண்மையின் தனித்துவம் பற்றிய சிறப்பு நிலையை தாய்மை நிலையிலே சேக்கிழார் சிறுத் தொண்டர் மனைவியின் குணவியல்பினால் சிறப்பாக விளக்கியுள்ளார். சிறுத் தொண்டர் மனைவி திருவெண் காட்டு நங்கையைச் சேக்கிழார் "மனையறத்தின் வேர்" என்று சிறப்பித்துள்ளார். மனைக்கடனைச் சிறப்பாகச் செய்யும் மனைத்தலைவி அவள் பிள்ளைக்கறிகேட்ட விருந்தினரை மகிழ்விக்கச் சொந்தப் புதல்வனையே அரிந்து கறிசமைக்கும் சோதனையை எதிர் கொண்டவர். மகிழ்வாகவே பிள்ளையை அரிவதற்குக் கணவனுக்குத் துணையாக நின்றவர். இக் காட்சியைச் சேக்கிழார் பாடலில் வருமாற அமைத்துள்ளார்.

"இனிய மழலைக் கிண்கிணிக்கால்
இரண்டும் மடியின் புடை இடுக்கிக்
கனிவாய் மைந்தன் கையிரண்டும்
கையாற் பிடிக்கக் காதலனும்
நஷனி நீடுவகை யுறுகின்றார்
என்று மகிழ்ந்து நகை செய்யத்
தனி மாமகனைத் தாதையார்
கருவி கொண்டு தலையரிவார்"

ஒரே புதல்வனை மகிழப் பண்ணிய தாயின் தனித்துவத்தைச் சேக்கிழார் இப்பாடலில் காட்டியுள்ளார். தாயின் அணைப்பில் குழந்தை மகிழ்ந்திருக்கிறது. அது கண்டு தாயும் மகிழ்கிறாள். தந்தையும் மகிழ்கிறார். இந்தவேளையில் தந்தை தலையை அரிகிறார். இக்காட்சி இறைவன் மீது கொண்ட உச்சமான நம்பிக்கையின் வெளிப்பாடாக உள்ளது. குழந்தையின் சிரிப்புக் கண்டு உள்ளத்திலே உவகையால் மகிழ்ந்த கணவனும் மனைவியும் அக்கணநேர மகிழ்ச்சியூடும் மறவாமல் இறைபணியை மேற்கொண்டதைச் சேக்கிழார் சிறப்பாகக் காட்சிப்படுத்திக் காட்டியுள்ளார். திருவெண்காட்டு நங்கையைச் சேக்கிழார் *"அன்பின் வென்ற தொண்டரவர்க்கு அமைந்த மனைவியார்"* எனச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளர். விருந்தோம்பும் இல்லறப் பணியைத் தாய்மையால் இடையூறு செய்யாத மனைவியையே *"மனையறத்தின் வேர்"* எனச் சேக்கிழார் குறிப்பிட்டுள்ளார். பெண்ணின் மன உறுதியும் தெய்வீக உணர்வும் தனித்துவமாகச் சிறுத்தொண்டர் புராணத்தில் விளக்கப்பட்டுள்ளது.

இயற்பகைநாயனாருடைய மனைவி கணவனின் சிவத்தொண்டை நிறைவேற்ற் தன்னையே தந்தவர்.

இயற்பகை நாயனாரிடம் இறைவன் அவர் மனைவியைத் தருமாறு கேட்டபோது மறுக்காமல் கொடுக்க இசைகிறார். மனைவியார் முதலில் மனங்கலங்கிய போதும் பின்னர்த் தெளிந்து கணவன் உரைத்ததை நிறைவேற்ற முற்படு கிறார். கணவன் விருப்பத்தை நிறைவேற்றுவதால் தன் உரிமையை உலகிற்கு அறியத் தருகிறார். சுற்றத்தவர் இச் செயற்பாட்டை எதிர்க்கின்றனர். ஆனால் திருவினும் பெரியளான அவள் இயற்பகையாரின் இறைபணிக்கு இடையூறு ஏற்படாவண்ணம் தடுத்த பெருமைக்குரிய தனித்துவமான குணவியல்புடையவனாக விளங்கினாள். சோதனைக்கு ஆளான கணவனை அதில் வெற்றியடையச் செய்யவேண்டும் என்ற கற்புநெறியில் நிற்கிறாள்.

வையகம் போற்ற மனையறம் செய்து வந்த திருநீலகண்டர் மனைவி கற்பிற் சிறந்தவர். தன் கணவனுடைய பரத்தைமை ஒழுக்கத்தைக் கண்டிக்க இறைவன் மீது ஆணையிட்டவர். கணவனோடு ஒன்றாக வாழ்ந்தபோதும் காமவாழ்க்கையைத் தவிர்த்து நின்றவர். பின்னர் இறைவனுடைய ஆணையால் தனது சபதத்தைக் கைவிடும் நிலை ஏற்பட்ட போதும் நிலையை விளக்கிக் கூறித்தன் சபதத்தைப் பேணியவர். அலைபாயும் ஆண்மனத்தின் உறுதியற் தன்மையால் இல்வாழ்க்கை யின் அறநெறி சீர்குலையும் நிலை எற்பட்ட போதும் அதுசிதையாமல் பாதுகாத்த பெண்மையின் தனித்துவத் தைச் சேக்கிழார் திருநீலகண்ட நாயனார் வரலாற்றிலே சிறப்பாகப் பேசியுள்ளார்.

மனைவியின் தாலியை விற்று இறைவனுக்குக் குங்கிலியம் வாங்கிய அடியவர் மனைவியின் மனவுரத்தை யும் பெரியபுராணம் தனித்துவமாக எடுத்துக் காட்டியள்ளது. வறுமையைப் போக்கத் தாலியையே விற்க முன்வந்த இல்லக்கிழத்தியாக குங்கிலியக்கலய நாயனார் மனைவி விளங்குகிறார். அவரைக் "காதல் செய் மனைவியார்" எனச் சேக்கிழார் போற்றுகிறார்.

கணவன் இறைபணியைச் செய்ய முடியாமல் வருந்தும் போது ஏற்ற வழி கூறித் தொண்டுப்பணி தொடர உதவிய இளையான் குடிமாறன் நாயனார் மனைவியின் மனத் தெளிவு பெண்மையின் தனித்துவமாகும். வேரித்தாரான் விருந்து எதிர் கொண்ட போது தனது மனைவியிடம் "தபோதனர் தீரவே பசித்தார் செய்வதென்" எனக் கேட்டு நின்ற இளையான் குடிமாநனுக்கு ஏற்ற வழிகூறி அவருடைய அன்னக் கொடை நிறைவேற உதவிய மனைவீன் மதிநுட்பமும் நன்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இல்லற நிலையிலே இறைபணி செய்யும் தொண்டர்க்கு அவர்களுடைய மனைவியர் பக்க பலமாக இருந்துள்ளனர். அத்தகைய மனைவியரை சேக்கிழார் பெரிய புராணத்தில் தனித்துவமாகப் பாடியுள்ளமை அவருடைய பெண்மை பற்றிய நோக்கினை நன்கு விளக்கி நிற்கிறது. அடியார் பெருமையைப் பாட வந்த பெரியபுராணம் பெண்மையை முன்னிறுத்திப் பாடாமல் இணைத்துப்பாடுவதற்கு வேறு காரணங்களும் இருந்துள்ளன.

அடியார் வாழ்க்கையில் இறைவனுக்குத் தொண்டு செய்வதே முக்கிய குறிக்கோளாக இருந்ததைச் சேக்கிழார் விளக்க எண்ணியுள்ளார். இறைதொண்டு செய்யும் போது இல்லறப்பணியையும் அடியவர்கள் குறைவறச் செய்ய வேண்டும். இல்லறம் பற்றிய வள்ளுவருடைய வரையறை யைச் சேக்கிழார் முழுமையாக உள்வாங்கியே தனது திருத்தொண்டர் புராணத்தை கட்டமைத்துள்ளார்.

"தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்று
ஆங்கு ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை"

வள்ளுவர் வகுத்த நெறியில் பெரியபுராணத்திலே இல்லறக்கடமையை ஏற்றுநின்ற அடியவர்கள் வரலாறு கட்டமைக்கப்பட்டுள்ளது. தெய்வம், விருந்து என்னும் இருநிலைகளையும் பேணும் பணியில் மெய்யடியார் களுக்குப் பெண்கள் சிறப்பாக உதவியதைச் சேக்கிழார் காட்டியுள்ளார். அதனால் தான் பாடவந்த மாக்கதையில் பெண்மையின் தனித்துவத்தையும் உற்ற இடங்களில் சிறப்பாக இணைத்துள்ளார்.

குடும்பம் என்ற அமைப்பு நிலை சிதையாமல் இறைபணி தொடர வேண்டும் என்பதும் சேக்கிழாருடைய இலக்காகும். சமணமும் பௌத்தமும் இல் வாழ்க்கையை விடத்துறவறமே துன்பத்தைத் தீர்க்கச் சிறந்த வழியென மக்களை வழிப்படுத்த முயற்சி மேற்கொண்ட வேளையில் இல்லறமே இனிவாழ்வு தருமென நிரூபிக்க வேண்டிய ஒரு தேவையும் சேக்கிழாருக்கு இருந்தது. அதனால் பெண்மையின் சிறப்புக்களை விரிவாகப்பேச வேண்டியிருந்தது. கணவனும் மனைவியுமாக இணைந்து இல்வாழ்வில் நிற்கும் போதே இறைவனுக்குத் தொண்டு செய்யும் உன்னத பணியையும் நிறைவேற்ற முடியும் என விளக்கியுள்ளார். மரபான பெண்மையின் ஆற்றலையும் மனவுரத்தையம் இறைசிந்தனையையும் வெகுநுட்பமாக அடியார் வரலாற்றிலே இணைத்துள்ளார்.

மாதொருபாகனாக விளங்கும் இறைவன் திருவுருவத்தோற்றத்தை குடும்ப வாழ்வியலில் காணும்படி பெண்மையின் செயற்பாடுகளைப் பொருத்தமுற அடியார்கள் வரலாற்றுடன் சிறப்பாக இணைத்துள்ளார். இன்று உலகெங்கும் குறையாகப் பேசப்படும் குடும்பத்தின் சீர்குலைவைத் தடுக்கப் பெண்மை ஆற்ற வேண்டிய பணியை விளக்கியுள்ளார். அடியார் வரலாற்றில் பெண்களின் பங்களிப்பை எடுத்துக் கூறும் சேக்கிழார் குடும்பவாழ்க்கையைச் சீர்மியம் செய்தவராகிறார். தொண்டுப்பணி குடும்பத்திலே முதலில் நடைபெற்று சமூகத்தைச் சார்ந்து நாட்டிலே பரவப் பெண்மையே முதலில் தொண்டாற்றவேண்டும். அதனாலே பெண்ணைச் சேக்கிழார் "மனையறத்தின் வேர்" எனப் பெரிய புராணத்தில் சிறப்பித்து கூறியுள்ளார்.

குமரகுருபரர் சில குறிப்புக்கள்

பேராசிரியர் சி. சிவலிங்கராஜா
தலைவர், தமிழ்த்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

தமிழ் இலக்கிய வரலாற்றிலே தம்மை நிலைநிறுத்திய புலமை ஆளுமைகளைப் பட்டியல் இடுவதும் அவர்களது மேதாவிலாசத்தை விதந்து பேசுவதும் நீண்டகாலமாகவே வழக்கில் இருந்து வருகின்றது. இத்தகைய புலமை ஆளுமைகளின் காலம், கல்வி, சமயம், சமூகம், பண்பாடு, அரசியல் முதலான வற்றின் ஆய்வு நோக்கு இன்று மிக்க கூர்மையடைந்து வருவது குறிப்பிடத்தக்கது.

பிற்காலப்பக்தியுகம் என்றும் இரண்டாவது பக்தியுகம் என்றும் ஆய்வாளர்களாற் கூறப்படும் 16 ஆம், 17 ஆம் நூற்றாண்டுகளிலே மேற்கிளம்பிய புலமைச் செல்நெறியின் குறிப்பிடத்தக்க அடையாளமாகத் திகழும் குமரகுருபரர் பற்றிய நமது நோக்கு நிலையாக இச் சிறுகட்டுரை அமைகின்றது.

சைவ, வைஷ்ணவ பக்திப்பாசுரங்களிலே ஊற் றெடுத்துச் சோழர்காலக் காவியங்களிலும் சிற்றிலக்கியங் களிலும் சங்கமமாகிப் பக்தியுணர்வுடன் பரவிப் பிரவகித்துப் பாய்ந்த ஒரு அற்புதமான கவிதைப்பாரம்பரியத்தைப் பிற்காலப் பக்தியுகத்திலே தரிசிக்கலாம். அருணகிரிநாதர், அபிராமிப்பட்டர், குமரகுருபரர் என இப்பட்டியல் நீளும்.

குமரகுருபரர் பற்றிச் செவிவழிக்கதையொன்று உண்டு. இவர் ஐந்துவயதுவரை வாய்பேசாமல் இருந்தவர் என்றும் முருகன் திருவருளால் வாய்பேசத் தொடங்கியதும் காட்டாற்றுவெள்ளம் போலக் கவிதைகளைப் பாயவிட்டவர் என்றும் கூறப்படுகின்றது. அதியற்புதமான கவிதைகளைப் பாடிய பல புலவர்களின் வரலாற்றோடு இறையருளைத் தொடர்புபடுத்திய இத்தன்மைத்தான கதைகள் பல வழங்குகின்றன. இத்தன்மைத்தான கதைகள் வழங்கும் கம்பன், காளிதாசன், காளமேகம் முதலானவர்கள் அற்புதமான கவிஞர்கள் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள்.

குமரகுருபரரின் தந்தையார் பெயர் சண்முகசிகாமணிக்கவிராயர். தாயார் பெயர் சிவகாமசுந்தரி அம்மையார். கல்விப்புலமையும் கவிதையாக்கும் திறன் பெற்றவர்களையே கவிராயர் என்று அழைக்கும் வழக்காறு உண்டு. குமரகுருபரரின் தந்தையாரிடம் இவை இருந்திருக்க வேண்டும் எனக்கருதலாம்.

குமரகுருபரர், கந்தர் கலிவெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக்கலம்பகம், நீதிநெறிவிளக்கம், திருவாரூர் நான்மணிமாலை, முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், சிதம்பரமும் மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட்கோவை, பண்டாரமும் மணிக்கோவை, காசிக்கலம்பகம், சகலகலாவல்லிமாலை, மதுரை மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை, மதுரை மீனாட்சியம்மைகுறம், தில்லைச் சிவகாமியம்மை இரட்டை மணிமாலை ஆகியநூல்களை எழுதியுள்ளார்.

இந்த இலக்கியங்களின் வடிவத்தையும் பொருளையும் நோக்கும் போது இவர் காலத்து இலக்கியச் செல்நெறியை இலகுவாகக் கண்டு கொள்ளமுடியும். சிலேடை, யமகம், மடக்கு, சித்திரக்கவி எனப்பரந்துபட்ட ஓர் இலக்கியப்பரப்பின் ஒட்டத்தை விலத்திக்கொண்டு எளிமை, இனிமை, உணர்வு, ஓசை முதலானவற்றையே தமது கவிதையின் வெளிப்பாடாக்கிய பெருமை குமரகுருபரருக்கு உண்டு.

பக்தி உணர்வு என்ற தளத்திலே நின்று கொண்டு மனித உறவுநிலையைச் சிக்கெனப்பிடித்துக் கவிதையாத்த பெருங்கவிஞர் வரிசையிலே குமரகுருபரருக்கும் முக்கிய மான இடமுண்டு. இவரது எல்லாப் படைப்புக்களிலும் இத்தன்மையைப் பொதுவாகக் காணலாம். எனினும் வகைமாதிரிக்கு மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ். முத்துக்குமாரசுவாமிப்பிள்ளைத்தமிழ், சகலகலா வல்லிமாலை ஆகிய மூன்றையும் நோக்குவோம்.

குமரகுருபரர் தமக்குமுன் தோன்றிய தமிழ் இலக்கியங்களிலும் வடமொழிஇலக்கியங்களிலும் ஆழமான புலமை பெற்றிருந்தார் என்பதை இவரது படைப்புக்களினூடு தெளிவாகக் கண்டு கொள்ளலாம். கன்னியாகுமரியிலிருந்து காசிவரை திருத்தலயாத்திரை செய்த இக்கவிஞர் பிரான் தமிழ் நாட்டை மாத்திரமன்றி முழு இந்தியாவையுமே தமது பக்திப்பார்வைக்கு உட்படுத்தியுள்ளார். எனினும் தமிழ்மொழிப்பற்றே இவரது படைப்புக்களில் மேலோங்கிக் காணப்படுகின்றது எனலாம்.

மீனாட்சியம்மையைக் குழந்தையாக உருவகித்து இவர்பாடும் ஒவ்வொரு பாடலும் மனித உணர்வு நிலையிலே நின்ற கொண்டு பக்தியனுபவத்தைச் சிறப்புற வெளிப்படுத்துவதாகவே அமைகின்றது.

"தொடுக்கும் கடவுட் பழப்பாடற்
தொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழினொழுகு நறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கை அகழ்ந்து
எடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்கு
ஏற்றும் விளக்கே வளர்சிமய

இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென்பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்து நின்ற
ஒருவன் திருவுள்ளத்தில் அழகு
ஒழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோவியமே மதுகரம்வாய்
மடுக்கும் குழற்காடு ஏந்தும் இள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்ற பெரு
வாழ்வே வருக வருகவே"

இப்பாடலை அரங்கேற்றும் பொழுது மீனாட்சியம்மையே குழந்தையாகவந்து திருமலைநாயக்க மன்னன் அவையில் இருந்து கேட்ட மகிழ்ந்தாள் என்று செவிவழிக்கதையொன்று உண்டு. தெய்வத்தையே கவர்ந்திழுக்கும் தெய்வீகப்பாடல் என்பதனால் இக்கதை உருவாக்கப்பட்டிருக்கலாம். மீனாட்சியம்மைபிள்ளைத் தமிழ்ப் பாடல்கள் ஒவ்வொன்றும் உயர்வானதே. விரிவஞ்சி வேறு உதாரணங்களைக் காட்டாது விடுத்தோம்.

குமரகுருபரருக்குப் பக்திப் பாசுரங்களிலும் பழந்தமிழ்க்கவிதைகளிலும் அதிக ஈடுபாடும் பரிச்சயமும் இருந்திருக்கின்றது என்பதை இவரது படைப்புக்களினூடு தெளிவாகக் காணமுடிகின்றது. பழந்தமிழ்க் கவிதைகளின் சுவையை நன்கு இரசித்துப் பல்வேறிடங்களிலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

"தொடுக்கும் கடவுட் பழம்பாடல் என்றும் துறைத்தீந் தமிழின் ஒழுகு நறுஞ் சுவையே" என்றும் பழமறைகள் முறையிடப் பைந்தமிழ்ப்பின் சென்ற பச்சைப் பசுங்கொண்டலே" என்றும் இவர் குறிப்பிடுவதை இவரது ஈடுபாட்டிற்கு வகைமாதிரியாகச் சுட்டிக்காட்டலாம். இத்தகைய தொடர்கள் இவரது படைப்புக்களிற் பல்வேறிடங்களிலும் பரவிக்கிடக்கின்றன.

"எளியபதம் எளியநடை, எளிதிற் புரிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொதுசனங்கள் விரும்புகின்ற மெட்டு" என்று பாரதிகுறிப்பிட்டதற்குச் சான்றாகக் குமரகுருபரரின் கவிதைகளையும் சுட்டிக்காட்டலாம். பாரதியின் கவித்துவ ஊற்றுப்பின்னணியிலே குமரகுருபரரும் இருந்திருக்கிறார் எனக் கருதுவதும் தவறாகாது.

பொருத்தமான சொற்கள் கவிதைக்கு உயிர்ப்பைத் தரும். குமரகுருபரர் கையாண்டுள்ள சொற்கள் சுவை நிரம்பியவை. சொற்களிலே இவருக்கு அதிக ஈடுபாடு இருந்தமையைச் சொற்களைப்பற்றி இவர் கூறும் இடங்கள் தெளிவாகக் காட்டுகின்றன. வகைமாதிரிக்குப் பின்வரும் சில தொடர்களைச் சுட்டிக்காட்டலாம்.

"சொற்பொலி பழம்பாடல்"
"சொற்தரு பெரும்புலவர்"
"சொல்விற்பனமும்"
"சொற்சுவைதோய் வாக்கும்"
"நாடும் பொருட்சுவை சொற்சுவை"
"சொற்கும் பொருட்கும்"

இவ்வாறு பல்வேறிடங்களிலும் சொற்களின் சிறப்பைப்பற்றிக்குமரகுருபரர் குறிப்பிடுகின்றார். பாரதியும் "மந்திரச் சொல்லின்பம் வேண்டும்" என்று குறிப்பிட்டமை இவ்விடத்திலே மனங்கொள்ளத்தக்கது.

குமரகுருபரர் முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழிலே செங்கீரைப்பருவத்தைப் பின்வருமாறு பாடுகின்றார்.

"விரல்சுவை யுண்டு கனிந்தமுதூறிய
மெல்லிதழ் புலராமே
விம்மிப் பொருமி விழுந்தழு தலறியுன்
மென்குரல் கம்மாமே
கரைவுறு மஞ்சன நுண்டுளி சிந்திக்
கண்மலர் சிவவாமே
கலுழ்கலு ழிப்புன லருவி படிந்துடல்
கருவடி வுண்ணாமே
உருவ மணிச்சிறு தொட்டி லுதைந்து நின்
ஒண்பத நோவாமே
ஒருதா ளூந்தி யெழுந்திரு கையும்
ஒருங்கு பதித்து நிமிர்ந்து
அருள் பொழி திருமுக மசைய வசைந்தினி
தாடுக செங்கீரை
ஆதி வைத்திய நாதபுரிக்குகன்
ஆடுக செங்கீரை"

குழந்தை முருகனைப் படிப்போர் மனக்கண் முன் நிறுத்தும் கவித்துவ ஆற்றலை மேற்காட்டிய பாடலிலே காணலாம். இவ்வாறே இவரது பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்கள் எல்லாம் அமைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

எல்லாவகையான யாப்பு வடிவங்களையும் குமரகுருபரர் கையாண்டுள்ளார். சிதம்பர செய்யுட்கோவை யாப்பிலக்கணத்தில் இவருக்குள்ள தாடனத்துக்கு உதாரணமாகும். ஓசைக்கு இவர் கொடுத்துள்ள இடம் இவரது எல்லாப் படைப்புக்களிலும் நிறைந்து காணப் படுகின்றது.

இவர் கையாண்டுள்ள உவமைகள், உருவகங்கள் மிகவும் சிறப்பானவை. இவரது பிரபந்தங்களைப் படிப்போர் அவற்றை நன்கு சுவைக்கலாம்.

இன்று வரை நின்று நிலைக்கும் சகலகலாவல்லி மாலை கட்டளைக்கலித்துறை என்ற யாப்புவடிவிலே பாடப்பட்டுள்ளது. சரஸ்வதியைப் பற்றிப் பல்வேறு பாடல்கள் தமிழ் இலக்கியப்பரப்பிலே பாடப்பட்டுள்ளன. ஆனால் சகலகலாவல்லி மாலை மட்டுமே நவராத்திரி காலப் பாராயணப் பாடலாக அமைந்திருப்பது இதன் சிறப்பு நோக்கியே எனலாம். குமரகுருபரர் சகலகலா வல்லிமாலையைப் பாடிச் சரஸ்வதியின் பேரருளால் இந்திமொழியைப் பேசக்கற்றுக் கொண்டார் என்று கூறப்படுகின்றது. "மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும் என் பண்கண்டளவிற் பணியைச்

உபவிடுதிக்காப்பாளர்களுக்கான
சீர்மிய அமர்வு - 2009

இல்ல மாணவர்களுக்கான
சீர்மிய அமர்வு - 2009

சுற்றுலா - 2009

சுற்றுலா - 2009

பெற்றோர்/ பாதுகாவலர்
ஒன்று கூடல் - 2009

தையற் பயிற்சி பெறும் இல்ல மாணவர்கள்



உயர்தர மாணவர்களுக்கான
புறநிலை வகுப்பு

ஆங்கில வகுப்பு

நடன வகுப்பு

சங்கீத வகுப்பு

உணவு உண்ணும் பிள்ளைகள்
(ஆண்கள்)



உணவு உண்ணும் பிள்ளைகள்
(பெண்கள்)

செய்வாய்" என இவர் பாடியது தில்லி பாதுஷாவை மனங்கொண்டு என்று கூறுவர்.

பக்தன் என்ற நிலையிலும் கவிஞன் என்ற நிலையிலும் நின்று முருகனிடம் குமரகுருபரர் செய்யும் விண்ணப்பம், அவருடைய தமிழுணர்வுக்கும் சைவப் பற்றுக்கும் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

"....ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவ தானமுஞ் சீர்ப் ப்பியத் பல்காட் தொகையும் - ஓசை எழுத்து முதலாமைந்திலக்கணமுந் தோய்ந்து பழுத்த தமிழ்ப் புலமை பாலித்து - ஒழுக்கமுடன் இம்மைப் பிறப்பில் இருவா தனை யகற்றி மும்மைப் பெருமலங்கள் மோசித்து - தம்மைவிடுத்து ஆயும் பழைய அடியாருடன் கூட்டித் தோயும் பரபோகம் துய்தப்பித்து - சேய கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்டு அடியேற்கு முன்னின் றருள்"

"இருவாதனை - அகப்பற்று, புறப்பற்று, மோசித்து - நிக்கி)

குமரகுருபரர் தாம் வாழ்ந்த காலத்து வழங்கிய எல்லா இலக்கிய வடிவங்களையும் எல்லாயாப்பு வடிவங்களையும் செம்மையாகப் பயன்படுத்தியுள்ளார். சமூக நீதியை அவாவியஇவர் நீதி நெறி விளக்கத்தைப் பாடினார். இது திருக்குறளின் பொழிப்பு எனக் கூறப் படுகின்றது.

பிற்காலப் பக்தியுகத்தின் மிகப் பெரும் புலவரான குமரகுருபரர் பற்றிய ஆய்வுகள் தமிழில் பெருமளவு இடம் பெற்றதாகத் தெரியவில்லை. பாட்டின் சுவைக்கும் அப்பால் அவர் பற்றிய ஆய்வுகள் சமூக, சமய, அரசியல், பண்பாட்டுப் பின்னணியிலே ஆராயப்பட வேண்டும் என்று அவாவுறுகிறோம்.

□ □

நமது சைவமொன்றே என்றாயினும் எவராலும் மதம் எனப்படாது சமயம் என்றே நியதமாக அழைக்கப்பட்டு வருவதாகும். குறித்த சொற்பொருள் நோக்கில் இது நியமம் ஆதலால் மீறப்படக்கூடாதது. உடன்பாடு ஆதலால் மறுதலிக்கப்படலாகாதது. வரையறை ஆதலால் எல்லை மீறப்படலாகாது. விதி ஆதலால் விலகமுடியாதது என்ற கண்டிப்பு இதற்குளதாம். இதனை வற்புறுத்தும் பாங்கில் ஏலவே அமைந்த சாஸ்திரச் சான்றுகள் இரண்டை இத்தொடர்பிற் கருதலாம்.

"என்றாயோடென்னப்பன் ஏழேழ் பிறவியும்
அன்றே சிவனுக்கெழுதிய ஆவணம்
நன்றாயுலகம் படைத்தா னெழுதினான்
நின்றான் கடல் வண்ணன் நேரெழுத்தாயே"

என்னும் திருமந்திரம் ஒன்று. என் தாயும் என் அப்பனும் சிவனுக்கெழுதிய ஆவணம் என இதில் வருவதன்கண் நியமம், உடன்பாடு, விதி என்ற சகல பொருள் நிலைகளுந் தொக்கிருத்தல் காணலாம். இனி,

"அற்புதப்பழ ஆவணங் காட்டி அடியனா என்னை ஆளது கொண்ட நற்பதத்தை நள்ளாறனை அமுதை"

எனவருஞ் சுந்தரர் தேவாரம் இரண்டாவதாம். இதிலும் மேலதிற் போன்று ஓர் நியமமுண்மை, உடன்பாடுண்மை, விதியுண்மை புலப்பட்டதாகின்றது. அன்றியும், மேலது கூறும் இலக்கணத்துக்கு இது இலக்கியமாம் பொருத்தமும் வேறுண்டோ.

இலக்கியகலாநிதி பண்டிதர் மு. கந்தையா

❖ ❖ ❖

திருக் கோயிலிலேனும், திருமடத்திலேனும், நாடோறும் இரவிலே கேட்போர் யாவரும் பயன்படும் பொருட்டு இந்த உபாத்தியாயர்களைக் கொண்டு பெரியபுராணம், திருவிளையாடற்புராணம். திருவாதவூரடிகள் புராணம், கோயிற்புராணம், கந்தபுராணம் உபதேச காண்டம், வாயுசங்கிதை முதலிய சிவபுராணங்களையும் சிவ தருமோத்திரத்தையும் படித்துப் பொருள் சொல்லுவிக்க வேண்டும்.

ஆறுமுகநாவலர்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் ஆளுமை

சாந்தினி அருளானந்தம்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
வரலாற்றுத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

16ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கையில் ஏற்பட்ட ஐரோப்பியர் ஆட்சியால் சுதேச சமயங்கள் சவால்களை எதிர்நோக்கின. ஆட்சியாளர்கள் கத்தோலிக்க, கிறிஸ்தவ சமயங்களுக்கு வழங்கிய ஆதரவும் ஊக்கமும், சுதேச சமயங்களை அடக்கியொடுக்குவதில் காட்டிய அதீத அக்கறையும், தமது சமயங்களை இங்கு நிலைநாட்டுவதற்குக் காட்டிய ஆர்வமும் 19ஆம் நூற்றாண்டில் சுதேச சமய மறுமலர்ச்சி இயக்கங்கள் தோற்றம் பெறுவதற்குக் காரணமாக அமைந்தன. சைவசமயத்தைப் பொறுத்தவரை ஆரம்பத்தில் தமது சமயத்தைப் பேணிப் பாதுகாப்பதற்குச் சில முயற்சிகள் சில அறிஞர்களால் உதிரிகளாக ஆங்காங்கே மேற்கொள்ளப்பட்டன. ஆனாலும் ஆறுமுக நாவலரே சைவ மறுமலர்ச்சி இயக்கத்தின் தோற்றத்திற்கும் அதன் உறுதியான செயற்பாடுகளுக்கும் வித்திட்டவர். யாழ்ப்பாணத்தில் சைவசமயத்தையும் சைவப் பண்பாட்டினையும் அழியவிடாது நிலைநிறுத்திய பெருமை நாவலருக்கே உரியதாகும். அவரது ஆளுமையே இத்தகைய தன்னிகரில்லாத் தொண்டுக்குப் பின்னணியாக இருந்ததை அவருடைய வரலாற்றில் இருந்து அவதானிக்கமுடிகின்றது.

ஆறுமுக நாவலரிடம் காணப்பட்ட அசாத்திய துணிவு, வீறுடன் கூடிய பேச்சு, எவரையும் நிமிர்த்தும் எழுத்தாற்றல், நிறைந்த தன்னம்பிக்கை, தன்னலமற்ற செயல், செயலாக்கத்தில் கொண்ட தீவிரம் என்பன சைவஇயக்கத்தைத் தோற்றுவித்து அதன் வாயிலாக சர்வதேச மயப்பட்டிருந்த கிறிஸ்தவத்தின் செல்வாக்கில் இருந்து சைவசமயத்தைப் பாதுகாத்து சைவ மறுமலர்ச்சி இயக்கத்தை வெற்றிகரமாக நடாத்துவதற்குத் துணை நின்றன. யாழ்ப்பாணத்தவரின் வழக்கப்படி சீதனம் பெற்றுத் திருமணம் செய்யக் கூடிய வாய்ப்பு இருந்தபோதும் சைவ இயக்கத்தினை வெற்றிகரமாகக் கொண்டு நடத்துவதற்காக அதனை நாடாதிருந்தவர் நாவலர். அசாத்திய ஆளுமையுடையவராக விளங்கியபோதிலும் நாவலரைப் பற்றிய குற்றச்சாட்டுக்களும் பலவுண்டு. அக்கால சூழ்நிலையில் அவருடைய நோக்கும் போக்கும் சைவமறுமலர்ச்சியையே குறிக்கோளாகக் கொண்டிருந்தன. இந்நிலையில் அவருடைய செயற்பாடுகள் சில விமர்சனத்திற்குரியனவாக இருந்ததில் வியப்பில்லை. சில வேளைகளில் இவற்றை நாவலருடைய தனிப்பட்ட ஆளுமையாகக் கூடச் சிலர் எடுத்துக் காட்டுவதுண்டு.

நாவலர், புகழை விரும்பாத அறிஞர். இவரை ஐந்தாம் குரவர் எனப் போற்றியபோது அதனை ஏற்க மறுத்து, அதற்குரிய நியாயங்களையும் வெளிப்படுத்தினார். தன்னைப் புகைப்படம் எடுப்பதற்குக் கூட அவர் அனுமதிக்கவில்லை. தற்போது நாம் காணும் நாவலருடைய உருவம் ஏறக்குறைய அவரைப் போன்ற உருவத்தைக் கொண்ட ஒருவரை மாதிரியாக வைத்து வரையப்பட்டதாகக் கூறப்படுகின்றது. தனது பிரசுரங்களில் இயற்பெயரைக் குறிப்பிடாது சைவப்பிரசாரகர், சைவன், கல்வி விருப்பினன் என்ற பெயர்களில் அவற்றை வெளியிட்டமையும் நினைவிற் கொள்ளத்தக்கது. யாழ்ப்பாணத்தவரது புலமையை தமிழ்நாட்டறிஞர் ஏளனம் செய்த போது அதனை நிராகரிக்கும் வகையில் துண்டுப்பிரசுரம் ஒன்றை வெளியிட்டார். அதுமட்டுமல்லாது ஈழத்தமிழரது புலமையையும் சேவைகளையும் தமிழ்நாட்டிலும் நிலைநிறுத்தும் வகையில் அங்கு தனக்குப் பின் செயற்படக்கூடிய ஈழத்தறிஞர் குழாத்தை உருவாக்கியமையும் குறிப்பிடத்தக்கது.

நாவலரின் பணிகள் யாழ்ப்பாணத்துக்குள் மட்டும் உள்ளடங்கியிருக்கவில்லை. தமிழகம் தாய் நாடாகவும், ஈழம் சேய்நாடாகவும் கருதப்பட்டுவந்த நிலையில் 19ஆம் நூற்றாண்டில் தாய்நாட்டவர் செய்ய வேண்டிய பணியை தமிழகத்தில் சேய்நாட்டவராகிய நாவலர் மேற்கொண்டமை அவருக்குரிய பிறிதொரு பெருமையெனலாம். பிற்கால அறிஞர் ஒருவரால் "ஈழநாட்டுக்கு தமிழ்நாட்டைக் கடமைப்படுத்திய பேருபகாரி" என குறிப்பிடப்படுவதும் கவனத்தில் கொள்ளத்தக்கது. இதனால் நாவலருக்குப் பின்வந்த அறிஞர்கள் தமிழகத்தில் சைவ, தமிழ்ப் பணிகள் செய்யவும், அவற்றினால் ஈழத்தவரின் புலமை, ஆளுமை முதலியன அங்கு ஏற்றம் பெறவும் சந்தர்ப்பம் கிடைத்தது. குறிப்பாகப் 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஈழநாட்டு அறிஞர்களின் செல்வாக்கு தமிழ்நாட்டில் மேலோங்கியிருந்தமைக்கு நாவலரே காரணமாகவும் முன்மாதிரியாகவும் இருந்தார். நாவலரைத் தொடர்ந்து சதாசிவபிள்ளை, காசிவாசி செந்திநாதையர், சபாபதிநாவலர், சபாரத்தினமுதலியார், அ.குமராசாமிப்புலவர், சி.வை.தாமோதரம்பிள்ளை போன்ற பல அறிஞர்கள் தமிழகத்தில் மேற்கொண்ட சைவத் தமிழ்ப் பணிகள் யாழ்ப்பாணத்தவருக்கு மிகப்பெரிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

ஆறுமுகநாவலர் கிறிஸ்தவ பாடசாலையில் கல்வி கற்றமை பலரால் விமர்சிக்கப்படுவதுண்டு. நாவலரின் தந்தை ஒல்லாந்தர் ஆட்சியில் "ஆராய்ச்சி" என்ற பதவியை வகித்தவர். சமகாலச் சூழ்நிலையில் அரச பதவியினைப் பெறுவதற்காக கிறிஸ்தவ பாடசாலையில் சேர்ப்பதற்கு அவருடைய தந்தையார் முனைந்திருப்பார் எனக் கொள்வதில் தவறில்லை. இத்தகைய கல்வியைப் பெற்றமையாலேயே இலங்கை ஒரு நாவலரைப் பெற்றதெனில் மிகையில்லை. மிஷனரிப் பாடசாலையில் கற்றமையாலேயே கிறிஸ்தவர்களின் மதமாற்ற நடவடிக்கைகளை முழுமையாக விளங்கிக் கொள்ளவும், அவற்றை எதிர் கொள்ளவும் அவரால் முடிந்ததெனலாம். தனிப்பட்ட ரீதியில் அவர் கிறிஸ்தவத்தை வெறுக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் மதபோதனையில் ஈடுபட்ட பீற்றர் பேசிவல் உடனான நட்பு, விவிலிய மொழிபெயர்ப்பு போன்றன இதற்குச் சிறந்த உதாரணங்களாக அமையும். கிறிஸ்தவ மிஷனரிமாரின் மதமாற்ற முயற்சிகளே நாவலரின் கண்டனத்துக்குரியனவாயின. அதுமட்டுமன்றி சைவ சமயத்தாரின் குறைபாடுகளும், சிலரின் இரட்டை வேடங்களும் நாவலரால் கண்டிக்கப்பட்டமையும்

கவனத்திற் கொள்ளத்தக்கது. மிஷனரிமார் எத்தகைய நடவடிக்கைகளைக் கையாண்டு சைவர்களை சமய மாற்றம் செய்ய முயன்றனரோ, அத்தகைய நடவடிக்கைகளைக் கொண்டே நாவலர் சைவத்தை நிலைநாட்டினார். கிறிஸ்தவ பாடசாலையில் பெற்ற கல்வியும் அதனூடாகப் பெற்ற அனுபவங்களுமே நாவரின் சைவ மறுமலர்ச்சிப் பணிகள் செம்மையாக முன்னெடுக்கப்படக் காரணமெனலாம்.

தனக்கென நீண்ட மாணவ பரம்பரரையைக் கொண்டவர் நாவலர். நாவலரிடம் படித்தவர்கள், நாவலரிடம் படித்தவர்களிடம் படித்தவர்கள், என இப்பரம்பரை நீண்டு செல்லும். இவர்கள் மட்டுமன்றி நாவலரின் சமகாலத்தவர்கள், நாவலரால் கவரப்பட்டவர் கள் எனப் பலதரப்பட்டவர்களும் நாவலருக்குப் பின்னான சைவ மறுமலர்ச்சியை ஏற்படுத்தினர். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, நம்மிடையே வாழ்ந்து மறைந்த ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் போன்றவர்கள் மட்டுமன்றி இன்று வரை நாவலர் வழியொட்டி நடப்பவர்களையும் நாம் அவதானிக்க முடிகின்றதெனில் அவருடைய ஆளுமையே காரணமென் பதை நிராகரிக்கமுடியாது. சைவத்தையும் தமிழ் மொழியையும் கிறிஸ்தவ செல்வாக்கிலிருந்து நாவலர் காப்பாற்றினாரெனில் அவற்றை நிலைபேறுடைய தாக்கியவர்கள் அவர் வழியினரே. சேர் பொன்னம்பலம் இராமநாதன் சட்டசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டமைக்கு நாவலரே காரணமாக இருந்தார். நாவலரின் இத்தகைய தீர்க்க தரிசனத்தினாலேயே பிற்காலத்தில் யாழ்ப்பாணத்திற்கு ஒரு பல்கலைக்கழகம் கிடைத்தது. நாவலரின் அடிச்சுவட்டினைப் பின்பற்றிய சேர் பொன் இராமநாதன் சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் உருவாக்கத்தில் முன்னின்று உழைத்த துடன், அதன் தலைவராகவும் சில ஆண்டுகள் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. இதனையடுத்து இந்துபோட் இராசரத்தினம் நாவலரின் வழியில் சைவக்கல்வியின் வளர்ச்சிக்கும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் உன்னத மேன்மைக்கும் ஆதரவற்ற பிள்ளைகளின் அரவணைப்புக்கும் பல்வேறு நிலைகளில் பணியாற்றியமையைக் காணலாம்.

நாவலரது சைவமறுமலர்ச்சிப் பணிகள் யாழ்ப்பாணக்குடாநாட்டில் மட்டுமன்றி அதற்கு வெளியே தீவகத்திலும் செல்வாக்குச் செலுத்தியதையும் சிறப்பாக அவதானிக்க முடிகின்றது. வேலணை கந்தப்பிள்ளை தமதூரில் நாவலரின் கட்டளைப்படி சைவப்பிரகாச வித்தியாலையை ஸ்தாபித்தார். கரம்பொன் முத்துக்குமாரர் அங்குள்ள திண்ணைப்பள்ளிக் கூடங்களில் கற்பித்து தமிழ்மொழியின் விருத்திக்கும் பண்பாட்டுணர்வுக்கும் பணியாற்றினார். கிறிஸ்தவ செல்வாக்கிற்கு உட்படாத ஆசிரிய கலாசாலையின் தோற்றத்திற்கு காரைநகர் அருணசல உபாத்தியாயர் பலமுயற்சிகளை மேற்கொண்டு இறுதியில் திருநெல்வேலியில் அதனை நிறுவியமை காணலாம். பிற்காலத்தில் சைவபரிபாலன சபையின் நடவடிக்கை கள் தீவகத்தையும் உள்ளடக்கியிருந்ததையும், வைதீக சைவபரிபாலனசபையின் கிளை உருவாக்கப்பட்டு அதன் தலைவராக வேலணை கந்தப்பிள்ளை நியமிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

ஆறுமுகநாவலரால் தொடக்கப்பட்ட சைவ மறுமலர்ச்சி இயக்கம் அவரது வழிவந்தவர்களால் கொழும்புக்கும் விஸ்தரிக்கப்பட்டது. கல்வி வாய்ப்பு, வேலைவாய்ப்பு, பெருந்தோட்ட ஈடுபாடு, ஐரோப்பியரின் தென்பகுதி வர்த்தகத்தில் பங்கேற்றல் போன்ற பல காரணங்களால் தென்பகுதியில் தமிழரது செல்வாக்கு உத்வேகம் பெற்றதைத் தொடர்ந்து சைவசமயப்பணிகள் அங்கும் விரிவுபடுத்தப்பட்டன. 19ஆம் நூற்றாண்டில் செட்டி வகுப்பினரும் சைவ விருத்தியில் பொருளாதாரரீதியில் பெரும்பங்களிப்புச் செய்தனர். ஈழத்தின் பல பாகங்களில் கோயில்களின் தோற்றத்திற்கு இவர்கள் காரணமாயினர். நாவலரின் பன்முகப்பட்ட ஆளுமையே சைவமறுமலர்ச்சியாளரின் இத்தகைய பணிகளின் தொடர்ச்சிக்கும் விரிவாக்கத்துக்கும் உந்துதலாக இருந்ததெனலாம் சைவத்தையும் தமிழையும் கிறிஸ்தவத்தின் செல்வாக்கிலிருந்து பாதுகாப்பதற்குரிய பணிகள் வடபகுதியில் முனைப்புப் பெற்றிருந்ததையடுத்து பௌத்தரும் இஸ்லாமியரும் தத்தம் சமய கலாசார அம்சங்களைப் பிறமதச் செல்வாக்கிலிருந்து மீட்பதற்குப் பிராயத்தனம் செய்தனர். இக்காலத்தில் இந்து, பௌத்த, இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கங்கள் ஒன்று மற்றொன்றினால் தூண்டப்பட்டு வந்தன. ஆயினும் இலங்கையின் முதலாவது சமய மறுமலர்ச்சி இயக்கத்திற்கு வித்திட்டவர் நாவலரே. இதனால் இவர் இலங்கையின் சமயமறுமலர்ச்சி இயக்கத்தின் முன்னோடி என்ற புகழுக்குரியவராகின்றார்.

நாவலர் தனியாக முன்னெடுத்த சைவ மறுலர்ச்சி இயக்கத்தை அவர் 1879 இல் மறைந்த பின்பு அவரது வழிவந்தவர்கள் பல்வேறு இயக்கங்களினூடாக முன்னெடுத்தனர். நாவலர் மறைந்ததைத் தொடர்ந்து அவரது பணிகளால் முடங்கியிருந்த கிறிஸ்தவ மிஷனறிகள் மீண்டும் புத்துயிர்ப்புப் பெற்றபோது இவ்வியக்கங்களே அவற்றை எதிர்கொண்டன. நாவலரின் சைவத்தமிழ் உணர்வுகளும் செயற்பாடுகளும் இவ்வியக்கங்களின் அடிநாதமாக விளங்கின என்பதை அவ்வியக்கங்களின் பணிகள் உணர்த்துகின்றன.

காலம் காலமாகப் பேணப்பட்டு வந்த தமிழரின் சமய, பண்பாட்டு வாழ்வை அழிய விடாது பாதுகாத்த பெருமை நாவலருக்குரியதே. மொழிபெயர்ப்பாளராக, பிரசாரகராக, புராணபடனம் செய்தவராக, ஆசிரியராக, நூலாசிரியராக, பதிப்பாசிரியராக, கண்டனகாரராக, சைவ,சைவாங்கில பாடசாலைகள் அச்சியந்திரசாலை முதலியவற்றை ஸ்தாபித்தவராக, கஞ்சித் தொட்டித் தர்மம் செய்தவராக, தமிழர் பிரதிநிதியைத் தெரிவுசெய்யக் காரணமாக இருந்தவராக எனப் பல்வேறுபட்ட ஆளுமை கொண்ட ஒரு தலைவராக நாவலர் விளங்கினார். இந்த அறிஞரின் ஆளுமை சொல்லில் அடங்கா. நாவலரின் பணியின் முக்கியத்துவத்தை பற்றி சி.வை.தாமோதரம்பிள்ளை பின்வருமாறு சுருக்கமாகக் கூறுவது அவரால் சைவ, தமிழ் சமூகம் பெற்ற மேன்மையை உணர்த்துகின்றது.

"நல்லைநக ராறுமுக நாவலர் பிறந்திலரேற்
சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே - எல்லவரும்
ஏத்துபுரா ணாகமங்கள் எங்கே ப்ரசங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே அறை"

இத்தகைய பெருமையினால் தான் அவர் வரலாற்றில் ஆளுமை கொண்ட ஒரு தலைவராக அன்றும் இன்றும் போற்றப்படுகின்றார். அவரை விஞ்சிய ஆளுமை கொண்டவொரு அறிஞரை சைவத்தமிழ் உலகம் முன்னரோ பின்னரோ கண்டு கொள்ளமுடியாது.

ஈழத்தில் சைவத் தமிழ்க் கல்வியும் நவீனத்துவமும்

ஈஸ்வரநாதபிள்ளை குமரன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

தமிழ் மாணவர்கள் சைவ சமயச் சூழலில் அம்மதம் சார்ந்த தத்துவங்கள், நம்பிக்கைகள், ஒழுகலாறுகள், வழக்காறுகள் என்பவற்றையும் தமிழ்மொழி, பண்பாடு, அறிவியல் முதலான விடயங்களையும் கற்று வருவதையே "சைவத் தமிழ்க் கல்விப் பாரம்பரியம்" என்னும் இத்தொடர் குறித்து நிற்கின்றது. சைவத்தமிழ்க் கல்வி என்ற இக் கருத்தியல் பத்தொன்பதாம் நூற்றாண்டு காலப்பகுதியிலேயே முக்கியப்படுத்திப் பேசப்பட்டு வந்தபோதிலும் அதற்கான ஊற்றுக்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே ஈழத்தில் காலூன்றியிருந்ததைக் காணலாம்.

1. சைவத் தமிழ் கல்வி மரபின் ஊற்றுக்களும் ஓட்டங்களும்

ஈழத்தில் சைவத் தமிழ்க் கல்விப் பாரம்பரியம் நீண்ட வரலாற்றைக் கொண்டது எனினும், ஈழத்தமிழர் வரலாற்றையும், தமிழ் இலக்கிய வரலாற்றையும் தொடர்ச்சியாக அறிவதில் ஏற்பட்டுள்ள தடைகள் கி.பி 14 ஆம் நூற்றாண்டுவரையில் ஈழத்து சைவத் தமிழ்க் கல்விப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியினை அறிந்து கொள்வதில் சிரமங்களை ஏற்படுத்தியுள்ளன. மேற்குறித்த கால எல்லையில் வாழ்ந்த புலமையாளர்கள் பற்றியோ, அவர்களின் பங்களிப்புக்கள் குறித்தோ அறிதற்குரிய உறுதியான ஆதாரங்கள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை. தமிழ்ப் புலமையாளர்களுக்கும் அவர்களது படைப்புக்களுக்கும் போதிய நிறுவன ரீதியான பாதுகாப்பு இல்லாமையாலும், நாட்டில் அவ்வப்போது நிகழ்ந்துவந்த படையெடுப்புக்களாலும், கையளிப்புப் பாரம்பரியத்தில் காணப்பட்ட குறைபாடுகளாலும் ஆரம்பகாலங்களில் தோன்றிய இலக்கியங்கள் அழிந்திருக்க வேண்டும். ஈழத்து இலக்கிய வரலாற்றாசிரியர்கள் "ஈழத்துப் பூதந்தேவனார்" என்னும் புலவருடன் இக்கல்விப் பாரம்பரியத்தினைத் தொடங்குவது வழமையெனினும் அப்பெயருடன் இணைந்து வந்துள்ள "ஈழம்" என்னும் அடையைத் தவிர பூதந்தேவனாரை ஈழத்தவராகக் காட்டக் கூடிய பிற ஆதாரங்கள் எவையும் கிடைக்கவில்லை. எனினும் ஈழத்தில் பரவலாகக் கிடைக்கப் பெற்றுவரும் சமகாலத்துக்குரிய கல்வெட்டுக்கள் வாயிலாக சைவத்தமிழ்க் கல்விப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியினை ஓரளவுக்குத்தானும் விளங்கிக் கொள்ள முடிகின்றது.

கி.பி 14 ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி 17 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் நிலவிய யாழ்ப்பாண மன்னர்கள், தமிழ் வன்னியர்கள் ஆட்சி ஈழத்தில் வைவத்தமிழ் கல்விப் பாரம்பரியம் செழிப்படைய வழிகோலியது. தமிழ் மன்னர்களால் தமிழ் பிரதேசங்கள் ஆளப்பட்ட இச் சூழலில் சைவத்தமிழ்க் கல்விப் பாரம்பரியம் தனது ஆளுமையைப் பலகோணங்களிலும் வளர்த்துக் கொண்டதைக் காணலாம். தமிழ் மன்னர்களின் ஆதரவும், சமகாலத்தில் தமிழகத்துக்கும் ஈழத்துக்குமிடையே காணப்பட்ட பண்பாட்டு உறவுகளும், சைவ சமயம் பெற்றிருந்த முதன்மையும், தமிழகத்திலிருந்து நிகழ்ந்த பல குடியேற்றங்களும் ஈழத்தின் சைவத்தமிழ்க் கல்விப் பாரம்பரியத்துக்குப் புது ஊட்டத்தினை நல்கின. தலபுராணங்கள், காவியங்கள், சிற்றிலக்கியங்கள் என ஆக்க இலக்கியத்துறை சார்ந்தும், வைத்தியம், சோதிடம் முதலான அறிவியல் துறை சார்ந்தும், வரலாற்றுணர்வுடனும் இலங்கியங்களைப் படைக்கக் கூடிய ஆற்றல் மிகுந்த புலவர்கள் பலர் இக்காலத்தில் வாழ்ந்ததை நோக்குகின்றபோது ஈழத்துக் கல்விப்பாரம்பரியத்தின் வீச்சினைப் புரிந்து கொள்ள முடியும்.

ஈழத்துச் சைவத்தமிழ்க் கல்விப் பாரம்பரியத்துக்கு தமிழ் மன்னர்கள், வன்னியர்கள் காலத்தைத் தொடர்ந்து வந்த போர்த்துக்கேயர் காலப்பகுதி சோதனை மிகுந்த காலமாகவே இருந்தது. ஈழத்தைக் கைப்பற்றி ஆண்ட அந்நியர்களான போர்த்துக்கேயர்கள் இலாப மீட்டுதலையும், கத்தோலிக்க மதம் பரப்புதலையும் தமது பிரதான நோக்கமாகக் கொண்டு செயற்பட்டனர். தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டுச் சுதேசமதங்களை அவர்கள் தடைசெய்தனர். இச் சூழலில் சைவமும் சைவத் தமிழ்ப்பண்பாடும் பின்னடைவைச் சந்திக்க, அதன் பின்னணியில் சைவத்தமிழ்க் கல்விப் பாரம்பரியமும் தனது செல்வாக்கையிழந்தது. எனினும் போர்த்துக்கேயரைத் தொடர்ந்து ஈழத்தின் கரையோரப் பிரதேசங்களில் ஆதிக்கம் செலுத்திய ஒல்லாந்தர் காலப்பகுதியில் ஈழத்துச் சைவத் தமிழ்க் கல்விப் பாரம்பரிய மீண்டும் தன் ஆளுமையை வெளிக்காட்டச் சந்தர்ப்பம் கிடைத்தது. ஒல்லாந்தர்கள் சுதேசமதங்களின் வளர்ச்சிக்கு இடையூறாக இருக்காமையே இதற்குக் காரணம் எனலாம். போர்த்துக்கேயர் காலப்பகுதியில் ஏற்பட்ட கோவில்களின் அழிவு, மத நம்பிக்கை இழப்பு, சமய சடங்காசாரங்கள் பற்றிய தெளிவின்மை என்பவற்றை நீக்கும் முகாமாகப் பல படைப்புக்களை இக்காலப் புலவர்கள் இயற்றினர்.

ஒல்லாந்தரைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த ஆங்கிலேயர்களின் காலப்பகுதியில் சைவத்தமிழ்க் கல்விப்பாரம்பரியம் மேலும் ஒரு சவாலை எதிர்நோக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் தள்ளப்பட்டது. ஆங்கிலேயர் காலத்தில் மதம் பரப்பும் நோக்குடன் வந்த மிஷன்களும் அவற்றின் மதப்பிரச்சார முயற்சிகளுமே சைவத் தமிழ்க்

கல்விப் பாரம்பரியத்துக்குப் பெரும் சவாலாக அமைந்தன. தமது மதம் பரப்பும் முயற்சிகளுடன் கூடவே மிஷன்கள் புரிந்து வந்த கல்விப்பணி கவர்ச்சி மிகுந்ததாக இருந்தது. இதனால் சைவ மாணவர்களின் கவனமும் அக்கல்விமுறை நோக்கிச் சாயத் தொடங்கியது. இச்சூழலில் சைவத்தமிழ்க் கல்வி மரபு தன்னைச் சுயவிமர்சனத்துக்குட்படுத்த வேண்டிய தேவை எழுந்தது. இத்தேவையின் பின்னணியில் சமகாலத்தில் வாழ்ந்த சைவத்தமிழ் அபிமானிகள் சைவத்தமிழ்க் கல்விப்பாரம்பரியத்தில் முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்த முனைந்தனர். இம் மாற்றங்கள் சைவத்தமிழ்க் கல்வியில் நவீனத்துவத்தைத் தவிர்க்க முடியாமல் அறிமுகஞ் செய்தன.

2. மரபுவழியில் வளர்ந்த சைவத்தமிழ்க் கல்வி

பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவத்தமிழ்க் கல்வி நவீனத்துவத்தை உள்வாங்குவதற்கு முன்னதாக அக்கல்வியானது முற்றிலும் மரபு வழியிலேயே வழங்கப்பட்டு வந்ததைக் காணலாம். மரபுவழிக்கல்வி குருவுக்கு முதன்மை தந்தது. மாணவனின் கற்றல் சம்பந்தப்பட்ட சகல விடயங்களையும் தீர்மானிக்கின்றவ ராகக் குரு காணப்பட்டார். மாணவன் குருவை நாடிச் சென்று அவருடனுறைந்து கல்வியைப் பெறுவது இக்கல்வி முறையின் பொதுவான மரபாகும். பெரும்பாலும் குருநெருங்கிய உறவினரின் பிள்ளைகள், நண்பர்களின் பிள்ளைகள், பழைய மாணாக்கரின் பிள்ளைகள் எனத் தனக்கு நன்றாகத் தெரிந்தோரின் பிள்ளைகளையே மாணாக்கர்களாகச் சேர்த்துக் கொள்வதுண்டு. மரபுவழிக் கல்வியில் பாடத்திட்டத்தைத் தீர்மானிப்பவரும் குருவே. தான் கற்றவற்றைக் கொண்டும், தனக்குக் கற்பிக்கப்பட்ட முறையியலை மாதிரியாகக் கொண்டும் கரு பாடத் திட்டத்தை உருவாக்குவார். பெரும்பாலும் அரிச்சுவடி, நீதிநூல்கள், நிகண்டுகள் என்பவற்றை ஒழுங்கு முறையாகக் கற்பித்த பின்னர் இலக்கியங்களையம் இலக்கணங்களையும் கற்பிப்பது பொதுவான வழக்காறாக இருந்தது. பல நூல்களை மேலெழுந்த வாரியாகக் கற்காமல் குறிப்பிட்ட ஒரு சில நூல்களை மட்டும் ஆழமாகக் கற்கும் முறை மரபுவழிக் கல்வியின் முக்கியமானதோர் அம்சமாகும். மரபு வழியாசிரியர் கற்பிக்கத் தெரிவு செய்யும் நூல்களில் அவருக்கு ஆழமான புலமையும் விருப்பும் காணப்படும்.

இக்கல்வி முறையில் நேரசூசி என்று எதுவும் இருந்ததில்லை. குரு தனக்கு ஓய்வான நேரங்களில் அல்லது தனக்கு கற்பிப்பதற்கு உசிதமாது எனக் கருதுகின்ற நேரங்களில் கற்பிப்பார். கற்பித்தல் இரண்டு, மூன்று மணித்தியாலங்கள் எனத் தொடர்வதுமுண்டு. மரபுவழிக்கல்வியில் பரீட்சித்தல் என்பது "மனனம் செய்து ஒப்புவித்தலையே குறிக்கும். மனனம் செய்து ஒப்புவிக்கும் திறனே மாணவரின் திறமைக்கு அடையாளமாகச் சுட்டப்பட்டது. மரபுவழியறிஞர்களின் மனனத்திறனையும் ஞாபகத்திறனையம் புடம் போட்ட ஓர் அம்சம் இவ்வாறான மனனப் பயிற்சியே. இக்கல்வி முறையில் குருவுக்கு வேதனம் என எதுவும் வழங்கப்படுவதில்லை. மாணவர்களோ, அவர்களது பெற்றோர்களோ குறிப்பிட்ட ஒருதொகையைப் பணமாகவோ, பொருளாகவோ தட்சணையாகக் கொடுப்பதுண்டு. இலக்கியங்கள் இலக்கணங்கள் தத்துவம், சமயம், சோதிடம், வட மொழி என சைவத் தமிழ்க் கல்வி முறைமைக்கு ஏற்ற அறிவையும் பயிற்சியையும் குரு மாணவர்களுக்கு வழங்குவார்.

இவையே மரபுவழிக் கல்வியின் முக்கியமான பண்புகளாகக் காணப்பட்டன. இப்பண்புகளில் நின்றும் முற்றிலும் வேறுபட்ட நிறுவன அடிப்படையிலான கல்விமுறைமையை மிஷனரிமார்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்தில் பரவலாக அறிமுகம் செய்தனர்.

நிறுவன ரீதியான கல்வி முறையின் தோற்றமும் வளர்ச்சியும்

நிறுவன ரீதியான கல்வி முறை ஈழத்தில், மிஷனரிமார்களின் வருகையுடனேயே பரவலடையத் தொடங்கியது. எனினும் அக்கல்விமுறைமையின் சுவடுகளை போர்த்துக்கேயர் காலத்திலேயே அவதானிக்க முடிகின்றது. நிறுவனரீதியான கல்வியின் முக்கிய அலகாக அமையும் பாடசாலைகளைப் போர்த்துக்கேயர்கள் தாங்கள் அமைத்த கத்தோலிக்க தேவாலயங்களை அண்டி அமைத்தனர். இப்பாடசாலைகள் "கோவிற் பற்றுப் பாடசாலைகள்" (Parish Schools) என வழங்கப்பட்டன. பிரதானமாகக் கத்தோலிக்கக் குருமாருக்கு வேண்டிய அடிப்படை மொழியறிவு, சமயம் சார்ந்த அறிவு என்பனவே இப்பாடசாலைகளூடாக வழங்கப்பட்டன. கல்வி மக்களை நோக்கி இக்காலப் பகுதியில் பரவலடையவில்லை.

போர்த்துகேயருக்குப்பின் ஈழத்தில் அதிகாரம் செலுத்திய ஒல்லாந்தர்கள் பாடசாலைகளை அமைத்திருந் தமை பற்றி அவர்களின் தோம்புகளினூடாக அறியமுடி கின்றது. இப்பாடசாலைகளில் போர்த்துகேயர் காலப் பாடசாலைகளில் வழங்கப்பட்டது போன்றே அடிப்படை மொழியறிவு, சமய அறிவு என்பனவும் விசேடமாக உள்ளூர் நிர்வாகத்தினைக் கொண்டு நடாத்துவதற்குத் தேவையான அறிவும் வழங்கப்பட்டன. கம்பனி ரீதியாகத் தொழிற்பட்ட ஒல்லாந்தர்கள் இலாபமீட்டுதலைத் தமது நாட்டிலிருந்து அதிகாரிகளைக் கொண்டுருந்தனர். வெளியூரிலிருந்து அல்லது தமது நாட்டிலிருந்து அதிகாரிகளைக் கொணர்ந்து உள்ளூர் நிர்வாகத்தை நடாத்துவது பெரும் பொருட் செலவுக்குக் காரணமாகும் எனக் கருதிய அவர்கள் உள்ளூர். மக்களுக்கு கல்வியறிவைத் தருவதனூடாக அவர்களைக் குறைந்தது குறிப்பிட்ட சில உத்தியோகங் களுக்குத் தானும் நியமிக்கலாம் என எண்ணினர். இதன் பின்னணியிலேயே உள்ளூர் மக்களுக்குக் கல்வியறி வினைத் தர விழைந்தனர். இதனால் ஈழத்தில் வாழ்ந்த குறிப்பிட்ட ஒரு சதவீத்தினர் நிறுவன ரீதியான கல்வியறிவைப் பெறக் கூடியதாக இருந்தது. ஒல்லாந்தர் கால இலக்கிய ஆக்க முயற்சிகளிலும், இலக்கியங்களை ஆக்குவிக்கும் செயற்பாட்டிலும் அதிக அக்கறை காட்டி வந்தவர் இங்ஙனம் ஒல்லாந்தர் பாடசாலைகளுக்கூடாகப்

பயிற்சி பெற்று வந்தோரே. இங்ஙனம் நிறுவனரீதியான கல்வி முறைமை அந்நியராட்சிக் காலம் முதற் கொண்டே ஈழத்தில் காலூன்றத் தொடங்கினாலும் அதற்கு உறுதியான வடிவத்தினைத் தந்தவர்கள் மிஷனரிமார்களே.

4. மிஷன்களின் வருகையும் கல்விப்பணியும்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் ஆட்சிச் சூழலில் மிஷனரிமார்கள் பலர் ஈழத்துக்கு வகை தந்து மதம் பரப்பும் முயற்சிகளில் ஈடுபட்டமை யாவரும் அறிந்ததொன்றே. தமது மதம் பரப்பும் முயற்சிகளின் ஓரம்சமாக அவர்கள் பாடசாலைகளைக் கட்டியெழுப்பினர். குறிப்பாக யாழ்ப்பாணத்தின் பலபாகங்களிலும் அவர்களால் பாடசாலைகள் பல உருவாக்கப்பட்டன. மிஷனரிமார்கள் பாடசாலைகளை அமைத்து கல்வியை வழங்க முன்வந்தமைக்கு இரண்டு காரணங்கள் அடிப்படையாக அமைந்தன.

1. ஈழத்தவருக்கு வரன்முறையான கல்வியை வழங்குவத னூடாக அவர்களைச் சுதேச மத மூடநம்பிக்கைகளில் இருந்து விடுவிக்க முடியும் என நம்பிய மிஷனரிமார்கள் இங்ஙனம் இந்து சமய நம்பிக்கையில் நின்று அவர்களை விடுவிப்பதனூடாக இலகுவாகக் கிறிஸ்தவத்தை அவர்கள் மத்தியில் பரப்ப முடியம் எனக் கருதினர்.

2. அதேபோல தமது பாடசாலைகளை நோக்கிக் கல்விகற்கும் நோக்குடன் வருகின்ற ஏராளமான இந்து மாணவர்களைக் கிறிஸ்தவ மதத்துக்கு மாற்றிக் கொள்ளலாம் எனவும் அவர்கள் நம்பினர்.

அதேநேரத்தில் ஆங்கிலேயரும் தமது நிர்வாக அலுவல்கள் விரிவாக்கப்பட்டதால் தேவையான நிர்வாகி களைச் சுதேசிகள் இடத்திலேயே உருவாக்கிக் கொள்வதற் காகக் கல்வி அறிவைச் சுதேசிகளுக்கு வழங்க வேண்டும் என விரும்பினர். இதன் பின்னணியில் மிஷனரிமார்களின் பாடசாலைகளை அமைத்தல், கல்விப் போதனைகளை வழங்குதல் போன்ற முயற்சிக்கு அவர்களும் தமது அங்கீகாரத்தைத் தந்தனர்.

மிஷனரிமார்கள் எதிர்பார்த்தது போலவே ஈழத்தவருள் குறிப்பிட்ட சதவீத்தினர் கல்வியறிவைப் பெற்றுக் கொள்ளும் முகமாக மிஷனரிமாரின் பாடசாலைகளுக்குச் செல்வதில் ஆர்வங்காட்டினர்.

1. சமூகத்தில் நல்ல வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு நிறுவனரீதியான கல்வியறிவு சுதேசிகளுக்குத் தேவையானதாக இருந்தது.

2. அன்றியும் சமூக அந்தஸ்தை உயர்த்திக் கொள்வதற்கு நிறுவனரீதியான கல்வியறிவைப் பெற வேண்டிய நிர்ப்பந்தமும் காணப்பட்டது.

அக்காலத்தில் நிறுவனரீதியான கல்வியை வழங்கும் ஒரே அலகுகளாக மிஷனரிமார்களின் பாடசாலைகளே விளங்கின. மரபுரீதியான சைவத்தமிழ்க் கல்வியைப் பெற்றோரும் மேலே குறிப்பிட்ட நோக்கங் களுக்காகப் பாடசாலைகளை அணுகினர். அவர்கள் வரிசையில் ஆறுமுகநாவலரும் ஒருவர்.

5. ஆறுமுகநாவலரும் சைவத்தமிழ்க் கல்வியும்

ஆறுமுகநாவலரின் ஆரம்பக் கல்வி மரபுவழிப்பட்ட தாகவே இருந்தது. இருபாலை சேனாதிராச முதலியார், சரவணமுத்துப் புலவர் முதலான மரபுவழி அறிஞர் களிடமிருந்து இலக்கிய இலக்கணங்களைக் கற்றுக் கொண்டார். தொடர்ந்து 1834 இல் ஆங்கிலக்கல்வியை அக்காலத்தில் உவெஸ்லியன் மிஷனரிமாரால் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைக்கப்பட்டிருந்த பாடசாலையில் கற்கத் தொடங்கினார். ஏழு வருடங்கள் அப்பாடசாலையில் கல்வியைத் தொடர்ந்த நாவலர் அங்கு பெற்றுக் கொண்ட கல்வி சார்ந்ததும், கல்விசாராததுமான அனுபவங்கள் பலவாகும். உவெஸ்லியன் மிஷன் பாடசாலை அதிபராக இருந்த பீற்றர் பேர்ச்சில் அடிகளாரின் தொடர்பு அவரைப் பல நிலைகளிலும் உயர்த்தியது. புவியியல், வரலாறு, எண்கணிதம், மொழி எனப் பலதுறைகளிலும் பரந்த அறிவினை ஆறுமுகநாவலர் இங்க தேடிக்கொண்டார். மரபுவழிக்கல்வி தந்த ஆழமான கல்வி அறிவும் பாடசாலையூடாகப் பெற்ற அகலமான கல்வியும் அவரைச் சிறந்த அறிவாளியாக, சிந்தனையா ளராக, சமூகசேவகராக, படைப்பாளியாக, தீர்க்கதரிசனங் கொண்டவராக மாற்றியமைத்தன.

பீற்றர் பேர்சிவெல் ஆறுமுகநாவலரின் திறமை களை உணர்ந்து அவர் கற்ற அதே பாடசாலையில் கற்பிக்கவும் அவருக்கு வாய்ப்பளித்தார். ஆரம்ப வகுப்புகளுக்கு ஆங்கிலத்தையும் மேல் வகுப்புகளுக்குத் தமிழையும் சில ஆண்டுகள் நாவலர் கற்பித்து வந்தார். அப்பாடசாலையில் கற்பித்த காலங்களில் கற்பித்த முறைமைகள், பாடவிதானங்களை ஒழுங்கமைத்தல், பாடசாலையின் நிர்வாகத்தை நடாத்துதல் முதலான பல விடயங்கள் சார்ந்து அனுபவ அறிவினை அவர் பெறக்கூடியதாக இருந்தது. இவ் அனுபவங்கள் பிற்காலங்களில் அவர் சைவத் தமிழ்க் கல்வியினை நிறுவனமயப்படுத்தும் போது மிகச் சிறந்த அனுகூலங் காளக அமைந்தன.

சைவத்தமிழ்ப் பிள்ளைகள் கல்வியைப் பெற்றுக் கொள்ளுதற் பொருட்டு மிஷனரிமாரின் பாடசாலைக்குச் செல்வதும் அங்கு மனம்மாறி அல்லது நிர்ப்பந்தத்திற் குள்ளாகி மதம் மாறுவதையும் நாவலர் தனது அநுபவங்கள் வாயிலாக அறிந்திருந்தார். உவெஸ்லியன் மிஷன் பாடசாலையில் கல்வி கற்றுக் கொண்டிருந்த காலங்களில், விரும்பாத பட்சத்திலும் கிறிஸ்தவ மதப்பிரார்த்தனைகளில் அவர் ஈடுபடுத்தப்பட்ட சந்தர்ப்பங்களும் இருந்தன. மதமாற்றமும் அதன் வினைவாக சைவ மாணவர்களின்

இடர்பாடும் நாவலரின் மனதிலே ஏற்படுத்திய தூண்டுதலே அவர் சைவத்தமிழ்ப் பாடசாலைகளை உருவாக்க முனைந்தமைக்கு முக்கிய காரணம் எனலாம்.

சைவப்பிள்ளைகள் சைவத்தமிழ்ச் சூழலில் கற்க வேண்டும் என்பதே அவரது நோக்கமாக அமைந்தது.

சைவ சமயம் வளரவேண்டுமானால், சைவத் தமிழ்ப் பண்பாட்டு அடையாளங்கள் பேணப்பட வேண்டுமானால் சைவத் தமிழ்ப்பாடசாலைகள் அவசியம் என அவர் வாதிட்டார். ஆறுமுகநாவலரின் சைவத்தமிழ்க் கல்விக்கு ஆதரவான கருத்துக்கள் வெறுங்கோஷங்களாக மட்டும் அமைந்துவிடமால் செயல் வடிவமும் பெற்றன. இதன்விளைவாக வண்ணார் பண்ணையில் அமைக்கப் பட்டிருந்த திண்ணைப்பாடசாலை சைவப்பிரகாச வித்தியா சாலையாகத் தரமுயர்த்தப்பட்டது. சைவத்தமிழ்ப் பாடசாலை எப்படியிருக்கவேண்டும், அங்கு எவ்விதமான நிர்வாகம் இருக்கவேண்டும், பாடத்திட்டம் எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட வேண்டும் என்பது பற்றி ஆறுமுகநாவலர் முன்மாதிரியை அப்பாடசாலையில் செய்துகாட்டினார்.

6. சைவத் தமிழ்ப் பாடசாலைகளின் உருவாக்கம்

நாவலரின் முன்மாதிரியை அடியெற்றி யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் சைவத் தமிழ்ப் பாடசாலைகள் கட்டியெழுப்பப்பட்டன.

1. இதுவரைகாலமும் திண்ணைப் பாடசாலைகளாக மரபுவழிப் புலமையாளர்களால் நடாத்தப்பட்டு வந்த பாடசாலைகள் பல நிறுவனரீதியான பாடசாலை களாகத் தரமுயர்த்தப்பட்டன.
2. சைவ மத உணர்வும், பொதுநல மனப்பாங்கும் கொண்ட செல்வந்தர்கள் தத்தம் ஊர்களிலே பாடசாலைகளைக் கட்டினர்.
3. ஆங்கிலேய அரசாங்க காலத்தில் உயர்பதவிகளைப் பெற்றிருந்த மதப்பற்றும் தாய்மொழிப் பற்றும் கொண்ட பெரியோர்கள் சிறிய அளவிலே ஊர்கள் தோறும் பாடசாலைகளை அமைத்து வந்தனர்.
4. ஒல்லாந்தர் காலத்தில் வளர்ச்சி கண்ட உள்ளூர்ப் பிரபுத்துவமும் சைவத்தமிழ்ப் பாடசாலைகளின் உருவாக்கத்தில் குறிப்பிடத்தக்க பங்கினை வகித்தது.
5. சைவசமயப் பற்றுணர்வு கொண்டோரால் ஒருங்கி ணைந்து உருவாக்கப்பட்ட இந்துசபை (Hindu Board) பல பாடசாலைகளை மிக விரைவாகக் குடாநாட்டின் பல பாகங்களிலும் அமைக்கலாயிற்று.

இவற்றால் சைவத்தமிழ்க்கல்வி யாழ்ப்பாணத்தில் மீண்டும் தழைத்துச் செழித்து வளரக் கூடியதாக அமைந்தது.

7. சவால்கள்

சைவத்தமிழ்ப் பாடசாலைகள் உருவாகியதுடன் அவற்றின் கல்வி நடவடிக்கைகள் தொடர்பான ஆழ்ந்து சிந்திக்கவேண்டிய தேவை ஏற்பட்டது. ஏனெனில் இதுவரை காலமும் சைவத் தமிழ்க் கல்வி மரபுவழியாகவே வழங்கப்பட்டு அல்லது கையளிக்கப்பட்டு வந்தது. அக்கல்வி முறையை நிறுவனரீதியான பாடசாலைகள் உருவாக்கப்பட்ட சூழலில் தொடர்வதா அல்லது புதிய சைவத்தமிழ்க் கல்வித்திட்டத்தை முன்வைப்பதா என்பது அக்காலக் கல்வியியலாளர்கள் முன் எழுந்த முக்கியமான பிரச்சினையாகும்.

மரபுவழிக்கல்வியை அப்படியே நிறுவனரீதியான பாடசாலைகளில் புகுத்துதல் என்பது முடியாத காரியமாக இருந்தது. ஏனெனில் மரபுவழிக்கல்வியும் நிறுவனரீதியான கல்வியும் ஒத்த பண்புகளைக் கொண்டனவாக அமையவில்லை. அவற்றுக்குள் ஒற்றுமைத் தன்மையிலும் பார்க்க வேற்றுமையே துருத்திக் கொண்டு நிற்பதைக் காண முடியும். இதனால் மரபுவழிக்கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்துதல் அல்லது புதியதொரு சைவத்தமிழ்க் கல்வி மரபை வடிவமைத்தல் பற்றி சைவத்தமிழார்வலர்கள் சிந்திக்கத் தொடங்கினர். இச்சிந்தனையின் வெளிப் பாடாகவே சைவத்தமிழ்க் கல்வியில் நவீனத்துவத்தைப் புகுத்தல் அல்லது ஏற்றுக்கொள்ளுதல் பற்றி, ஆறுமுகநாவலர் உள்ளிட்ட கல்வியியலாளர்கள் பேசினர்.

8. நவீனத்துவம்

இவ்விடத்தில் நவீனத்துவம் என்றால் என்ன என்பது சிந்திப்பது அவசியமானதாகும். நவீனத்துவம் என்னும் இப்பதம் ஆங்கிலத்தில் வழங்கப்படும் Modernism என்னும் சொல்லுக்கு நிகராகத் தமிழில் வழங்கப்படும் சொல்லாகும். வழிவழியாக வழங்கிவரும் மரபிலிருந்து விடுபட்டுப் புதுமையை நாடுதல் அல்லது விரும்புதல் எனப் பொருள் தருவர். பதினெட்டம் நூற்றாண்டில் ஐரோப்பாவின் செல்வாக்கு பெற்றிருந்த இதன் தாக்கம் ஐரோப்பியர்கள் கீழைத்தேசங்களில் தமது காலனித்துவத்தை விரிவுபடுத்திய காலங்களில் அங்கும் பரவலடைந்தது. மிஷனரிகள் வழங்கிய ஆங்கிலக்கல்வியும் மேலைத்தேய அறிவியல், இலக்கிய அறிவும் நவீனத்துவம் கீழைத் தேசங்களில் கால்கொள்ளக் காரணமாயின. புகையிரதப் பாதைகள், பெருந்தெருக்கள்,என்பவற்றை அமைத்ததைத் தொடர்ந்தும் தபால் தந்தித்தொடர்புகள் விருத்தியடைந்தன் பின்னணியிலும் நவீனத்துவம் மிக வேகமாகப் பரவலடைந்தது.

நவீனத்துவத்தின் செயன்முறைத்தாக்கம் இரண்டு நிலைகளில் கீழைத்தேசங்களில் உணரப்பட லாயிற்று.

1. பழமையை முற்றாக மறுதலித்து நவீனத்துவத்தை முழுமையாக ஏற்க ஒரு சாரார் முனைந்தனர்.
2. பழமையைப் பாதுகாக்க புதுமையில் வேண்டியவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்னும் மனப் போக்கு

கொண்டவர்களாக இன்னொரு சாரார் விளங்கினர். இது ஒருவகையில் பழமையைப் பாதுகாப்பதாக விளங்கியது.

இவற்றுள் இரண்டாவது நிலைப்பாட்டினைக் கொண்டவர்களாகவே ஈழத்தில் வாழ்ந்த சைவத் தமிழார்வலர்கள் செயற்பட்டனர். சைவத்தமிழ் மரபுவழிக்கல்வியின் தொடர்ச்சியினையும் வளர்ச்சியினையும் பேணிப்பாதுகாப்பதற்கு அக்கல்வி மரபில் மாற்றங்கள் அடிப்படையானவை என்பதை அவர்கள் உணரத் தலைப்பட்டனர். புதிய சவால்களுக்கும், புதிய சமூகத் தேவைக்கும் ஏற்ற வகையில் சைவத்தமிழ்க் கல்வியை மெருகுபடுத்த வேண்டியதன் பின்னணியிலே பல மாற்றங்களை அவர்கள் துணிவுடன் செயற்படுத்த விழைந்தனர். இம்மாற்றங்கள் பாடசாலை நிர்வாகம், பாடத்திட்டம், கற்பித்தல் அணுகுமுறை, பாடப்புத்தகங்கள் எனப் பல நிலைகளிலும் வெளிப்பட்டன. இம் மாற்றங்களுக்கெல்லாம் ஏற்ற முன்மாதிரிகளையும் முற்போக்கான மாற்றங்களையும் செய்தவர் என்ற அடிப்படையில் ஆறுமுகநாவலர் குறிப்பிட்டுச் சொல்லத் தக்கவராகவுள்ளார்.

9. ஆறுமுகநாவலரின் முதன்முயற்சிகள்

ஆறுமுகநாவலருக்கு மிஷனரிமார்களின் பாடசாலையில் கற்ற, கற்பித்த அனுபவங்கள் நிறுவனமயப்பட்ட கல்வி முறை பற்றிய பூரண அறிவைத் தந்திருந்தன. பாடசாலை நிர்வாகத்தை கொண்டு நடாத்தல், பாடப்புத்தகங்களை எழுதுதல், பாடத் திட்டங்களை ஒழுங்கமைத்துக் கொள்ளுதல் எனப் பலவவற்றிற்கான முன்மாதிரிகளை அவர் அங்கிருந்து கற்றும், அறிந்தும் கொண்டார். ஆனால் மிஷனரிமார்களின் கல்விமரபை அப்படியே முழுமையாகத் தழுவி சைவத்தமிழ்க் கல்வி மரபை அவர் ஒழுங்குபடுத்த அல்லது நவீனமயப்படுத்த விழையவில்லை. மாறாக, சைவத்தமிழ்க் கல்வியின் நவீனமயமாக்கத்திற்கு எவை தேவையோ அவற்றை மட்டுமே அறிமுகப்படுத்த அவர் முனைந்ததைத் காணலாம்.

பாரம்பரிய மரபுக்கல்வியின் பழமையும், சிறப்பும், பெருமையும், பிரயோசனமும் மாணவர்களுக்கு விளங்கத்தக்க வகையில் அதனைக் கவர்ச்சியுடைய தாக்குவது அவரின் நோக்கமாக அமைந்தது. மிஷனரி மாரின் பாடசாலைகளை நாடும் மாணவர்களுக்கு சைவத்தமிழ்க் கல்வியும் சளைத்ததல்ல என்பதைக் அவர் காட்ட முனைந்தார். இந்நோக்கில் சைவத்தமிழ்க் கல்விமரபில் ஆறுமுகநாவலர் ஏற்படுத்திய மாற்றங்களிலே இரண்டு முக்கியமான பண்புகள் வெளிப்பட்டு நிற்கின்றன.

1. மரபுவழிக் கல்வியின் நோக்கினையும் இலக்கினையும் மாற்றியமைக்காத அல்லது குழப்பாத வகையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. மாணவர்களை அறிவுள்ளவர்களாக மாற்றுவதோடு மட்டும் அமையாது அவர்கள் சமயநம்பிக்கை, தமிழ்ப்பற்று, ஒழுக்கம் என்பவற்றோடு கூடியவர்களாக வளரவேண்டும் என்பது மரபுவழிக்கல்வியின் இலக்காக அமைந்தது. அதற்கேற்ற வகையிலேயே மரபுவழிக்கல்வியின் பாடத்திட்டங்கள், கற்பித்தல் முறை முதலானவை அமைந்திருந்தன. இந்த இலக்கினை நவீனமய மாக்கத்தில் ஈடுபட்ட ஆறுமுகநாவலர் மாற்றியமைக்க வில்லை மாணவர் கல்விறிவுடன் கூடவே சமய அறிவும், தமிழறிவும் வாய்க்கப்பெற்றவர்களாக இருக்க வேண்டும் என அவர் வாதிட்டார்.

2. ஆனால் மரபுவழிக்கல்வியின் கற்பித்தல் முறைமைகள், பாடத்திட்ட ஒழுங்கமைப்புகள் என்பன நவீனமய மாக்கத்திற்கு இடர்பாடாக இருந்தன. புதிய தேவை களுக்கும் சவால்களுக்கும் அவை இயைந்து போகக் கூடியனவாக இருக்கவில்லை. மிஷனரிமாரின் கவர்ச்சி மிக்க போதனைகளுடன் ஒப்பிடும்போது மரபுவழிக்கல்விப் போதனைகள் சமகாலத்தில் பின்தங்கியே இருந்தன. இதனால் மரபுவழிக்கல்விப் போதனைகளை புதிய தேவைகளுக்கும் சவால்களுக்கும் ஏற்றவகையில் மாற்றியமைக்க வேண்டும் என எண்ணியதோடு மட்டுமல்லாது அதனைச் செயற் படுத்தியும் காட்டினார்.

இதுவரைகாலமும் நிறுவன வரையறைக்குள் வராத சைவத்தமிழ்க் கல்விமரபை நவீனமயப்படுத்துவது என்பது சவால் மிகுந்த பாரிய பணியாகவே இருந்தது. பாடசாலைகளைக் கட்டியெழுப்புதல் ஒருபுறமிருக்க ஆசிரியர்கள் நியமித்தல், புதிய கல்விமுறைக்கு ஏற்ப அவர்களைப் பயிற்றுவித்தல், வேதனங்களை வழங்குதல் என்பன கடினமான காரியங்களாகவே இருந்தன. எனினும் சைவத்தமிழ்க் கல்விமரபை அழியாது பேண வேண்டும், மிஷனரிமார்களுக்குச் சவாலாக அதனை மேனிலைப் படுத்த வேண்டும் என்ற ஆர்வ உணர்வு அப்பணியில் ஈடுபட்ட ஆறுமுகநாவலர் முதலானோருக்கு மனோ தைரியத்தை வழங்கியது.

பிடியரிசி சேகரித்தும் பாடசாலைகளை நடத்த முடியும் என்ற உறுதிப்பாட்டை ஆறுமுக நாவலர் வளர்த்தார். வேதனங்களைப் பல ஆண்டுகள் வாங்காமலே சில ஆசிரியர்கள் சைவத்தமிழ்ப் பாடசாலைகளில் தமது சேவைகளை வழங்கியிருந்தனர். மிஷனரிமாரின் பாடசாலையில் வழங்கப்படும் ஆசிரிய வேதனத்திலும் மிகக் குறைந்த ஊதியத்தைப் பெற்றுக் கொண்டும் சைவத் தமிழ்ப்பாடசாலைகளில் பணியாற்றிய ஆசிரியர்கள் பலராவர். இங்ஙனம் சேவை நோக்குடன் செயற்பட்டோருக் குச் சைவத்தமிழ்க் கல்வியை மீண்டும் புத்துயிர்ப்புச் செய்வதே பெருவிருப்பாக அமைந்தது. இவ்வுணர் வொன்றே அவர்கள் சேவை நோக்குடன் தம்மை அர்ப்பணிக்கக் காரணமாகவும் அமைந்தது.

சைவத் தமிழ்க் கல்வியின் நவீனமயமாக்கத்தில் பாடத்திட்டத்தினை வரையறுப்பதும் மிக முக்கியமான தேவையாக இருந்தது. இதுவரை காலமும் மரபுவழியாக வழங்கப்பட்டு வந்த சைவத் தமிழ்க்கல்விப் பாடத்திட்டம் நிறுவனரீதியாக கல்வி மரபு மாற்றமடையும் சந்தர்ப்பத்தில்

கவர்ச்சிகரமானதாக அமையவில்லை. மாறாக மாணவர்களுக்கு ஒரு சுமையாகவே விளங்கியது. அல்லாமலும், மிஷனரிமார்களால் பாடசாலைகளில் வழங்கப்பட்டு வந்த பரந்த, பலதுறைகளையும் உள்ளடக்கிய கல்விமரபுக்கு ஈடுகொடுக்கவும் அதனால் முடியவில்லை. இதனால் சைவத்தமிழ்க் கல்வியின் பாடத்திட்டத்தை மாற்றியமைக்க ஆறுமுகநாவலர் உள்ளிட்ட அக்காலக் கல்வியியலாளர்கள் தீர்மானித்தனர். புதிய பாடத்திட்டம் நவீன சவால்களை எதிர்நோக்கக் கூடிய வகையில் உருவாக்கப்பட்டது. பாடத்திட்டத்தினை உருவாக்கிய வேளையில் பாடத்திட்டத்திற்கு அமைவாகப் பாடநூல்களும் தேவையாக அமைந்தன. இத்தேவையைக் கருத்திற்கொண்டு பல பாடநூல்களைச் சைவத்தமிழ் ஆர்வலர்கள் எழுதி வெளியிட்டனர். ஆறுமுகநாவலர் இம்முயற்சிகளில் முன்னோடியாக விளங்கினார். மிஷனரிமாரின் பாடசாலைகளில் கற்ற, கற்பித்த காலங்களில் அவர்களது பாடநூல்களைப் படித்தும் கண்டும் பெற்ற அநுபவங்கள், சைவத்தமிழ் சூழலுக்குத் தரமான பாடநூல்களைத் தரவேண்டும் என்ற ஆர்வ உணர்வு, பாடநூல்களை அச்சிடுவதற்குரிய அச்சக பாடநூல்களை தரவேண்டும் என்ற ஆர்வ உணர்வு, பாடநூல்களை அச்சிடுவதற்குரிய அச்சக வசதிகளைப் பெற்றிருந்தமை போன்ற காரணிகள் அவரைப் பாடப்புத்தகங்களை வெளியிடும் பணியில் ஈடுபடுத்தின. நாவலரின் பாலபாடங்கள், சைவவினாவிடை, இலக்கண வினாவிடை, இலக்கணச் சுருக்கம், நன்னூற் காண்டிகையுரை முதலானவை சைவத் தமிழ் மாணவர்களின் பாடநூல் தேவையை நிறைவு செய்யும் விதத்திலே அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டன. நாவலரின் பாடநூல் ஆக்க முயற்சிகளில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க முக்கியத்துவம் பெற்றவை அவரின் பாலபாடங்களே ஆகும்.

10. பாலபாடங்கள்

நாவலர் மாணவர்களின் நலன்கருதி சைவத்தமிழ்க் கல்வியின் பிழிசாறாக நான்கு பாலபாடங்களை எழுதி வெளியிட்டார். அவை நான்கும் அவரது அச்சகத்திலேயே அச்சிடப்பட்டன. சைவத்தமிழ்க் கல்வி மரபின் தனித்துவமும், சிறப்பும், இலக்கும் தெளிவாக வெளிப்பட்டு நிற்கும் விதத்தில் இப்பாலபாடங்கள் உருவாக்கப் பட்டுள்ளதைக் காணலாம். தமிழறிவு, சமய அறிவு கூடவே வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு ஏற்ற அறிவுரைகளை மிக ஒழுங்காகவும் மாணவர்களின் மளவளர்ச்சிப் படிநிலைக்கு ஏற்றவகையிலும் நாவலர் அமைத்துள்ளார். எக்காலத்திலும் சைவத்தமிழ் மாணவர்கள் படித்துப் பலன்பெறத்தக்க அரியபல விடயங்கள் இந்நூலிலுள்ளன.

சைவம், தமிழ் என்னும் தளங்களில் காலூன்றி நின்று மாணவர்கள் ஒவ்வொருவரும் முன்னேறக் கூடிய வழிவகைகளை நாவலர் அறிவியல் ரீதியாகவும், அனுபவரீதியாகவும் சமயநெறி முறைகளுக்கூடாகவும் கூறிச் செல்வதைக் காணலாம். மாணவர்களை நற்பிரஜைகளாக்குவதும் சமய நம்பிக்கை கொண்டவர களாக்குவதும் பாலபாடங்களின் முக்கிய நோக்கமாக அமைந்தது. குறிப்பாக சொல்வதானால் சமய அடிப்படை யில் எழுந்த சீர்திருத்தப்பின்னணியில் நாவலர் இப்பாடநூல்களை அமைத்துள்ளார்.

பாலபாடங்களை நாவலர் ஒழுங்கமைத்துள்ள விதம் பாராட்டத்தக்கது. மாணவர்களுக்குப் படிமுறை ஒழுங்கில் பாடம் புகட்டுவதற்கு வசதியாகப் பாலபாடங்கள் எழுதப் பட்டுள்ளன. முதற் பாலபாடம் நாற்பத்தைந்து பாடங் களைக் கொண்டது. ஆரம்ப எழுத்தறிவுடன் கூடவே மொழிப் பயிற்சியை வழங்கத்தக்க வகையில் முதற் பாலபாடம் உருவாக்கப்பட்டுள்ளது. முதலில் அரிச்சுவடியை அறிமுகஞ்செய்யும் நாவலர் அதனைத் தொடர்ந்து எழுத்துக்களைக் கொண்டு சொற்கள் அமைக்கும் முறையைப் பழக்குகின்றார். சொல்லாக்கம் எண்ணிக்கை யடிப்படையில் ஓரெழுத்துச் சொற்கள், ஈரெழுத்துச் சொற்கள் என ஓர் ஒழுங்கில் அமைவது கவனிக்கத் தக்கதாகும். சொற்களைத் தொடர்ந்து சொற்றொடர்களை அறிமுகஞ் செய்கிறார். சொற்றொடர்கள் படிப்படியாக வளர்ந்து வாக்கியங்களாகும் முறைமை அவரால் தொடர்ந்து எடுத்துக் காட்டப்படுகின்றது. முதலில் எழுவாய் பயனிலைகளால் மட்டும் அமையக் கூடிய சிறிய சிறிய வசனங்களை அடையாளங் காட்டும் நாவலர் பின்னர் நீண்ட தொடர் வாக்கியங்களையும், கூட்டு வாக்கியங் களையும் மாணவருக்கு அறிமுகஞ் செய்கின்றார். கூடவே கலப்பு வாக்கியங்களையும் அவர் சுட்டிக்காட்டுவது நோக்கத்தக்கதாகும். வாக்கியக் கட்டமைப்பு அறிமுகத்து டன் முதற்பாலபாடம் நிறைவடைகின்றது.

நாவலரின் இரண்டாம் பாலபாடம் இரண்டு பகுதிகளாலானது முதற்பகுதியிலே மொழிப்பயற்சியையும் கூடவே நீதிக்கல்வியையும் தரும் நோக்கில் உபதேசங் களும் சிறுசிறு கதைகளும் தரப்பட்டுள்ளன. மேலும் நம்மைச் சூழந்துள்ள உலகம் பற்றியும் சூழல் பற்றியதுமான சில தகவல்களைத் தருகின்றார். இன்னும் அன்றாட வாழ்க்கையில் பயன்படக் கூடியதும் மனனம் செய்யப்படவேண்டியதுமான இராசி, நட்சத்திரம், யுகங்கள் எனப்பல விடயங்களையும் அறிமுகம் செய்கிறார். நாவலரின் நித்திய கரும விதியும் இப்பகுதியிலேயே அமைந்துள்ளது. இரண்டாவது பகுதியில் உரையுடன் கூடிய ஆத்திசூடி படிக்கவும் மனனம் செய்யவும் ஏற்ற வகையில் தரப்பட்டுள்ளதைக் காணலாம். மரபுவழிக் கல்வியில் ஆரம்ப எழுத்தறிவினைத் தொடர்ந்து நீதிநூல்களை மனனம் செய்யும் படி மாணவர்களைத் தூண்டுவதை இங்கு ஒப்பிட்டு நோக்க முடியும்.

மூன்றாம், நான்காம் பாலபாடங்கள் மொழித் தேர்ச்சியினை முறையாகப் பெற்றுக்கொண்ட மாணவர் களுக்குச் சமய அறிவு, தமிழறிவு, நல்லொழுக்கம், சூழலறிவு எனப் பலவகையான விடயங்களையும் விரிவாக விளக்கஞ் செய்யும் வகையில் எழுதப்பட்டுள்ளன. பாலபாடங்களை திட்டமிட்ட வகையில் ஒழுங்கமைத்துள்ள

நாவலர் அவற்றைச் செம்மை சான்ற உரைநடையில் எழுதியுள்ளார். நவீன தமிழ் உரைநடை ஆரம்ப வளர்ச்சியைக் கண்ட ஒருகாலத்திலேயே இப் பாலபாடங்கள் எழுதப்பட்டன. என்பதையும் இவ்விடத்தில் மனங்கொள்ளவேண்டும். நாவலரின் உரைநடைச் சுத்தத்தையும் மொழிச்செருக்கினையும் பாலபாடங்களில் உள்ள மொழி எடுத்துக்காட்டுகின்றது. எளிமை, இனிமை, குறியீட்டுப் பயன்பாடு என்பன அவற்றில் சிறப்புடன் சேர்ந்து வந்துள்ளன. எனினும் வடமொழிச் சொற்களைப் பாலபாடத்தில் நாவலர் அதிகளவில் சேர்த்துள்ளார். அவரது முதலாவது பாலபாடத்திலேயே வடமொழிச் சொற்கள் கணிசமாக வருகின்றன. ஈழத்து மரபு வழிக்கல்வியில் வடமொழிக்கல்விக்குச் சமமான அந்தஸ்து வழங்கப்பட்டமையும், வடமொழித்துவேஷம் ஈழத்தில் காணப்படாமையும் வடமொழிச் சொற்கள் பாலபாடங்களில் இடம் பெறக் காரணங்களாக இருந்திருக்கலாம்.

நாவலர் பாலபாடங்களை எழுதியதைத் தொடர்ந்து ஈழத்து சைவத்தமிழ்க் கல்விக்கு புது ஊட்டம் ஏற்பட்டது. அவரைத் தொடர்ந்து பலபேர் வைத்தமிழ்க் கல்வி வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பலதுறை சார்ந்து பாட நூல்களை எழுதினர். சமயம், மொழி என்ற எல்லைகளுக்கு அப்பால் அறிவியல், கணிதம், புவியியல் முதலான துறைகள் சார்ந்தும் நூல்கள் வெளிவந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

சைவத் தமிழ்க் கல்வியை நாவலர் நவீன மயப்படுதிய காலங்களில் அது சார்ந்து விமர்சனங்கள் பல தரப்பினராலும் முன்வைக்கப்பட்டு வந்ததைக் காணலாம். குறிப்பாக உதயதாரகைப் பத்திரிகையின் ஐந்து இதழ்களில் சுதெச கல்விமுறை என்னும் உபதலைப்பின் கீழ் நாவலரின் பாடசாலை, பாடத்திட்டம் குறித்த விமர்சனங்கள் எழுதப்பட்டன. மிஷனரிமார்களால் விரும்பியோ, விரும்பாமலோ விமர்சிக்கப்படுகின்ற அளவுக்கு நாவலர் ஆரம்பித்த சைவத்தமிழ்க் கல்வி சமகாலத்தில் செல்வாக்குப் பெற்று வந்தமையையே இது காட்டுகின்றது.

நாவலரின் முதன்முயற்சியைத் தொடர்ந்து இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் சைவத் தமிழ்ப் பாடசாலைகள் அமைக்கப்பட்டன. நாவலரின் வழியை அடியொற்றி சைவத்தமிழ்ப் பற்றாளர்கள் இதில் ஆர்வமுடன் செயற்பட்டனர். சைவத்தமிழ்க் கல்வி முறைக்கு புதிராக எழுந்த சவால்களை எல்லாம் முறியடித்துக் கொண்டு முன்னோக்கிப் பயணிக்க நாவலர் மரபு காட்டிய வழியே அவர்களுக்கு பெரும் முன்மாதிரியாக அமைந்தது. பாவலர் துரையப்பாபிள்ளை மகானாக் கல்லூரியை ஆரம்பித்த காலங்களில் எதிர்நோக்கிய சிக்கல்களும் அங்கு படித்த மாணவர்கள் பொதுப் பரீட்சைக்குத் தோற்ற முடியாமல் போனதும் இத் தடைகளை உடைக்க அவர் கையாண்ட வழிமுறைகளும் இங்கு நினைவுகூரத் தக்கவை நாவலரின் மனோ திடத்துக்கும் முயற்சிகளுக்கும் நாவலர் மரபு தந்த உற்சாகமும் முன்மாதிரியுமே காரணமாகும்.

இங்ஙனம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவத்தமிழ்க் கல்வி நவீனத்துவத்துக்கு இடமளித்த மையே அம்மரபு பல சவால்களுக்கூடாகவும் முன்னேறக் காரணமாயிற்று. கற்றல் முறையில், கற்பித்தல் ஒழுங்கமைப்பில், பாடத்திட்டத்தில் நவீனத்துவம் ஏற்படுத்திய மாற்றங்களும் வளர்ச்சிகளும் சைவத்தமிழ்க் கல்விமரபை இன்னொரு கட்டத்துக்கு நகர்த்தின. இதனால் சைவத்தமிழ்க் கல்வி மாணவர்களுக்குக் கவர்ச்சியுடைய தாயிற்று. மிஷனரிமாரின் பாடசாலைகளே கதி என இருந்த மாணவர்கள் சைவத்தமிழ்ப் பாடசாலைகளை நாடத் தொடங்கினர். சைவத் தமிழ் சூழலில் சைவத் தமிழ் மாணவர்கள் கல்வி கற்கமுடிந்தது. இதனால் சைவசமயமும், சைவத்தமிழ் பண்பாடும் செழிப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. இற்றைவரை சைவத்தமிழ்க் கல்வி ஆதிக்கமும், செல்வாக்கும், செழிப்பும் பெற்று வளர ஆங்கிலேயர் ஆட்சிச் சூழலில் நாவலர் மரபு சைவத்தமிழ்க் கல்வியில் உள்வாங்கிய நவீனத்துவமே காரணமாக அமைந்ததெனலாம்.

யாழ்ப்பாணக் கலாச்சாரம் ஆங்கில கலாச்சாரத்தைக் கபளீகரம் செய்து கொண்டு பெரிய ஆக்க வேலைகளுக்கு அடிப்படையான அத்திபார வேலைகளுக்கு வழி செய்திருக்கின்றது.

பழைய நூல்களைப் பதிப்பதற்கு அத்திவாரமிட்டார் தாமோதரம்பிள்ளை. அவ்வாறே, தமிழர் சரித்திரத்திற்குக் கனகசபைப்பிள்ளை, ஆராதிக்கு கதிரவேற்பிள்ளை, மொழிபெயர்ப்புக்கு விசுவநாத பிள்ளை. இன்று சென்னைச் சர்வகலாசாலை வெளியிடும் தமிழ்க் களஞ்சியத்துக்கு அத்திபாரமிட்டதும் யாழ்ப்பாணமே. ஆ.முத்துத்தம்பிப் பிள்ளை "அபிதான கோசம்" என்று பெயரிட்டு முன்னமே தமிழ்க் களஞ்சிஎம் ஆரம்பம் செய்து வைத்திருக்கிறார்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

ஈழத்தின் சைவக்கல்வி மரபு

சிவத்தமிழ் வித்தகர்
சிவ. மகாலிங்கம்

மனிதன் உலகில் பெற வேண்டிய செல்வங்கள் பல உண்டு. இவற்றில் பதினாறு செல்வங்களைச் சிறப்புடையதாக இந்து சமயத் திருநூல்கள் கூறியுள்ளன. இப் பதினாறு செல்வங்களை நிலைத்த செல்வமாக அழியாச் செல்வமாகக் கல்வியே போற்றப்படுகிறது. அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கையும் பயப்பது கல்விச் செல்வமே ஆகும். இந்து சமயத்தில் கல்வி மூன்றாவது கண்ணாகவே போற்றப்படுகிறது. கல்வி அறிவில்லாதவன் மிருகம் (வித்யா விஹின பசு) எனக் கருதப்பட்டான். கல்வி அனைத்து மக்களுக்கும் அணிகலன் எனப்போற்றப்பட்டது. (வித்யா ஸர்வஸ்ய பூஸனம்) பொருள் இல்லாமல் இருந்து நிற்பது மானக்கேடு ஆனால் கல்வியைப் பெறுவதற்காக இரந்து நிற்பது இழிவன்று பிச்சை எடுத்தாவது கல்வி கற்பது பெருமையடையது என்பதை,

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

என வெற்றி வேற்கை என்ற நூல் குறிப்பிடுகிறது. கல்வியே நிரந்தரமான உண்மையான செல்வம் என்பதை "கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி" எனக் கொன்றை வேந்தனில் ஔவையாரும் கூறுகின்றார். ஒரு பிறப்பில் ஒருவன் பெற்ற கல்வி ஏழு பிறப்புக்கும் தொடரும் தன்மை உடையது என்பதை *"ஒருமைக்கண் தான் உடையது எழுமையும் ஏமாப்பு உடைத்து"* என வள்ளுவரும் குறிப்பிடுகின்றார். ஒரு குழந்தையைப் பெற்றுத் தருவது தாயின் கடமை என்றால் அவளைச் சான்றோனாக கல்வி அறிவுள்ளவனாக வாழ வைப்பது தந்தையின் கடமை என்பதை

"ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே
சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே"

எனப் புறநானூறு கூறுகிறது. தான் பெற்ற பிள்ளையை அறிவாளியாக்கி கற்றறிந்த சபையிலே முந்தியிருக்கச் செய்வது தந்தையின் கடமை என்பதை

"தந்தை மகற்காற்றும் நன்றி சுவையத்து
முந்தியிருப்பச் செயல்"

எனச் செந்தாப் போதராகிய வள்ளுவரும் கூறுகிறார்.

மனிதன் வாழ்க்கையில் தேடும் செல்வங்களில் அழியாச் செல்வமாக இம்மைக்கும் மறுமைக்கும் பயன்படும் செல்வமாகக் கல்விச் செல்வங்களில் அழியாச் செல்வமாக இம்மைக்கும் மறுமைக்கும் பயன்படும் செல்வமாகக் கல்விச் செல்வமே திகழ்கிறது. பொருட் செல்வம் வாழ்க்கைக்கு அவசியம். ஆனால் அச் செல்வம் மட்டும் வாழ்க்கையன்று என்பதை அனைவரும் அனுபவ ரீதியாக உணர்ந்து இருக்கின்றார்கள். பொருட் செல்வம் வெள்ளத்தால் அழியும், வெந்தணலால் வேகும், கள்வரால் கவரப்படும், மாறுபட்ட பங்காளிகளாலும் பகைவராலும் பற்றப்படும், கொடுங்கோல் அரசரால் கொள்ளப்படும், கொடுக்க கொடுக்க குறையும், ஆனால் கல்வியோ எவற்றாலும் அழியாது, எவற்றாலும் கொள்ளப்படாது. கொடுக்க கொடுக்க வளர்ந்து கொண்டே போகும் என்பதை சான்றோர் பலரும் உரைத்துள்ளனர்.

கண்ணுடையர் என்போர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர் எனத் தெய்வத் தமிழாகிய திருக்குறளும் செப்புகிறது.

புராதனக் கல்வி முறை

இலங்கையின் புராதனக் கல்விமுறை குருகுலக் கல்வியாகவே இருந்தது. மாணவன் குரு குலவாசம் செய்து குருவுக்குப் பணிவிடை செய்து கல்வியைப் பெற்றுக் கொண்டான். குருகுலக் கல்வியில் புலடைக்கமும் ஒழுக்கப் பயிற்சியும் சிறப்பாகப் பேணப்பட்டது. சாத்வீகக் கல்விக்கே முக்கிய இடம் வழங்கப்பட்டது. குரு மாணவர்களைத் தனது பிள்ளைகள் போலக் கருதினார். மாணவர்களும் குருவைத் தந்தையாகவும் தெய்வமாகவும் போற்றினார்கள் பௌத்தக் கல்வி மரவு இலங்கையில் தோற்றம் பெறும் வரை குருகுலக் கல்வி மரபே இலங்கை முழுவதும் நிலவி வந்தது.

இலங்கையில் வாழ்ந்த சைவத்தமிழ் மக்கள் மத்தியில் குருகுலக் கல்வி திண்ணைக் கல்வி எனப் பல்வேறு முறைகளில் கல்வி வழங்கப்பட்டு வந்தது. தொன்று தொட்டுத் தமிழும் சைவமும் வளர்ந்த பூமியாகவே ஈழமணித் திருநாடு திகழ்ந்தது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்து ஈழத்து பூதன்தேவனார் இயற்றிய ஏழு பாடல்கள் சங்க இலக்கியத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. ஈழம் என்பது இலங்கையைக் குறிக்கும் பழைய தமிழ்ச் சொல் ஆரியச் சக்கரவர்த்திகள் யாழ்ப்பணத்தை ஆட்சி செய்த காலத்தில் இருந்த புலவராகிய அரசகேசரி வடமொழியில் எழுதப்பெற்ற காளிதாசரின் இரகுவம்சத்தை தமிழில் மொழி பெயர்த்துள்ளார். பல புராண நூல்கள் ஈழத்து தமிழ் அறிஞர்களால் எழுதப்பட்டன. தட்சண கைலாச புராணம் கோணாசல புராணம், சிவராத்திரி புராணம் ஏகாதசிப் புராணம் என்பன அவற்றுள் சிலவாகும்

இருபாலைச் சேனதிராய முதலியார் கூழங்கைத் தம்பிரானிடம் கல்வி பயின்றவர். நல்லை அந்தாதி நல்லைக் குறவஞ்சி என்னும் நூல்களை இயற்றியுள்ளார். சைவ சேனாதிபதியாகத் திகழ்ந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருவாகவும் திகழ்ந்தார். புலவர் சிகாமணியாகத் திகழ்ந்த சின்னத்தம்பிப் புலவர் மறசையந்தாதி கல்வளையந்திதாதி என்னும் நவல்களை இயற்றினார் நட்டுவச் சுப்பையனார்

எழுதிய களகி புராணம் ஒரு தாசியின் வரலாற்றினையும் அவரின் விலைகளையும், அவள் வலையில் வீழ்ந்த பல வேடதாரிகளின் செயலிகளையும் அழகாகச் சித்திரிக்கிறது.

இலக்கிய நூல்கள் மாத்திரமல்லாது சைவ சமயம் சார்ந்த பல நூல்களும் தோற்றம் பெற்றன. திருநெல்வேலி யைச் சேர்ந்த ஞானப்பிரகாச முனிவர் வட மொழியிலும் தமிழிலும் சைவசித்தாந்த தத்துவத்தை விளக்கும் பல நூல்களை எழுதினார். குப்பிழான் செந்திநாதையர், நீர்வேலிச் சிவசங்கர பண்டிதர், சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், அச்சுவேலி குமாரசுவாமிக் குருக்கள் புலோலி சைவப் பெரியார் சிவபாதசுந்தரம், சதாவதானி கதிரைவேற்பிள்ளை, மானிப்பாய் திருவிளக்கும் முதலியோர் யாழ்ப்பாணக்குடா நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் சைவத்தையும் தமிழையும் தமது இரு கண்கள் போலப் பேணிப் பாதுகாத்து வந்தனர்.

தமிழ் அரசர்கள் பலர் காலத்துக்கு காலம் இலங்கையை ஆட்சி செய்துள்ளார்கள். கி.மு.முதலாம் நூற்றாண்டில் அனுராதபுரத்தை இராசதானியாகக் கொண்டு எல்லாளன் என்ற தமிழ் மன்னன் ஆட்சி செய்தான் தமிழ் நாட்டில் சோழப் பேரரசு நிலவிய காலத்தில் இலங்கையும் அவர்களுடைய ஆட்சிக்கு உட்பட்டு இருந்தது. இராஜராஜ சோழன் இலங்கையின் ஒரு பகுதியைக் கைப்பற்றி அனுராதபுரத்தை இராஜதானியாகக் கொண்டு ஆட்சி புரிந்தான். இவனுடைய மகன் ராஜேந்திர சோழன் இலங்கை முழுவதையும் கைப்பற்றி பொலனறுவையை இராஜதானியாகக் கொண்டு அதற்கு ஜனநாதமங்கலம் என்று பெயரும் இட்டு ஆட்சி செய்து வந்தான். கலிங்கமாகன் என்ற வீரசைவன் மட்டக்களப்பு மாவட்டத்தையும் இராசரட்டையையும் சேர்த்து ஆட்சி செய்யும் பொழுது சைவ சமயத்தின் வளர்ச்சிக்குப் பேராதரவு வழங்கினான் என மட்டக்களப்பு மான்மியம் என்ற நூல் குறிப்பிடுகிறது. யாழ்ப்பாணத்தை தமிழ் அரசர்கள் ஆட்சி செய்த காலத்தில் நல்லூரில் தமிழ்ச் சங்கம் அமைத்து தமிழ் இலக்கியம், சோதிடம், வைத்தியம் என்பன ஆய்வு செய்யப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன. பரராச சேகரம் என்னும் வைத்திய நூலும், செகராசசேகரம் என்னும் சோதிட நூலும் இக்காலத்திலேயே வெளிவந்தன. சரஸ்வதிமகால் என்னும் நூல் நிலையத்தையும் ஸ்தாபித்து தமிழ் நூல்களை ஒருங்கு சேர்த்துப் பேணிப் பாதுகாத்து வந்தனர்.

அந்நியர் ஆட்சி

அந்நியர்களாகிய போர்த்துக்கேயரின் வருகை யினால் எங்களுடைய மொழியும் சமயமும் பல இடர்களை எதிர்நோக்கின. சைவக் கோயில்கள் அனைத்தையும் இடித்து தரைமட்டமாக்கிய இவர்கள் கோயில்களில் இருந்த சொத்துக்களையும் சூறையாடினார்கள். சைவப் பண்பாட்டுடன் கூடிய கல்வி மரபு அழிந்தது. நம்மவர்களை மதம் மாற்றித் தங்களுடைய மதக் கல்வியைப் புகட்டுவதிலேயே கண்ணும் கருத்துமாக இவர்கள் செற்பட்டார்கள். ஒல்லாந்தர்களும் தங்கள் தேவாலயங்க ளுக்கு அருகில் பாடசாலைகளை நியமித்து கல்வி என்ற போர்வையில் நமது மாணவர்களை மதம் மாற்றும் முயற்சியில் ஈடுபட்டார்கள். ஆங்கிலேயர்கள் வெளியில் ஜனநாயகத் தன்மை கொண்டவர்கள் போலத் தம்மைக் காட்டிக் கொண்டு தங்கள் கையாட்களாகிய மிஷனரிமாரின் துணையுடன் மதம் மாற்றும் முயற்சியினைச் செய்தார்கள். ஆங்கிலக் கல்வி என்ற இனிப்புப் பண்டத்தைக் காட்டி நம்மவர்களைத் தம்பால் ஈர்த்தனர்.

நாவலருடைய பணிகள்

ஆங்கிலேய அரசுடன் மேலைத் தேசத்துக் கிறிஸ்தவப் பாதிரிமாரும் சேர்ந்து தமது சமயத்தைப் பரப்புவதற்காக அயராது உழைத்தனர். அவர்களின் ஓயாத உழைப்பினால் சைவ சமயத்தை தழுவித் தொடங்கினர். இந்த அவல நிலையிலிருந்து நமது சமயத்தையம், மொழியையும், பண்பாட்டையும் காப்பாற்றுவதற்காக விடிவெள்ளியாக நாவலர் பெருமான் நல்லூரிலே தோன்றினார். இவர் தனது வாழ்வில் சுகபோகங்கள் அனைத்தையம் உதறி எறிந்து விட்டு தன் உடல் பொருள், ஆவி அனைத்தையும் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்காக அர்ப்பணித்தார் நைஷ்டிக பிரமச்சாரியாக ஐம்பத்தேழு வருடம் இப்பூவுலகிலே வாழ்ந்த நாவலர் பெருமான் ஆற்றிய பணிகள் நிகரற்றவை ஒரு அரசோ, நிறுவனமோ ஆற்ற முடியாத பல்வேறு பணிகளைத் தனி மனிதனாக நின்று தளராது ஆற்றியுள்ளார். உவெஸ்லியன் பாடசாலையில் (இன்றைய யாழ். மத்திய கல்லூரி) ஏழு வருடங்கள் மாணவனாகவும் தொடர்ந்து ஏழுவருடங்கள் ஆசிரியராகவும் திகழ்ந்தார். கிறிஸ்தவ மதச் சூழலில் பதினான்கு வருடங்கள் இருந்தமையால் அவர்களுடைய பலத்தையும் பலவீனத்தையம் சரியாக அறிந்து கொண்டார்.

சைவப் பிள்ளைகள் சைவ சமயச் சூழலில் கல்வி பயிலும் வாய்ப்புப் பெற வேண்டும் என்று விரும்பிய நாவலர் பெருமான் 1848 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 5 ம் திகதி யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவினார். நாவலர் பெருமானின் வேண்டுகோளை ஏற்ற பல சைவப் பெரியார்கள் கிராமங்கள் தோறும் சைவப் பாடசாலைகளை நிறுவினார்கள். சைவப் பிள்ளைகளுக்கான ஆங்கில மொழிப் பாடசாலையை நிறுவ வேண்டும் என்று விரும்பிய நாவலர் பெருமான் வண்ணார் பண்ணையில் 1872 ஆம் ஆண்டில் சைவ ஆங்கிலப் பாடசாலையை நிறுவினார். போதிய பணம் இன்மையாலும் மக்களின் ஆதரவு போதாமையாலும் இவ்வாங்கிலப் பாடசாலை நான்கு ஆண்டுகளே நடைபெற்றது. ஆனால் நல்லவர்களின் சிந்தனை என்றோ ஒரு நாள் செயல் வடிவம் பெறும் என்பதே உண்மை நிலையாகும். நாவலருடைய சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுக்கும் நோக்கத்தோடு 1888 ஆம் ஆண்டு சைவபரிபாலன சபை ஆரம்பிக்கப்பட்டது. சைவத்தமிழர்களின் உயர் கல்வி நிலையமாக விளங்கின. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் நிர்வாகத்தினை சில வருட காலம் சைவ பரிபாலனசபையாரே நடாத்தினார்கள். பின்பு இந்துக் கல்லூரிச் சபையிடம் இதன் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது.

சைவக் கல்வியின் எழுச்சி சைவப் பண்பாட்டுச் சூழலில் கிராமங்கள் தோறும் தோற்றம் பெற்ற சைவப்பாடசாலைகள் தாய் மொழிக் கல்வியை வழங்கி வந்தன. இந்துக் கல்லூரிகள் ஆங்கிலக் கல்வியை வழங்கின. தனித்தனியாக நிர்வகிக்கப்பட்டு வந்த சைவப்பாடசாலைகளை ஒரு நிறுவன அமைப்பின் கீழ் கொண்டு வர வேண்டும் என்று விரும்பிய பல சான்றோர்களின் பெருமுயற்சியினால் 1923 ஆம் ஆண்டில் சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இதன்

முதல் தலைவராகச் சேர் பொன் இராமநாதன் திகழ்ந்தார். சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி அவர்களும் இதன் தலைவராகப் பணியாற்றி உள்ளார். இதன் நிறுவனத்தின் பெயரையே தன்னுடைய பெயருடன் இணைத்துக் கொள்ளக் கூடிய வகையில் சைவ வித்தியா விருத்திச் சங்கத்துடன் தன்னை முழுமையாக இனைத்து அதன் வளர்ச்சிக்காகத் தன்னுடைய வாழ்வையே இந்து போட் சு. இராசரத்தினம் அவர்கள் அர்ப்பணித்தார். இந் நிறுவனத்தின் முகாமையாளராகவும் செயலாளராகவும் இருந்து அதன் இலட்சியங்களை முன்னெடுத்துச் செல்வதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் எல்லாப் பகுதி களிலும், வவுனியா, முல்லைத்தீவு முதலிய வன்னிப் பிரதேசங்களிலும், சிலாபம், முந்தல் முதலிய பிரதேசங்களிலும், பதுளை நாவலப்பிட்டி முதலான மலைநாட்டுப் பிரதேசங்களிலும் சைவப்பாரம் பரியங்களைப் பேணக் கூடிய சைவப் பாடசாலைகளை நிறுவினார். 1961 ஆம் ஆண்டு அரசாங்கம் பாடசாலை களைப் பொறுப்பேற்ற பொழுது சைவ வித்தியா விருத்திச் சங்கம் 180 இற்கு மேற்பட்ட சைவப்பாடசாலைகளை அரசிடம் தாரை வார்த்துக் கொடுத்தது. கிராமங்களில் வாழ்ந்த பல சைவப் பெரியார்கள், பரோபகாரிகளின் அன்பளிப்புகளைப் பெற்றே சைவப் பாடசாலைகள் நிறுவப்பட்டன. தர்மங்களில் உயர்ந்த தர்மம் "வித்யா தர்மம்" என்பதைப் பரோபகாரிகளின் சிந்தனையில் புகுத்தி அவர்களின் உதவினை மிகச் சாதுரியமாக இந்து போட் அவர்கள் பெற்றுக் கொண்டார். இவர் சைவப் பாடசாலைகள் நிறுவுவதற்கு வைத்திய கலாநிதி, வள்ளல் பெருமானின் டாக்டர் P.S. சுப்பிரமணியம் பலமுறை நிதி உதவி வழங்கி உள்ளார். இந்த வள்ளல் பெருமானின் நிலத்திலே தான் யாழ்ப்பாணக் குடாநாட்டின் கல்விக்கல்லூரி தலை நிமிர்ந்து நின்று ஒளி வீசுகிறது. டாக்டர் P.S. சுப்பிரமணியம் பரம்பரையில் வந்த தருமலிங்கம் சித்தார்த்தன் இக் காணியைக் கல்விக் கல்லூரிக்கு நன்கொடையாக வழங்கி இருந்தார. திருநெல்வேலி முத்துத் தம்பி வித்தியாலயத்தில் சுப்பிரமணியம் மண்டபம், தங்கம்மா மண்டபம் (சுப்பிரமணியம் மனைவியார் பெயர்) இரு மண்டபங்கள் காணப்படுகிறன. தங்கம்மா மண்டபம் அழிந்த நிலையில் காணப்படுகிறது. இரு மண்டபங்களும் டாக்டர் P.S. சுப்பிரமணியம் வழங்கிய பணத்திலேயே கட்டப்பட்டவை. சைவப் பாடசாலைகள் நிறுவுவதில் இந்து போட் ஆற்றிய பணிகளுக்கு மகாதேவ சுவாமிகளும் துணையாக நின்றார். கரம்பொன் சண்முகநாத வித்தியாசாலையின் கூரை ஒடுகள் போடுவதற்கு மகாதேவ சுவாமிகள் பிடி அரிசித் திட்டத்தின் ஊடாகச் சேர்த்த பணத்தையே பயன் படுத்தினார் எனப் பாடசாலையின் வரலாற்றுச் செய்திகள் கூறுகின்றன.

சைவக் கல்வியின் வளர்ச்சியில் இந்துபோட் க.இராசரத்தினத்தின் பணிகள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை. 1928 ஆம் ஆண்டு சைவ ஆசிரியர்களை உருவாக்குவதற்காக சைவாசாரிய கலாசாலையைத் திருநெல்வேலியில் உருவாக்கினார். சைவ ஆசாரம் மிக்க சைவாசிரியர்களை இந்த மண்ணிலே உருவாக்கித் தந்த பெருமை சைவாசாரிய கலாசாலைக்கே உண்டு. இந்திய ஜனதிபதியாக இருந்த டாக்டர் ராஜேந்திர பிரசாத்துடன் கல்வி பின்ற மிலிட்டிச் சுவாமிநாதன் சைவாசிரிய கலாசாலையின் அதிபராக இருந்து பணியாற்றினார். மகாமுனிவர் என்று போற்றப்படும் பொ.கைலாசபதி அவர்கள் உப அதிபராக இருந்தார். நாவலர் பாரம் பரியத்தின் முத்தாக மலர்ந்த பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் இங்கு தமிழ் விரிவுரையாள ராகக் கடமையாற்றினார். சைவப் பண்பாட்டுடன் கூடிய ஆயிரத்துக்கு மேற்பட்ட சைவாசிரியர்களை உருவாக்கி இந்த மண்ணிலே பணியாற்ற வைத்த பெருமை சைவாசிரிய கலாசாலைக்கு உண்டு. சைவப் பாடசாலை களின் ஊடாகச் சைவப் பண்பாட்டினை மாணவச் செல்வங்களிடம் உருவாக்கிய பெருமை சைவாசிரிய கலாசாலையில் உருவாகிய ஆசிரியர்களையே சாரும். சைவப் பாடசாலைகளுக் குள்ளே செல்லும் பொழுது கோயிலுக்குள்ளே செல்லும் உணர்வினை அக்காலத்தில் சைவப்பாடசாலைகளை வழி நடாத்திய அதிபர்களும் ஆசிரியர்களும் உருவாக்கி வைத்தார்கள். ஆனால் இன்று அதே சைவப் பாடசாலைகள் சிலவற்றில் நடைபெறும் செயற்பாடுகளைப் பார்க்கும் போது கண்ணீர் விட்டுக் கவலைப்பட வேண்டிய பரிதாபமான நிலை ஏற்படுகிறது. கடலுணவுடன் கூடிய மதிய போசனம் சைவப் பாடசாலைகளிலே வழங்கப்படுகிறது. முன் மாதிரியாக நடக்க வேண்டிய ஆசிரியர்களில் சிலர் நெறிதவறி மாணவர்களின் தவறான நடத்தைக்கு வழிகாட்டுகின்றனர். பாடசாலைக்குரிய சொத்துக்களை சிவன் சொத்தாகவே அக்கால மக்கள் கருதினார்கள். சிவன் சொத்து அக்கினி அச்சொத்தினைக் கையாடுபவர்களின் சந்ததியே தழைக்காது என்ற நம்பிக்கை அக்கால மக்களிடம் நிலவியது.

1930 ஆம் ஆண்டு திரு. இராசரத்தினம் அவர்கள் ஆண்களுக்கும் பெண்களுக்குமென இரு அநாதை இல்லங்களை உருவாக்கினார் அன்ன வஸ்திரம் கொடுத்து மாணவர்களைக் கற்பித்தல் என்ற நாவலருடைய சிந்தனைக்கு செயல் வடிவம் கொடுத்தார்.

நாவலருடைய கல்விக் கொள்கையின் ஒர் அங்கமாக இருந்த தொழிற்கல்வி வழங்குதல் என்ற இலட்சியத்தையும் இவர் செயற்படுத்தினார். 1958 ஆம் ஆண்டில் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கிய பதினைந்து நெசவுப் பள்ளிகளிலும் பதினாறு கூடை இழைக்கும் பள்ளிகளிலும் நூற்றுக்கணக்கானோர் தொழிற் கல்வியைப் பெற்றனர்.

தமிழ், ஆங்கிலம், வடமொழி, சிங்களம் ஆகிய மொழிகளையும் அவற்றின் இலக்கியங்களையும் கற்பிக்கும் காவிய பாடசாலையையும் திருநெல்வேலியில் உருவாக்கினார். மொழி ஆர்வம் கொண்ட பலர் இக்காவிய பாடசாலையிலே கல்வி பயின்று பெரும் பயனைப் பெற்றனர். சைவாசிய கலாசாலை, முத்துத்தம்பி வித்தியாலயம், காவிய பாடசாலை, சைவச் சிறுவர் இல்லம் ஆகிவை திருநெல்வேலிச் சூழலிலே சிறப்பாக இயங்கி வந்தன. இவற்றைப் பார்வையுற்ற கலாநிதி என். எம். பெரேரா இவ்விடம் ஒர் இந்துப் பல்கலைக்கழகம் போலக் காணப்படுகின்றது எனக் கூறியள்ளார்.

போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தில் சைவத் தமிழர்களுக்கு வந்த வருத்தம் வெளித்தோல் வருத்தம், சிரங்கு வருத்தம் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட வருத்தம் காசநோய் வருத்தம், ஈரலைப் பற்றிய வருத்தம்,

தோல் வருத்தம், வெளியில் தெரியும் ஆனால் காச நோய் வருத்தத்தினை ஊடு கதிர் கருவி (X - ray) கொண்டே அறி முடியம் இரு ஆட்சியாளர்களும் சைவர்களை மதம் மாற்ற எடுத்த முயற்சிதனை பண்டிதமணி அவர்கள் மேற் கூறியவாறு விளக்கி உள்ளார்

இவ்வாறான கருத்தினை இந்து போட் இராசரத்தினம் ஓர் விஞ்ஞாபனம் என்ற துண்டுப் பிரசுரத்தின் ஊடாகக் கூறியுள்ளார்.

இப்பொழுது கிறிஸ்தவர்கள் இங்கே நடத்துகின்ற வேலை மரத்தை வளர்க்கின்றோம், வளர்க்கின்றோம் என்று அதன் வேரிலே மெல்ல மெல்ல வெந்நீர் ஊற்றுகின்ற வேலை தோளிலேயிருந்து காதிலே தாவுகின்ற வேலை யென்றும் சொல்லலாம் ஒல்லாந்தர் போல "மரங்களைத் தறிக்கின்றோம் இதோ முறிக்கின்றோம்" என்று இவர்கள் சத்தம் போடுவதில்லை. சார்ந்திருந்து காரியம் பார்க்கின்ற வர்கள் இவர்கள். எங்கள் குழந்தைகளைக் கொண்டே எங்கள் சமயத்துக்கு கொள்ள வைப்பிக்க முயல்கின் றார்கள்.

அருணாசலம் ஆசிரியரின் பணிகள்

சைவாசிரிய கலாசாலையின் வித்தாக வேராக காரைநகர் திரு. க. அருணாசலம் ஆசிரியர் அவர்கள் திகழ்ந்தார் இவர் பண்டிதமணி கண்ட மும்மணிகளில் ஒருவர் காரைநகர் செல்வப் பிரபுவே! நீ ஏன் உன் மைந்தன் அருணாசலத்தை மறந்தாய்! என்ற காரைநகர் சைவ மகாசபையின் மலர் ஒன்றிலே பண்டிதமணி அவர்கள் எழுதியுள்ளார் நாவலர் பாடசாலையிலே கல்வி கற்ற அருணாசலம் ஆசிரியரிடம் சைவப் பற்று இரத்தத்திலே ஊறி இருந்தது. தெல்லிப்பளையிலே நடை பெற்ற கிறிஸ்தவ மிஷனரியினரின் ஆசிரிய கலாசாலையிலே ஆசிரியர் பயிற்சினை அருணாசலம் ஆசிரியர் பெற்றார் பரீட்சையிலே சித்தியடைந்து சான்றிதழைப் பெறும் பொழுது இவர் ஞானஸ்தானம் பெற்றுக் கிறிஸ்தவராக மாற வேண்டும் என்று கட்டாயப் படுத்தப்பட்டார். சைவப் பண்பாட்டிலே ஊறி வளர்ந்த அருணாசலம் ஆசிரியர் அவர்கள் உத்தியோகத்திற்காக மதம் மாறிப் போவதை விரும்பவில்லை. நள்ளிரவிலே மதில் பாய்ந்து தன்னுடைய பொருட்கள் வைத்திருந்த பையையும் தலைமேல் வைத்துக் கொண்டு பொடி நடையில் காரைநகருக்குப் போய்ச் சேர்ந்தார். அன்று முதல் சைவாசியர்களை உருவாக்கும் கலாசாலை ஒன்றினைத் தோற்றுவிக்க வேண்டும் என்று பெரு முயற்சி செய்தார். தனது சொத்துக்களையே முதலீடு செய்து 1910 ஆம் ஆண்டில் சைவாசிரிய கலாசாலை ஒன்றினை காரைநகரில் நிறுவினார். மிஷனரி மார்களின் எதிர்ப்பினால் இக் கல்லூரிக்கு அரச அங்கீகாரம் கிடைக்கவில்லை 1914 ஆம் ஆண்டில் இக்கல்லூரியைக் கீரிமலைக்கு மாற்றினார் மிகச் சிறந்த கல்விமானாகிய மாதகல் ஏரம்பு ஐயர் இங்கே விரிவுரையாளராகக் கடமை ஆற்றினார். இங்கும் அரச அங்கீகாரம் கிடைக்கவில்லை. மனம் சலிக்காத அருணாசலம் ஆசிரியர் கலாசாலையை வண்ணார்பண்ணைச் சைவப் பிரகாச வித்தியாசாலைக்கு மாற்றினார். போதிய இடவசதியில்லை எனக் காரணம் காட்டப்பட்டு இங்கும் அரச அங்கீகாரம் மறுக்கப்பட்டது. தளர்வறியா மனத்துடன் அருணாசலம் ஆசிரியர் எடுத்த தீவிர முயற்சியினால் கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் காலாசாலையாக மாற்றம் பெற்று 1916 ஆம் ஆண்டு முதல் அங்கு சைவாசியர்களும் பயிற்சி பெறும் வாய்ப்புக் கிடைத்தது.

அருணாசலம் ஆசிரியர் அவர்கள் கீரிமலையில் சைவாசிரிய கலாசாலையை நடாத்திக் கொண்டு இருந்த பொழுது இளம் சட்டத்தரணியாகிய இந்துபோட் இராசரத்தினம் அவர்கள் அங்கே நீராடிக் கடல் காற்றுச் சுவாசிப்பதற்காகச் செல்வதுண்டு தன்னுடைய ஆசிரிய கலாசாலையை அங்கீகரிக்கும் படி அரசிற்கு எழுதிய கடிதங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பதற்காக இராசரத்தினத்தின் உதவியை அருணாசலம் நாடினார். இராசரத்தினத்தின் நாடிநரம்புகள் எல்லாம் சைவப் பற்றினை ஊட்டிவிட்ட பெருமை அருணாசலம் அவர்களையே சாரும்.

கிறிஸ்தவ மிஷனரிமாரின் தந்திரங்கள் அனைத் திற்கும் முகம் கொடுத்து ஈழமணித் திருநாட்டினர்சிறப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டின் முடுக்கெல்லாம் சைவக் கல்வி தழைப்பதற்குப் பணியாற்றிய இந்துபோட் சு.இராஜரத்தினம் அவர்கள் கர்மயோகியாகவே திகழ்ந்தார். நமது நாட்டிலே தொன்று நிலவி வந்தது. குருகுலக்கல்வி திண்ணைப் பள்ளி, நிலாப்பள்ளி, இராப்பள்ளி என நிலவி வந்த கல்வி வழங்கும் முறைகள் நாவலர் காலத்துக்குப் பின்பு நிறுவன அமைப்பை பெற்ற கல்விக் கூடங்களாக வளர்ச்சி பெற்றன. நாவலரின் தூண்டுதலால் கிராமங்கள் தோறும் சைவப் பாடசாலைகள் தோற்றம் பெற்றன தொடர்ந்து இந்துக் கல்லூரிச் சபை, சைவவித்தியா விருத்திச் சங்கம், இராமகிருஷ்ணமிஷன், சேர் பொன் இராமநாதன் உருவாக்கிய கல்லூரிகள் ஆகியன சைவக் கல்வியை வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டன. அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்கும் வரை இவ்வாறு பல சைவம் சார்ந்த நிறுவனங்களினால் சைவக் கல்வி பேணி வளர்க்கப்பட்டது.

உண்மை வரலாறுகளை மூடிமறைத்து அல்லது திரிபுபடுத்தி தங்களுடையவற்றை மேலோங்கச் செய்து கூறும் பிரசாரயுக்தி ஒன்று இக் காலத்திலே சிலரால் கையாளப்படுகிறது. இதுவே கலியகதர்மமாகவும் உள்ளது. நமது நாட்டில் சைவலக் கல்வி வளர்ந்த வரலாறு சரியாக ஆவணப்படுத்தப்படா விட்டால், யாழ்ப்பாணக் குடா நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு ஏகபோக உரிமை கொண்டவர்களின் கரங்கள் உயர்ந்து விடும் சைவக் கல்வியின் வளர்ச்சிக்காகத் தம்மை அர்ப்பணித்தவர்களின் தியாக வரலாறுகள் நமது அடுத்த சந்தியினருக்குத் தெரியாமல் போய்விடும். இந்த அழிவு நிலையில் இருந்து பாதுகாக்கும் பொறுப்பு, தார்மீகக் கடமை சைவ வித்தியா விருத்திச் சங்கம், சைவபரிபாலன சபை போன்ற நமது சமய நிறுவனங்களுக்கு உரியதாகும். ஆறுமுகநாவலர், சேர் பொன் இராமநாதன் இந்து போட் இராசரத்தினம் ஆசிரியர் அருணாசலம் போன்ற சான்றோர்களைப் போலச் சைவத் தமிழ்ப் பற்றுக் கொண்டு பணியாற்றும் தொண்டர்கள் நமது மண்ணில் தோன்றுவதற்கு எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானின் திருவருள் பூரணமாகக் கிடைக்க வேண்டுமென்று இறையருளைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணத்தில் விஷ்ணு வழிபாடு

திருமதி விக்னேஸ்வரி பவநேசன்,
முதுநிலை விரிவுரையாளர்,
இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

அறிமுகம்

சைவமும் வைணவமும் பாரதத்தின் இரு கண்களாக விளங்குகின்றன. சைவத் திருக்கோயில்களும் வைணவத் திருக்கோயில்களும் கலந்து விரவாத கிராமங்களே அங்கு இல்லையெனலாம். ஈழத்தைப் பொறுத்த வரையில் சிவாலயங்களே பெருமளவில் காணப்படுகின்றன. எனினும் வைணவ ஆலயங்கள் சிலவற்றையும் இங்கு காண்கின்றோம். தனியே நிறுவப்பட்ட வைணவ ஆலயங்களில் பெரும்பாலாகச் சைவப்பெருமக்களே வழிபடுவதைக் காண்கின்றோம். இவ் வழிபாட்டுமுறை சைவப்பாரம்பரியத்திற்குப் பொருத்தமாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் யாழ்ப்பாணத்துப் பிரதேசத்தில் அமைந்து காணப்படும் பிரதான விஷ்ணு ஆலயங்களாகிய வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள் கோயில், துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில், கீரிமலை ஸ்ரீமந் நாராயண சுவாமி கோயில், அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் கோயில், கோப்பாய் ஸ்ரீ கிஷ்ணர், பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில் ஆகிய வற்றில் இடம் பெறுகின்ற சிறப்பு மிக்க வழிபாட்டம்சங்கள், ஆலயவரலாறு மற்றும் யாழ்ப்பாணம் வாழ் இந்துக்களுக்கும் விஷ்ணு ஆலயங்களுக்கும் உள்ள நெருக்கமான உறவு முறை என்பன பற்றி எடுத்துக் கூறுவதே கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

வைணவ மத வரலாறு

விஜயனின் வருகையுடன் ஆரம்பிக்கும் மகாவம்ச காலத்திலிருந்தே ஈழத்தின் புராதன வரலாற்றை அறியமுடிகிறது. பண்டைய ஈழ அரசுகளின் கர்த்தாக்கள் வட இந்தியாவிலிருந்து வந்தவர்களும் இன்றைய சிங்களமக்களின் மூதாதையர்களுமாகிய விஜயனும் அவனது தோழர்களுமே என்னும் நம்பிக்கையின் அடிப்படையிலேயே பரனவித்தான போன்றோர் ஈழத்து இந்துமதம் பற்றி ஆராய்ந்தனர்.

ஈழத்தில் பௌத்தமதம் கால்கொள்ள முன்னர் நிலவிய மதம் இந்து மதம் என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டதாயினும் பெரும்பாலான வரலாற்று ஆய்வாளர்களும், மத ஆய்வாளர்களும் மேற்கூறப்பட்ட வட இந்தியக் குடியேற்ற நோக்கில் தத்தமது ஆய்வுகளை இட்டுச் சென்றமையினால் அவர்களின் முடிவுகள் பக்கச் சார்பானவையாகவே அமைந்தன.

ஒரு நாட்டின் மத வரலாற்று ஆய்வுக்குப் பயன்படும் தகவல்களைத் தரக்கூடியவை இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், தொல்பொருட் சான்றுகளே ஆகும். ஈழத்து வைணவ மத வரலாறு பற்றிய ஆதாரங்கள் மிக அருகியே காணப்படுகின்றன. இவ்வகையில் இதிகாசங்கள் பாளி மொழியில் அமைந்த பௌத்த மத வரலாற்று நூல்களான தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம் மற்றம் பிறநாட்டு யாத்திரிகர் குறிப்புக்கள் என்பன இலக்கிய ஆதாரங்களாகின்றன. அத்துடன் சிங்கள மொழியில் அமைந்த பண்டைய ஈழத்துப் பாடல்களும், தூது காவியங்களும், இந்து ஆலயங்களின் தலபுராணங்களும், மான்மியங்களும், பிற்பட்ட காலத் தமிழ் இலக்கியங்களும், மரபு வழிக்கதைகளும் மேலும் துணை புரிகின்றன. எனவே பண்டைய ஈழத்து வைணவ மதம் பற்றிய ஆய்விற்குத் தேவையான அளவு தகவல்களையும் தருவதாக இலக்கிய கல்வெட்டு தொல்லியற் சான்றுகள் அமையவில்லை என்பது தெளிவாகின்றது. இக் கருத்தினையே கா. இந்திரபாலா அவர்களும்

"யாழ்ப்பாண வரலாற்றை ஆராய்பவர்கள் எதிர்நோக்கும் முக்கியமான பிரச்சினை போதிய சான்றுகளில்லாப் பிரச்சினையே. இதனால் எதனையும் திடமாக்க கூற முடியாதுள்ளது. கல்வெட்டுக்களையும் பிற தொல்பொருள் ஆதாரங்களையும் யாழ்ப்பாண இராச்சியப் பிரதேசத்திலே தேடிப் பெறும் வரை வெறும் ஊகங்களுடன் நாம் திருப்தி கொள்ள வேண்டியுள்ளது"

எனச் சுட்டிக் காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் "வைணவர்" என்ற ஒரு பிரிவினரைக் குறித்துச் சொல்லக் கூடிய நிலையில்லா விடினும் வைணவம், சைவம் போன்ற தனித்ததோர் சமயமாகக் கடைப்படிக்கப்படாது விடினும் வரலாற்றுப் புகழ் மிக்க விஷ்ணு ஆலயங்கள் சில இருப்பதும் சைவர்களும் அங்கு சென்ற வழிபடுவதும் சிறப்பித்துக் கூற வேண்டியதாகும்.

விஷ்ணு என்ற சொல்லின் பொருள்

"விஷ்ணு" என்ற சொல்லின் தோற்றம் ஆரியர்களுக்கு முற்பட்ட காலத்திலே உள்ளது. என பெர்ஸிலுஸ்கி, ருபன்கீயூபர், போன்ற அறிஞர்கள் மொழியியற் சான்றுகளுடன் நிறுவியுள்ளனர். இவர்களின் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு இந்து ஆய்வு தமிழ் இலக்கியப் பின்னணியில் அணுகுகின்றது மிகப் பழமையான இலக்கியமாகிய தொல்காப்பியம் முல்லை நிலக் கடவுளாக "மாயோன் மேய காடுறை உலகமும்" என்று கூறுகிறது. இதனை இருக்கு வேதம் கூறம் "ஆநிரை காப்பவன் விஷ்ணு" என்ற கருத்துடன் ஒப்பிட்டுக் காண வேண்டும்.

விஷ்ணு என்னும் சொல்லே மிகுதியான ஊகங்களுக்கு இடம் தருவதாக உள்ளது. எம். புளும்பீல்டு என்பவரும் ஹெச். கோல்டன் ரெக் என்பவரும் இச் சொல்லிற்கு "உலகத்தின் பின்பகுதியைக் கடப்பவர்" அல்லது "பூமியின் நிலப்பகுதியைக் கடப்பவர்" என்ற பொருள் கூறினர். மேலும் புராணங்கள் விஷ்ணு என்றால் "நுழைந்து அல்லது ஊடுருவி" நிற்பவன் என்ற பொருள் தருகின்றன.

இச்சொல்லின் பிறப்பு எங்குள்ளது என அறுதியிட்டுச் சொல்ல இயலாது. என்றாலும் அசையும் தன்மையைக் குறிக்கக் கூடிய விண்ணுலகக் கோட்பாடு என்பதை இச்சொல் குறிப்பதாக இக் கோட்பாடுகள் பொதுவாக ஒத்து நிற்கின்றன. தமிழில் உள்ள "இறைவன்" என்ற சொல் விஷ்ணு என்னும் சொல்லிற்கு இணையானது என்று கொள்ளலாம். "இறு" என்ற அடிச் சொல்லிற்கு "ஊடுருவி நில்" என்று பொருள் நற்றிணைக் கடவுள் வாழ்த்துப் பாடல் எல்லாவற்றிலும் ஊடுருவியுள்ள விஷ்ணுவின் தன்மையையும் ஒளித்தன்மையையும் விளக்கும் வண்ணம் "விசும்பு மெய்யாகத் திசைக்கையாகப் பசுங்கதிர் மதியமொடு சுடர் கண்ணாக" என்று பாடுகிறது.

தொல்காப்பியம் முல்லை நிலத்தின் கடவுள் திருமால் என்கிறது. இங்கு திருமாலைத் தொல்காப்பியர் "மாயோன்" என்ற குறிப்பிடுகிறார். மாயோன் என்ற சொல்லுக்கு நச்சினார்க்கினியார் "கடல் நிற வண்ணன்" என்ற கூறுகிறார். பதிற்றுப்பத்தின் ஏழாம்பத்தின் பதிகம் "மாயவண்ணன்" என்ற திருமாலைக் கூறுகிறது. பசுக் கூட்டங்களைக் காப்பவன் விஷ்ணு என்று இருக்கு வேதம் கூறகிறது.

ஆகவே "விஷ்ணு" என்னும் சொல்லின் சொற்பிறப்பியல் வரலாறு முழுவதுமாக ஆரியர்களோடு தொடர்புடையதாக இல்லை. ஆரியர்களுக்கு முற்பட்ட சான்றாதாரங்களிலிருந்து இச்சொல்லைக் காண வேண்டும் என்ற பெர்ப்கிலுஸ்கியின் முடிவு டாக்டர் சுனித்குமார் சட்டர்ஜியின் கருத்தினால் வலிமை பெறுகின்றது. உலகம் முழுவதையும் தன்னுடைய ஒளிக் கதிர்களினால் நிரப்பும் சூரியக் கடவுள் என்ற கோட்பாட்டுடன் விஷ்ணு நின்று விடவில்லை. அவன் ஆகாயக் கடவுள். நீல நிறத்தை உடையவன் என்ற திராவிடக் கோட்பாட்டையும் உள்ளடக்கியவன் விஷ்ணு என்கிறார் சட்டர்ஜி.

விஷ்ணு வழிபாடு

விஷ்ணுபகவான் ஆன்மாக்களை ஈடேற்றும் பொருட்டும் தர்மம் குலைந்து அதர்மம் மேலோங்கும் போதும் பல்வேறு அவதாரங்களையும் எடுக்கின்றார். இதற்கு பகவத்கீதை சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகின்றது. கீதையில் கண்ணன் அகங்கார மமகாரங்களை நீக்கி பற்றுக்களைத் துறந்து தன்னையே சரணடைபவர்களைத் தான் காப்பாற்றுவதாகக் கூறுகின்றான். "நல்லோரைக் காக்கவும் கொடியோரை அழிக்கவும் தருமத்தை நிலைநாட்டவும் நான் யுகந்தோறும் அவதரிக்கின்றேன்" எனப் பகவான் கீதையில் கூறுகிறார். உயிர்கள் மீது கொண்ட பேரருளினால் விஷ்ணு உலகிலே அவதரிக்கின்றார் என்பது வைணவர்களது நம்பிக்கை யாகும். மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனன், பரசுராமன், பலராமன், இராமன், கிருஷ்ணன் கல்கி என்பன விஷ்ணு எடுத்த அவதாரங்கள் ஆகும்.

நீர்வாழ் உயிரிலிருந்து தொடங்கிப் படிப்படியான வளர்ச்சி நிலையில் தெய்வ நிலைவரை இந்த அவதாரங்கள் பரிணாமம் அடைந்து செல்வதாகக் குறிப்பிடப்படுகின்றது. ஒவ்வொரு அவதாரமும் தேவர்கள், மானிடர் ஆகியோரின் இடர்களைப் போக்கவே எழுந்துள்ளன, என வரலாறுகள் கூறுகின்றன. இவற்றுள் இராம அவதாரமும் கிருஷ்ண அவதாரமும் எல்லோராலும் போற்றப்பட்டு வருகின்றன. ஆலயங்களிலும் இவ்விரு அவதாரத் திருமேனிகளுமே முதன்மை பெற்று வழிபாட்டுக்குரியவையாகப் போற்றப் பட்டு வருகின்றன. மேலும் இவ்விரு அவதாரங்களும் இராமாயணம், பாரதம் என்னும் இதிகாசங்கள் தோன்று வதற்கு வழிவகுத்துள்ளன.

புராண மரபுப்படி விஷ்ணுவின் அவதாரங்கள் எண்ணிலடங்கா எனக் கூறப்படுகின்றது. ரிஷிகள், மனுக்கள், தேவர்கள், மனுவின் புத்திரர்கள் யாவரும் விஷ்ணுவின் அம்சங்களே எனக் கூறப்படுகின்றது. இவ்வகையில் அவதாரங்கள் அவதாரம், ஆவேசம், அம்சம் என மூவகையாகப் பிரித்துக் கூறப்படுகின்றன. விஷ்ணு தனது முழு வல்லமையுடன் தோற்றுவது அவதாரமாகவும், தற்காலிகமாக தனது சக்தியினை இறைவன் ஓர் உருவில் புகுத்தி நோக்கம் முடிந்ததும் மீட்டுக் கொள்வது ஆவேசமாகவும் கடவுளின் கருவிகளாய் உள்ளதும் அவ்வப்போது தோன்றி துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனம் செய்வது அம்சமாகவும் கருதப்படுகிறது சங்கு, சக்கரம் என்பவற்றின் தோற்றமே அம்சமாகவும் நரசிம்மம், வாமனன், முதலியன ஆவேசமாகவும் கருதப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் விஷ்ணு வழிபாடு

யாழ்ப்பாணத்தில் வைணவம், சைவம் போன்று தனித்ததோர் சமயமாகக் கடைப்பிடிக்கப்படாது விடினும் விஷ்ணு ஆலயங்கள் அமைந்துள்ளமையும் சைவர்களும் அங்கு சென்று வழிபடுவதும் சிறப்பம்சமாக விளங்கு கின்றன. இவ்வகையில் யாழ்ப்பணத்தில் சிறப்படைந்து விளங்கும் விஷ்ணு வழிபாட்டுத் தலங்களாகிய வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில், துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில், கீரிமலை ஸ்ரீமந் நாராயண சுவாமி கோவில், பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோயில் அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாக வரத நாராயணர் கோவில், கோப்பாய் ஸ்ரீகிருஷ்ணன் கோவில் ஆகியன குறிப்படத்தக்கன. இவ்வாலயங்களுள் புராதன வழிபாட்டுச் சிறப்பு மிக்க ஆலயங்களின் வழிபாட்டம்சங்கள் பற்றி ஆராய்வது பொருத்தமானதாகும்.

யாழ்ப்பாணம் ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயம்

அமைவிடம்

யாழ்ப்பாண மாவட்டத்தின் வண்ணைப் பிரதேசத் தில் புகழ்மிக்க ஆலயமாக இவ்வாலயம் திகழ்கிறது கிழக்கே மணிக்கூட்டு வீதியையும் மேற்கே கஸ்தூரியார் வீதியையும் வடக்கே நாவலர் வீதியையும் எல்லையாகக் கொண்டு அதன் மையப் பகுதியில் இவ்வாலயம் அமைத்துள்ளது. இவ்விடத்தை ஆதியில் "அடியார்க்கு நல்லான் வரம்பு" என வழங்கினர்.

ஆலயத் தோற்றம்

ஈழத்தின் தலைசிறந்த வைணவ ஆலயங்களுள் இவ்வாலயம் மிகவும் பழமை வாய்ந்த ஒன்றாகும். கி.பி 1665

இல் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் தென்னிந்தியா விலிருந்து நெசவுத் தொழிலை விருத்தி செய்வதற்காக "பத்மசாயி" செட்டிப்பிள்ளைகளை வண்ணையில் குடியேற்றியதாக இராசநாயகம் என்பவர் கூறியுள்ளார். ஆனால் 1347 இல் குணபூசனசிங்கையாரியன் நெசவுத் தொழிலை வளம் படுத்த ஆந்திரநாட்டிலிருந்து பண்டாரவாளச் செட்டிப் பிள்ளைகளை அழைத்து வந்து வண்ணையில் குடியேற்றியதாக ஐதீகக் கதை கூறுகிறது.

இக்கோவிலில் தோற்றம் பற்றிய செய்தியில் பண்டாரவாளச் செட்டிப் பிள்ளைகளின் சரித்திரமும் இவ்வாலயச் சரித்திரமும் ஒன்றோடொன்று தொடர்பு படுகின்றன. ஒல்லாந்தர் நெசவுத் தொழிலை விருத்தி செய்வதற்காக தமிழ்நாட்டின் ஆந்திரப் பிரதேச மக்களைக் கொண்டு வந்து வண்ணைப் பிரதேசத்தில் குடியமர்த்தி யதாக் கூறப்படுகின்றது. எனவே இவ்வாலயத்தின் தோற்றம் இந்தி வைணவ வழிபாட்டு முறையின் தொடர்ச்சியாகக் காணப்படுகின்றது. கி.பி 1820 இலிருந்தே இக்கோயிலுக்கு முறையாக நிலங்கள் தர்மசாதனம் செய்ப்பட்டிருப்பதை அறிய முடிகிறது.

19ஆம் நூற்றாண்டிலிருந்து இக்கோயில் ஆதீன மகாசபையாரால் முறையாக நியமிக்கப்பட்ட தர்மகர்த் தாக்களால் பரிபாலிக்கப்பட்டு வந்துள்ளது. இக்கோயில் உள்ள இடத்தையும் கோயிலுக்கு அருகிலுள்ள நிலங்களையும் "அடியார்க்கு நல்லான் வரம்பு" என்று குறிப்பிடுவர். வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் மூலஸ்தானத்தில் ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் அருள் பாலிக்கின்றார். புராதன காலத்தில் வணங்கப்பட்ட மூல விக்கிரகம் இன்றும் திருமாலின் பக்கமாக காணப்படுகின்றது. இவ்வாலயத்தின் தல விருட்சம் பலா மரமாகும்.

வைகானச ஆகம முறைப்படியான கோயிற் கிரியை முறைகளே இங்கு பின்பற்றப்படுகின்றன. இவ் வைகுண்ட நாதரின் ஆலயத்தில் நித்திய நைமித்திய கிரியைகள் சிறப்பாக நடைபெறுகின்றன. அத்துடன் கிருஷ்ண ஜெயந்தி, ஸ்ரீராம நவமி, வைகுண்ட ஏகாதசி, நவராத்திரி, சங்கராந்தி, கோபூசை, உறியடி உற்சவம் மற்றும் தீப பூசை முதலான விழாக்கள் மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. இக் கோயிலின் மகோற்சவம் செப்டெம்பர் ஒக்டோபர் காலப்பகுதியில் சிறப்பாக நடைபெறும். ஸ்ரீ வைகுண்டம் முதலான 108 தலங்களைப் போல ஈழத்தின் அருள் மிக்க வைணவத் தலமாக இக் கோயில் விளங்குகின்றது.

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயம்

இலங்கையின் வட பகுதியில் அமைந்துள்ள பருத்தித்துறையில் வல்லிபுரப் பகுதியில் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் அமைந்துள்ளது. வரலாற்று பெருமை மிகக் இவ்வாலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூன்றும் ஒருங்கமைந்த பிரசித்தி பெற்ற புராதன திருத்தலமாகக் காணப்படுகின்றது. வல்லிபுரம் என்ற பெயர் இப்பிரதேசத்திற்கு எவ்வாறு ஏற்பட்டது என்பது பற்றிப் பல கருத்துக்கள் நிலவுகின்றன "வல்லியம்" என்பதற்கு "ஆயர்பாடி" என பிங்கலந்தை நிகண்டிலே கூறப்பட்டுள்ளது. "வல்லி" என்ற சொல்லிற்கு ஆயர்பாடி என்ற கருத்தை ஆனந்தவிகடன் அகராதியிலும் "இடைச்சேரி" யென தமிழ் அகராதியிலும் குறிப்பிடப் பட்டுள்ளது. "புரம்" என்பதற்கு "கோயில்" எனப் பொருள் வழங்கப்படுகின்றது. எனவே வல்லிபுரக் கோயில் என்பது ஆயர்பாடிக் கோயில் என்ற பொருளைத் தருகிறது. வல்லியத்தேவன் பெயரைக் குறிக்கும் முகமாகவே இருபகுதில் குடியேறிய மக்கள் இக்கிராமத்தை வல்லிபுரம் என அழைத்ததாகவும் கூறப்படுகின்றது. இம்மக்கள் தெலுங்கர்களாகவும் வைணவமதத்தைப் பின்பற்றுவோ ராகவும் காணப்பட்டமையினால் இப்பகுதியில் வைணவ வழிபாடு காணப்பட்டது.

இங்குள்ள இறைவனை ஆழ்வார் என்று அழைக்கப்படுவதும் சிந்திக்கத்தக்கது. ஆழ்வார்கள் எனும் பெயர் பொதுவாக திருமால் அடியார்க்கே வழங்கப்படுவது மரபாகக் காணப்படுகின்றது. எனினும் திருமாலையும் "ஆழ்வார்" என்ற குறிப்பிட்டுள்ளனர். சோழப்பெருமன்னர் காலச் சாசனம் ஒன்றில் "ஆழ்வார் திருவரங்கத்தேவர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. "ஆழ்வார்" என்ற சொல்லுக்கு "சூரின்" என்ற ஒரு பொருளும் உண்டு. வேதங்களில் சூரியனுடன் தொடர்பு கொண்ட தெய்வமாகவே விஷ்ணு போற்றப்படுகின்றார்.

வல்லிபுரநாதர் ஆழ்வார் என அழைக்கப் பட்டதற்கான காரணம் ஆய்விற்குரியது. இலங்கையின் வடபகுதியும், இந்தியாவின் சில பகுதிகளும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் "நாகர்" என்ற இனத்தவரின் குடியிருப்புக்களைக் கொண்டு விளங்கியது. ஆதிக் குடிகளாகிய நாகர் வாழ்ந்த பிரதேசங்களுள் வல்லிபுரப் பகுதியம் ஒன்றாகும். எனவே வல்லிபுர ஆழ்வாரின் ஆதித்தோற்றம் நாகர்களின் ஆதி வணக்கமான சூரியக் கடவுளாக இருந்திருக்க வேண்டும்.

இலங்கையை ஆண்ட தேவநம்பியதீசன் அசோகனோடு நட்புப்பூண்டு பௌத்த மதத்தைத் தழுவிய பின் இலங்கையிலே பௌத்த மதம் வேரூன்ற ஆரம்பித்தது. இவ்வாற ஈழத்தில் பௌத்தம் பரவிய போது நாகர் குடியிருப்பாகிய வல்லிபுர பகுதியிலும் மதமாற்றம் நிகழ்ந்து கி.பி 2 ஆம் நூற்றாண்டளவில் பௌத்த விகாரை ஒன்ற இவ்விடத்தில் இருந்தது என்பதை வல்லிபுர பொற் சாசனம் கூறியுள்ளது. எனவே இத்தகைய சூழ்நிலையில் ஆதியிலிருந்து வாழ்ந்த நாகர்கள் சூரிய பகவானுக் கமைத்த கோயில்கள் யாவும் பௌத்த விகாரைகளாக மாறிய பின்னர் வைணவ மக்கள் குடியேற்றத்தால் நரசிங்கப் பெருமான் கோயில்களாக மாறிருக்க வேண்டும். இன்றும் நாக வழிபாடு பௌத்த சமயத்துடன் பெரிதும் தொடர்புபட்டுக் காணப்படுவதற்கு நாகர் தொடர்பே காரணமாக இருக்க வேண்டும்.

வல்லிபுர ஆழ்வார் ஆலயம் புராதன ஈழத்தின் வட பாகத்தில் இருந்த யாழ்ப்பாண அரசு கால சிங்கையாரியச் சக்கரவர்த்திகளின் காலத்திற்கு முற்பட்ட காலத்தில் உருவானது. இவர்களின் இராசதானியாகிய "சிங்கபுரம்" என்பது ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் பாங்கிலே உருவாலும் திருவாலும் உயர்ந்து விளங்கியது. என்பது

சரித்திர உண்மை இப்புராதன விஷ்ணு ஆலயம் விசேடமாக வடமராட்சிப் பிரதேச மக்களாலும் பொதுவாக ஈழத்தமிழ் மக்களாலும் வழிவழியாகப் போற்றப்பட்டு வருகிறது. இத்தகைய பெரும் சிறப்புடைய இவ் வாலயத்தின் வரலாற்றுப் பெருமை வடமொழி ஸ்கந்த புராணத்திலே தட்சண கைலாய மான்மியத்தின் ஸ்ரீ வல்லிபுர வைபவத்தில் கூறப்பட்டுள்ளது.

இவ்வாலத்தில் ஒரு விசேடம் யாதெனில் எத்தனை காலப் பூசைகள் நடைபெற்றாலும் அத்தனை காலப் பூசைகளிலும் விநாயகருக்கு பூசை நடைபெறும். இது ஒரு மரபாக உள்ளது. வைணவச் சின்னமான ஸ்ரீ சக்கராயுதம் உள்ள ஆலயத்தில் இது சிறப்பம்சமாகும். இங்கு மகோற்சவமானது புரட்டாதி மாதத்தில் வருகின்ற பூர்வ பக்க பூரணைத்தினத்தன்ற "கடல் தீர்த்தம்" அமையம் வண்ணம் கணிக்கப்பட்டு கொடியேற்றம் இடம்பெறும் கடல் தீர்த்தம் 16 ஆவது நாளிலும் அதனை அடுத்து அதற்கு மறுநாள் கேணித்தீர்த்தமும் நடைபெறும். கொடியேற்றத் திற்கு மூன்று தினங்கள் முன்னதாக ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்கு மேற்கே பெரிய குருக்கட்டுக்கு அப்பாலுள்ள குருக்கட்டு விநாயகர் ஆலயத்திற்கு வல்லிபுர ஆலயக் கொடியேற்றக் குருக்கள் கன்னிக்கால் நாட்டி பாலிகை, நவதானியம் விதைத்து மூஷிக கொடி நாட்டி தீபாராதனை செய்து திரும்புவர். இவ்வாலயத்தின் தேர் திருவிழாவினை அடுத்து இடம் பெறும் கடல் தீர்த்தம் இக் கோவிலின் வரலாற்றினை நினைவு கூரும் பொட்டு நடைபெறவதாக அமைகிறது. "வல்லி" என்னும் கன்னிகையின் நாக சாபம் நீங்குவதற்கு விஷ்ணு மீனாகத் தோன்றி இக்கன்னிகையின் மடியில் வீழ்ந்தது இக்கடற்பரப்பிலாகும். இதன் நினைவாகவே இவ்விழா கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வாலயத்தின் மூலஸ்தானத்தில் சக்கரமே பூஜிக்கப் படுகிறது.

ஈழ வரலாற்றில் வல்லிபுர தேசம் முக்கியத்துவம் பெற்றதாகக் காணப்படுகின்றது. சுவாமி ஞானப்பிரகாசரின் கருத்துப்படி இப்பிரதேசமே உக்கிர சிங்கனின் இராசதானியாகிய சிங்கைநகர் எனக் கூறப்பட்டுள்ளது. இக்கோவிலுக்குரிய நிலத்தில் பழைய கட்டத்தின் அழிபாடுகளுக்கிடையிலே 1936 ஆம் ஆண்டளவில் வல்லிபுரப் பொன்னேட்டுச் சாசனம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இச்சாசனம் இப்போது கொழும்பு தேசிய நூதன சாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

வல்லிபுர ஆழ்வார் கோயில் அமைந்துள்ள கிராமத்திலும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் வைணவச் செல்வாக்கின் பிரதிபலிப்பாக இங்குள்ளவர் களின் பெயர்கள் காணப்படுகின்றன. ஆழ்வாப்பிள்ளை, பாலகிருஷ்ணன். இலட்சுமி, நாராயணபிள்ளை, கோவிந்தர், நிருஷ்ணசாமி, முரளி, யசோதா, கோகுலன், கோபாலன் போன்ற பெயர்கள் இதற்குச் சான்றாகும்.

இங்கு நடைபெறும் கிருஷ்ணயந்தி விழா மிகச் சிறப்புடையது. இவ்வாலயத்தில் உள்ள அழகிய விமானத்தில் பஞ்சமுக அனுமாரின் திருவுருவம் காணப்படுகிறது. ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரை வழிபடும் பக்தர்கள் ஆலய வழிபாட்டின் பின் ஆஞ்சநேயரின் திருமாளிகை முன் அமர்ந்து அவரின் திருநாமத்தை 108 முறை உச்சரித்து வணங்கினால் அவர் கேட்கும் வரங்களை அளிக்கும் பெருந்தகையாவார். இவ்வகையிலே தான் இன்று மருதானார் மடத்தில் ஆஞ்சநேயருக்கு தனியான ஆலயம் அமைக்கப்பட்டு சிறப்பான பூசைகள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவில்

யாழ் நகரிலிருந்து ஒன்பதாவது மைல் தொலைவில் அமைந்துள்ளது பொன்னாலை. இங்கு மேற்குத் திசையிலே ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவில் அமைந்துள்ளது. இவ்வாலயம் கடலையும் கடல்சார்ந்த இடத்தையும் சூழ்ந்து நெய்தல் நிலத்தின் மாண்பை எமக்கு உணர்த்துகிறது. ஈழத்திலுள்ள புகழ்வாய்ந்த திருத்தலங்க ளுள் ஒன்றாக பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயம் விளங்குகின்றது. இவ்வாலய வரலாற்றினை வடமொழியிலுள்ள கந்த புராணத்தின் ஒரு பகுதியான தட்சணகைலாய மான்மியம், பறாளை விநாயக் பள்ளு, முதலிய நூல்களிலும் மற்றும் கலை வடிவங்களின் துனையடனம் அறிய முடிகிறது. இதுவரை கிடைக்கப் பெற்றுள்ள சான்றுகளின் படி இத்தலமானது கி.பி 15 ஆம் நூற்றாண்டிற்கு முன்பே புகழ்பெற்றிருந்தது எனக் கருத முடிகிறது.

பொன்னாலை "சுவர்ணாலயபரிசதுரங்கம்" எனவும் அழைக்கப்படும் சிறப்புடையதாகவும் விளங்கு கின்றது. அருட்பெருமையும் வரலாற்றுப் பழமையும் மிகக் இத்தலத்தின் நோக்கமும் பெருமையும் தட்சணகைலாய புராணத்திலே பொன்னாலைப் பெருமை உரைத்தபடலம் என்னும் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது. திருமாலின் ஒவ்வொரு அவதாரத்திற்கு கிரகமங்கள் ஒவ்வொன்றடன் தொடர்புள்ளதாக அடியார்கள் கருதுகின்றனர். இவ் வகையில் கூர்ம அவதாரத்திற்கும் சனிக் கிரகத்திற்கும் அதிக தொடர்பு உண்டென நம்புகின்றனர். இதனால் இவ் வாலயத்தில் டைபெறும் சனிவழிபாடு மிகவும் பிரசித்தி பெற்றாக விளங்குகின்றது. இவ்வாலயத்தின் தல விருட்சம் வன்னி மரமாகும்.

மூர்த்தி, தலம், தீர்த்தமெனும் முப் பெருமை களைக் கொண்டதாக இத்தலம் விளங்குகின்றது. மூல மூர்த்தியாகிய வரதராஜப் பெருமாள் இந்திரன், விசுவாமித்திரர், லக்சுமியால் வழிபடப் பெற்ற பழமை மிக்கவர் மூலஸ்தானத்தில் வரதராஜப்பெருமாள் பூலக்சுமி, மகாலக்குமி சமேதராக வீற்றிருக்கின்றார். இம் மூன்று உருவங்களும் வெவ்வேற காலத்தவையாக இருக்க வேண்டும். எனக் கலை வல்லுநர்கள் கருதுகின்னர். அடுத்து எழுந்தருளப்படடிருக்கும் இரு சக்திகளுடன் கூடிய வரதராஜப் பெருமாள் உற்சவ மூர்த்தியாவார். இவர் மூலமூர்த்தியை விடப் பழமையானவர் எனக் கருதப் படுகிறார். மூலஸ்தான மூர்த்தியானவர் சங்கு சக்கரம், அபயகரம், கதாயுதம் கொண்ட நான்கு கரங்களையுடைய வராகவும் விளக்க, உற்சவ மூர்த்தியானவர் சங்கு, சக்கரம் அபயகரம் கொண்டவராகவும் மறுகரத்தை தொங்க விட்டவராகவும் காணப்படுகின்றார். இதனை ஒத்த வடிவம்

மதுரைக் காஞ்சிபுர வரதராஜப் பெருமாள் ஆலயத்திலும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

"பொன்னாலயம்" என்ற இவ்வாலயத்தின் பெயரே பின்னர் இவ்வூருக்கும் வந்திருக்கலாம் என நாம் கருத இடமுண்டு. தேவர்களுக்குத் தலைவனான இந்திரன் இப்பதியில் சாபவிமோசனம் பெற்றமையினாலும் பொன்னொளி வீசும் விமானம் ஆகாயத்தில் தோன்றியமையாலும் அவ்விடத்திற்கு "சுவர்ணாலயபுரி" என்ற பெயர் ஏற்பட்டது. எனவே சுவர்ணாலயத்தின் தமிழ் ஆக்கமே பொன்னலயம் என கருதப்படுகின்றது. பரிவார மூர்த்திகளும் இவ்வாலயத்தில் சிறப்பு மிக்கவையாகக் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்திலுள்ள ஏனைய ஆலயங்களில் பெரும்பாலும் மூலமூர்த்தியே அதி முக்கியத்துவம் பெறுகின்றன. ஆனால் இவ்வாலயத்தில் பரிவாரத்தெய்வங்களும் சிறந்த புகழும் மகிமையும் பெற்றுக் காணப்படுகிறன.

இவ்வாலயத்தில் கருப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், சோபன மண்டபம், கருட மண்டபம், தம்ப மண்டபம், யாக மண்டபம், வசந்த மண்டபம், விரசார மண்டபம், நிருத்த மண்டபம் என்பன சிறப்புற்று விளங்குகின்றன.

அளவெட்டி நாககேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணார் ஆலயம்

அளவெட்டி என்னும் கிராமத்தில் சைவமும் தமிழும் சிறந்து விளங்கும் நாககேஸ்வரம் என்னும் திவ்விய திருப்பதியில் கோயில் கொண்டு எழுந்தருளி இருப்பவரே ஸ்ரீமத் நாராயணமூர்த்தி ஆவார். ஸ்ரீ நாகவரத நாராயண மூர்த்தி நாகமாய் காட்சி அருளி தான் தோன்றியறியதாக அமைந்த இப்புனித பதிக்கு ஸ்ரீநாகேஸ்வரம் என மக்கள் பெயரிட்டனர். சுமார் 200 வருடங்களுக்கு முற்பட்ட காலத்தில் வாகை, நுணா, விளா ஆகிய மரங்களுக்கு இடைப்பட்ட புற்றருகே வெண்நாகமரமாகத் தோன்றி சோதியாக மாறிய காட்சியைக் கண்ட அன்பர் ஒருவரால் வணங்கப்பட்டது. என்பது ஐதீக வரலாறு. அருட்கவி விநாசித்தம்பி அவர்கள் இவ்வாலயத்திற்கு அருகே குடியிருக்க வந்ததும் 14.02.1953 ம் ஆண்டு தொடக்கம் அவரை வழிபடத் தொடங்கியதாக அவர் வாக்கின் மூலமாக அறிய முடிகின்றது. இவ்வாறு ஆரம்பித்த வழிபாட்டின் வளர்ச்சி இன்று நாம் காணும் கோபுரத்துடன் கூடி ஆலயமாக காட்சி அளிக்கிறது.

இவ்வாலயத்தில் எம்பெருமான் நாராயணர் நடத்திய அற்புதங்கள் சொல்லில் அடங்கா "மூர்த்தி சிறிது கீர்த்தி பெரிது" என்பர் ஆன்றோர். இதற்கு சான்று பகருவதாய் உள்ளது எம் பெருமான் நிகழ்த்திய அற்புதங்கள் இவ்வகையில் சிறப்பு மிக்க அற்புதம் இறந்த பாலகனை உயிர் பெறச் செய்தமையாகும். இக் கலியுகத்தில் இப்படியும் நிகழ்ந்ததோ என எண்ணிப் பார்க்கும் போது நாராயணனின் அருள் வெளிப்படுகின்றது. இந்நிகழ்வு 1976 ஆம் ஆண்டு 4 வயதுச் சிறுவன் மரணித்த பின் பெற்றோர் நாராயணனின் ஆலயத்திற்குக் கொண்டு வந்து உளமுருகி வேண்ட கருணா மூர்த்தியாகிய நாராயணனின் அருளால் பாலகன் உயிர் பெற்றான். அந்தச் சிறுவன் யாழ்ப்பாணத்திலுள்ள சங்கானையைச் சேர்ந்த துரைச்சாமியின் மகன் சுவசதன் ஆவார். இவ்வாறாக பல அற்புதங்களைப் புரிந்து தன்னையே தஞ்சமென நம்பி வந்த அடியவர்களுக்கு அருள் சொரிந்த வண்ணமுள்ளார்.

1.1.1969 இல் இக் கோயில் சிறியளவில் கட்டப்பட்டது. பின்னர் 1979 ஆம் ஆண்டு தொடக்கம் அலங்காரத்திருவிழா வெகு விமரிசையாக இடம் பெற்று. ஆலயம் வளர வளர அடியார் கூட்டம் பெருகியது நாராயண மூர்த்தியின் அருள் பெருகியது. ஆடியார்கள் தம் குறைகளை இரந்து எம் பெருமானிடம் பல இஷ்டசித்தி களைப் பெற்றனர்.

இவ்வாறாக வளர்ச்சியடைந்தஆலயம் நாரயணன் அருளால் மகோற்சவம் நிகழும் பாக்கியத்தைப் பெற்றது இதன் பிரகாரம் கொடியேற்றம், சித்திரத்தேர், சப்பறம் போன்றன இடம் பெறுகின்றன. 27.08.1986 இல் புதிய சித்திரத்தேரில் பூதேவி, ஸ்ரீதேவி சமேத ஸ்ரீநாகவரத நாராயணப் பெருமான் ஆரோகணித்து அடியார்கள் அனைவருக்கும் அருள் மழை பொழிந்தார் 20. 10.1988 இல் பெரிய மணிக்கூட்டுக் கோபுரம் அமைக்கப்பட்டது. 22.4.1999 இல் நாராயணமூர்த்தியும் ஏனைய பரிவரா மூர்த்திகளும் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு 1.7.1999 இல் மகா கும்பாபிஷேகம் இடம் பெற்றது.

அடுத்து கோப்பாய் வடக்கு கொழுவியம்பதியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீசக்கரத்தாழ்வார் குறிப்பிடத்தக்க சிறப்புமிக்க விஷ்ணு ஆலயமாகத் திகழ்கிறது. இவ் வாலயத்தில் 1958.04.10 அன்று சக்கரம் வைக்கப்பட்டது. இங்கு விஸ்ணு பக்தர்கள் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றியும் மற்றும் பல உதவிகளைப் புரிந்தும் அவ்வாலயத்துடன் மிக நெருக்கமான உறவைப் பேணி வருவதை இன்றும் நாம் அவதானிக்க முடிகிறது. இவ்வாறாக யாழ்ப்பாணத்தில் இன்று விஷ்ணு வழி பாடானது சைவத்துடன் இணைந்த நிலையில் மிகவும் வளர்ச்சியடைந்துள்ளதை இவ்வாய்வினூடாகத் தெளி படுத்த முடிகிறது.

அடிக்குறிப்புக்கள் :

1. இந்திரபாலா கா - யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம் 1972 9(முகவுரை)
2. இராசநாயகம் - யாழ்ப்பாண சரித்திரம்
3. நாராயணசாமி வி.என்.சி - வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் சித்திரத்தேர் திருவிழா தினபதி 27.09.1982 ப-5
4. வசந்தா நடராஜன் திருமதி - ஈழத்துத்திருக்கோயில்கள் வரலாறு மரபு பகுதி 1 மணிமேகலைப் பிரசுரம் சென்னை 2003 ப-291
5. மேலது. ப.292

கோவில்கள் – ஒரு பார்வை

திருமதி சசிகலா சிவநாதன்
B.A(Hons), Dip in Ed, Med
(SLTS G I)

காலங்காலமாக மதங்களின் வழிப்படுத்த லூடாக கோயில் பெறும் முக்கியத்துவம் எழுத்திலே விபரிக்கக் கூடிய விடயமாக இருக்கவில்லை. இது மக்களின் உணர்வோடு தொடர்புடையதாக காணப்படுகின்றது. மனிதன் மேல் நிலையில் இருந்தாலும், பாமரனாக இருந்தாலும் கோயிலில் சிரம் தாழ்த்தி வணங்குவதைக் காண்கிறோம். இறைவன் முன்னால் எல்லோரும் அடிமைகள் என்ற மனப்பாங்கு இருப்பதை காணக் கூடியதாயுள்ளது. உலகில் உள்ள எல்லாமதத்தவரும் இவ்வாறே செயற்படுகின்றனர். எல்லா மதத்தவரின் வழிபாட்டு மையமாகவும் கோயில் இருப்பது உலகப்பொது. கோவில் பெறும் முக்கியத்துவத்தை சைவசமய சமயகுரவர்களில் ஒருவரான திருவுக்கரசர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

திருக்கோயி லில்லாத திருவி லூரும்
திருவெண்ணீ றணியாத திருவி லூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும்
பாங்கினொடு பல தளிக ளில்லா வூரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா வூரும்
விதானமும் வெண்கொடியு மில்லா வூரும்
அருப்போடு மலர் பறித்திட் டுண்ணா வூரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே

கோவிலில் கல்லாக அல்லது கருத்தாக இருப்பவர் கடவுள்தான் என்று கருதி நாளும் பொழுதும் மனிதர்கள் வணங்கி வருகின்றனர். கடவுளை நீக்கமற நிறைந்திருப்பவன் எனக்கருதி

பொன்னிலும், பொருளிலும், அணுவிலும்,
மலையிலும்,
கனலிலும் புனலிலும், வெளியிலும், வளியிலும்,
அங்கும், இங்கும், எங்கும் ஊடுருவியிருப்பவன்,
பார்க்குமிடம் எங்கும் நீக்கமற பரிபூரணானந்த மான
பரமன்

என்கின்றது சிவஞானபோதம். அக்கடவுளுக்கு உள்ளத்தில் கோயில்கட்டி இடையறாது வணங்கும் பக்குவமுடையவர்களும் உள்ளனர் என்பதனை "பூசலார் நாயனார்" வரலாற்றின் ஊடாக பெரியபுராணம் காட்டுகின்றது. உலகியல் வாழ்வில் பலர் உள்ளக் கோயிலில் உத்தமனாரை வணங்கும் பக்குவமற்றவர்களாக இருப்பதால் தாம் நம்பிய கடவுளை வணங்கக் கோயில் ஒன்று தேவை என்ற கருத்தும் உண்டு. கோயிலில் வழிபடுவதென்பது ஒருவாழ்க்கை முறை என்று கருதுபவர்களுமுண்டு. எமது சமயத்தின் முதன் நூல்கள் எனப்படும் வேதங்களும், ஆகமங்களும் சைவத்தின் சிறப்புமிக்க பக்திப்பனுவல்களும், சித்தாந்த சாத்திரங்களும், சான்றோர் வாக்குகளும் பல்வேறு காலங்களிலும் தெய்வம் ஒன்றே என்பதனை வலியுறுத்தி நின்றாலும் நின்றாலும் உருவங்களை பலகடவுளர், சமைத்தும், பல கோயில்கள்கட்டியும் வழிபடுவதே மரபாக அமைந்துள்ளது. இது பற்றி சுவாமி விவேகானந்தர், பாரதி, திருமூலர் போன்றோரின் கருத்துக்கள் இவ்விடத்தில் நோக்குதல் பொருத்தமுடையதாகும். சிக்காகோ சர்வமத மாநாட்டில் இந்துமத பிரதிநிதியாய் கலந்து கொண்ட சுவாமி விவேகானந்தர்,

"யாரொருவர் என்னை எவ்வடிவில்
வழிபட்டாலும் நான் அவரை அடைகின்றேன்"

என்பதே இந்துமதத்தின் இறைநம்பிக்கை என வெளியுலகிற்கு எடுத்துக் கூறினார். இதனால் பல்வேறு மத பிரதிநிதிகள் கலந்து கொண்ட மாநாட்டில் இந்துமதம் பெருமைபெற்றது.

கடவுள் எங்கும் இருக்கிறாரே. எல்லாம் கடவுள் தானே. ஊருக்கு நடுவில் ஒரு கோயில் கட்டி, அதில் ஒரு கல்லையோ, செம்பையோ, நட்டு அங்கே தான் எல்லோரும் வந்து கும்பிட வேண்டும் என்ற நியமம் எதற்காக? என்று கேள்வியை எழுப்பிய பாரதியார் அதற்குரிய பதிலையும் கூறுகின்றார். "ஒன்று கூடிக் கடவுளை வணங்கப் போகுமிடத்துமனிதரின் மனங்கள் ஒருமைப்பட்டு, தமக்குள் இருக்கும் ஆத்ம ஒருமையை அவர்கள் தெரிந்து கொள்ள இடம் உண்டாகுமென்று கருதி முன்னோர் கோவில் அமைத்தார்கள் என்பது பாரதியின் கருத்தாகும்."

"சிவன் நீ, சக்தி உன் மனைவி
விஷ்ணு நீ, லக்ஷ்மி உன் மனைவி
பிரமா நீ, சரஸ்வதி உன் மனைவி"

இதனைச்சுட்டிக்காட்டி மிருக நிலையிலிருந்து மனிதரைத் தேவநிலைக்கு கொண்டு போய்ச் சேர்க்கும் பொருட்டு அமைக்கப்பட்ட பள்ளிக்கூடங்களே கோயில்கள் என்பது பாரதியின் வாக்காகும்.

திருமூலரின் கருத்தின்படி யோகநெறி நின்றவர்கள் தமது உடம்பையே கோயிலாகக் கண்டனர்.

"உடம்புள்ளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யானிருந்து தோம்புகின்றேனே"

என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். இவ்வாறு உடம்பினைக் கோயிலாகப் பேணும் உயர் தத்துவக் கருத்தினை ஆன்மீக அறிவின் அடித்தளத்தில் நிற்கும் பாமரமக்களாகிய நாம் அறிந்து கொள்ள முடியாது. இவர்களுக்கு உயர் அறிவினை வளர்த்துக் கொள்ளும் பொருட்டே ஆலயங்கள் அமைக்கப்பட்டன என்பர் ஒரு சாரார்.

சிற்ப நூல்கள் இறைவனின் உறைவிடம் என்னும் பொருளில் ஆலயத்திற்கு தேவகிருகம், தேவஸ்தானம் எனப்பல பெயர்கள் இருந்தன என்பதைக் காட்டுகிறன. அத்துடன் சில்பரத்தினம் என்னும் நூல், விதிமுறைப்படி அழகினால் தேவர்களது மக்களதும் உள்ளம் கவர்ந்து அகமகிழ்வினை எய்துவிப்பதால் பிராசாதம் என்னும் பெயர் ஆலயத்திற்கு ஏற்பட்டது" எனக் கூறுகிறது. இதனூடாக அழகுக்கலை உணர்வுகளையும் உண்மைகளையும் உணர்த்தி ஆன்மாக்களுக்கு ஈடேற்றம் பெறுவதற்கான இடமாக கோயில்கள் இருப்பதாக பாமரர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

மனநிம்மதி, அமைதி, சுதந்திரமான வழிபாடு புலனடக்கம் போன்ற நல்லியல்புகளை வளர்த்தெடுக்க ஆலயங்களே ஏற்ற இடமாக அமைகின்றன என்ற கருத்துமுண்டு. நாட்டின் மிக உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கும் அரனிற்கு மற்றவர்களுக்கு முன் உதாரணமாக வாழ்ந்து காட்ட வேண்டிய பொறுப்பு இருப்பதாக சாஸ்திர நூல்கள் எடுத்துரைக்கின்றன. இதனால் கோ- இல் என்பது அரசன் - இல் அல்லது உறைவிடம் என்ற கருத்தில் இறைவன் சன்னிதானம் மிகஉயர்ந்த ஸ்தானத்தில் இருக்கின்றது. இறைவன் என்ற எல்லோருக்குமான அரசன் இருக்குமிடம் ஏனைய சாதாரண இல்லங்கள் போலல்லாது பலவகைச் சிறப்புக்கள் பொருந்தியதாயுள்ளது.

சிதறும் சிந்தனைகளை ஒரு வழிப்படுத்தி ஆன்மாக்களை லயப்படுத்தும் நிலையங்கள் ஆலயங்கள் என்ற பெயரைப் பெற்றன. சோலை, மலை, ஆறு, கடல், வயல் போன்ற இயற்கை எழில் நிறைந்த பகுதிகள் மக்கள் மனதைக் கவர்வன. மக்களுக்கு நல்ல வாழ்விடங்கள் அமைக்க அப்பகுதிகளே ஏற்றவை. இதனால் அப் பகுதிகளில் எல்லாம் ஆலயங்கள் அமைக்கப்பட்டன. எனவேதான் அத்தகைய இடங்கள் இறைவன் உறையும் இடங்கள் என நாயன்மார் தம் பதிகங்களில் காட்டி நின்றனர்.

"மாவின் கனி தூங்கும் பொழில் மாதோட்டம்
குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும்
கோணமாமலை"

போன்ற ஆயிரக்கணக்கான மூர்த்தி, தல, தீர்த்தப் பெருமை பெற்ற தலங்களைப் பதிகங்கள் காட்டுகின்றன. இவ்வாறாக எமது நாடு, எமது மண், எமது வாழ்வு, எமது இறைவனது இருப்பிடம் என்ற பிரதேசப் பற்றினை நாயன்மார் பாடல்களினூடாக ஏற்படுத்துவதற்கு ஆலயங் கள் பெரிதும் பயன்பட்டன.

விக்கிரக வழிபாடும் ஆலயமும்

விக்கிரக வழிபாடு என்ற சிந்தனை மரபுகளின் வளர்ச்சியே கோவில் என்ற நிறுவன அமைப்பிற்கு காரணமாகும். விக்கிரக வழிபாடு தேவ மரபு சார்ந்ததல்ல வேத கால ஆரியர் இந்தியாவிற்கு வருவதற்கு முன்னரே அங்கே வாழ்ந்து வந்த மக்கட் குழுவினரிடையே பயின்று வந்த ஒரு முறைமை இது என்பர். சிந்துவெளி அடையாளங்களால் இம்முடிவு அடையப்பட்டது என்பர். கூட்டுக் குடும்ப வாழ்வு நிலவி வந்த காலங்களில் தியானம் செய்யத் தேவைப்பட்ட தனி இடமே ஆலயம் என்ற கருத்தும் உண்டு. உபநிடதங்கள் கருத்து நிலையில் கூறிய பிரமம் பற்றிய சிந்தனைகளுக்கு காட்சிப்பிரமாணம் தருவதற்கு இதிகாச புராணங்கள் முன் வந்தன. இதனால் இவ் விலக்கியங்களில் விக்கிரக வழிபாட்டுச் சிந்தனை மரபுகள் வளர்ச்சி கண்டன. ஆகமங்கள் விக்கிரகங்களின் அளவைப் பிரமாணங்களையும் அவை எழுந்தருளும் ஆலயங்கள் தொடர்பான அமைப்பு விதிகளையும் கூறி நிற்கின்றன.

தமிழக வரலாற்றின் ஆரம்ப சிந்தனைகளில் புறநானூறு முக்கட் செல்வர் நகர்வலம் என சிவனின் விக்கிரக உலாக்காட்சியினைக் குறிப்பிடுகின்றது. திருமுருகாற்றுப்படை, திருச்சீரலைவாய், திருப்பரங் குன்றம் போன்ற இடங்களிலமைந்த முருகன் கோயில்கள் பற்றிய விவரணங்களைக் காட்டுகின்றது. சங்ககாலத்தில் ஆல், அரசு, கடம்பு, வாகை, வேம்பு போன்ற மரங்களின் கீழ் கோயில்கள் இருந்தன என்பர். ஆலமரத்தினைச் சுற்றி செங்கல்லாலான அமைப்பு இருந்ததையும் அதற்குப் படையல் செய்து வழிபட்டதையும் அகநானூறு காட்டும். சங்க காலத்து முக்கியம் பெற்று விளங்கிய நடுகல் வழிபாடும் ஆலய வழிபாட்டின் தோற்றத்திற்கும் எழுச்சிக்கும் காரணம் எனக் கூறுபவரும் உள்ளனர். இவை பத்தி இயக்க காலத்திற்கு முன்னர் இருந்த கோயில் பற்றிய சிந்தனையாகும். பக்தி இயக்க முன்னோடிகளில் ஒருவரான கோச் செங்கட் சோழன் காலத்தில் சிவாலயங்கள் பல எழுந்ததை " ஈசற்கு எழில் மாடம் எழுபது செய்துலகமாண்ட திருக்குலத்து வரிச்சோழன்" என்ற தொடர் குறிப்பிடு கின்றது. சூழலுக்கும் அமைப்பிற்குமேற்ப பல்வேறு வகையான கோவில்களை நாவுக்கரசர் தமது தேவாரப் பதிகங்களில் கூறுகிறார். பெருங்கோயில், கரக்கோயில், ஞாழற்கோயில், கொகுடிக்கோயில், இளங்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில், திருக்கோயில், சிவனுறை யும் கோயில் என இவரால் கூறப்படும் பலவகைக் கோயில்களின் தோற்றத்திற்குக் காரணம் பக்தி நெறியின் தோற்றமும் வளர்ச்சியுமே என்பர்.

நாயன்மார் வாழ்வில் ஆலயங்கள்

வீறுபெற்று வளர்ச்சி கண்டிருந்த சமண, பௌத்த ஆதிக்கத்தில் சைவ, வைணவம் அழிந்து போகாமல் அதனை மீட்டெடுக்கும் பணியில் நாயன்மார்கள், ஆழ்வார்கள், மன்னர்கள், பிரதானிகள், பெண்கள் என சமூகத்தின் பல தரப்பினரும் பங்கு கொண்டு செயலாற்றிய மாபெரும் இயக்கமே பக்தி இயக்கமாகக் கருதப்பட்டது. இப்பக்தி இயக்கத்தில் ஈடுபட்டோர் அதன் வளர்ச்சிக்கென மேற்கொண்ட செயற்பாடுகளில் பல ஆலயங்களையே மையமாகக் கொண்டு விளங்கின. நாயன்மார், ஆழ்வார் வாழ்விலும் ஆலயங்களே முக்கியம் பெற்றதனை அவர் தம் பதிகங்களின் ஊடாக கண்டுகொள்ளலாம்.

சுந்தரரை தடுத்தாட் கொள்ள வந்த இறைவன் தான் இருக்குமிடம் காட்டுவதாக கூறி திருவெண்ணெய் நல்லூர் ஆலயத்துள் சென்று மறைந்ததாகவும் சம்பந்தரை

சீர்காழியிலும், நாவுக்கரசரை திருவையாற்றிலும் ஆட்கொண்டதாகவும், சிவனை எவ்விடத்தனன் என மணிவாசகர் வேண்டி நின்ற இறைவன் குடி கொண்டு அடியார்களுக்கு அருள்பாலிக்குமிடமாக (போது "தில்லைக்கு வா" என இறைவன் அருளியதாகவும் குறிப்பிடும் செய்திகள்) ஆலயம் இருந்ததனை அறிய முடிகின்றது.

தலயாத்திரைக்கு தலங்கள்

மக்களை வழிப்படுத்தக்கூடிய தலைமை பெற்றிருந்த நாயன்மார்கள் ஆலய வழிபாட்டை பெரிதும் வலியுறுத்தினார்கள். இவர்கள் பக்தி இயக்கத்தினை மக்கள் இயக்கமாக மாற்றுவதற்காக நடைப்பயணத்தை மேற் கொண்டனர். நாவரசர் கன்னியாகுமரிமுதல் கயிலை வரை நடந்து தரிசனம் செய்தார் எனப் பெரியபுராணம் கூறுகின்றது. குழந்தையான ஆளுடையபிள்ளையாரும் தலயாத்திரைகள் மேற்கொண்ட போது அவரது பிஞ்சுப்பாதங்கள் நோகும் என்று இறைவனால் அவருக்கு முத்துப் பல்லக்கு வழங்கப்பட்டது என்று பெரியபுராணம் கூறுகின்றது. இத்தகைய தலயாத்திரைகளால் ஊர்கள் தோறும் அமைந்த ஆலயங்கள் உயர்வடைந்தன. புதிய ஆலயங்கள் அமைக்கப்பட்டதால் ஆலயங்களின் தொகை மேலும் மேலும் பெருகலாயிற்று முன்னே கட்டப்பட்டு சூழ்நிலை காரணிகளால் மூடப்பட்டிருந்த கோயில்கள் மீண்டும் திறக்கப்பட்டு வழிபாட்டிற்கு வகை செய்யப் பட்டிருந்தன. சமணரால் மறைக்கப்பட்டடிருந்த தளி எனப்படும் திருமறைக்காடு சிவாலயத்தை நாவுக்கரசர் பதிகம் பாடி மீட்டிடெடுத்தார் எனப் பெரியபுராணம் கூறுகின்றது.

மக்களது நாளாந்த வாழ்வில் ஆலய வழிபாடு அவசியமானது என அன்றைய சமூகத்திற்கு நாயன்மார்கள் எடுத்துரைத்தனர். ஆலயத் தொண்டின் அவசியம் பற்றி அப்பர் சுவாமிகளின் பாடல் ஒன்று,

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டு
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ யென்று
ஆரூரா வென்றென்றே அலறா நில்லே"

என்கின்றது.

கலைபயில் கூடமாக

பக்தி இயக்க வளர்ச்சியில் மக்களை கவர்ந்து இழுத்த கலை கலாசார நிகழ்வுகளை வெளிப்படுத்தவும், வளர்த்தெடுக்கவும் ஏற்ற இடங்களாக ஆலயங்கள் விளங்கின. சமூக பொருளாதார ஏற்றத் தாழ்வுகளுக்கு கப்பால் கலைஞர் ஒன்றுபட ஆலயங்கள் வழிகாட்டின. பிராமணரான சம்பந்தரும் பாணர் குலத்தவரான திருநீலகண்ட யாழ்ப்பாணரும் ஒன்றிணைந்து இசையூடாக இறையுணர்வினை ஆலயங்களில் வளர்த்து நின்றமையை பதிகங்கள் காட்டுகின்றன.

"இன்னிசை வீணையர் யாழின ரொருபால்
இருக்கொடு தோத்திர மியம்பின ரொருபால்......
துன்னிய பிணைபலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துகள்கையர் ஒருபால்"

என அமையும் மணிவாசகர் காட்டும் திருப்பெருந்துறைக் கோயிற்காட்சி கோயிலை கலைக்கூடமாக காட்டுகின்றது.

"வலம்வந்த மடவார்கள் சடமாடமுழவதிர
மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி முகில்பார்க்கும்
திருவையாறே"

என்ற சம்பந்தர் தேவாரம் கோயில் சூழல் கூத்துக்கலை பயிலிடமாகவும் திகழ்வதை உணர்த்தும்.

கோயில் கலைஞர்களை உருவாக்கியதோடு சமூகத்தில் அவர்களின் பங்களிப்பு அவசியமானது என்பதனை உணர்த்தும் வகையில் ஓதுவார்களும் பிரபந்தம் சேவிக்கும் அரையர்களும் கோவில் பணியாளர் தொகுதியின் அங்கமாயினர். நாதஸ்வரம், மேளம் போன்ற வாத்தியக் கருவிகள் வாசிக்கும் கலைஞர்கள் ஆலயச் சூழலில் ஆதரிக்கப்பட்டனர். தஞ்சைக் கோயிலில் நாட்டியமாடும் "பெண்கள் தளிச்சேரி" பெண்டுகள் என அழைக்கப்பட்டனர்.

தமிழ்நாட்டுக் கோயில்களின் கலையழகு உலகப் புகழ் பெற்றவை என்பதற்கு அங்கு காணப்பட்ட கோயிற் கட்டிடங்களும் சிற்பங்களுமே சான்றாகும். பல கோயில்களை கலைக்கூடமாக மாற்றிய பெருமை பல்லவர் களைச் சாரும். மலைகளைக் குடைந்து கோயில்களாக்கிய பெருமையும் அவர்களுக்கு உண்டு. இதனால் கோயில் கட்டும் தொழிலாளர் பலர் உருவாகினர். குடைவரைக் கோயில்களை அமைப்பதிலும், சிற்பங்களைச் செதுக்குவதிலும் மகேந்திரவர்மன் சிறப்பு பெறுகின்றான்.

மாமல்லன் என்னும் நரசிம்ம வர்மனால் அமைக்கப்பட்ட கோயில்கள் முன்னைய கோயில்களைக் காட்டிலும் முன்னேற்றகரமானவை. மலைகளை வெட்டி அமைக்கப்பட்ட தனிக் கோயில்களும், கற்களை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி அமைக்கப்பட்ட ஒற்றைக் கற்கோயில்களும் பல்லவர் காலத்திலே தோற்றம் பெற்றுவிட்டன.

கோயில் கட்டுவது சோழர்காலத்தில் ஒரு தொழிலாகவே வளர்ச்சியடைந்தது. தஞ்சைப் பெரும் கோயில் கட்டப்படுவதற்கு பலதொழிலாளர் பயன்படுத்தப் பட்டனர் என்ற குறிப்பு உண்டு. இவ்வாறே கங்கை கொண்ட சோழபுரம் கட்டப்படப்படுவதற்கும் பல நாட்களும் பல தொழிலாளரும் பயன்படுத்தப்பட்டதாக அறிய முடிகின்றது.

இவற்றின் அழகும் வனப்பும் உலகத்தவர் யாவராலும் பாராட்டப்படுகின்றது. இன்றைய நகரத்திட்டமிடலுக்கு ஒரு வலுவான உதாரணமாக மதுரை மீனாட்சியம்மன் ஆலயம் அமைந்ததென்பர்.

அக்கால வனப்பு மிக்க கோயில்களை அடிப்யாகக் கொண்டு கல்லில் மட்டுமன்றி, மரத்திலும் உலோகத்திலும் சிற்பக்கலை வளர்ச்சி கண்டது. தமிழ் நாட்டுக் கோயில்களில் உள்ள செப்புத்திருமேனிகள் உலகப் புகழ்பெற்றவை. இவ்வாறு கலைமரபுகளைப் பேணவும் வளர்க்கவும் வரலாற்றில் ஆலயங்கள் பெரிதும் உதவின. சிற்பங்கள் ஓவியங்களுடாக புராணக் கதைகள், பண்பாட்டுப் பாரம்பரியங்கள் என்பன பேணி வளர்க்கப்பட்டன.

சமுதாய வாழ்வில் ஆலயங்கள்

மக்கள் நடைமுறை வாழ்வுடன் பல்வேறு வகையில் தொடர்பட்ட கோயில்கள் சமுதாய மைய நிலையங்களாகவும் பல்வேறு காலங்களில் செயற்பட்டு வந்துள்ளன. சோழப்பெருமன்னர் காலம் இதற்கு நல்ல சான்றாகும். மன்னர்களாலும் குறுநிலத் தலைவர்களாலும் வழங்கப்பட்ட பெருந்தொகையான கொடைகளால் பொருளியல் நிலையில் வளம் பெற்ற கோயில்கள் அரசிற்கும், ஊர் மக்களிற்கும் இடையிலான இணைப்பு நிலையங்களாக வளர்ச்சி கண்டன. வழிபாட்டிடமாக மட்டுமன்றி, கலைபயில் கூடமாகவும் இவற்றிற்கும் அப்பால் வங்கியாக, அன்னசத்திரமாக, அரும்பொருட் காட்சியகமாக, மருத்தவ நிலையமாக, சிறந்ததொரு கல்விக் கூடமாக, வேலை வாய்ப்பு வழங்கும் நிறுவனமாக, மருத்துவப் பணிகள் வழங்கும் இடமாகவும், நீதிமன்றமாகவும் இன்னும் பல்வேறு பணிகளை சமூகத்திற்காக அன்றி குடிகளை தாங்கிய கோயில்களாக விளங்கி நின்றதனை ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டி உள்ளனர்.

நிதி நிலையங்களாக

கோயில்களை கட்டியது மட்டுமன்றி அவற்றிக்கு பெருமளவான சொத்துக்கள் இருந்தமையால் அச் சொத்துக்களிலிருந்து ஆலய பூசைகள், விழாக்கள் நடத்தப்பட்டது. மாத்திரமன்றி அந்தந்தப் பகுதி மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவும் கோயில்களின் நிதி பயன்பட்டது. அரசியல் சமூகம் பொருளாதாரம் எனப் பலகோணங்களில் ஆலயங்கள் அன்று பயன்பட்டமையால் கோயில் என்பது பெறும் கற்களால் உருவ கட்டிடம் அல்ல அது ஒரு சிறு நகரத்தின் மையம் என்ற சிந்தனை நிலவியது. இதற்கு மதுரை மீனாட்சிஅம்மன்கோயிலும், அதன் சுற்றுப்புறமும் சான்றாக அமைகின்றது.

கோயில்கள் வங்கி போலவும் தொழிற்பட்டன. கோயில் நிர்வாகத்திலிருந்தும் மற்றும் முகாமைத் துவத்திலிருந்தும், கடன்வழங்கப்பட்டன. கைத்தொழில் பெருக்கத்திற்கும் புதிய நிலங்களை உழவுக்கு உட்படுத்தவும், மக்கள் தொழில் தேவைகளுக்கு கடன் பெறவும் ஆலயங்கள் உதவின. கோயில்களில் கடன் பெற்று பெண்களுக்கு சீதனம் கொடுத்த சம்பவங்களும் குறிப்பிடப்படுகின்றன.

கல்வி நிலையங்களாக

எண்ணாயிரம் என்ற ஊரில் வேதப் பாடசாலை நிலவியதை அவ்வூர்க் கல்வெட்டு குறிக்கின்றது. அப்பாடசாலைக்கு வழங்கவேண்டிய ஊதிய முறைகளை யும் அக்கல்வெட்டுக் குறிக்கின்றது. அதுபோல் திருபுவனி என்ற ஊரில் இருந்த ஒரு கல்லூரியை இராஜாதிராஜனின் (கி.பி 1048) கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. இதுபோன்ற திருப்பதியம் (தேவாரம்) பாடுவோருக்கு வழங்கப்பட்ட நம்பியார் நம்பிக்குக் கிடைக்காத ஞானசம்பந்தரின் இரண்டு முழப் பதிகங்கள் 20 ம் நூற்றாண஢டில் கிடைத்தன என்றும் இதனால் பாடல் பெற்ற தலங்கள் 276 ஆக உயர்ந்தன எனவும் கூறப்படுகிறது. பாடல்களைக் கல்வெட்டில் வெட்டி வைக்கும் வழக்கத்தினை இது எடுத்துக் காட்டுவதாகும்.

கோவில் வழங்கிய உரிமைகள்

இடைக்காலத்தில் நலிவுற்ற சமுதாயங்களுக்கு அரசர்கள் கோயில்கள் மூலம் சில உரிமைகளை வழங்கினர. கொங்கு நாட்டில் கம்மாளர், இடையர், சிவப்பிராமணர், ஆடல் மகளிருக்கான உரிமைகளை அக்கோயிற் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. அந்த வகையில் நலிவுற்ற சமூகங்களின் மேம்பாட்டிற்கு ஆலயம் வழங்கிய பங்களிப்பினைக் காணலாம். கோவையிலுள்ள திருமுருகன் கோயில் கல்வெட்டு அழிநங்கை என்ற நாட்டியப் பெண் திருவெம்பாவை பாடும்போது கோயிற் கருவறைக்குள் செல்லலாம் என்ற உரிமையை வழங்குகிறது.

வேளாண்மைக்குதவியமை

ஸ்ரீரங்கக் கோயில் கல்வெட்டு புதிய நிலங்கள் உழவுக்கு உட்படுத்தப்பட ஆலயங்கள் உதவியமையை காட்டுகின்றன. திருநெடுங்களம் கோயில் நிலங்களை விளைநிலங்களாக மாற்ற எடுத்த நடவடிக்கை பற்றிக் கல்வெட்டு தரும் சான்று காடுகளாக கிடந்த விளைச்சல் நிலங்கள் எவ்வாறு திருத்தி அமைக்கப்பட்டன என்பதனை எடுத்துக் காட்டுவதாகும்.

திருவெண்ணெய் நல்லூர் கல்வெட்டு கோயில் மூலம் குளம் பார்க்கவும், அதை அமைக்கவும், பாசன வழிசெய்யவும் முடியும் எனக் குறிப்பிட்டதோடு இவற்றினைச் செய்யும் பொருட்டு கோயில் நேரடியாக வரி வசூல் செய்து கொள்ளலாம் எனக் குறிக்கிறது. ஏரிகள் கோயில் நிதியினால் கட்டப்பட்டதை கோவை மாவட்டம், பேரூர் ஈரோடு மாட்டம், விஜயமங்களம் முதலிய கோவிற் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

பஞ்சம் தீர்த்தமை

திருவீழிழலையில் அப்பரும், சம்பந்தரும் படிக்காசு பெற்று பஞ்சம் தீர்த்தனர் என்பது பதிகங்களி

னூடாக நாம் அறியும் செய்தியாகும். தஞ்சையில் கிடைத்த கல்வெட்டொன்று பல அரிய செய்திகளைத் தருகின்றது. நிலம் விளையாது ஏற்பட்ட பஞ்சத்தினை விற்கப்பட்டதை தீர்க்க அவ்வூர் கோயிலின் இக்கல்வெட்டு மூலம் அறிய முடிகின்றது.

கோயில்களில் யாத்திரிகர்களுக்குத் தினமும் அன்னதானம் வழங்கப்பட்டது. வழிப்போக்கர்களுக்கு உப்பும், விளக்கெண்ணெயும், மருத்துவ உதவியும் வழங்கப்பட்டதனை கோவில் புத்தூர்க் கல்வெட்டுக் காட்டுகின்றது. கோவை அவிநாசிக் கோவிலில் காணப்படும் கல்தொட்டிகளில் பஞ்ச காலத்தில் கஞ்சி ஊற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது.

வேலை வாய்ப்பு நிறுவனமாக

தஞ்சைப் பெருங் கோயில் பணிக்கென்றே பல பணியாளர்கள் இருந்தனர் தேர், தீர்த்த விழாக்கள், தைப்பூசம், மாசிமகம், வைகாசி விசாகம், ஆனி உத்தரம் போன்ற புண்ணிய காலங்களிலும் பல்வேறு மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்து வேளாண்மை மூலம் வரும்படி பெற பல கோயில்கள் வேலைவாய்ப்பையும் வழங்கி யிருந்தன. நுணுக்கமான விபரங்கள் கல்வெட்டுக்களில் பொறிக்கவேண்டியிருந்தால் (நகைத் தொழிலாளருக்கும்) வாய்ப்புக் கிடைத்ததெனலாம்.

நீதிமன்றங்களாக

சுந்தரர் வரலாறு ஆலயங்கள் நீதிமன்றங்களாக இருந்ததைக் காட்டுகின்றது. மன்றில் வாதமிடுவோர் மன்றாடி என அழைக்கப்பட்டனர். சாட்சியை ஏற்கும் போது மூன்று வழிமுறைகளைப் பெரிய புராணம் கூறுகிறது. கோயில்கள் குடும்பப் பிணக்குகள் தீர்த்து வைக்கும் நிலையங்களாகவும் விளங்கின.

புகழ்மிக்க உத்திரமேரூர்க் கல்வெட்டு குடவோலை மூலம் தேர்தல் நடத்துவதனைக் காட்டுகிறது. பிராயச்சித்தம் செய்யமுடியாத மாபாதம் கொண்டவரும், தகாத உறவு கொண்டோரும் தேர்தலில் நிற்கத் தகுதியற்றவர் என்கிறது. தமிழ் மன்னரின் நீதியான ஆட்சியை கோயில் கல்வெட்டுக்களாலேயே அறியக் கூடியதாயுள்ளது.

மருத்துவப் பணிகள்

தஞ்சையில் மயிலாடுதுறைக்கு அருகில் மருத்துக் குடி என்ற ஊர் உள்ளது. மருத்துவர்கள் திருக்கோயில்கள் மூலம் புரக்கப்பட்டனர். கி.பி 13ம் நூற்றாண்டில் திருவரங்கத்தில் வீரராமநாதன் என்ற பெயருடைய மன்னன் 1100 பொன்னைக் கோயில் மண்டபத்தில் செலுத்தி வரி விலக்கப்பட்ட நிலங்களையும் அளித்து அதன் மூலம் மருத்துவமனை நடத்த ஏற்பாடு செய்தார் என்றும், மருத்துவ மூலிகைகள் கோயில் மூலம் வளர்க்கப்பட்டன என்றும் அறிகின்றோம்.

ஈழத்து ஆலயங்களும் சமயப் பணியும்

தென்னிந்திய ஆலயங்கள் போல யாழ்ப்பாணப் பிரதேசத்திலும் ஒரு சில சைவ ஆலயங்கள் பல ஆண்டுகளாக சமயத்தையும் சமூகத்தையும் இணைத்து செயற்பட்டு வருகின்றமையைக் கண்டு நாம் மனநிறை வெய்துகின்றோம். 1977 முதல் கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பன்முகப் படுத்தப்பட்ட சமுதாய சமூகப் பணிகளை ஆற்றுவதற்கு தெல்லிப்பழை துர்க்காதேவி கோயிலை நிலைக்களனாகக் கொண்டார். ஓர் ஆராதனைக்கான இடமாகமட்டுமன்றி விழாநடத்தும் மண்டபமாக மாத்திரமன்றி அறச்சாலையாக மக்கள் பணியே மகேசன் பணி யென இவ் ஆலயம் ஆற்றிவரும் பணிகள் ஏனைய சைவ ஆலயங்களுக்கு முன்னுதாரணமாக அமையும்.

தமிழர்கள் பல தடவைகள் நமது நாட்டிலேயே அகதிகளாகக்கப்பட்ட போது அகதிகளை இக்கோயில் ஆதரித்திருக்கின்றது. 1987 இல் 500 இற்க மேற்பட்ட அகதிகளை இக்கோயில் ஆதரித்து உணவு உடை உறையுள் வழங்கியது. கலவரங்களில் ஊனமுற்றோர் பல்வேறு உதவிகளைப் பெற்றுள்ளனர். பாதிப்புற்றவர் களுக்கு பணம், உணவு, உடை, உறையுள் எனப்பல உதவிகள் வழங்கப்பட்டன. விழிப்புலனற்றோர், புற்று நோயாளர் மற்றும் வைத்தியசாலைக்கு அன்பளிப்புக்களை வழங்கியுள்ளது. சிவத்தமிழ்ச்செல்வி அவர்களின் அறங்காவலர் சபை இவற்றிற்குப் பேருதவி புரிவதோடு, பெண்சிறார்களின் கல்விக்கும், சிறுவர் களுக்கும், அநாதைச் சிறுவர்களுக்கும், உணவும், உடையும், இருப்பிடவசதியும் கொடுத்து கல்வியையும், எதிர்கால வாழ்வையும் நோக்காகக் கொண்டு விளங்குவது துர்க்காபுரம் இல்லப் பணியுமாகும்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் சைவத்தமிழ் ஆய்வு நூலகம் ஒன்று கோயில் வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்டு மாதாந்த சஞ்சிகை வெளியிடல், அச்சத்தை ஸ்தாபித்து நூல்களை அச்சிடல் எனப் பல்வேறு பணிகளை ஆற்றிவருகிறது.

இது போன்றே அன்னதான மடங்களை பக்தர்க ளுக்காக உருவாக்கி “அன்னதானக் கந்தன்” என்ற பெயரை பெற்ற தொண்டைமானாறு சந்நிதி ஆலயம். சமயத்தையும், சமூகத்தையும் இணைக்கும் உன்னதமான பணியினை ஆற்றி வருவது நாம் அறிந்ததே.

கோயில்கள் இறைவழிபாட்டிற்கு அவசியந்தானா?

பக்தி இயக்கத்தின் பேறாக தமிழகமெங்கும் கோயில்கள் கட்டப்பட்டு, முறையான வழிபாடுகள் நடத்தப்பட்டு வந்தன. நெய்யும், பாலும், தயிரும் கொண்டு நித்தமும் பூசனை நிகழ்த்தப்பட்டு வந்த காலம் அது. அடியவருக்கு உணவளித்தல், அடியவர் நலன் ஓம்பல் சிறப்பாகக் கருதப்பட்டு வந்த காலம் அது. மக்கள் தொண்டே மகேசன் தொண்டாக கருதப்பட்ட காலம்

இதுவாகும். இவ்வாறு இறைவனும் அடியவரும் ஒரு சேர மதிக்கப்பட்டு வந்த காலத்தில் "கோயிலுக்கு வழங்குவது அடியவருக்குச் சென்று சேராது என்ற கருத்தினை திருமூலர் முன்வைக்கிறார் "கோயில் வழிபாட்டுச் சிந்தனையின் அடித்தளத்தையே ஆட்டங் காணச் செய்யும் எண்ணக்கரு இது" என கலாநிதி நா. சுப்பிரமணியஐயர் அவர்கள் "இந்தியச் சிந்தனை மரபில் குறிப்பிட்டிருப்பதும் நோக்கத்தக்கது.

கோயில்கள் கட்டப்பட்டு நெய்யும், பாலும், தயிரும் கொண்டு கிரியைகள் நடத்தப்பட்டு வந்த அந்தச் சூழலில் பக்திக்குப் புறம்பான மூடபக்தி கிரியைகளூடாக வளர்க்கப்பட்டு விடுமோ என திருமூலர் அஞ்சினார் போலும். மன்னராலும், தலைவர்களாலும் நிலங்களும், பொன்னும், பொருளும், வாரிவாரி ஆலயங்களுக்கு வழங்கப்பட்டமை அத்தகைய அச்ச உணர்வினை ஊட்டியிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. கோயிலைவிட மனிதன் முக்கியம் என்ற மனிதநேய சிந்தனையை அவர் அன்று முன்வைத்தார் எனலாம்.

"படமாடக் கோயில் பகவர்க்கொன்றீயின்
நடமாடும் கோயில் நம்பர்க்கங்காகா
நடமாடுங் கோயில் நம்பர்க்கொன்றீயில்
படமாடக் கோயிற் பகவர்க்கதாமே"

என்ற திருமூலரின் இப்பாடலில் மாகேஸ்வரபூசை - அடியார்க்கு உணவளித்தல் பற்றிய பகுதியில் அமைவது. இவ்விடத்தில் ஜெ. கிருஸ்ணமூர்த்தி அவர்களின் கருத்தும் குறிப்பிடத்தக்கது. "அகண்ட வஸ்துவான இறைவனை குறுகிய எல்லைப் பரப்பில் அடக்கி வழிபடுவதனால் கோயிலுக்கு அப்பால் தவறுகள் நடைபெறுகின்றன. எனவே அவ்வாறு ஒன்று தேவையில்லை" என்கிறார். ஆலயத்தின் உள்ளே உள்ள இறைவன் எப்போதும் வழிபாட்டிற்கு பயன்படவேண்டும். பூட்டி வைப்பதால் பயனில்லை என்பது அவர் சிந்தனை. கடவுளை பரமாத்மா என்றும் அவர் எங்கும் வியாபித்திருக்கிறார் என்றும் கூறவிட்டு கடவுள் கோயிலுக்குள்தான் இருக்கிறார் என்றும் அங்கு அவருக்கு விக்கிரகங்களை உருவாக்கி பூசையும், திருவிழாக்களும், கொண்டாட்டங்களும் நிகழ்த்துவதனூடாக அவருக்கு மக்கள் நன்றி செலுத்துவது காலம்காலமாக நடைபெற்று வரும் ஒன்றாகும். இச் செயற்பாடு மனிதர்கள் தங்களைத் திருப்திப் படுத்துவதற்கான ஒருசெயற்பாடே எனக்கருத இடமுண்டு. இதிலிருந்து கோயில்கள் மக்களின் உளவளநிலையமாக செயற்படமுடிகிறது. இதனால் கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கமுடியாது எனமக்கள் கருதுகின்றனர் ஊர்கூடி கடவுளின் பெயரால் விழா எடுக்கும்போது எல்லோரும் ஏற்றத்தாழ்வுகள் மறந்து ஒற்றுமையாய் ஒன்றுகூடும் பொது இடமாக மக்களால் கருதப்படுகின்றது.

உசாத்துணை நூல்கள்

1. அழமுத்துப் பழனியப்பன் "குடிகளைத்தாங்கிய கோயில்கள்" இரண்டாவது உலக இந்துமாநாடு சிறப்புமலர் இலங்கை 2003.
2. பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் சைவத் திருகோவிற்கிரியை நெறி.
3. பாரதியார் கட்டுரைகள்

ஒருமுறை சைவாசிரிய கலாசாலைக்கு அவர் வந்த காலத்தை அடுத்து. விடுமுறைக் காலமொன்றில் கீரிமலைச் சிவன் கோயில் மேற்கேயுள்ள கிருஷ்ணபிள்ளை மடத்தில் தங்கினோம். என்னிடம் வித்துவான் சுப்பையாபிள்ளை அவர்களிடம் கேட்ட விசேட இலக்கணக் குறிப்புக்களிருந்தன. அவைகளை உபஅதிபருக்கு நான் சொல்ல, அவர் எனக்கு ஆங்கிலம் கற்பிப்பதென்று ஒழுங்கு. இந்த ஒழுங்கு ஒரு வாரத்தில் தலைகீழாகியது. ஆங்கிலப் பயிற்சி என்னிடம் பலிக்கவில்லை. அதில் நூதனம் ஒன்றுமில்லை. பெரிய நூதனம் என்ன வென்றால் இலக்கணம் நான் உபஅதிபரிடம் படிக்கவேண்டிய நிலை நேர்ந்து விட்டது. இது வெறும் உபசாரம் அன்று . தமிழுலகில் எழுத்து, சொல், பொருள், யாப்பு அணி தெரிந்த ஒரே ஒருவர் உபஅதிபர் என்ற எண்ணம் எனக்கு உண்டு. சமயம் இலக்கியம் பாஷை யாவற்றுக்கும் மூல உயிர்ப் பொருள் உயிர்ப்புப் பொருள் என்ற உணர்ச்சியை உபஅதிபர்பாற் காணக் கூடியதாயிருந்தது.

– பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

குழந்தைப் பருவச் சடங்குகள்

நயினை எஸ். சோமேஸ்வரபிள்ளை
B.A (SL) Dip in Ed.
(இளைப்பாறிய அதிபர்

இந்துக்களின் வாழ்க்கையில் பல்வேறு சடங்குகள் பிறப்புத் தொடக்கம் இறப்பு வரையில் நடைபெறுகின்றன. சடங்குகள் அற்ற இந்துவின் வாழ்க்கை முழுமை பெறாத ஒன்றாகவே கருதப்படுகின்றது. இந்துக்களின் சடங்குகளைப் பொறுத்தவரை வாழ்வில் ஒவ்வொரு பருவத்திற்கும் ஏற்றவகையிலான சடங்குகள் வரையறை செய்யப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம். அவ்வகையில் குழந்தைப் பருவச் சடங்குகள் ஒரு இந்துவின் வாழ்க்கையில் முக்கியமான, முதன்மையான சடங்குகளாக அமைகின்றன.

31 ஆம் நாள் நிகழ்வுகள்

1. துடக்குக் கழிவு
2. பெயர் சூட்டுதல்
3. அணிகலங்கள் அணிதல் என்பனவாகும்.

பூமியிலே குழந்தை பிறந்து முப்பத்தொரு நாட்கள் வரை குழந்தையை வீட்டுக்கு வெளியே எடுத்துச் செல்லுதல் ஆகாது என்பர் எம் மூதாதையினர். இருப்பினும் தற்செயலாக இந்நாட்களுக்குள் நோய்களேற்படின் வெளியிற் கொண்டு செல்லல் விதிவிலக்காகும். பண்டைய நாளில் வீட்டுவைத்திய முறைகளால் குழந்தையை வெளியே எடுத்துச் செல்ல வேண்டிய தேவை இருந்திராமல் இருந்திருக்கலாம். பிறந்து 31 ம் நாள் "ஆசௌச" கழிவு அதாவது துடக்குக் கழிவு எனும் கிரியை நடாத்தப்படும்.

31 ம் நாளன்று வீட்டைச் சுத்தஞ் செய்து மஞ்சள் நீர் தெளித்து வாசலில் நிறைகுடம் வைத்து, குழந்தைக்கு துடக்கு முடியிறக்கி வேதியரை அழைத்து புண்ணிய வாசனம் செய்து துடக்கு கழிப்பர். வேதியர் குழந்தையின் நட்சத்திரத்தைக் கூறி பூசை செய்த பின்பு தாய் மாமன் அல்லது உறவுமுறைப் பெரியவர் ஒருவர் குழந்தையை மடியில் வைத்து அதன் நாமத்தை காதிலே மூன்று தரமோ ஐந்து தரமோ ஓதி கற்கண்டுத் தண்ணீர் பருக்குவர். வந்திருப்போருக்கு இனிப்புப் பொருட்கள் வழங்குவர். வம்சத்தில் குழந்தை இறையருள் பெற்று வாழ்வில் பேரும் புகழும் பிரகாசிக்க வேண்டுமென யாவரும் வாழ்த்துவர். அதன்பின்பு இனசனங்கள் குழந்தையின் பெயரை காதில் ஓதுவர். யாவரும் பெயரை உரத்து உச்சரிப்பார். அன்று முதல் அப்பெயருக்கு குழந்தை உரித்துடையவர் ஆகின்றார். கால மாற்றங்களினால் இன்றைய நாட்களில் குழந்தை பிறந்து ஒரு சில நாட்களில் பெயர் சூட்டப்படுகின்ற தன்மையை இன்று காண்கின்றோம். 31 ம் நாளில் அரைஞாண் கட்டுதல், பஞ்சாயுதம் கோர்த்த பவுண் சங்கிலி, தங்கக் காப்பு, காற் சங்கிலி போன்றவைகளும் தங்கள் வசதிகளுக்கேற்ப பெற்றோர்களினாலும் உறவினர்களினாலும் அணியப்படுகின்றன. சுபநேரத்தில் தொட்டிலிலும் குழந்தையை மாமன் கிடத்தும் நிகழ்வும் நடைபெறும்.

41 ம் நாள் நிகழ்வுகள்

திருஷ்டி கழியும் என்ற நம்பிக்கையில் தாங்களாகவே தயாரித்த கறுத்தப் பொட்டை (திருஷ்டிப் பொட்டு) குழந்தையின் நெற்றியிலும், சொக்கிலும் இட்டுவரும் வழக்கம் இன்றுமுண்டு. துடக்கு கழிப்பு முடிவுற்ற பின்பு தாயையும் குழந்தையையும் கோயிலுக்குக் கூட்டிச் சென்று பெயரையும் நட்சத்திரத்தையும் சொல்லி அர்ச்சனை செய்து வழிபடுவார்கள். சுவாமி சந்நிதானத்தில் குழந்தையை வளர்த்தி எடுப்பது வழக்கம் பிரசாதமும் வழங்குவர்.

கர்ண வேதனம் (காது குத்துதல்)

குழந்தை பிறந்து 6, 7, 8, 10 ஆம் மாதங்களில் "காது குத்துதல்" நிகழ்வு நிகழும். பெரும்பாலும் இந்நிகழ்வு வீடுகளிலும் ஆலயங்களிலும் நடைபெறும். பொற்கொல்லரை அழைத்து குழந்தைக்கு ஏற்படும் அரிட்டதோஷ நீக்கத்துக்காகவும், தமிழர் பண்பாட்டுக் கலாசாரத்துக்காகவும், அழகுக்காகவும் காதுகுத்தப் படுகின்றது. தைப்பூச தினம் இதற்கு விசேட தினமாகும். ஆனால் தற்காலத்தில் காது குத்துதல் ஆண் குழந்தைகளுக்கு நடைபெறுவது மிகமிகக் குறைந்து விட்டது. பண்டைக் காலத்தில் தமிழர் பண்பாட்டின்படி காது குத்தாதவர்களுக்கு மரணப்படுக்கையில் காது குத்தி தகனம் செய்யும் வழக்கம் இருந்திருக்கின்ற தென்பது வரலாறு கூறும் உண்மை.

அன்னம் ஊட்டல்

ஆண் பிள்ளைகளுக்கு 6, 8, 10, 12 போன்ற இரட்டை மாதங்களிலும் பெண்பிள்ளைகளுக்கு 5, 7, 9, 11 ஆகிய ஒற்றை மாதங்களிலும் சுபமுகூர்த்தநாள் பார்த்து திருக்கோவில் சென்று தகப்பனார் மூலம் அமுது ஊட்டப்படுகின்றது. பிரசாதத்தைச் தந்தையார் தங்க மோதிரத்தினால் குழந்தைக்கு ஊட்டி ஆசிர்வதிப்பார். தந்தையரைத் தொடர்ந்து ஏனையோரும் அமுதூட்டி வாழ்த்துவர். இந் நிகழ்வு வீட்டிலும் செய்யப்படுகின்றது.

பல்லுக் கொழுக்கட்டை

குழந்தைக்கு பல் முளைக்கத் தொடங்கியதும் பல்லுக் கொழுக்கட்டை அவித்து பிள்ளையார் பிடித்து வைத்து விளக்கேற்றி வெள்ளைத் துணியொன்றை நிலத்தில் விரித்து குழந்தையை அதன்மேல் உட்கார வைத்து குழந்தையின் தலைமேல் வெள்ளைத் துண்டொன்றை போர்த்தி தாய் மாமன் முறையானவர் அல்லது மாமியார் ஒற்றைபட அளவுப்பிரமாணமுள்ள கொழுக்கட்டைகளை தலையிற் கொட்டி குழந்தைக்கு

கணினிப் பயிற்சி பெறும்
மாணவர்கள்



இரவு நேரக் கற்றல்

இரவு நேரக் கற்றல்

இரவு நேரக் கற்றல்

பூங்காவில் சிரமதானம்

பாடசாலை செல்லும் முன்
இல்ல கீதம் பாடுதல்



பாடசாலை
செல்லும்
பிள்ளைகள்

பிள்ளைகளின் ஆக்கங்கள்

சிறிது தின்னக் கொடுத்து உற்றார் உறவினர்களுக்கும் கொடுத்து மகிழ்வர். கொழுக்கட்டையில் தேங்காய்ச் சொட்டை பற்கள் போன்று அடுக்கி செய்வார்கள். ஆரோக்கியமான பற்கள் முளைக்க வேண்டும். மென்பதற்காகவே இந்நிகழ்வு நிகழ்த்தப்படுகின்றது.

வித்தியாரம்பம் (ஏடு தொடக்குதல்)

பழைய காலத்தில் ஏட்டிலிருந்தே கல்வி ஆரம்ப மாகியதால் இன்றும் ஏட்டிலிருந்தே கல்வி ஆரம்பிக்கப் படுவதை அவதானிக்க முடிகின்றது. ஏடு தொடக்குதல் 3, 5 வயதில் நடைபெறலாம். பெரும்பாலும் தைப்பூசம், நவரத்திரி, விஜயதசமி நாட்களில் நல்ல நேரம் பார்த்துச் செய்வார்கள். முதன்முதலில் கல்விகற்க ஆரம்பிப்பதனால் தந்தை அல்லது ஆலயக் குரு, ஆசிரியர் யாராகினும் பெரியார் ஒருவரைக் கொண்டு ஏடு தொடக்குவிப்பர். கல்வியில் மேன்மை அடையச் செய்யும் சடங்கே இதுவாகும். வீட்டிலோ ஆலயத்திலோ கல்விச்சாலை களிலோ இதனைச் செய்வார்கள். குருவுக்கும் தட்சணை கொடுக்கப்பட வேண்டும். இவ்வாறான மரவுவழிச் சடங்குகள் வாழையடிவாழையாக தமிழர் வாழ்வில் கடைப்பிடித்து வருகின்றனர். இவற்றோடு அந்தந்த குழந்தைப் பருவங்களில் மேற் கொள்ளப்பட வேண்டிய நோய்த் தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்வது அவசியம் இவைகள் சடங்குகள் அல்ல நோய் காப்பு முறைகளாகும்.

"குழலினிது யாழினிது என்ப தம் மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்"

- குறள் -66

ஆறுமுக நாவலர் எல்லோருக்கும் விளங்கத்தக்க தெளிவான நடையில் படிப்படியே பயன் தரும் வகையில் புத்தகம் எழுதவும் பதிக்கவும் நேர்ந்தது கிறிஸ்தவப்பாதிரிகளின் அதிர்ச்சியென்றே சொல்லப்படுகின்றது. நாவலரைத் தொடர்ந்து சங்கர பண்டிதர் சைவப்பிரகாசனம் செய்தார்.சபாபதி நாவலர் திராவிடப் பிரகாசிகை செய்தார். இவை இரண்டும் சைவத் தமிழ்க் கலாச்சாரப் பொக்கிஷங்கள்.

❖ ❖ ❖

நிலையான பொருள் என்று ஒன்றில்லை. ஒரு வகையான நிலைமாற்றந்தான் உலகம். நிகழ்கின்ற நிமிஷங்கழிய மற்றொரு நிமிஷம் வந்து போகின்றது. அப்படித்தான் இடமும் மாற்றம் அடைகின்றது. இந்தக் கணத்திலிருக்கும் நாம் வேறு, அடுத்த கணத்தில் இருக்கும் நாம் வேறு. மாணிக்ககங்கை ஓடிக்கொண்டிருக்கின்றது. முதற்கணத்திற் காணுங் கங்கையை அடுத்த அடுத்த கணத்திற் காணமுடியாது. அப்படியிருந்தும் ஒரு மாணிக்க கங்கை பெருகுகின்றது. உண்மையில் அது ஒரு மாற்றமே. இந்த மாற்றந்தான் உள்ளது என்றார் புத்தர். அந்த மாற்றத்தில் சிக்கிக் கவலைப்படாமைக்கு வழி துறைகளும் வகுக்க முயன்றார் புத்தர். புத்த சமயம் பாரதநாட்டை விழுங்கியது. அச்சமயத்தில் மாற்றம் என்ற புத்தர் கூறும் உலகம் கயிற்றில் பாம்பு போல வெறுந்தோற்ற மாத்திரையே. பொய்யான தோற்றத்தைத் தோற்றுவித்துக் கொண்டு ஒரு மெய்யான நிலையான பொருள் இருக்கின்றது. அப்பொருளுக்குப் பெயர் பிரமம். பிரமம் ஆகிய ஒன்றுதான் உள்ளது, இரண்டாவதொரு நிலைப்பொருள் இல்லை என்றனர் சங்கரர். இக்கொள்கையை நிலைநாட்டிப் பிரம சூத்திரத்திற்குப் பாஷ்யம் வகுத்துவிட்டார். அல்லாமல் தம்கொள்கைக்கு உபநிடதங்களிற் பிரமாணமுங் காட்டினார். இதனாலே கணபங்கம்பேசும் பௌத்தம் அந்தக் கணமே வேதங்கள் பிறந்த பாரத நாட்டில் ஒரு கணமேனும் நிலைகொள்ள இயலாது ஓடிமறைந்தது. பௌத்தம் மறைய ஏகாத்மவாதம் தலை நிமிர்ந்தது.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

காப்பகச் சிறுவர்களின் உளநலம்

கோகிலா மகேந்திரன்

சாதாரண குடும்பச் சூழலில் இருந்து பிரிக்கப்பட்டு பல பிள்ளைகள் ஒன்றாக ஒரே கூரையின் கீழ் வாழுகின்ற காப்பகம் அல்லது இல்லம் எனப்படும். இடங்களில் வளரும் பதினெட்டு வயதுக்கு உட்பட்ட பிள்ளைகள் காப்பகச் சிறார்கள் எனப்படுகின்றன.

குடும்பச் சூழல் ஒன்றில் தமது வளர்ச்சி விருத்தி நிலைகளைப் பெறும் சிறுவர்களோடு ஒப்பிடுகையில் காப்பகத்தில் வாழும் சிறுவர்களின் உளநலம் அதிகளவு பாதிக்கப்படுவது பொதுவான அவதானமாக இருந்து வந்த ஒரு நிலையில் அண்மைக்காலமாகக் காப்பகச் சிறார்களின் உளம் தொடர்பாகப் பல ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. அவை தருகின்ற முடிவுகளைச் சுருக்கமாக உள்வாங்குவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

எமது நாடு மிகத்துரதிஷ்ட வசமாகக் கடந்த முப்பது ஆண்டுகளாக உள்நாட்டு யுத்தம் என்ற பேரனர்த்தத்தைச் சந்தித்து வந்தது. 2004 ஆம் ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் அந்தத் துன்பத்திற்கு மேலும் ஒரு சுமையைக் கொடுத்தது. இந்த அனர்த்தங்கள் எதுவும் ஏற்பட முன்னரும் இங்கு சிறுவர் காப்பகங்கள் இருந்தன. இந்த அனர்த்தங்கள் அவற்றின் எண்ணிக்கையை மிகவும் அதிகரித்து விட்டன.

எப்போது ஒரு சிறுவன் அல்லது சிறுமி காப்பகம் ஒன்றினுள் நுழைய வேண்டும் என்பது மிக அடிப்படையான வினாவாகும். எமது பழக்கம் பொதுவாக இக் கேள்விக்கான விடையைப் பொருளாதாரக் காரணிகளில் மட்டும் போட்டு விடுவதை நாம் அவதானிக்கிறோம். திருமணம் செய்வது தொடக்கம் வெளி நாட்டுக்கு வேலைக்குப் போவது வரை அனைத்து முடிவுகளையும் பொருளாதாரம் என்ற ஒரே ஒரு காரணியை மட்டும் வைத்துத் தீர்மானம் எடுக்கும் வழக்கம் விரும்பியோ விரும்பாமலோ எம்மிடம் இருக்கிறது. உண்மையில் வாழ்வு என்ற மிகப் பெரிய பரப்பில் பொருளாதாரம் என்பது ஒரு சிறிய கூறு மட்டுமே என்பதை நாம் மறந்து விடுதல் கூடாது. ஒருவரது வாழ்வின் வெற்றியைத் தீர்மானிக்கும் ஏனைய முக்கிய கூறுகளாக உடல் நலம், உளநலம், சமூக ஈடுபாடு, ஆன்மிக ஈடுபாடு, கல்வி, சாதனைகள், குடும்ப ஒற்றுமையால் வரும் சந்தோஷம் போன்ற பல விடயங்கள் அமைகின்றன.

ஒரு குடும்பத்தில் தாய், தந்தையர் இருவரும் உயிரோடு இருக்கும் போது கூடக் குடும்பத்தின் வறுமை என்ற ஒரே காரணத்திற்காகப் பிள்ளைகள் காப்பகத்திற்கு அனுப்பப்படும் நிலை எமது நாட்டில் காணப்படுகிறது. வீட்டில் இருந்தால் மூன்று வேளை ஒழுங்காகச் சாப்பிடமுடியவில்லை. கல்விக்கான செலவை ஈடு செய்ய முடியவில்லை. காப்பகத்திற்கு அனுப்பிவிட்டால் மூன்று வேளை உணவு ஒழுங்காகக் கொடுப்பார்கள். பிறந்தநாள், நினைவு தினங்களுக்காகப் பலரும் வழங்கும் பணத்தில் வடை பாயசத்துடனான உணவு பல நாள்களில் கிடைக்கும் என்ற பெற்றோரது நினைப்பு ஒரு வகையில் தமது கடமையை மற்றவர்களிடம் தள்ளி விடுகின்ற பொறுப்பற்ற செயல் என்றும் கூறலாம். அதே நேரத்தில் காப்பகங்கள் ஒவ்வொன்றும் எத்தகைய தகைமைகளைக் கொண்ட பிள்ளைகளை உள்வாங்கிக் கொள்கின்றன என்பதும் காப்பகத்திற்குக் காப்பகம் வேறுபடுகின்ற காரணியாகவே இருக்கிறது. பெரும் பாலும் காப்பகங்கள் தங்களால் எவ்வளவு பிள்ளைகளை வைத்துப் பராமரிக்க முடியும் என்ற விடயத்திற்குத்தான் முன்னுரிமை கொடுக்கிறார்களே தவிர இந்தப் பிள்ளை கட்டாயம் காப்பகத்திற்கு வர வேண்டிய பிள்ளை தானா என்பதை அதிகம் கவனிப்பதாகத் தெரிய வில்லை.

ஒரு பிள்ளை காப்பகத்தில் வளர வேண்டும் என்ற முடிவு ஆகக் கடைசித் தெரிவாக அமைய வேண்டியதே தவிர முதல் தெரிவாக அமையக் கூடாது என்ற உளவியல் ஆய்வுகள்மிகத் தெளிவாகக் கூறுகின்றன. பிள்ளையின் பெற்றோர்களில் ஒருவராவது உயிரோடு இருந்தால் பிள்ளை அந்தப் பெற்றாரிடமிருந்து பிரிக்கப்படாதிருப்பதே பிள்ளையின் உள நலத்திற்கு நல்லதாகும். இரண்டு பெற்றோருமே இல்லாவிட்டால் கூட சகோதரர்கள் ஒன்றாக வாழ முடியுமாயின் அல்லது உறவினர் யாரவது அப்பிள்ளைகளைப் பொறுப்பேற்பார்களாயின் அங்கு வாழ்வது பிள்ளைகளின் உளநலத்திற்கு நல்லது.

ஒரு வேளை பிள்ளையின் அன்புக்கும் நம்பிக்கைக்குமுரிய நண்பர் அல்லது அயலவர் கூட அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளலாம்.

அப்படியானால் காப்பகம் என்பதே தேவையில் லையா? தேவைதான்! பிள்ளை வளரும் சூழலில் உணர்வுகள் பாதிக்கப்படும் படி நடத்தப்படுகிறார், உடலியல் ரீதியாக வன்முறைக்கு உள்ளாக்கப்படுகிறார், வேறு நபர்களின் தேவைகளுக்குப் பாவிக்கப்படுகிறார், படிக்க அனுமதிக்கப் படாமல் வேலைக்கு அனுப்பப் படுகிறார், கைவிடப்பட்ட நிலையில் இருக்கிறார், உடலியல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் ககவனிக்கப்படாத நிலையில் இருக்கிறார் என்பது நிச்சயமாகத் தெரிகிறபோது - இவ்விடயங்களில் ஒன்றாவது நிச்சயமாக நடைபெறுகிற போது - அந்தப் பிள்ளை காப்பகம் ஒன்றிற்கு அழைத்து வரப்படுவது பொருத்தமானது.

அப்படி எதுவும் இல்லாத போது பிள்ளை ஒருவர் காப்பகத்தில் சேர்க்கப்படுவது பொருத்தமற்றது. அப்படி

ஒரு முடிவு எடுக்க நேரிட்டால் கூட அது தொடர்பாகக் குறிப்பிட்ட பிள்ளையுடன் கலந்தாலோசிக்கப்பட வேண்டும். தனது தாயை, தந்தையை சகோதரரை அல்லது உறவினரைப் பிரிந்து போகப் பிள்ளை விரும்பாத போது பெரியவர்களின் வற்புறுத்தலினால் அந்த முடிவு எடுக்கப்படுவது உசித மில்லை. அப்படியானால் பிள்ளையின் பொருளாதாரத் தேவையும் கல்வித் தேவையும் எப்படி நிறைவேற்றப்படலாம் என்ற கேள்வி எழுகிறது. காப்பகத்திற்குப் பிள்ளை வரும்போது அங்கு தேவைப்படும் செலவுகளைக் கொடுக்க முன் வருகின்ற வள்ளல் தன்மை கொண்டோர் அவ்வுதவியைப் பிள்ளையின் குடும்பச் சூழலில் வைத்துக் கொடுப்பதே காலச் சிறந்ததாகும்.

இப்படிச் சொல்லப்படுவதற்கான காரணம் பிள்ளையின் அன்புத் தேவை, காப்புத்தேவை, மற்றும் கணிப்புத் தேவை தொடர்பான கரிசனையேயாகும். மாஸ்லோ தனது உளவியல் தேவைக் கூம்பில் இந்தத் தேவைகளின் முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிட்டுப் பல காலம் ஆகிவிட்டது. குடும்ப அங்கத்தார் ஒருவரிடம் இருந்து கிடைப்பது போன்ற அன்பைப் பிள்ளை வேறு ஒருவரிடம் பெறுவது சாத்தியமற்ற ஒன்று. குறிப்பாகத் தாய் உயிருடன் இருப்பாராயின் அந்தத் தாய் அன்பிற்கு நிகரான ஒன்று வேறு எங்கேயும் கிடைக்கப்போவதில்லை, சகோதரர் உறவினர் போன்ற இரத்த உறவுகளிடம் கிடைக்கும் அன்பும் வேறு ஒரு இடத்தில் கிடைப்பது அரிது.

அதே போல வீட்டுச் சூழலில் நன்கு தெரிந்த பழகிய இடத்தில் கிடைக்கும் பாதுகாப்பு உணர்வு ஒரு புதிய சூழலில் பெரும்பாலும் கிடைப்பதில்லை, காப்பகங்களில் காணப்படும் பெரிய மனிதர்களும் கடுமையான சட்டதிட்டங்களும் பிள்ளையின் பாதுகாப்பு உணர்வை முழுமையாகக் கலங்கச் செய்து விடலாம். இவற்றை விட முக்கியமானது கணிப்புத் தேவை. காப்பகத்திலிருந்து ஒரு பிள்ளை பாடசாலைக்குச் செல்கிறபோது இது இல்லத்துப் பிள்ளை என்ற முத்திரை பிள்ளையுடன் உள்ளே செல்கிறது. அது பிள்ளையின் சுய கணிப்பில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவல்லது. பிள்ளை மற்றவர்களைப் போல வெளியே ஒரு குடும்பத்தில் இருந்து வருகிறபோது அப்பிள்ளைக்கும் பெற்றோர் இருவரும் இருக்கிறார்கள் என்பது பற்றி யாரும் அதிகம் அக்கறைப்படுவதில்லை. தானும் ஒரு குடும்பத்தில் இருந்து வருவதான கணிப்பைப் பிள்ளை இலகுவில் காப்பாற்றிக் கொள்ளக் கூடியதாக இருக்கும். இல்லத்துப் பிள்ளைகள் அனைவரும் பாடசாலையில் ஒதுக்கப்பட்ட இனமாகக் கருதப்படும் நிலைமையை மாற்றி அமைப்பது சவால் மிக்கது.

முன்னர் குறிப்பிட்டது போல ஒரு கடைசித் தெரிவாகத் தவிக்க முடியாத நிலையில் பிள்ளை காப்பகத்திற்குக் கொண்டு வரப்படுகிறது என வைத்துக் கொள்வோம். அதன் பின் கவனிக்க வேண்டிய விடயங்களும் பல உள்ளன. பிள்ளையினுடைய பெற்றோர் அல்லது சகோதரர் யாராவது அண்மையில் இறந்திருந்தால் அல்லது காப்பகத்திற்கு வர முதல் பிள்ளை நீண்ட காலமாகப் போதிய உணவு, சுத்தமான நீர் கிடைக்காமல் அவதிப்பட்டிருந்தால் அவ்விடயங்கள் பிள்ளையின் உணர்வுகளைக் கடுமையாகப் பாதித்திருக்கலாம். குடும்பத்தில் ஓர் அங்கத்துவரது இறப்புப் பிள்ளையை எவ்வளவு பாதிக்கிறது என்பது அந்த இறப்பிற்கு முன்னரும் பின்னரும் பிள்ளை பெறும் கவனிப்பையும் ஆதரவையும் பொறுத்த விடயம். இந்த ஆதரவு பொருத்தமான நபர்களால் வழங்கப் படவேண்டும். இல்லத்தில் உளவளத் துணையாளர்கள் இருப்பார்களாயின் மிகவும் நல்லது. இடையிடையாவது ஓர் உள மருத்துவ நிபுணர் அல்லது உளவியலாளர் வருகை தருவாரயின் இன்னும் நல்லது. இந்த உளநல ஆதரவு கிடைக்கவிட்டால் பிள்ளையிடம் மோசமான வளர்ச்சி சார், நடத்தை சார், உணர்வு சார் பிரச்சினைகள் தோன்ற இடமுண்டு. இப்பிரச்சினைகளைப் பிள்ளை எதிர்கொள்கிற போது இல்லத்தில் தண்டனைகள் கடுமையாக வழங்கப்படுமாயின் பிரச்சினை இன்னும் மோசமடையலாம். இத்தகைய நச்சு வட்டத்தை உடைத்து கலாசாரத்தோடு ஒத்துப்போகக் கூடிய, சமூக ஆதரவுடன் கூடிய பிள்ளை மையச் சிந்தனையோடு தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

காப்பகத்தில் இருக்கும் பிள்ளைகளின் சுகாதாரத் தேவைகள் உடல் நலத் தேவைகள் ஆகியன குறித்த கால இடைவெளிகளில் அவதானிக்கப்பட்டுப் பூர்த்தி செய்யப்பட வேண்டும். இல்லம் என்பது உற்சாகமும் மகிழ்வும் தரும் சூழலாக உள்ளும் புறமும் மாற்றியமைக்கப்பட வேண்டும். தனிப்பட ஒவ்வொரு பிள்ளையினதும் நெருக்கீடுகளுக் கூடாகப் பிள்ளையை வெற்றிகரமாக அழைத்துச் செல்ல கூடிய திறமை வாய்ந்த ஒருவர் இல்லத்தில் நிரந்தரமாக வசிக்க வேண்டும். அவர் ஓர் அம்மாவின் ஸ்தானத்தை நிரந்தரமாக எடுக்கும் ஆற்றல் உள்ளவராக அமைதல் மிகவும் விரும்பத்தக்கது. அடிக்கடி பராமரிப்பாளர் மாறிக் கொண்டிருக்கும் நிலை பிள்ளையை அதிகம் பாதிக்கலாம்.

இல்லத்தின் சிறுவர்கள் அனைவருக்கும் இடையில் ஒரு குடும்பம் போன்ற சகோதர உணர்வு வளர்த்தெடுக்கப்பட வேண்டும் பெரிய பிள்ளைகள் சிறிய பிள்ளைகளின் தேவைகளை ஓரளவு கவனித்துக் கொள்வதற்குப் பயிற்றுவிக்கப்படலாம். பெண் பிள்ளைகள் வசிக்கும் இல்லங்களில், அவர்கள் வயதுக்கு வரும்போது அவர்களின் விசேட தேவைகள் கவனிக்கப்படவேண்டும். இல்லத்துக்கெனத் தயாரிக்கப்படும் நாளாந்த நேர அட்டவணை பிள்ளையின் மகிழ்ச்சி, வளர்ச்சி, விருத்தி ஆகியவற்றுக்குப் பெரிய இடந்தரும் வகையில் அமைக்கப்பட வேண்டும். நாளாந்தம் இடம் பெறும் சூழல் மாற்றங்களுக்கான பிள்ளையின் துலங்கல்கள் மிகக் கவனமாக அவதானிக்கப்பட வேண்டும். அதில் மாற்றங்கள் ஏற்படுமிடத்து உரிய நிபுணத்துவ ஆலோசனை பெறப்பட வேண்டும்.

இல்லத்தில் விசேட தேவையுடைய பிள்ளைகள் அல்லது கற்றல் குறைபாடு உடைய பிள்ளைகள் இருப்

பார்களாயின் அவர்களின் தேவைகளுக்கு முன்னுரிமையுடன் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும். இல்லத்துக்குப் பொறுப்பாக இருப்பவர்களும் நிர்வாகிகளும் முடிந்தவரை பிள்ளைகளுடன் அன்பாக இலகு மொழியில் உரையாட வேண்டும். அவர்கள் தாங்கள் தளர்வாக இருப்பதோடு அதீத பொறுமை காக்கக் கூடியவர்களாயும் அமைதல் சிறப்பானது.

பிள்ளை இல்லத்துக்கு வந்த பிறகு, அவரைப் பொறுப்பேற்று அழைத்துச் செல்வதற்கு யாராவது வருவார்களாயின் அவரைத் தெரியுமா என்று பிள்ளையைக் கேட்க வேண்டும். பிள்ளை அவரோடு போக விரும்புகிறாரா என்பதை அறிய வேண்டும். பிள்ளை விரும்பினால் வந்தஆளுடைய முழு விபரங்களையும் பெற்றுக் கொண்டு பிள்ளையை அனுப்பலாம்.

சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர், சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் உத்தியோகத்தர், அப்பிரதேசத்தின் நீதியரசர் உள வைத்திய நிபுணர் ஆகியோருடன் காப்பகம் முடிந்த வரை தொடர்புகளைப் பேணிக் கொள்வது நன்மை தரும்.

பெற்றாரியம் என்பது மிக வேகமாக வளர்ந்து வரும் ஓர் அறிவு சார் துறை. சொந்தப் பிள்ளைகளாக இருக்குக் கூடிய ஓரிருவரை வளர்ப்பதற்கே மிக அதிகம் படிக்க வேண்டி இருக்கும் காலம். எண்ணிக்கையில் அதிகமாக இருக்கின்ற பலவேறு வகையான பாரம்பரிய இயல்புகளைக் கொண்ட பிள்ளைகளை ஒரு சேர வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறவர்கள் தமது அறிவு, திறன், மனப் பாங்கு ஆகியவற்றைத் தொடர்ந்து விருத்தி செய்து வருதல் அத்தியாவசியமான தேவை யாகும். அவ்வாறு செயற்படுகிறவர்கள் எதிர்காலத்தில் சமூகத்தினால் மிகவும் போற்றிப் பாராட்டப்படுவர் என்பதில் எந்தச் சந்தேகமும் இருக்க முடியாது.

❑ ❑

ஆசையில் கட்டுண்ட நிலையில் மனப் போராட்டமே இருக்கும். ஒவ்வாதவற்றைத்தான் மனம் ஆசைப்படும். அப்படியென்றால் ஆசையை அழித்துவிட வேண்டும், அடக்க வேண்டும், மேம்பாடுடையதாக மாற்ற வேண்டும், என்று நான் கூறவில்லை. ஆசையே முரண்பாடுள்ளது. என்று காண வேண்டும். ஆசைப்படும் பொருள்களைவிட ஆசையின் இயல்பே முரண்பாடுடையது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். நல்லதின் மீது ஆசை கொண்டாலும் கெட்டதின் மீது ஆசை கொண்டாலும், ஆசை ஆசைதான் அல்லவா? ஆசையினால் விளையும் மனப்போராட்டங்களைத் தெரிந்துகொள்வதற்கு முன் ஆசையின் இயல்பையும், அமைப்பையும், இயக்கத்தையும் தெரிந்துகொள்ள வேண்டும். நம் மனம் போராட்டத்தில் இருப்பதற்குக் காரணமே ஆசைதான். ஆசை என்றால் இன்பத்தை நாடுவதும் துன்பத்தைத் தவிர்ப்பதுமாகும்.

❖ ❖ ❖

ஒரு கதையைத் திரும்பவும் கூற விரும்புகிறேன். ஒரு சிறந்த சீடன் கடவுளிடம் சென்று உண்மையைப் பற்றிக்கூற வேண்டினான். பாவம், கடவுள் என்ன பண்ணுவார்! அவர் "நண்பனே! வெயில் தாள முடியவில்லை. தயவு செய்து எங்காவது போய் ஒரு குவளைத் தண்ணீர் கொண்டு வா" என்று கூறினார். சீடன் போகிறான். கண்ணால் கண்ட முதல் வீட்டுக் கதவைத் தட்டுகிறான். ஒரு அழகான பெண் கதவைத் திறக்கிறாள். இருவருக்கும் காதல் மலர்கிறது. தண்ணீர் விஷயத்தை இவன் மறந்து சிடுகிறான். இருவரும் மணம் புரிந்து பல குழந்தைகளைப் பெற்றுக் கொள்கின்றனர். ஒரு நாள் அடைமழை பெய்து சாலைகளிளெல்லாம் நீர் வந்து வீடுகள் எல்லாம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. சீடன் மனைவியை ஒருகையிலும் குழந்தைகளைப் பிடித்துக் கொண்டும் கரையைக் கடக்க முயன்றபோது வெள்ளம் இவனையும், மனைவியையும் அடித்துச் செல்கிறது. துயரமடைந்த அவன், "கடவுளே, என்னைக் காப்பாற்று" என்று அலறுகிறான். "அப்பனே, நான் கேட்ட ஒரு குவளைத் தண்ணீர் எங்கே" என்று கடவுள் கேட்கிறார். .....காலச்சக்கரத்திற்குட்தான் மனிதன் வாழ்கிறான்.

– ஜே. கிருஷ்ணமூர்த்தி

பாலுக்குப் பாலகன்

குழந்தை ம. சண்முகலிங்கம்

நாடகம்

முன் திரை விலகும் போது அனைத்துப் பாத்திரங்களும் மேடையில் நிற்பர். பெரும் பாலும் பின் மேடையில் நிற்பர் எனக் கொள்ளலாம். மத்திய மேடையில் தாய் தன் பிள்ளை பார்த்தீபனைத் தாலாட்டிக் கொண்டிருப்பார். நாடகம் முழுவதிலும், உரிய நேரங்களில் ஏனைய பாத்திரங்கள் பிற் பாட்டுப் பாடலாம்.

தாய் : ஆராரோ!! ஆரிவரோ!! ஆரிவரோ!! ஆராரோ!!

(1) **பார்! பார்! பார்! நல்ல சனம்!**
பார்த்திபரே! கண்ணுறங்கும்!

கண்மணிநீர் கண்ணுறங்கும் கண்கொள்ளாக் காட்சிதனைக்
கண்ணிமைக்கா திருந்தவர்கள் கண்டிடவே கூடியுள்ளார்.

(ஆராரோ!!!......)

குட்டிக் கண்ணன் பார்த்தீபன், நல்ல நித்திரை கொள்ளிறார்.

பேணியிலை பால் இருக்கு... பாதிப் போணிப்பால் மட்டும் தான்!...........

அலைந்த அலைச்சல்!

ரவி : ஏனம்மா? இந்த ஊரில் பால் கிடைக்காதா?
தாய் : பால் மட்டுமில்லை, உண்ணும் உணவு எல்லாமே தட்டுப்பாடு
ராஜா : ஏனம்மா!
தாய் : மழை இல்லை! கன காலம் மழையில்லை.
ரங்கன் : மழை இல்லையெண்டால் பாலுக்கேன் தட்டுப்பாடு!!
கு. தாத்தா : மகனே! மழை இல்லாது போனால், பால் மட்டுமில்லை, ஊரில் எதுவுமே இருக்காது.
ரமணி : குளத்தங்கரைத் தாத்தா! நாங்கள் இருக்கிறம் தானே!!
கு. தாத்தா: இருக்கிறம்! எத்தினை நாளைக்கு!!!
ஆறில்லை, குளமில்லை
மழையில்லையெண்டால், எப்பிடிச் சீவிக்கிறது?
ரவி : ஏன் சீவிக்கிறதுக்கு என்ன?
மலைமாமா : இருந்து பாருங்கோ எல்லாம் விளங்கும்.
வ. பாட்டா : இஞ்சை நடக்கிறதைப் பாருங்கோ, எல்லாம் விளங்கும்.
தாய் : பிள்ளையைப் பார்த்துக் கொள்ளுங்கோ வேலையிருக்கு நான் போய் வாறன்.
பிள்ளை : ஓம் அம்மா.

கு. தாத்தா : இனி நடக்க இருக்கிறதையும் பார்த்துக் கொள்ளுங்கோ.
ராஜா : குளத்தங்கரைத் தாத்தா புதிர் போடுறார்.

இவ்வேளை எலிக்குட்டி தாய் எலியிடம் சென்று

(2) குட்டி : **அம்மா மெத்தப் பசிக்குது!**
அப்பத்துண்டொண்டிப்போ தா!
அம்மா மெத்தப் பசிக்குது!
அப்பத்துண்டொண்டிப்போ தா!
அம்மா!

(3) எலி : **அப்பத் துண்டு கேக்கிறாயே என் மகனே எலிக்குட்டியே!**
அப்பன் பிள்ளையாரும் பட்டினிஅப்பம் படைப்பார் யாரே உள்ளார்!

குட்டி : அம்மா பசிதாங்கேலாமல்க் கிடக்குது.
எலி : பொறு மகனே பொறடா!. அங்கை ஒரு பேணி தெரியுது.
ரங்கன் : எலியம்மா பேணியிலை பாலிருக்கு, பிள்ளை படுத்திருக்கு.

எலி தொட்டிலில் படுத்திருக்கும் பிள்ளையைப் பார்த்துவிட்டு

எலி : ஐயோ! வடிவான குட்டிப் பிள்ளை.
குட்டி : என்னப் போல வடிவா அம்மா?
எலி : ஓம். உன்னைப் போல் வடிவு.
குட்டி : அம்மா பசி தாங்கேலாமல் இருக்கு! பாலை எடுத்துத் தாங்கோ குடிக்க.
எலி : பிள்ளைக்கு வைச்ச பாலை எடுக்கிறது பாவம் மகனே!
குட்டி : நானும் பிள்ளை தானே! நான் பசியாலை செத்துப் போவன்.
எலி : பொறு மகனே! பொறு!
குட்டி : பசிக்குதம்மா! ஐயோ பசிக்குது!
எலி : கடவுளே, நான் என்ன செய்ய!
குட்டி : ஐயோ அம்மா! பசி தாங்க முடியாது.
எலி : கத்தாதை மகனே! பழிக்குப் பயந்தால் என் குட்டி பாவம்!!
ரமணன் : எங்கள் பாட்டன் சொல்லும் வார்த்தை எனக்கிப்போ விளங்குதம்மா!
ரவி : உங்கள் பாட்டன் சொல்லும் வார்த்தை என்ன என்று சொல்லு ரமணா?
ரமணன் : தர்மசங்கடம்! தர்மசங்கடம்! தர்மசங்கடம்! என்பார் பாட்டா.

மலைமாமா : கர்மம் ஒன்றினைச் செய்தாலும் பிழை, விட்டாலும் பிழை. இதுவே சங்கடம்.

குட்டி : ஐயோ! அம்மா! பசிக்குது.

எலி : இந்தா நடக்கிறது நடக்கும், குடி.

பாலை எடுத்துக் குட்டியிடம் கொடுக்கிறது - குட்டி குடிக்கிறது.

ரவீ : குட்டிக் கண்ணனின்ர அம்மா வந்து பால் எங்கை எண்டால்.......

ராஜா : நாங்கள் என்ன செய்ய, எலிக்குட்டிக்கும் பசி.....

ரங்கன் : குட்டிக்கண்ணன் எழும்பினால் அவனுக்கும் பசிக்கும்!

வ. பாட்டா : உங்கள் பாடு தர்மசங்கடம், மழை இல்லாமல் தர்மசங்கடம்!

கு. தாத்தா : முடிந்த கதையைப் பாத்தம், இனி நடக்கும் கதையைப் பாப்பம்.

இவ்வேளை படுத்திருந்த பிள்ளை எழுந்திருந்து அழுகின்றது. அழுது கொண்டிருக்கும் பிள்ளையிடம் தாய் வந்து............

தாய் : என் கண்ணே கண்மணியே ஏன் அழுவான்? ஏன் அழுவான்?

பிள்ளை : என் செய்வேன் பசிக்குதம்மா! என் தாயே பசிக்குதம்மா!

தாய் பால்ப் பேணியை எடுத்துச் சென்று அங்கு பால் இல்லாததைக் கண்டு

தாய் : **ஆரிந்தக் கொடுமை செய்தார்?**
அடப்பாவி ஆரிந்தக் கொடுமை செய்தார்?
ஊரெல்லாம் அலைந்தே நான்
அரைப்பேணிப் பால் வாங்கி சீராளன் பிள்ளை பருக.....
ஆறவைத்துப் போனேனே ஆரெடுத்துக் குடித்தாரோ?
ஆரறிவார் இந்தக் கொடுமை?
மரநாயோ? ஓநாயோ? மனச்சாட்சி இல்லாத மரக்கட்டைப் பெருச்சாளி மாபாவி கொடும் பாவி.
ஆரிந்தக் கொடுமை செய்தார்........
அடப்பாவி ஆரிந்தக் கொடுமை செய்தார்.

எலி : அம்மா, தயே! பிள்ளைக்கு வைத்த பாலை எடுத்த மாபாவி கொடும்பாவி நான் தானம்மா!

தாய் : சின்னப் பாலகனுக்கு வைச்ச பாலை ஏனம்மா நீ எடுத்தாய்?

எலி : என் பிள்ளை பசியால் அழுதான்,

குட்டி : அம்மா தாயே நான் பசியெண்டு கத்த.....

எலி : பிள்ளைக்கு வைத்த பால் மகனே வேண்டாம்.....

குட்டி : அம்மா! பசியால் சாகப் போகிறேன்......

எலி : என் குட்டி குழறினான், வேறு வழியில்லாமல் பாலை எடுத்துக் குடுத்தன் தாயே!

பிள்ளை : அம்மா பசிக்குது!

தாய் : பொறு மகனே, உன்னைப் போல ஒரு குட்டி எலிக்குஞ்சனார் பசியாலை உன் பாலைக் குடிச்சிட்டார்.

குட்டி : அம்மா வாங்கோ குட்டி கண்ணன் பாவம் பால் வாங்கி வருவம்.

ரமணன் : வாங்கோ நாங்களும் போவம் பால் வாங்கி வர.

ரவீ : வாருங்கோ ஆடம்மாவைத் தேடிப் போவம். பால் கொஞ்சம் கேட்டுப் பாப்பம்.

எலி : ஓடி வாருங்கோ! ஓடிப் போவம்!

மேடையைச் சுற்றி ஓடுகின்றனர். பாடிப்பாடி ஓடுகின்றனர்.

ராஜா : ஓடி ஓடிப் போவோமே! ஊர் முழுக்கப் போவோமே!

ரங்கன் : பாடிப்பாடிப் போவோமே! பால் வாங்கப் பேவோமே!

ரமணன் : அந்தா! ஆடம்மா நிக்கிறா!

அனைவரும் : எங்கே! எங்கே!

ரமணன் : அந்தா!

அனைவரும் : ஓமோம்!

எலி : ஆடக்கா! ஆடக்கா!

ஆடு : என்ன வேணும் எலித்தங்கச்சி!

குட்டி : பசியாலை வாடுற பிள்ளைக்கு பால் கொஞ்சம் தருவீங்களோ?

ஆடு : பாலோ! நான் குழை திண்டு கன காலம், புல் கண்டு ஒரு வருடம்.

ரவீ : ஆடம்மா! புல் தந்தால்ப் பால் தருவீங்களோ?

ஆடு : புல்லோ, குழையோ! எது தந்தாலும் சாப்பிட்டுப் பால் தருவேன்.

ராஜா : வயல்ப்பாட்டா! வயல்ப்பாட்டா!

வ. பாட்டா : என்ன ராசா! என்ன வேணும்?

ரங்கன் : புல் கொஞ்சம் தருவியளோ?

வ. பாட்டா : புல்லோ?

ரமணன் : ஓம் வயல்த் தாத்தா. ஆடம்மா புல் சாப்பிட்டால் பால் தருவா!

வ. பாட்டா : மகனே! புல்லை நான் கண்டு ஆண்டொன்றாகுது.

ரவீ : ஏன் தாத்தா! புல் ஒரு இடமும் இல்லையோ?

வ. பாட்டா : இல்லை ராசா! மழையில்லை நிலத்திலை ஈரமில்லை!

ஈரமில்லாமல்ப் புல் இல்லை! மரஞ்செடி குழையில்லை!

எலி : ஐயோ பாவம் குழந்தை! பாலில்லாமல் தவிக்குமோ?

குட்டி : அம்மா! எங்கையெண்டாலும் குழை கொஞ்சம் தேடி ஆடம்மாவுக்குக் கொடுத்து பால் வேண்ட வேணும்.

ராஜா : வாருங்கோ! குளத்தாத்தாவிட்டைக் கேட்டுப் பாப்பம்.

அனைவரும் : ஓமோம் கேட்டுப் பாப்பம்.

ரங்கன் : குளத்திலை தண்ணியிருக்கும்!

ரமணன் : குளக்கரையிலை புல்லிருக்கும்.

எலி : குளத்தங்கரைத் தாத்தா!

குட்டி : குளத்தாத்தா!

கு. தாத்தா : என்ன வேணும் உங்களுக்கு?

ரவி : புல்லு வேணும் தாத்தா!

ராஜா : குளத்தங்கரையிலை புல்லிருக்குமே!

ரங்கன் : குளத்திலை தண்ணியிருக்குமே!

கு. தாத்தா : குளத்தங்கரையிலை புல்லுமில்லை! குளத்திலை தண்ணியும் இல்லை.

ரமணன் : ஏன் தாத்தா?

கு. தாத்தா : குளக்கட்டெல்லாம் உடைஞ்சதாலை மழை நீர் தேங்க வழியில்லை.

குட்டி : குளக்கட்டு ஏன் உடைஞ்சது தாத்தா?

கு. தாத்தா : சகடை என்ற அரக்கனொருவன்
செட்டை ரெண்டு கட்டியே
முகடு முட்டக் குண்டு சுமந்து
மேகந்தன்னில்ப் பறந்துமே
தகிடத் தித்தோம்! தோம், தோம் என்று
குண்டுமாரி பொழிந்தனன்
சகடை செய்த வினையால் எங்கள்
குளத்தங்கட்டுத் தகர்ந்ததே!

வ. பாட்டா : பாத்தீங்களே! சகடை செய்த வேலையாலை சாப்பாட்டுப் பஞ்சம் வந்திட்டுது.

ரவி : தண்ணீரைத் தேக்கி வைக்கிற அணைக் கட்டை உடைச்சால் அநியாயம் தானே?

ராஜா : ஆறில்லாத ஊர்! மழை நீரை நம்பின எங்கடை தேசம்! குளக்கட்டுடைஞ்சால்ப் பஞ்சம் தானே வரும்!

ரங்கன் : இதுகளைப் பேசி என்ன பயன்? ஆக வேண்டியதைப் பாப்பம்.

கு. தாத்தா : புல்லு - குழை, பயிர் - பச்சை. செடி - கொடி வேணுமெண்டால் முதல்ல எல்லாரும் சேர்ந்து குளக்கட்டைத் திருப்பிக்கட்டுவம்.

ரமணன் : அதுக்கு நாங்கள் என்ன செய்ய வேணும்?

கு. தாத்தா : மலை மாமாவிட்டைப் போய் கல்லு வேண்டி வாருங்கோ!

ரவி : வாருங்கோ மலை மாமா விட்டப் போவம்!

அனைவரும் : ஓமோம், போவம்! போவம்!

ராஜா : மலைமாமா நல்ல மலைமாமா! அலைக்கழிந்து வருகின்றோம்!

மலைமாமா : மருமக்காள்! எந்தன் மருமக்காள்! பெருங்கவலை ஏன் கொண்டீர்?

ரங்கன் : குளக்கட்டைக் கட்ட வேணும். குளங்கட்டக் கல்லு வேணும்.

மலை மாமா : கல்தருவேன் கல்தருவேன் சொல் வழி நீர் கேட்க வேணும்.

ரமணன் : சொல்லுங்கள் மலைமாமா. நல் வழி நான் நடந்திடுவேன்.

மலை மாமா : பிள்ளையளே அந்த மயைப் பாருங்கோ

குட்டி : இந்த மலை ஏன் மொட்டந்தலைபொல் வழுக்கையாய்க் கிடக்குது?

மலைமாமா : பெரிய மனிசர் செய்த பெருங் கொடுமையால்த் தான்!

எலி : என்ன கொடுமை மலைமாமா?

மலைமாமா : விறகுக்கு, வீட்டுக்கு, கட்டிலுக்கு, வாங்குக்கு, மேசைக்குக், கதிரைக்கு, தேருக்கு, வாகனத்துக்கு, வண்டிக்கு எண்டு மரத்தையெல்லாம் தறித்தார்கள்.

ரவி : இவையெல்லாம் தேவைதானே மனிதருக்கு.

மலைமாமா : தேவைதான்! அளவோடு தேவைதான்!

ராஜா : இனிமேலும் தேவை வரப் போகுதே!

மலைமாமா : அப்பிடிச் சொல்லு ராசா!

வ. தாத்தா : மனிதர்கள் இருக்கும் வரை மரங்கள் தேவைப்படும்!

கு. தாத்தா : மழை பெய்ய மரங்கள் தேவை! மண் செழிக்க மரங்கள் தேவை!

மலைமாமா : ஆனபடியால் அளவாய் மரங்களைத் தறிக்க வேணும்.

வ. பாட்டா : ஒரு மரம் தறிச்சால் ஒரு மரம் நட வேணும்.

கு. தாத்தா : வெட்ட வெளியளிலை மரங்களை நட வேணும்.

மலைமாமா : மலையிலும் சரிவிலும் மரம் நட வேணும்.

ரங்கன் : அப்படிச் செய்வம்! வீட்டு வளவிலையும் மரங்கள்...

ரமணன் : றோட்டுக் கரையிலும் மரங்கள் நடுவம்.

மலைமாமா : செய்வியளோ?

அனைவரும் : செய்வம் மாமா! செய்வம்!! நிச்சயம் செய்வம்!

மலைமாமா : அச்சாப் பிள்ளையள்! வேண்டிய மட்டும் கல்லெடுங்கோ! குளக்கட்டைக் கட்டுங்கோ! நீரைத் தேக்குங்கோ!

எலி : பிள்ளை பாலுக்கு அழத் தேவை வராது!

குட்டி : பிள்ளையாகுக்கும் மோதகம் கிடைக்கும்.

கு. தாத்தா : மூஷிக வாகனர்க்கும் அதில் பங்கு கிடைக்கும்.

எலி : கிடைக்கும்! கிடைக்கும்!

குட்டி : வாருங்கோ!எல்லாரும் கல் சுமப்போம்!

அனைவரும் : வாருங்கோ! வாங்கோ!

தாய் : பாலுக்கழுத என் பிள்ளையின் அழுகை, எல்லார் தலையையும் நெரிக்கிறது.

எலி : தலையிலை கல்லைக் காவுங்கோ!

ராஜா : காவுங்கள்! காவுங்கள் கல்லைத் தலைக்கு மேல்!
குளக்கட்டைக் கட்டுவோம் காவுங்கள் கல்லை!

ரங்கன் : கூவுங்கள்! கூவுங்கள் ஊரவரைக் கூட்ட! குளக்கட்டைக் கட்டுவோம் ஊரவரைக் கூட்டி!

ரமணன் : சோக்கங்கள் யாவுமே பறந்தோடிப் போக சோக்கான மரங்களை நட்டு நாம் வளர்ப் போம்!

ரவி : தாகங்கள் தீர்த்திடும் தண்ணீரைத் தேக்கி
தாவரம் வளரவே தண்ணீரை வார்ப்போம்!

மலைமாமா : வானமது பொய்யாது மழை பெய்யத் தம்பி!
வகையாக மரஞ்செடிகள் நட வேண்டும் தம்பி!
மானமுடன் நாங்களிங்கு வாழவே மகனே!
மழை பெய்ய மரஞ்செடிகள் நாட்டுவோம்

“இந்துபோர்ட் இராசரத்தினம் – காலமும் வாழ்வும்” ஒருமதிப்பீடு

பேராசிரியர் மா. சின்னத்தம்பி

சமுதாய வளர்ச்சிக்காக தமது வாழ்நாளில் பெரும் பகுதியைச் செலவிட்ட அமரர்களான சமூக தலைவர்கள் பற்றிய நூல்கள் வெளியிடப்படுவது மிகவும் அவசியமானது அத்தகைய தலைவர்களது சேவைகளின் மேன்மையை சமூக அங்கீகாரத்துக்குரியதாக மீண்டும் நினைவுபடுத்துவதாக இப்பணி அமைகின்றது.

திருநெல்வேலி, சைவவித்தியா விருத்திச் சங்கதலைவர் மற்றும் பணிப்பாளர் சபையினால் அண்மையில் வெளியிடப்பட்ட “இந்துபோர்ட் இராசரத்தினம் - காலமும் வாழ்வும்” என்ற நூல் இவ்வகையினதேயாகும். இதனை கல்வித்துறையில் நீண்ட காலம் சேவையாற்றிய திருவாளர்கள் சோ. பத்மநாதன், கே.வி.குணசேகரம் ஆகியோர் பதிப்பித்துள்ளனர். நன்றியுணர்வை வெளிப்படுத்தும் சமுதாயக் கடமையாக இந்த நூல் வெளியீடு நோக்கத்தக்கது.

ஆங்கிலேயர் காலத்தில் கல்வி மறுமலர்ச்சிக் காகப் பாடுபட்டவர்களில் யாழ்ப்பாணத்தில் ஆறுமுக நாவலரும் தெற்கில் அநகாரிக தர்மபாலா, சித்திலெப்பை போன்றவர்களும் முக்கியமானவர்கள். சுதேசிய பண்பாட்டுச் சூழலில் தரமான கல்வியை ஆங்கிலம் மற்றும் தாய் மொழிகளில் சுதேசிய குழந்தைகள் பெறுவதற்கான சமுதாய அறிவியக்கத்தை ஆரம்பித்தவர்கள் இவர்கள். இலவசக்கல்வியைத் தாய் மொழியில் பெற்று முன்னேறிய பெரியதொரு விழிப்புணர்வுள்ள சமுதாயமொன்றை இலங்கை கொண்டிருப்பதற்கு வழி சமைத்தவர்கள் இவர்கள்.

இவர்களில் வைவத்தமிழ் பண்பாட்டுச் சூழலில் விழுமியப்பற்றுடன் அறிவு விருத்தியை விசைப்படுத்துவதில் ஆறுமுகநாவலர் ஆற்றிய பங்கினை தொடர் பணியாக வளர்த்தெடுத்தவர்களில் அமரர் இந்துபோர்ட் இராசரத்தினம் அவர்களது பங்களிப்பு மிகவும் பெறுமதி மிக்கது. அத்தகைய பங்களிப்பை அக்கால சமுதாய, நிர்வாக, அரசியல் பகைப்புலத்தில் விபரிப்பதாக இந்த அரிய நூல் அமைகின்றது.

அரச ஆதரவுடன் வலிமை மிக்கதாக ஆங்கிலேயர் காலத்தில் கல்விப்பணியாற்றிய கிறீஸ்தவ மிஷனரியினருக்கு சமாந்தரமாக பல அறை கூவல்களை எதிர் கொண்டு ஈழத்தில் கல்வி நிறுவனங்களை உருவாக்கி வளர்த்த பெருமை இந்துபோட் எனப்படும் சைவவித்தியா விருத்திச் சங்கத்துக்குண்டு. அதே போன்ற உன்னதமான மதிப்பு அதன் காவலராயிருந்த இந்துபோர்ட் இராசரத்தினம் அவர்களுக்குமுண்டு. இந்து போர்ட் என்றாலே இராசரத்தினம் என்ற சொல்லும் அளவுக்கு அவரது பணியின் நீட்சியும் பயனும் யாழ்ப்பாணத்தில் விரிந்து கிடக்கின்றன. இவை பற்றியே இந்த நூல் மிக விரிவாக, துல்லியமான சான்றுகளுடன் மிகச்சரியான புள்ளி விபரங்களுடனும் நூற்றிஅறுபத்து மூன்று பக்கங்களில் ஆராய்கின்றது. இதற்கான அட்டை அமரர் இந்துபோட் இராசரத்தினத்தின் கோட்டோவியத்தைக் கொண்டுள்ளது. இதனை புகழ்பூத்த ஓவியர் திரு ஆசை இராசையா வரைந்துள்ளார்.

பயனும் மதிப்பும் மிக்க இந்த நூலின் ஆசிரியர் அமரர் க.சி. குலரத்தினம் அவர்கள். இவர் பல்துறைப் புலவர், நடமாடும் தகவற்களஞ்சியம், சைவாசிரியர் கலாசாலையின் வெளியீடு, இந்துபோட் காலத்தில் உயிர்ப்பு மிக்கவராயிருந்த பெரியார் இராசரத்தினம், மயிலிட்டி சுவாமிநாதன், பொ. கைலாசபதி, பண்டிதமணி, சி. கணபதிப்பிள்ளை போன்ற கல்விமான்களுக்கு அணுக்கராய்ப் பழகியவர். இவர் 1988 -89 காலப்பகுதியில் முரசொலிப்பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதிவந்த கட்டுரைகள் கால வெள்ளத்தில் அள்ளுண்டு போகாமல் பாதுகாக்க வேண்டும் என்ற சீரிய நோக்குடன் நூலுருவாக்கப்பட்டுள்ளன.

இந்த நூலின் ஊடாக சொல்லப்படும் செய்தி தனிமனிதரான இந்துபோட் இராசரத்தினம் பற்றியவை யல்ல. இது அவரது சரிதையல்ல. அதேபோல் அவரைப் புகழ்பாடும் நூலுமல்ல. ஆனால் வசைபாடும் நூலுமல்ல. நூலாசிரியர் தூய்மையான நடுநிலை உணர்வுடனான அறிவு சார் நேர்மையை எந்தளவு கடைப்பிடித்தார் என்பதை தெளிவுபடுத்துவது இந்த நூல். இதனாலேயே இந்த நூலின் மதிப்பு இரட்டிப்பாகின்றது.

இந்துபோட் இராசரத்தினம் என்ற வித்தியா விருட்சத்தினைச் சுற்றி பல வளர்ச்சிக் கொடிகள் வளர்ந்தன. அவைதான் யாழ்ப்பாணத்தின் கல்விச் செழுமையின் ஊற்றுக்கண்களாக விளங்கிய பல கல்வி நிறுவனங்களாகும். அவை :-

தமிழ் வித்தியாலங்கள்	105
துவிபாஷா வித்தியாலயங்கள்	04
ஆங்கில வித்தியாலயங்கள்	03
ஆசிரிய கலாசாலை	01
ஆண் பிள்ளைகள் விடுதி	01
பெண் பிள்ளைகள் விடுதி	01
கைத் தொழில் விருத்தி நிலையங்கள்	04

1945 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தின் கல்விப்பரப்பை அகலப்படுத்தி ஆழமான அறிவு விருத்திக்கு பங்களிப்புச் செய்த இத்தனை நிறுவனங்களை நிர்வகித்த பெருமை இந்துபோட் இராசரத்தினம் அவர்கட்கு உரியது.

நூலாசிரியரின் பணி ஒரு கலாநிதிப்பட்ட ஆய்வாளருடையது போல விளங்குகிறது. புள்ளிவிபரங்களைத் தேடித்திரட்டி உரியவாறு பயன்படுத்தியிருப்பது வியப்பைத்தருகின்றது. சில உதாரணங்களைப் பார்க்க முடியும். ஓரிடத்தில் க.சி.கு இவ்வாறு எழுதுகிறார்.

"இராசரின் அயரா உழைப்பினால் 1945 ம் ஆண்டில் அங்கத்தவர் சார்பில் சங்கம் சேர்த்த தொகை 42, 771 ரூபா. அதற்கு முந்தி 1944 ஆம் ஆண்டில் திரட்டிய தொகை 26, 562 ரூபாவாகும்........

அமெரிக்க போதகர்கள் நடத்திய பாடசாலை ஒன்றில் ஆசிரியருக்கு ஆண்டொன்றுக்கு கொடுத்த சம்பளம் 18 டாலர் என்றும் அதே காலத்தில் எங்கள் பெண் பிள்ளை ஒருத்தியை தங்கள் சூழலில் அரவணைத்துப் படிப்பிப்பதற்கு செலவிட்ட தொகை 20 டாலர் என்றும் அவர் தம் அறிக்கையிலே காணக்கிடக்கிறது.

(பக்கம் 122)

நூலாசிரியர் பிறிதோரிடத்தில் பின்வருமாறு கூறுகிறார்.

"ஆசிரியர்கள் பாடசாலைகளின் வளர்ச்சியின் பொருட்டுத் தாமாக நான்கு வீத உபகரிப்புக் கொடுத்தமை ஊரறிந்த செய்தி......... பட்டதாரிகள் சிலர் தமக்குரிய நூற்றிருபத்தைந்து ரூபாவில் ஐம்பது ரூபா வரையில் கொடுத்ததுமுண்டு.

ஆசிரியர்கள் யாவரும் தவறாமல் அன்று நான்கு வீதம் கொடுத்திருந்தால் அன்று 2, 40,000 ரூபா வரை சேர்ந்திருக்கலாம். ஆகால் அன்று சேர்ந்திருந்த தொகை 60,000 ரூபாவாக இருந்தமை ஒரு விபரத்திரட்டில் காணக்கூடிய தாயிருந்தது."

(பக்கம் 118)

மிகப் பெரிய சமுதாய பொறுப்பு மிக்க பணியில் ஈடுபடும் ஒருவர் எத்தகைய நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது என்பதை அக்கால சமுதாய மற்றும் ஆட்சிப்பணித்துறை முறைமையினூடாக நூலாசிரியர் விபரிக்கும் முறை வியப்பைத் தருகின்றது. ஒரு புனைகதையாசிரியர் போல் காட்சிகளைக் கடைபரப்பும் பாங்கு இரசிக்கத்தக்கது. நூலாசிரியர் க.சி.கு. ஓரிடத்தில் இவ்வாறு கூறுகிறார்.

"மகாயுத்த காலமாயிருந்தும் தானியங்கள் உணவுப்பொருள் தட்டுப்பாடாயிருந்தும் அவர் பயிற்சியாளரிடம் 1942 ஆம் ஆண்டில் 250 ரூபா மாத்திரமே பெற்று மூன்று வேளை உணவும் இடையில் தேநீரும், முழுக்குக்கு எண்ணெய், சிகைக்காயும், குடி மக்கள் சேவையும், பிறவசதிகளும் கொடுத்தர்"

(பக்கம் 121)

இந்த விபரிப்பு அக்கால சமுதாய வாழ்வு முறையில் பல உண்மைகளை வெளிப்படுத்துகிறது.

1. ஆசிரிய மாணவர்களிடம் எண்ணெய் வைத்து சிகைக்காய் தேய்த்து முழுகும் வழக்கம் ஒழுங்காக இருந்தது.
2. குடி மக்கள் சேவை அவர்களுக்கும் கிடைத்தது.
3. யுத்தநிலைமையில் உணவுத்தட்டுப்பாட்டிலும் பொறுப்புணர்வுடன் பயிற்சியாளர் பேணப்பட்டனர்

வேறோரிடத்தில் இராத்தினம் அவர்கள் எதிர் கொண்ட நிதி நெருக்கடி பற்றி விபரிக்கிறார் க.சி.கு.

"இராசர் பொன்னையரிடம்" ஐயா! ஒரு ஐயாயிரம் ரூபா கடன் தேவையாயிருக்கிறது" என்றார்.

"என்ன தேவைக்காக்கும்," என்று பொன்னையா விசாரித்ததும்

"ஐயா! ஓடு வாங்க வேண்டும், நீரிறைக்கும் இயந்திரம் வாங்க வேண்டும்" என்றார். மறுநாள் லொறியில் 3000 ரூபா பெறுமதியான ஓடுகளும் பாரிய நீரிறைக்கும் யந்திரமும் அனுப்பியிருந்தார்.

நூலாசிரியர் க.சி.கு அவர்கள் குரும்பசிட்டியூர் வள்ளல் நா. பொன்னையா அவர்கள் பற்றி இப்படிக் கூறி முடிக்கிறார்.

"குறிப்பறிந்து கொடுத்தவன் குரும்பசிட்டி
யான் என்று பாட்டுப்பாட உள்ளம் துள்ளுகிறது".

1930 - 60 களில் யாழ்ப்பாண சமூக அரசியல் வளர்ச்சிக் காலம் அப்புக்காத்துமார் ஆளுகைக்கு உட்பட்டிருந்த தென்ற பெரிய உண்மையை இந்த நூல் பல இடங்களில் உணர்ந்தும் மறந்தும் சொல்லிச் செல்கிறது. யாழ்ப்பாண சமூக அரசியல் வளர்ச்சி பற்றிய ஆய்வில் ஆர்வம் உடையோருக்கு ஏராளமான தகவல்களை இந்த வழங்குகிறது.

இந்துபோட் இராசரத்தினம், சுழிபுரம் நவரத்தினம், நீதிபதி வைமன் கதிரைவேற்பிள்ளை, புறக்ரர் கதிரேசர், கோப்பாய் புறக்ரர் சுப்பிரமணியம், சேர். பொன்.இராமநாதன், வட்டுக்கோட்டை சிதம்பரப்பிள்ளை, அரியாலைப் பொன்னம்பலம், நீராவியடிப் புறக்ரர் சிவகுருநாதர், பட்டணப்பகுதி அப்புக்காத்தர் எஸ்.ஆர். கனகநாயகம் என்றவாறு நீண்ட பெயர்ப்பட்டியலை சம்பவங்களுடன் உள்ளீடாக்கி க.சி.கு எழுதும் பாங்கு மெச்சத்தக்கது; வியக்கதக்கது.

தமிழ்மொழி வளர்ச்சிக்கு பெரும் பங்கு வகித்த ஆரிய திராவிட பாஷாஅபிவிருத்திச் சங்கத்தின் வளர்ச்சி மற்றும் உயரிய பங்களிப்பு பற்றியும் (பக்கம் 86, 87) நூலாசிரியர் நிறையவே எழுதுகிறார்.

"இச்சங்கத்தின் மாநாடுகளில் தமிழ் நாட்டி லிருந்து காலந்தோறும் கதிரேசஞ் செட்டியார், சேதுப்பிள்ளை, கோவிந்தசாமிப்பிள்ளை முதலானோர் வருகை தந்து சிறப்பித்துள்ளனர்".

"சங்கம் செய்த நற்பணிகளை 1950 ஆம் ஆண்டில் திரும்பிப் பார்த்த போது நாட்டில் 564 பிரவேச

பண்டிதர்களும் 406 பால பண்டிதர்களும் 71 பண்டிதர்களும் பட்டம் பெற்றவர்கள்".

"பிரதமர் டட்லி சேனாநாயக்க அவர்கள் பரமேஸ்வரா வளாகத்தில் சங்கத்தின் பணிமனைக்கு அத்திவாரமும் நாட்டினார். அந்த அத்திவாரத்திலேயே இன்று பல்கலைக்கழக ஆனந்த குமாரசுவாமி மண்டபம் எழுந்துள்ளது".

இவற்றை வாசிக்கும் போது பிரமிப்பு ஏற்பட்டலூம் அடிமனதில் தேள் கொட்டியது போன்ற வலி ஏற்படுகின்றது. ஏன் இன்று இதற்கென ஒரு பெரிய நிரந்தரக்கட்டிடமும் சிறப்பான நிறுவனமும் இல்லை என்ற கேள்விக்கு விடை காண முடியாமைதான் கத்ததுயர் உணர்வுக்குக் காரணமாகிறது.

இன்று எம்மவர் மேலை நாடுகளில் கொண்டிருக்கும் பொருளாதார வலிமையையும் தனியார் பல்கலைக் கழகங்கள் நிறுவுதற்கான அரச அனுமதியுள்ள நிலைமையையும் பயன்படுத்தி ஒரு "பரமேஸ்வரா பல்கலைக்கழகம்" என்ற பல்துறைக்கற்கைக்குமான தனியார் பல்கலைக்கழகத்தை நிறுவினால் என்ன? எம்மவர் உயர்கல்வியை நவீனதிசையில் அகலப்படுத்தினாலென்ன? நாம் கையாலாகதவர்களா? இத்தகைய சிந்தனைகளை இந்நூல் கிளர்ந்தெழச் செய்கிறது என்பது இந் நூலின் வெற்றியாகும்.

யாழ்ப்பாண சமூகத்தில் தாய் மொழிக்கல்வி பன்மொழிக்கல்வி, பண்பாட்டுக் கல்வி போன்ற பலவற்றின் வளர்ச்சியிலும் 1960 கள் வரை இந்துபோட்டும், இந்துபோட் இராசரத்தினம் அவர்களும் ஆற்றிய பங்களிப்பை தெளிவாக வலியுறுத்தும் நல்ல தொரு வரலாற்று ஆவணமாக இந்த நூலைக் கருத வேண்டும். ஈழத் தமிழர்கள் யாழ்ப்பாணக்கல்வி, யாழ்ப்பாண சமூக அசைவியக்கம் பற்றி உணர்வு பூர்வமாகவும் தேடல் ஊக்கத்துடனும் அறிந்து கொள்ள உதவும் சிறந்த நூல்களில் ஒன்றாக இது விளங்குகிறது.

யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு ஆசிரியரும் இந்த நூலை வைத்திருப்பதும், வாசிப்பதும் அவசியம். அவ்வாறு செய்யும் போது யாழ்ப்பாணத்துக் குடிமகன் என்ற உரிமை உறுதிப்படுத்தப்படும்.

நூலை வாசித்து முடிக்கும் போது சிந்தனைக் கிளறலும் ஒருவகைக்குதூலமும் எஞ்சுகிறது. இதுதானே நல்ல நூலின் அறுவடை.

(14-02-2010இல் நடைபெற்ற இந்து போர்ட் இராசரத்தினம் - காலமும் வாழ்வும், வெளியீட்டு விழாவில் பேராசிரியர் மா. சின்னத்தம்பி ஆற்றிய மதிப்பீட்டுரையின் சுருக்கம்)

பழங்காலத்து அணுகுமுறை தவறு என முழுவதும் உணர்ந்து அதை இப்போது தவிர்க்க ஆரம்பிக்கிறீர்கள். அப்படி தவிர்ப்பது அணுகுமுறைக்கு வெறும் "எதிர்பாக" இருந்தால் இன்னொரு அணுகுமுறையை ஏற்படுத்தி அதில் சிக்கிக் கொள்வீர்கள். பழங்காலத்து அணுகுமுறை தவறு என்ற கருத்து நன்று என்று நினைத்துக் கொண்டு அதுபற்றி ஒன்றும் செய்யாமலிருந்தாலும், பயன் ஒன்றுமில்லை. பழங்காலத்து அணுகுமுறையில் உள்ள மடமையையும் முதிர்ச்சியற்ற தன்மையையும் முதிர்ந்த அறிவால் உணர்வதால் பயமில்லாமலும், சுதந்திரமாகவும் உள்ள மனம் இருப்பதால் பழங்காலத்து அணுகுமுறையை தவிர்க்கும் போது உங்களுக்குள்ளும், உங்களைச் சுற்றியுள்ள மற்றவர்களிடமும் குழப்பங்களும் அமைதிக் குலைவும் ஏற்படலாம். ஆனாலும், நம்மை பிறர் மதிக்க வேண்டுமென்ற வலையிலிருந்து வெளியே வந்துவிடுவீர்கள். பின்னர் நீங்கள் எதையும் தேடிக் கொண்டிருக்கமாட்டீர்கள். உண்மையைத் தேட வேண்டாமென்பதுதான் முதலில் தெரிந்து கொள்ள வேண்டியது. உண்மையைத் தேடுவது என்பது கடையில் பொருள்களை வாங்குவது போன்றதல்ல.

கடவுள் அல்லது உண்மை என ஒன்று உள்ளதா இல்லையா என்ற கேள்விக்கு புத்தகங்களும், பாதிரிமார்களும், தத்துவஞானிகளும், இரட்சகர்களும் என்றென்றும் பதில்கூற இயலாது. உங்களைத்தவிர வேறு யாரும் பதில் அளிக்க முடியாது. ஆகையினால் நீங்கள்தான் உங்களையே அறிந்து கொள்ள வேண்டும். தன்னையே அறிந்துகொள்ளாததால்தான் பக்குவமின்மை உள்ளது. தன்னை அறிதலில்தான் ஞானம் மலர்கின்றது.

– ஜே. கிருஷ்ணமூர்த்தி

Resources and Opportunities for Private Investment in Post Conflict Jaffna Peninsula.

S. Vijayakumar,
B.A Hons (Jaf);M.A (Mysore);M.Phil(Mad).
Senior lecturer,
Department of Economics,
University of Jaffna,

Sri Lanka is an island lying to in the south East of India surrounded by the Indian Ocean. The country abounds in natural resources and fascinating natural scenery. The total acreage of Sri Lanka is 65610 sq.km. and the total acreage of Jaffna is 1020sq.km (1023322 Hec) of which 35% of the land is used for agriculture and for the cultivation of cash crops, 22% of the land has been used for buildings, 5% of the land is surrounded by the lagoon, 32% of the land is surrounded by rocks, sand, marshy areas and 6% of the land is left unused for cultivation.

The following statistics show the strength of the northern population and acreage of the land.

District	Land area (Sq. Km.)	Population 1981	Population 2001	Density 2001
Jaffna	1020	738788	559619	583
Kilinochchi	1281	92000	127000	106
Mannar	2002	106000	152000	81
Mullaitivu	2517	77000	122000	50
Vavuniya	1967	95000	150000	81
Sri Lanka	65610	1484700	18732000	299

From the above statistics what we find that the Jaffna peninsula has a minimum acreage of land in Northern Province with reasonably high population strength.

In 1981, the population of Jaffna peninsula was 738,788. According to Malthusian theory of population, the population will double every 25 years. Accordingly, the population of the Jaffna. peninsula must have approximated to 1500000. Nevertheless, according to the census made by srilanka in 1981 and statistics of Jaffna district, the average population of the Jaffna peninsula must have been 1200000 now. But the population of the Jaffna peninsula was found to be 559,619 in 2007/2008. Thus, a remarkable decline in the population of Jaffna peninsula is observable. That is to say, the population has diminished more than half fold when compared with what the population had to be in 2007/ 2008 in the Jaffna Peninsula.

It is worth mentioning that there will be a remarkable change in the Present statistics of the population of Jaffna peninsula because of the influx of people to the Jaffna peninsula and the resettlement of the displaced people after the war in the coming years.

The causes for the reduction of the population are as follows:

1. Migration of a sizable portion of the population to foreign countries following the ethnic conflict. 2. Death of several people particularly younger generation entrapped in war. The death of several thousands of fertile youngsters is one of the prime cause for the marked decline of the population.
3. The internal displacement of several lakhs of people.
4. The number of children in each family has been reduced.

Land use pattern Jaffna District 2003

The following table shows pattern of land use in the Jaffna district.

Se.No	Category	Area (hectares)
01	Paddy	7598
02	Arable crops	11183
03	Fruit crops	1819
04	Coconut	2918
05	Palmyra	12775
06	Economic trees	870
07	Rocky lands	3000
08	Sandy soil or shrubs	12000
09	Saline, Alkaline & Barren lands	16000
10	Buildings, Roads other Homestead Lands	22000
11	Area under Inland water	4160
12	Land which cannot be cultivated	2000
13	Land damaged by permanent crops	6000
	Total	**102323**

(Source: statistical information, 2008)

According to statistics, paddy and other crops occupy an important place in Jaffna economy. Palmyra products play a dominant role in the livelihood of Jaffna people.

Mineral resources

1. Salt

An important mineral resource found in Sri Lanka is salt. Salt is manufactured in three places in the Northern Province such as Elephant Pass, Cemmani and Mandan.

2. Silicon

Silicon is found at Nagar Kovil. It is used as a raw material for manufacturing cement . Silica is al so found in the areas surrounding the Vallipuram temple.

3. Clay

Clay is one of the mineral resources found in Jaffna

4.Limestone

Limestone is a mineral found in the coastal belt. This is found in abundance at Kankesanthurai and Myliddy. This can be used for the production of cement. Till 1987, the K.K.S cement factory fulfilled the needs of the cement to a considerable extent. If this factory is developed to the international standards its production would have been much higher in both quantity as well as quality. But unfortunately when the war broke out it was closed.

Energy resources

The following renewable resources are found in Jaffna.

1. Solar energy
2. Wind power
3. Waves.

1. **Solar energy**

Sunlight is available on most of the days in the Northern Province. By exploiting the solar energy, we can get power

2. **Wind Power**

Wind power is found abundantly as the main source of energy . In the Jaffna district, formerly wind mill functioned.

3. **Waves**

There is an abundance of waves. Using this resource, electricity can be produced by the use of alternative energy resource. We can thus save the money spent on petroleum products.

Fish Resources

The climate as well as geographical environment is conducive to fishing now. Production of fish is proportionately lower than the actual fish resources in the Jaffna peninsula. Since the outbreak of war in 1983 there has been a remarkable slump in fish production. In 1983, Jaffna peninsula recorded the highest production in fishing but the communal riot that broke out and the war that escalated and continued till may 2009 occasioned reversal of this trend.

The following statistics show the production of fish in the Jaffna Peninsula

Year	Fish Production (In MT)	Average monthly Fish product in(MT)
1983	48677	4056.42
1984	23157	1929.75
1985	23775	1981.25
1986	13053	1087.75
1987	1981	165.08
1988	24702	2058.50
1989	25078	2089.83
1990	21639	1803.25
1991	1191	99.25
1992	1327	110.58
1993	1514	126.17
1994	3102	258.50
1995	2263	188.58
1996	1540	128.33
1997	2762	230.17
1998	2428	202.33
1999	3232	269.33
2000	2211	184.25
2001	2676	223.00
2002	5311	442.58
2003	21206	1767.17
2004	21310	1775.83
2005	15157	1263.08
2006	13431	1119.25
2007	2963	246.92
2008	1373	228.33

(Source: Department of Fisheries and Aquatic Resource, Jaffna)

1. The surveillance zone of the maritime areas act.

This act was promulgated by the government in 1985 and strictly enforced. Following this act fishnets were permitted to venture into the sea only 3km. This inevitably led to the strait jacketing of fishing. As such the fishermen were denied the freedom to move to areas where fish were found in abundance.

2. Ban imposed on the fishing equipment.

The outboard motor and motor mechanized boat and small scale mechanized boat were prevented from being used. There were difficulties and sometimes even obstacles found in bringing the fishing equipment and their accessories.

3. The virtual paralysis of transport and the lack of marketing facilities.

Following the war, the only land route (A9) that connects Jaffna with Colombo was closed. As a result, it was impossible to market the produce of the fishermen. The required fishing equipments have not been brought to Jaffna because of the closure of the rout.

4. The pass system and restriction of time.

If the fishermen want to venture into the sea, they must posses a pass. It was very difficult to get the pass .Nobody can venture into the sea before 5 AM. The fishermen who return late from the sea were punished.

5. Displacement of fishermen.

There are army camps in all the maritime areas. Because of the war and army camp, most of the fishermen have been displaced. According to the estimation, 102,808 fishermen from 22,568 families were found in the Jaffna peninsula. But in1995, 10,698 families were found.

6. Night curfew.

Since 1995 the curfew has been in force. As such this led to a marked decline in the percentage of fish production. If Sri Lanka is to compete with other countries in fishing, the government should take the initiative with appropriate steps to step up the production of fishing in Jaffna.

To make this a success what ought to be done is the removal of the restrictions on the fishing equipments to be brought to Jaffna .

Livestock

Livestock breeding is lucrative and that is why local agriculture pays equal attention to both livestock breeding and cultivation of paddy, subsidiary food crops and cash crops. Such as to tobacco. InJaffna,80% of the population lives in rural areas with a family rearing 2 or 3 domestic animals such as cow, goat, sheep which are a source of income for their livelihood.

Opportunities for Private Investment

There are opportunities found in Jaffna for investment in the following sectors.

1. Agro based industry.

Tinned fruits, Juice and Jam

Fruits such as plantains, mangoes, jakfruits, grapes, tomatoes are grown in Jaffna. Making use of these fruits one can produce jam, juice etc. Private investors can reap a high degree of profit through their investments in the so-called industries.

2. Factories for manufacturing coir and fibers

Coconut trees and Palmyra trees are found in Jaffna peninsula. Using this resource we can produce more coir & fiber products.

Trade

Furniture and electronic items

Because of war and closure of the A-9 route, there was stoppage for the free inflow of electronic, electrical and modern furniture items into Jaffna peninsula. Now the people have a great desire to purchase all these items. An investment in this trade will enable investors to gain a considerable profit.

Private hospital

There are no private hospitals well equipped with sophisticated instruments and the service of consultants to meet the needs of the patients who suffer from various ailments. However there are some private hospitals functioning with very meager facilities and they have out patient departments pharmacies and facilities to channel the service of consultants who work in the Teaching hospital ,Jaffna.

For instance, sad state of affairs in Jaffna is that the patients suffering from various heart ailments are advised to go to Colombo private hospitals for the purpose of angiogram, angioplasty, pace-maker and by-pass surgery which cost the patient a fortune.

An investment in the establishment of a private hospital will serve the dual purpose of rendering great service to the pubic and substantial income to the investors.

Education

The people of Jaffna are desirous of following professional courses and information technology. Private investors in this field can earn good deal of money through investment in this regard.

Cement factors

There was a cement factory at Kankesanthurai which was closed following the escalation of war. An investment in cement factory is a profitable venture as the basic raw material is found in Jaffna area in abundance and a well trained labour force of people already employed in the cement factory till the outbreak of war is available. By the re-establishment of the cement factory import of cement can be considerably reduced.

Child care centre

Sometime ago the joint family system existed in the Jaffna peninsula. It has ceased to exist and we find only single families now.

In single families, both husband and wife go to work. Thus, parents encounter difficulties in the proper care of children. Members of single families happen to be deprived of the help of aged, experienced parents. As such there is the growing need for the child care centers.

Fisheries industry

There is better scope for the fishing industries particularly manufacturing of fishing nets, catamarans, freezing of fish and so on

Tourism and Hotel

There is no modernized hotel or luxury hotel to cater to the various tastes of tourists.

Recreational Park

There are only two or three very small recreational park which could attract a vast number of people

Conclusion

It is undoubtable that in the post-war situation the investment in the Jaffna peninsula will yield substantial profit and generate employment. To attract massive investment in the Jaffna peninsula government should pay rapt attention to the development of the infrastructure, particularly, in the construction of roads, highways, railway, and supply of electricity, water, urban development and so on. To accelerate the process of the development of the Jaffna peninsula it is for the government to obtain foreign funds and aid and effectively utilize it for the development of the Jaffna peninsula.

When investments increase combined with the massive socio-economic infrastructural development, the people of Jaffna peninsula could enjoy the undermention benefits.

1. The generation of employment
2. The augmentation of people's income
3. Progress in the standard of living
4. Urban development coupled with development
5. Opportunities for the people to enjoy the best infrastructural facilities
6. The growth of trade and surplus from it

It is no exaggeration to say that the far-sighted massive investment will confer innumerable benefits on the people of the Jaffna peninsula.

References

Statistical information-Northern province-2007,2008

Statistical hand book -2006,2007,2008

Various Central Bank reports Statistical information-Jaffna District-2004,2008

Vulnerability-Poverty Profile(Jaffna District).CIRM,2006,2007

Hand book,Department census and statistics,1981,1998,2001,2007.

Prayer

Where the mind is without fear and the head is held high;

Where knowledge is free;

Where the world has not been broken up into fragments

by narrow domestic walls;

Where words come out from the depth of truth;

Where tireless striving stretches its arms towards perfection;

Where the clear stream of reason has not lost its way

into the dreary desert sand of dead habit;

Where the mind is led forward by Thee

into ever-widening thought and action-

Into that heaven of freedom, my Father, let my country awake.

\- *Rabindranath Tagore*

பின்னிணைப்பு

சைவ வித்தியாவிருத்திச்சங்கம் தோற்றுவித்த பாடசாலைகளின் விபரம்

A நெடுந்தீவு

01. நெடுந்தீவு மேற்கு சுப்பிரமணியம் வித்தியாசாலை
02. நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தியாசாலை
03. நெடுந்தீவு சாரப்பிட்டி ஸ்கந்தா வித்தியாசாலை
04. அனலைதீவு சதாசிவ ஆங்கிலப் பாடசாலை
05. ஊரைதீவு திருநாவுக்கரசு வித்தியாலயம்
06. நெடுந்தீவு இராமநாதன் வித்தியாலயம்
07. நெடுந்தீவு வடமேற்கு மங்கயர்க்கரசி வித்தியாலயம்
08. நெடுந்தீவு வடக்கு மகேஸ்வரி வித்தியாலயம்
09. நெடுந்தீவு செல்லம்மா வித்தியாலயம்
10. நெடுந்தீவு புதுக்குடியிருப்பு பார்வதி வித்தியாலயம்

B புங்குடுதீவு

01. புங்குடுதீவு சித்திவிநாயகர் வித்தியாசாலை
02. புங்குடுதீவு சுப்பிரமணியம் வித்தியாசாலை
03. புங்குடுதீவு சண்முகானந்தா வித்தியாசாலை
04. புங்குடுதீவு மடத்துவேலி கமலாம்பிகை வித்தியாசாலை
05. புங்குடுதீவு இராசஇராசேஸ்வரி வித்தியாசாலை
06. புங்குடுதீவு ஸ்ரீதுரைச்சாமி வித்தியாசாலை

C வேலணை

01. வேலணை கிழக்கு சரஸ்வதி வித்தியாலயம்
02. சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம்
03. நாரந்தனை வடக்கு கணேச வித்தியாலயம்
04. கரம்பன் மேற்கு சண்முகநாத வித்தியாலயம்
05. வேலணை கிழக்கு சைவப்பிரகாச வித்தியாலயம்
06. அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்
07. வேலணை வடக்கு ஆத்திசூடி வித்தியாலயம்
08. வேலணை வடகிழக்கு ஐயனார் வித்தியாலயம்

D நயினாதீவு

01. நயினாதீவு நாகபூக்ஷணி அம்மன் வித்தியாசாலை
02. நயினாதீவு தெற்கு கணேச வித்தியாசாலை

E எழுவைதீவு

01. எழுவைதீவு முருகவேள் வித்தியாசாலை

F காரைநகர்

01. காரைநகர் கிழக்கு மறைஞான சம்பந்தர் வித்தியாசாலை
02. காரைநகர் மேற்கு மெய்கண்டான் வித்தியாசாலை
03. கரம்பன் கிழக்கு சிவகுருநாதர் வித்தியாசாலை
04. காரைநகர் சுப்பிரமணியவித்தியாசாலை
05. காரைநகர் தெற்கு விருப்பிட்டி கணேச வித்தியாசாலை
06. மண்டைதீவு கார்த்திகேய வித்தியாசாலை

G வலிகாமம் மேற்கு

01. சுழிபுரம் ஆறுமுக வித்தியாலயம்
02. பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம்
03. வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் வித்தியாலயம்
04. அராலி வடக்கு கணேச வித்தியாலயம்
05. அராலி வடக்கு இந்து ஆங்கில பாடசாலை
06. சங்கானை மேற்கு சிவப்பிரகாச வித்தியாசாலை
07. மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாசாலை
08. இளவாலை மெய்கண்டான் வித்தியாசாலை
09. பலாலி சித்திவிநாயகர் வித்தியாசாலை
10. ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை
11. சங்கானை கிழக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை
12. தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாசாலை
13. வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாசாலை
14. தையிட்டி தெற்கு சிவகுருநாத வித்தியாசாலை
15. சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை
16. மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை
17. அராலி தென்மேற்கு முருகமூர்த்தி வித்தியாசாலை
18. பண்டத்தரிப்பு இந்து ஆங்கில பாடசாலை
19. சங்கானை கிழக்கு துர்க்கை அம்மன் வித்தியாசாலை
20. சங்கானை மேற்கு சாந்தை அம்மன் வித்தியாசாலை
21. மாதகல் வடக்கு முருகமூர்த்தி வித்தியாசாலை

H வலிகாமம் வடக்கு

01. மயிலிட்டி ஞானோதைய வித்தியாசாலை
02. ஏழாலை மத்தி இந்து தமிழ் கலவன் பாடசாலை
03. ஏழாழை வட்டு விக்கினேஸ்வரா பாடசாலை
04. கதிரிப்பாய் சுப்பிரமணியம் வித்தியாசாலை
05. வசாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாசாலை
06. பொன்னாலை வரதராசப்பெருமாள் வித்தியாசாலை
07. ஊரெழு கணேச வித்தியாலயம்
08. சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்
09. இணுவில் சைவப்பிரகாச வித்தியாலயம்
10. மாரீசன்கூடல் சுப்பிரமணிய வித்தியாசாலை
11. கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாசாலை
12. தோப்பு அருள்நந்தி வித்தியாசாலை
13. நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை
14. ஈவினை விநாயகர் வித்தியாசாலை

I வலிகாமம் கிழக்கு

01. கோப்பாய் வடக்கு சரவணகவானந்த வித்தியாசாலை
02. ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தியாசாலை
03. புத்தூர் புதுக்கலட்டி விஷ்ணு வித்தியாசாலை
04. கோப்பாய் தெற்கு இருபாலை கந்தவேள் வித்தியாசாலை
05. புன்னாலைக்கட்டுவன் இந்து தமிழ் கலவன் பாடசாலை
06. அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை

J யாழ்ப்பாணம்

01. சிவியார்தெரு ஆனந்த வித்தியாசாலை
02. சேணியதெரு சன்மார்க்க ஆங்கில வித்தியாசாலை
03. திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலை
04. கொக்குவில் மேற்கு ஞானபண்டிதர் வித்தியாசாலை
05. வண்ணார்பண்ணை வைத்திலிங்கம் வித்தியாசாலை
06. திருநெல்வேலி செங்குந்தா ஆங்கிலப் பாடசாலை

07. கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாசாலை
08. கோண்டாவில் அன்னங்கை பரஞ்சோதி வித்தியாசாலை
09. நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை
10. ஆனைப்பந்தி குருநாதசாமி வித்தியாசாலை
11. கல்வியங்காடு சைவ வித்தியாசாலை
12. தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை

K தென்மராட்சி

01. மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம்
02. வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை
03. மீசாலை வடக்கு வீரசிங்கம் வித்தியாசாலை
04. மட்டுவில் வடக்கு சந்திரமௌலீசர் வித்தியாசாலை
05. மட்டுவில் தெற்கு சாந்தநாயகி வித்தியாசாலை
06. நுணாவில் மேற்கு கணேச வித்தியாசாலை
07. கோயிலாக்கண்டி மகாலக்குமி வித்தியாசாலை
08. மந்துவில் பாரதி வித்தியாசாலை
09. மறவன் புலவு சகலகலாவல்லி வித்தியாலயம்
10. நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாசாலை
11. கொடிகாமம் திருநாவுக்கரவு வித்தியாசாலை
12. மட்டுவில் வடக்கு கமலாசனி வித்தியாசாலை
13. கைதடி நுணாவில் சைவப்பிரகாச வித்தியாசாலை
14. வரணி கரம்பைக்குறிச்சி மாணிக்க வித்தியாசாலை
15. இடைக்குறிச்சி சுப்பிரமணிய வித்தியாசாலை
16. கல்வயல் சண்முகானந்தா வித்தியாசாலை
17. கச்சாய் நாகமுத்து வித்தியாசாலை
18. நாவற்காடு கணேச வித்தியாசாலை
19. சாவகச்சேரி சத்தியம்மன் வித்தியாசாலை
20. மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாசாலை
21. தனங்கிளப்பு சைவதமிழ்க் கலவன் பாடசாலை
22. கைதடி நாவற்குழி கணேச வித்தியாசாலை
23. கைதடி வடக்கு இந்து தமிழ் கலவன் வித்தியாலயம்
24. கெருடாவில் சைவ வித்தியாசாலை
25. கைதடி தெற்கு சைவ வித்தியாசாலை
26. விடத்தற்பளை கமலாசனி வித்தியாசாலை
27. எழுதுமட்டுவாழ் கணேச வித்தியாசாலை
28. கைதடி கிழக்கு கணேச வித்தியாசாலை
29. நாவற்குழி இந்து தமிழ் கலவன் பாடசாலை

L வடமராட்சி

01. உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாசாலை
02. இடைக்காடு புவனேஸ்வரி வித்தியாசாலை
03. தும்பளை சிவப்பிரகாச வித்தியாசாலை
04. அல்வாய் வடக்கு சுப்பிரமணிய வித்தியாசாலை
05. பொய்யிட்டி சரஸ்வதி வித்தியாசாலை
06. கட்டைவேலி ஞானாசாரிய ஆங்கில பாடசாலை
07. வதிரி தேவரயாளி இந்து ஆங்கில பாடசாலை
08. மருதங்கேணி சண்முக வித்தியாசாலை
09. யாக்கரை விநாயகர் வித்தியாசாலை
10. வல்வெட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை
11. கட்டைவேலி இந்து கலவன் பாடசாலை
12. அல்வாய் ஊர் ஸ்ரீலங்கா வித்தியாலயம்
13. திக்கம் சித்திவிநாயகர் வித்தியாசாலை
14. நாகர் கோவில் நாகேஸ்வரி வித்தியாசாலை
15. உடுப்பிட்டி வடக்கு இந்து தமிழ் கலவன் பாடசாலை
16. கப்பு கணேச வித்தியாசாலை
17. குடத்தனை சிவசிதம்பரம் வித்தியாசாலை

M பளை

01. சோறன்பற்றுக் கணேச வித்தியாசாலை
02. தட்டுவன் கொட்டி கண்ணகை அம்மன் வித்தியாலயம்
03. வெத்திலைக்கேணி பரமேஸ்வரி வித்தியாசாலை

N பூநகரி

01. பூநகரி அத்தாய் முத்துக்குமாரசுவாமி வித்தியாசாலை
02. பூநகரி மட்டுவில் மகேஸ்வரி வித்தியாசாலை
03. வேரவில் சைவத்தமிழ் கலவன் வித்தியாசாலை
04. விநாசியோடை பூநகரியான் இந்து தமிழ் கலவன் பாடசாலை

O வவுனியா

01 வவுனியா சைவப்பிரகாவ வித்தியாசாலை
02. ஒட்டிசுட்டான் சின்னத்தம்பி வித்தியாசாலை
03. வவுனியா பேயாடிகூழாங்குளம் ஸ்ரீமுரகன் வித்தியாலயம்
04. வவுனியா கோவிற்புதுக்குளம் ஸ்ரீகணேச வித்தியாலயம்
05. ஆசிகுளம் ஸ்ரீனிவாச வித்தியாசாலை

O முல்லைத்தீவு

01. முல்லைத்தீவு இந்து தமிழ் கலவன் பாடசாலை
02. முள்ளியவளை இந்து தமிழ் கலவன் பாடசாலை
03. தண்ணீரூற்று இந்து தமிழ் கலவன் பாடசாலை
04. ஆயிலடி சைவதமிழ் கலவன் பாடசாலை
05. செம்மலை தமிழ் கலவன் பாடசாலை
06. புதுக்குடியிருப்பு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை
07. பல்லவராயன்கட்டு இந்து தமிழ் கலவன் பாடசாலை

P மன்னார்

01. திருக்கேதீஸ்வரம் சைவ வித்தியாசாலை

Q பதுளை

01. பதுளை சரஸ்வதி வித்தியாசாலை

R நாவலப்பிட்டி

01. நாவலப்பிட்டி கதிரேசன் வித்தியாசாலை
02. பருத்தியடைப்பு கதிரேசன் வித்தியாசாலை
03. நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி

S கண்டி

01. கண்டி அம்பிட்டியா இந்து தமிழ் கலவன் பாடசாலை
02. குசலை இந்து தமிழ் கலவன் பாடசாலை

T கிளிநொச்சி

01. முரசுமோட்டை முருகானந்தா வித்தியாசாலை
02. கரவெட்டித்திடல் நாகேஸ்வரி வித்தியாசாலை
03. வட்டக்கச்சி ஐயனார் வித்தியாசாலை

U புத்தளம்

01. முந்தல் சைவதமிழ் கலவன் பாடசாலை
02. சிலாவத்தை இந்து தமிழ் கலவன் பாடசாலை

Ceylon Ordinance No. 23 of 1926

An Ordinance to incorporate the Hindu Board of Education

(Date of Governor' assent : January 24,1927)

(Date of commencement : January 24,1927)

HUGH CLIFFORD.

Whereas certain leading Shiva inhabitants of the Vorthern Province have established a society called and known in Thamil as Shiva Vithya Vriththi Sangam and in English as the Hindu Board of Education for the purpose of effectually carrying out and transacting all affairs connected with the said Board according to rules and regulations agreed to by its Directors :

And whereas the said Board has applied to be incorporated and it will be for the public advantage to grant the application :

Be it therefore enacted by the Governor of Ceylon, by and with the advice and consent of the legislative Council thereof, as follows :

1. This Ordinance may be cited as the Hindu Board for the Promotion of Education Ordinance, No 23 of 1926.

2. From and after the passing of this Ordinance the persons whose names appear in schedule I hereto and their respective successors elected in the manner provided by rules and regulations in schedule II hereto, or such other rules and regulations as may be in force at the date, of the election, shall be and become a corporation with perpetual succession 'under the name and style in Thamil of Saiva Vithya Sangam and in English of the Hindu Board for the Promotion of Education (hereinafter referred to as the Board, and by such name shall and may sue and be sued in all courts, with full power and authority to have and use a common seal and to change and alter the same at pleasure.

3. The general objects for which the Board is constituted are hereby declared to be

(a) To establish and maintain Hindu schools in Ceylon Where they are needed ;

(b) To take over and manage such of the existing Schools as may be handed to the Board for management ;

(c) To render all such assistance to existing Hindu Schools as may be considered necessary;

(d) To do everything that may be required to promote and popularize the education of Hindu children in Hindu Schools : and

(e) To encourage the study of Thamil literature, Music, and Drama.

4. The rules and regulations set forth in schedule II. hereto shall for all purposes be the rules of the Board : provided, however, that nothing in this section contained shall be held or construed to prevent the Board at all times hereafter form making fresh. rules and regulations, or from altering, amending adding to, or cancelling any of the rules and regulations in schedule II, hereto or to be hereafter made by the Board.

5. On the coming into operation of this Ordinance all and every property belonging to the Hindu Board of Education, whether held in the name of the said Board or the name or names of any person or persons in trust for the said Board, shall be and the same are hereby vested in the Board hereby constituted, and the same shall be held by Board for the purpose this Ordinance, subject to the rules and regulations for time being of the Board.

6. The Board shall be able and capable in law to take and hold any property, movable or immovable, which may become vested in it by virtue of any purchase, grant, gift testamentary disposition, or otherwise and all such property shall be held by the Board for the purpose of this Ordinance and subject to the rules and

regulations for the time being of the Board, with full power to sell, mortgage, lease, exchange, or otherwise dispose of the same for the purposes of the Board.

7. All debts and liabilities of the Hundu Board of Education existing at the time of the coming into operation of this Ordinance shall be paid by the Board hereby constituted, and all debts due to, and subscriptions or contributions payable to, the Hindu Board of Education shall be paid to the Board hereby constituted for the purposes of this Ordinance.

8. Nothing in this ordinance contained shall prejudice or affect the rights of His Majesty the King, his heirs and successors or of any body politic or corporate, or of any other persons, except such as are mentioned in this Ordinance, and those claiming by, from, or under them.

SCHEDULE

SET - A

1. The Hon. Mr. Ytialinaam Duraiswamy, B.A., M.L.C.
2. Mr. Canagaratnam Mudaliyar Chellappah.
3. Mr. Murugesar Sinnathamby Rasaratnam, B.A
4. Visvalingam Veerasingham, B.A
5. Mr. Saravanamuthu Sabapathipillai.
6. Mr. Muiugesu Saba Ratna Singhe.
7. The Hon. Sir Ponnambalam Ramanathan, Kt. K,C. , C.M.G., M.L.C
8. The Hon. Sir Arnbalavanar Kanagasabai, Kt,B.A
9. The Hon. Mr. Suppiramaniam Rajaratam, M.L.C
10. Mr. Visuvalinoam Sanmugalingam
11. Mr. Seenivasagam Kandaiya
12. Mr. Ambalavanar Naganathan, Muadliyar (Governor's Gate) J.P., U.P, M

SET - B

13. Mr. Subramaniam Sivapathasundatram, B.A
14. The Hon Mr. Thambia Mudaliyar Sabaratnam, M.L.C
15. Mr. Kandappar Muthukumaru
16. Mr. Sinnatamy Kanthar
17. Mr. Sithamparapillai Swaminathan, B.A
18. The Hon. Mr. Arumugam Canagaratnam, M.L.C
19. The Hon. Mr. Mailvahana Mudlr, Subramaniam, M.L.C
20. Mr. Kasinathar Vytialingam Marcanda Mudaliyar
21. Mr. Carthigesu Arinayagam
22. The Hon. Mr. Kothandaram Nadesa Iyer M.L.C
23. Mr. Sivagurunathar Kumaraswamy, B.A
24. Mr. Vairamuttu Nagalingam.

SET - C

25. Mr. Valupillai Ramasamy.
26. The Hon. Mr. Arunachalam Mahadeva, B.A., M.L.C
27. Mr. Arumugam Sellamuthu.
28. Mr. Wytialingam Vijayaratnam.
29. Mr. Vytialingam Pasupathipillai.
30. Mr. Arumugam Cathiravelu, J.P., U.P.M
31. Mr. Cathiravelu Muthukumaru.
32. Mr. Velupillai Ramalingam.
33. Mr. Kandavanam Ayadurai.
34. Mr. Columbuturai Kathiritamby Swaminathn, B.A.
35. Mr. Subbaiya Natesan, B.A., B.L
36. Mr. Arunasalam Chithambaranathapillai.

Mahatma Gandhi's Message to the Hindus

"You" (Hindus) have a right to control the education of your own children, and I am glad that you have got your own Board of Education. I would like you to strengthen that Board in the right spirit as much as you can but that should mean no jar whatsoever with the rival institutions of the Christian Missionaries. If you have got an ably manned staff of educationists and provide the necessary facilities for the Hindu children, naturally all the Hindu children will come to your institutions."

Extract from the message delivered to the Hindus of Jaffna on 27-

Hindu Education in Jaffna

A paper read by The Hon. Mr. S. Rajaratam, M.L.C

Before The Hindu Students' Movement, Colombo.

The chief characteristic of the Hindu throughout the ages has been his inordinate love of knowledge - knowledge of God and knowledge of the World. Learned men were held in the highest esteem, treated with the greatest reverence and were even worshipped as Saints. The amount of material wealth a man possessed did not weigh in the least with the ancients; it was the possession of knowledge and character that entitled a man to respect, love, and adoration. Even Kings had to do their homage to learned and saintly men. Knowledge was regarded as the highest of gifts. It is no wonder that a nation with so much love of knowledge should have evolved a system of education, that has won the admiration of eminent historians, who have made a comparative study of the educational systems that prevailed in the different parts of the world. Hindu India had her Universities which had acquired great fame. The knowledge imparted was both theoretical and practical. There were Brahman schools for the Brahman, the Kshatriya and the Vayshiya youths, where the Dharmashastras were taught. There were the village schools for all classes of people and every village had its own schools with its own master. Vocational and domestic training also were given to the young.

Rev. Keay in his book "Ancient Indian Education" says:

"Like the Muhammedan education with which it has many points of similarity, it (the Brahmanic education) was at least not inferior to the education of Europe, before the revival of learning.Not only did the Brahman education develop a system which survived the crumbling of empires and the changes of society, but they also, through all these thousands of ,years, kept aglow the torch of higher learning, and numbered amongst them many great thinkers who have left their mark not only upon the learning of India, but upon the intellectual life of the world,"

"Side by side however with these (the Brahmanic, Bud¬dhistic, and Muslim systems) there grew up at some time and in most parts of India, a popular system of elementary edu¬cation which was opened generally to all-comers. It must have arisen to supply a popular demand for instruction in reading, writing and arithmetic and was made use of chiefly by the trading and agricultural classes."

Before the Portuguese conquest of Jaffna, it is well-known that the system of education that prevailed in India was in vogue in Jaffna also. Jaffna had over 500 temples. In these temples and in the madams attached to them the Puranas and other religious works were taught for the benefit of the literate as well as illiterate. Jaffna had its Brahmanic schools and the village schools. Medical science-theory and practice,-was well developed. Arts and crafts were handed down from father to son. Jaffna had its own poets and authors of repute and to mention a few, Arasakery wrote "Raguvamsam" and Sagarajasckeran and Pararaj asegaran wrote "Sagarajaseharam" and "Pararajaseharam."

Lieutenant-Colonel Colebrooke, one of His Majesty's Commis¬sioners of Inquiry upon the administration of the Government of Ceylon, in his report of 1831 has stated that the Tamils of Jaffna had brought their customs and learning from India.

HINDU EDUCATION UNDER THE PORTUGUESE.

With the advent of the Portuguese the decay of Hindu CULTURE starts. In this connection we should remember the words of Professor Ross: "Subjection to foreign yoke is one of the most potent causes of the decay of nations" ; and the words of Lajpat Rai :

"Political subjection is the punishment of social evils and national crimes, but once imposed it adds to their volume and intensity. It effectively checks any rejuvenation or reconstruction. It accentuates social evils and weaknesses. It leads to poverty in all its hideous forms, mental, moral, and physical. If ever any awakening comes it is delayed or checked and crushed by all the forces of law and diplomacy and cunning and fraud.."

De Olivera, the first Governor of Jaffna, ordered all the inhabitants to become Roman Catholics. He forced everyone to embrace Roman Catholicism, and had almost all the Hindu temples destroyed. All Hindu religious observances were forbidden. So Hindu religious worship had to be carried on secretly in shrines in dwelling houses. Even fasting was done secretly by the Hindus and the plantain leaves on which food was served were buried after use under the olas of roofs. De Olivera made the Catholic priests to be looked up to by the people by insisting on every applicant for any post getting certificates from Catholic priests. Catholic schools were established, and Hindu schools were closed. During this dark period Hindu education seems to have been imparted secretly in each house or rather thinnai.

HINDU DUCATION UNDER THE DUTCH.

When the Dutch succeeded the Portuguese, the people were forced to become Protestants. Conversion took place mostly in the school. They divided Jaffna into 32 parishes and in each parish there existed at least one school and one Church; every- child had to attend the Protestant school and all the people the Church. Failure to attend the school or church was punished by the imposition of heavy fines for the benefit of the school- master who was also the pastor of the church. This was supervised by a Board called the Scholarchal Commission, which after a few fitful attempts at reform allowed all the schools, each to look after itself without any control or supervision.

Owing to some dispute, between their Council and the Con¬sistory the Dutch in the later days of occupation of Jaffna allowed the Hindus to re-build their temples and perhaps schools.

HINDU EDUCATION UNDER THE BRITISH TILL 1841

When the British annexed Ceylon, they declared religious neutrality; and Hindu schools were openly conducted and grew in numbers and usefulness. The village Hindu schoolmaster carried on his useful profession openly but under most discouraging circumstances. In 1834 in Jaffna there were 239 Hindu Tamil Schools as compared with 160 Protestant Tamil and English Schools and 24 Catholic Tamil Schools. During this period the Protestant Missionaries alone were encouraged and financially helped by Government out of Ceylon's revenues.

Long before any Christian Missionary thought of establishing any English Schools in Jaffna, the Hindus of Jaffna under Brahmanie lead petitioned the Government either to start a Government English School or to subsidise a Hindu undertaking to run an English school. The Christian Government Officials, instead of helping the Hindus who moved in the matter, made the Missionaries to go to Jaffna and ultimately start English Schools to convert Hindu children to Christianity as a prize for the smattering of English imparted to them. In this connection it will be a source of pleasure to the Hindus to know that their co-religionists in Calcutta, Bombay and perhaps even in Madras, were the first to start English Schools. During the early days of British occupation of Jaffna the Government re-established the schools which the Dutch had established in the 32 parishes and placed them under the charge and supervision of the Protestant Archdeacon of Colombo, but by 1834 the number had gone down to 4. Though in 1834 a School Commission composed of "the Archdeacon and the Clergy of the Island, the agents of the Government in the districts and some of the civil and judiciary functionaries at the seat of Government" was established as a result of Lieutenant-Colonel Colebrook's report, it interested itself chiefly with a few Government Schools.

CENTRAL SCHOOL COMMISSION: 1841-1869.

In 1841 by a Minute of the Governor of the day the above School Commission was superseded by the Central School Commission, consisting of not less than 9 members, 3 of whom were to be a Clergyman of the Church of England, a Presbyterian Minister and a Roman Catholic priest or layman. This Commission had to appoint sub¬ Committees in each province, the Government Agent being an ex-officio" member, The other members were to he selected by the Central Commission on the same principles as to religious representation, Thus there was a representative clergyman of every Christian denomination on all the sub-Committees.

The Minute by which the Commission was appointed. also laid down the following instructions:

"Whatever may have, been the defects of the late Commission, it will be found, that in their schools, the Scriptures are read without objection by all. It will be the special care of the School Commission to exercise such caution as to raise no religious scruples on the part of any.

"But, though the general education of the whole population is the duty of the Commission, it will also he a most important portion of their duty, to promote the religious education of such of the community as belong to the Christian faith ; and the funds under their management will therefore be equally applicable to this purpose."

The composition of the Commission and the sub-Committee, and the instructions given tended to discourage non-Protestant schools.

The Catholic pamphlet of 1923 on the New Educational Policy of the Ceylon Government very rightly observes on the Minute of the Governor as follows:

"In the above document the School Commission is given the power to give at its option grants in aid of Private Schools. Mission - ¬that is Protestant-schools are not mentioned by name, but there was every expectation at the time that they would be treated with favour by the Commission, the majority of whose members were Protestants. The Mission Schools in fact had early come to receive Government recognition. Colebrooke informs us that after Government closed down its schools in the North in 1806 it had given some pecuniary assistance to the religious societies which had established Christian schools in those Districts,"

The same pamphlet says :

"There is no doubt that at this time Protestant schools enjoyed a prestige and were favoured with privileges, which placed them beyond competition by any other body of educationists."

Their disposition is clearly shown by the following resolution which they passed during the very first year of their creation.

"That it is the opinion of this Commission, that wherever there is a Colonial Chaplain, there ought to be a Boys' School attached to his church, and that the religious instruction of these schools should be left under the controlled direction of the Chaplain ; but that the secular education should remain under the genera direction of the Central School Commission."

Again in 1843 the unsatisfactory state of all the Government Schools in the North, led the Commission to offer grants to the various Missionary Societies in Jaffna and they allotted £200 to each of the Church and Wesleyan Missions.No restrictions as to the religious instruction appear to have been made in regard to these schools.

In 1859 one Catholic school at Trincomalee seems to have obtained Government grant, but it was not until 1862 that all the Catholic schools also began to get grant under the grants-in-aid. system by virtue of the rules passed by the Commission on 5th February, 1861. Rules III and VII ran as follows:¬

"III. Grants will be restricted to those schools only, in which some fee is exacted from the scholars; and no grant will be made to groups of schools, or to a school established in the neighborhood of an existing school of the same class,"

"VII. No grants will be made except on the following conditions, to which the applicant for a grant will be expected to subscribe, before he can receive the, grant."

1. That only the first hour of tuition of each day shall be devoted to Religious Instruction.
2, That the Religious Instruction shall be confined to a simple explanation of the-Bible, and the leading tenets of Christianity, and shall be conducted in such a spirit as to avoid, if possible, the exclusion of any scholar, on grounds of denominational teaching.
3. That no books, other than those approved by the Commission, shall be used in the School.

It is clear then that however efficient schools may be, a non - Christian school could not have got any aid from Government. When the Protestant schools had been systematically helped by a Pro¬testant Government by special subsidy till 1841, and by annual grants to each mission till 1861 and by grant-in-aid to each school after 1861, and when the Catholic schools also shared in the grant-in-aid system it is no wonder that the Hindus, who

were subjected to foreign rule for over three centuries, and who were not organised, failed to maintain their schools. Hindu education seems to have died in Jaffna except for a few thinnai schools and the study of the Puranas in temples and Madams. It is this, the cheapest and the most useful form of education, that kept the torch of Hindu Education burning during those days when the Missionaries were actively aided and abetted by the Government in the work of proselytism. It was during those days that Hindu children were asked to rub off the holy ash as a price for attending English Schools, notwithstand¬ing the Conscience Clause inserted in the minute of 1841 or the 1861 Code (for grant in aid to schools).

ARUMUGA NAVALAR'S EFFORTS.

It was at this time that the great Champion Hindu Reformer, Sri La Sri Arumuganavalar attempted the task of reviving Hindu education. He is really the founder of the present Hindu Education movement in Jaffna, He was at the head of every Hindu movement to uplift the people, and founded three Hindu Tamil Schools, one at Vannarponnai in about 1848, another at Chidamparam in India in about 1865 and a third at Kopay. He inspired the people to start many Hindu schools in Jaffna. Schools sprang up at Colombogam, Kandermadam, Pt. Pedro, Mathakal, Uduvil, Velanai and others places. These were conducted without any Government aid for many years. Though he had all the details of a scheme ready, he did not live to start the Orphanage and Free School to educate Hindu teachers and preachers,'When he found that Hindu children attending Christian English Schools were forced to rub off the holy ash, he started an English School and had a European at the Head for some tine. Owing to want of public financial support and the undue Competition. of Christian schools aided by Government he had perforce to close down the school

During this time he seems to have inspired Sir Muttu Coomra¬swamy to move with success in the Legislative Council,

"That a Committee be appointed to inquire into and report upon the state and proposals in Education in the Island; the amount of success which has attended the working of the present system of Education and any improvements that may be deemed advisable to make thereon,"

Accordingly a Committee was appointed and it made its report (Sessional Paper VIII of 1867).

Government acting on this report abolished the Central School Commission and appointed in 1869 a Director of Public Instruction and accepted the principle that: "the grants will be made with the special object of expanding and improving the secular education of the people, and will be given impartially to all schools (so far as the fund at the disposal of Government may admit) which impart a sound secular education upon the conditions to be specified in the rules (Codes), and where doctrines are inculcated not inconsistent with the good of society, i.e *non contra bonos mores."*

The Education Code issued in 1869 by the Director of Public Instruction contained the following Clauses:¬

"From January 1st, 1870, the salaries of teachers of Govern¬ment schools, and the only kind of grant to aided schools, will depend on the ascertained results of secular instruction.

With reference to aided schools, the grant will be directly payable to the proprietory authorities, with whom the teachers will make their own terms."

The 1867 Report' further wanted an English School established by Government in Jaffna. According to Arumuganavalar the school was maintained for a few years and was closed down as the result of the influence of Missionaries who were alarmed at the prospect of Hindu boys being able to obtain an English education at a non¬ Christian English school.

From 1870, the non-Christians were in theory able to get financial aid, but it was given only if they (the Hindus, the Buddhists, and the Muslims) cleared the artificial hurdles erected by the Education Code from time to time.

The torch of Hindu Education however which was lit by Arumuganavalar has been kept burning by the Hindus of Jaffna. The difficulties they had to contend with were summed up' by Sir (then Mr.) P. Ramanathan in the Legislative Council in 1884 when he said:

"Intolerance on their (the Missionaries) part appears to have varied with varying times and circumstances, but it is specially observed at the present day ever since the Champion Reformer of Hindus in the Northern Province (Arumuga navalar) died in 1878."

THE JAFFNA SAIVA PARIPALANA SABHAI

Sometime after the death of Arumuganavalar the Jaffna Saiva Paripalana Sabhai was organised by Vidvasironmany Ponnampalampillai, a talented nephew of Arumuganavalar. It was subsequently managed by Mr. Chellappapillai, a retired Judge, and others. It maintained Saiva preachers, started the paper called "Hindu Organ" and the Jaffna Hindu College in 1889. The College was registered for grant in 1895. The Hindu College is to-day what it is owing to the untiring efforts of Mr. Nagalingam, Advocate, Mr. Pasupathichettiar, Mr. Casipillai, Proctor, and Mr. Sapapathy, Editor. It is now under the management of Mr, Duraiswamy. It has a Board of Management incorporated by Ordinance No, 6 of 1902 and Sir A. Kanagasabai was its President till his death,

SIR P. RAMANATHAN'S SERVICES.

What Sir P. Ramanathan has done for the cause of education in general and Hindu Education in particular is more than what any other Ceylonese, living or dead, has done. He has spent over one million rupees in founding and endowing the Ramanath.an College far Girls and the Parameshwara College for Boys. They are being managed and financed by him now. For the, Girls' College he has executed a deed of trust by which the Trustees are to carry it on after him. The Boys' College he has incorporated by Ordinance No. 7 of 1925 which has created a Board to manage it. The two great souls that can never be forgotten by posterity in connection with Hindu Education in Jaffna are the late Arumuganavalar and our veteran Knight Sir P. Ramanathan.

Mr. Malavarayar Kandiah of Puttur, the millionaire of Jaffna, is building at a great cost the *Malavarayar Kandiah College, and it is going to be opened in 1930. There are many other philanthropists who have in like manner started other Colleges and Schools and are running them with great efficiency.*

HINDU EDUCATION IN RECENT TIMES

The Hindu Tamil Schools that are existing to-day were started as the result of the efforts of Arumuganavalar who started his preaching campaign in 1847. Any Hindu School that had existed before his days was either closed during the time of the Central School Commission or was placed under Missionary control for the purpose of getting the Government subsidy. The Missionaries secured not only the management of these Hindu schools but also the ownership of the land and buildings.

Tile number of Hindu Tamil Schools is now approximately 150. Till recently it was extremely difficult to start a Hindu Tamil School. The Missionaries having gained positions of vantage during the Central School Commission days would not cooperate with the Hindus when they wanted to give their children education on Hindu lines but began to put with success obstacles in their ways. This they achieved by the hearty co-operation of Christian officials and by getting the Education Code drafted from time to time to suit their purposes. I know of one instance where a Vidhane started a Hindu School for the children of his locality. The matter was brought to the notice of the Government Agent. He sent for the act of appointment and when the Vidhane had handed over the same to him he said

"I want you to give up the school; otherwise you will have to cease to be a Vidhane,"

The Vidhane promptly replied that he saw no reason why he should cease to be a Vidhane for doing such a great Dharma. Ultimately the Vidhane lost neither his job nor his soul. Instances of threats and undue influence of this type are many.

DIFFICULTIES IN THE WAY OF PROGRESS

Let us examine a, little more in detail the manner in whIch the Code regulations worked to the disadvantage, often to the hardship of Hindu schools. You have seen that Rule 3 of the Rules for Grant-in-Aid of 1861 laid down :

"And no grant will he made to groups of schools or to a school established in the neighborhood of an existing, school of the same class."

The neighborhood was not defined by this Rule. By later Codes this was defined as one mile and subsequently as quarter of a mile under certain circumstances. In practice this provision worked

thus. Once a Mission school was established naturally in the centre of a Hindu village, the Hindu schools had to be started at the 4 ends of the village, which ordinarily cannot be outside the 2 mile limit. This rule. was enforced till it was practically abolished in 1926. Mr. D. B. Jayatilaka told me how a Buddhist school built at great cost had to be pulled down and built in the same compound about a few yards from the original position to comply with the ¼ mile clause. In Jaffna I know of instances where people who originally had donated the land and building to the Missions started Hindu schools close to them; being unable to get the schools registered they gave them up and became bankrupt. After 1926 these schools were started by their heirs and have now been registered within one year and the Mission schools which did not have a single Christian child on their rolls had to be closed down.

Another point in the Code was that no new school could apply for grant-in-aid unless it had been in existence for five years. Subsequently the period was reduced to two years perhaps in 1919. The effect of this was that a new school was forced to gain a tradition of inefficiency besides involving the Manager in financial loss. Many a school succumbed under this test, but such of them as survived are having a vigorous life. From 1926 anyone can have a, school registered within one year. The latest Code published in July this year makes provision to have a school registered within a few months of its starting. These two points along, with a few other minor points I succeeded in wresting from the overnment by giving notice of a motion, in Council. Sir A. C. M. Fletcher, our last Colonial Secretary who invited me for an interview, was convinced of the justice of the position I took up, and after the principle was perhaps approved by the Governor in Council directed the Director of Education to amend the Code. Accordingly it was done, I having been in the meantime appointed to serve on the Board of Education.

Formerly, the Director of Public Instruction seems to have got the advice of Missionaries in drafting the Code from time to time. In 1896 a few Missionaries and some Christian gentlemen were appointed as a Board of Education to advise the Director. It was with the greatest difficulty and after a good deal of agitation that the first non-Christian was appointed to this Board and Mr. D. B. Jayatileke who was then managing, many Buddhist Schools was the first to enjoy this privilege. The present Board of Education is appointed under the Education Ordinance of 1920. The composition of it was very unsatisfactory. In open council I criticised it. I had the authority of the Sadler Commission which recommended that the majority of a Board (similar to our Board of Education) should consist of non-official members ; and that a Board of 15 members should include three representatives of the Hindu interests three representatives of the Muslim interests. Perhaps as a result, of my criticism 3 more non-Christians were appointed making the number of non-Christians 8 out of 20. Now the number has gone down to 7. I think that at least another 3 non-Christians should be appointed thus rnaking, 50 percent on the Board Christian and the Other 50 percent, non-Christian. Should not 90 per cent, of the people have at least 50 per cent of the representation, if not an effective majority on a Board that controls the education of their sons and daughters.

When the Central School Commission, which was entirely Christian, had a majority of Pretestants, Dr. Bonjean, a Catholic Archbishop, said :

"It must be acknowledged that the great preponderance given to Protestant element in the composition of the Commission............was well calculated to inspire Catholics with fear and mistrust."

The 1905 Education Commission should be thankfully remem¬bered by all of us for the following observation:

"There is something anomalous in a system under which funds raised by taxation are used to support a movement for changing the religion of those taxed."

The Catholics stated in their pamphlet of 1923 that the Protestant Schools were established for the conversion of the Ceylonese. ***They said:***

"Their schools, which were largely subsidised from England and America, had their object-and this was

the object too for which they received funds-the conversion of the natives. If compulsory education were introduced, they know they would not be able to give a wholly religious education on account of the presence of the Conscience Clause and the fact that in their schools they would have comparatively but a small number of children of their own particular Denomination. But the raison d'etre of their school work was the teaching of Christianity. If then the Educational system did not allow them to do this in their own way their mission as an Educational body was over."

In Bengal Lord Macaulay, having made his famous Minute on Education which would encourage theMissionaries to establish schools, wrote to his father:

"The effect of this education on the Hindus is prodigious. No Hindu who has received an English education ever remains sincerely attached to his religion. Some continue to profess it as a matter of policy, but many profess themselves pure deists and some embrace Christianity. It is my firm belief that if our plans of education are followed up there will not be a single idolater among, the respectable classes in Bengal thirty years hence."

We know that although the Catholic Schools are primarily established for Catholic children yet Hindus are admitted and every year not a few Hindus are converted to Catholicism,

THE HINDU BOARD

In December 1923, the Hindu Board for the Promotion of Education was started. Its objects are mainly five-fold, viz :

(a) To establish and maintain Hindu schools in Ceylon where they are needed ;
(b) To take over and manage such of the existing schools as may be handed over to the Board for management ;
(c) To render all such assistance to existing Hindu schools as may be considered necessary;
(d) To do everything that may be required to promote and popularize the education of Hindu children in Hindu Schools; and
(e) To encourage the study of Tamil literature, music, and drama.

Its constitution has been carefully drawn up on democratic lines. It will have no place for the arm-chair critic. Every Hindu who pays Rs. 100 or Rs. 10 annually is entitled to elect the Directors who have to pay Rs. 1,000 or Rs. 50 annually. Failure to pay costs the Director his seat on the Board. It has been incorporated by Ordinance No. 23 of 1926. It has 58 schools under it including the Training Institute and the Orphanage for Boys. The Hindu Community will be failing in its duty if it does not establish an Orphanage for girls. This is a crying need.

The Hindu Education movement in Jaffna aims at preserving the distinctive culture of the Hindus. The first step is to take possession of our village schools; for the nation lives in the cottage. The most impressionable period of a man's life is childhood. If at this period, we allow our children to study in schools where an atmosphere which is entirely at variance with the home atmosphere prevails, and where the ancient culture is often ridiculed, and another offered in its place, we cannot hope to preserve our culture or augment it. Hence the necessity for schools full of Hindu atmosphere whose influence will only reinforce and supplement the home-influence and not be in conflict with it. I do not say that our schools have, already fully acquired the atmosphere, but this is the ideal in view.

The Hindu Educational movement in Jaffna is not a movement against Christians or anybody else. It is simply a movement for self-preservation; and aims at putting our own houses in order without external interference. Sometimes putting our house in order may cause some heartburning to those who for some time usurped the right of putting our house in order. But we cannot help it. The movement does not aim at interfering with others's rights, but confines itself only to asserting ours. We do not want to tread on other people' toes, nor do we want to allow others to tread on ours.

Western culture is great and glorious in its own way; we should assimilate all that is best and noblest in it; but we should not let our culture be supplanted by any other. That is what we have to bear in mind.

CONCLUSION.

You have seen how under the cruel laws of the Portuguese and the Dutch, Hindu religious practices were prohibited and Hindu education was

killed. You have also seen how under the professed religious neutrality of the British, the Christian Government officials, helped the Christian Missionaries to discourage, if not suppress Hindu educational institutions and to convert the Hindu children, who for want of educational facilities, had to go to Christian institutions in search of knowledge. You have also seen how the rules for grant-in-aid worked unjustly, and what a steady fight our leaders of the past generation and the present generation had to put up to wrest from Government the recognition of the elementary right of the Hindu, to start Hindu schools wherever needed.

Our position is safe if we act promptly and unitedly otherwise we may be left behind in the march of nations. May I summarise our needs ?

We want more Hindu schools where our Shastras can be taught more fully.

We want more Hindu teachers burning with love and enthusiasm for their religion and work.

We want more preachers learned in the Shastras leading a religious life to command the respect and confidence of the people.

We want more Hindus with the courage of their conviction to live up to their religion,
We want the Hindus to give up the slaughtering of animals, Nautch dance, and fire-works in temple-as advocated by Arumuga Navalar.

We want a more intense study of our Puranas in temples and Madams and schools.

We want all the Hindus to be more united in up-lifting Hinduism.

We want clean thought, clean words and clean action from every Hindu.

We want plain living and high thinking,

And finally, we want every Hindu child educated in Hindu schools where he shall be able to get the best education-that is the goal we should strive to roach,

Well, you consider a man as educated if only he can pass some examinations and deliver good lectures. The education which does not help the common mass of people to equip themselves for the struggle for life, which does not bring out strength of character, a spirit of philanthropy, and the courage of a lion - is it worth the name? Real education is that which enables one to stand on his own legs. The education that you are receiving now in school and colleges is only making you a race of dyspeptics. You are working like machines merely, and living a jelly - fish existence.

Education is not the amount of information that is put into your brain and runs riot there, undigested all your life. We must have life building, man - making, character - making, assimilation of ideas. If you have assimilated five ideas and made them your life and character, you have more education than any man who has got by heart a whole library. If education were identical with information, the libraries would be the greatest sages in the world and encyclopaedias the Rishis.

In India there never was any religious persecution by the Hindus, but only that wonderful reverence, which they have for all the religions of the world. They sheltered a portion of the Hebrews, when they were driven out of their own country; and the Malabar Jews remain as a result. They received at another time the remnant of the Persians, when they were almost annihilated; and they remain to this day, as a part of us and loved by us, as the modern Parsees of Bombay. There were Christians who claimed to have come with St. Thomas, the disciple of Jesus Christ; they were allowed to settle in India and hold their own opinions; and a colony of them is even now in existence in India. And this spirit of toleration has not died out. It will not and cannot die there.

- Swami Vivekananda

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பணிப்பாளர் சபை

27.03.1993 இல் பொறுப்பேற்ற பணிப்பாளர் சபை

1. பேராசிரியர் அ. சண்முகதாஸ் - தலைவர்
2. திரு. ஆ. மகாலிங்கம் - உபதலைவர்
3. திரு. இ.சு. நடராசா - உபதலைவர்
4. திரு. சோ. பத்மநாதன் - செயலாளர்
5. திரு. நா. குழந்தைவேலு - பொருளாளர்
6. திரு. ஆறு. திருமுருகன்
7. திருமதி மனோன்மணி சண்முகதாஸ்
8. திரு. சு. பசுபதி
9. திருமதி கனகசுந்தரி சிதம்பரநாதன்
10. திரு. தி. திருநந்தகுமார்
11. திருமதி லலிதா மகேந்திரன்
12. திரு. ச. சிவானந்தராஜா
13. திரு. சி. சக்திக்கிரீவன்
14. திரு. பா. நந்தகுமார்
15. திரு. எஸ். சிவலிங்கராஜா
16. திரு. இ. ஜெயராஜ்
17. திரு. க.வை. சிவநேசன்
18. திரு. ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
19. திரு. அ. செந்திலிங்கம்
20. திருமதி கலைவாணி இராமநாதன்
21. திருமதி நாச்சியார் செல்வநாயகம்
22. திரு. க. கனகரட்ணம்
23. திரு. பொ. விக்னேஸ்வரன்
24. கலாநிதி க. கனகராசா
25. திரு. இ. நடராசா

1998 இல் பொறுப்பேற்ற பணிப்பாளர் சபை

1. பேராசிரியர் அ. சண்முகதாஸ் - தலைவர்
2. திரு. சு. பசுபதி - உபதலைவர்
3. திரு. ப. கோபாலகிருஷ்ணன் - உபதலைவர்
4. திரு. சோ. பத்மநாதன் - செயலாளர்
5. திரு. த. அருணகிரிநாதன் - துணைச்செயலாளர்
6. திரு. வீ. சகாதேவசங்கரி - பொருளாளர்
7. திருமதி ம. சண்முகதாஸ் - இல்லத் திட்டப்பணிப்பாளர்
8. திருமதி நா. செல்வநாயகம் - கல்வித் திட்டப்பணிப்பாளர்
9. திரு. வீ. ஸ்ரீசக்திவேல் - பண்ணைத் திட்டப்பணிப்பாளர்
10. திருமதி க. இராமநாதன் - சமயத் திட்டப்பணிப்பாளர்
11. திரு. க. நித்தியானந்தன் - தொழில் திட்டப்பணிப்பாளர்
12. வைத்திய கலாநிதி வி. வேதநாதன் - சுகாதாரத் திட்டப்பணிப்பாளர்
13. திரு. சி. வீரகத்திப்பிள்ளை
14. திரு. கு. சிவராஜசர்மா

15. திரு. ஆ. ஜீவரத்தினம்
16. திரு. ந. ஜெயதிலகன்
17. திரு. அ. செந்திலிங்கம்
18. திருமதி சோ. கிருஷ்ணகுமார்
19. செல்வி சா. கந்தசாமி
20. திரு. க. செ. துரைரத்தினம்
21. திரு. இ. குகதாசன்
22. திரு. க. மகேஸ்வரன்
23. செல்வி செ. சிவசுப்பிரமணியம்
24. திரு. கு. செல்லத்துரை

2001 இல் பொறுப்பேற்ற பணிப்பாளர் சபை

1. பேராசிரியர் அ. சண்முகதாஸ் - தலைவர்
2. திரு. சு. பசுபதி - உபதலைவர்
3. திரு. ப. கோபாலகிருஷ்ணன் - உபதலைவர்
4. திரு. சோ. பத்மநாதன் - செயலாளர்
5. திரு. செ. த. குகானந்தா - உபசெயலாளர்
6. திரு. வீ. சகாதேவசங்கரி - பொருளாளர்
7. திருமதி ம. சண்முகதாஸ் - இல்லத் திட்டப்பணிப்பாளர்
8. திரு. ப. கணேசலிங்கம் - கல்வித் திட்டப்பணிப்பாளர்
9. திரு. ஆறு திருமுருகன் - பயிற்சித் திட்டப்பணிப்பாளர்
10. திரு. தி. சோமாஸ்கந்தராஜக் குருக்கள் - சமயத் திட்டப்பணிப்பாளர்
11. திரு. க. நித்தியானந்தன் - பண்ணைத் திட்டப்பணிப்பாளர்
12. வைத்திய கலாநிதி வி. வேதநாதன் - சுகாதாரத் திட்டப்பணிப்பாளர்
13. திருமதி கௌ. இராஜேந்திரபிரசாத்
14. திரு. சி. வீரகத்திப்பிள்ளை
15. திருமதி சா. அருளானந்தம்
16. திரு. இ. தவராஜா
17. திரு. ந. ஜெயதிலகன்
18. திரு. அ. செந்திலிங்கம்
19. திரு. க. அருந்தாகரன்
20. திரு. பொ. அரவிந்தன்
21. திரு. க. செ. துரைரத்தினம்
22. திரு. அ. தற்பரானந்தன்
23. திரு. க. மகேஸ்வரன்
24. திரு. க. அரியநாயகம்
25. செல்வி சி. செல்வரஞ்சிதம்

2004 இல் பொறுப்பேற்ற பணிப்பாளர் சபை

1. திரு. அ. தற்பரானந்தன் - தலைவர்
2. திரு. சோ. பத்மநாதன் - உபதலைவர்
3. திரு. ஆறு திருமுருகன் - உபதலைவர்
4. திரு. சு. பசுபதி - செயலாளர்
5. வைத்தியகலாநிதி வி. வேதநாதன் - உபசெயலாளர்
6. கலாநிதி திருமதி ம. சண்முகதாஸ் - நிதிச்செயலர்

7. திருமதி கௌ. இராஜேந்திரபிரசாத் - இல்லத் திட்டப்பணிப்பாளர்
8. வைத்தியகலாநிதி சு. சந்திரசேகரா - மருத்துவத் திட்டப்பணிப்பாளர்
9. திரு. வி. ஸ்ரீசக்திவேல் - கல்வித் திட்டப்பணிப்பாளர்
10. திரு. பொ. அரவிந்தன் - பயிற்சித் திட்டப்பணிப்பாளர்
11. திரு. க.செ. துரைரத்தினம் - பண்ணைத் திட்டப்பணிப்பாளர்
12. திரு. இ. குகதாசன் - சமயத் திட்டப்பணிப்பாளர்
13. திரு. வீ. சகாதேவசங்கரி
14. திரு. க. மகேஸ்வரன்
15. திரு. நா. கிருஷ்ணபிள்ளை
16. திரு. ந. ஜெயதிலகன்
17. செல்வி ந. செல்வஅம்பிகை
18. செல்வி சி. செல்வரஞ்சிதம்
19. திருமதி நா. செல்வநாயகம்
20. திரு. சு. பாலசண்முகநாதன்
21. திரு. க. நடராசா
22. திரு. ச. து. பாலதேவன்
23. திரு. த. சிவராஜா
24. திரு. தி. சோமாஸ்கந்தராஜக் குருக்கள்
25. திரு. அ. ஜீவாஅமிர்தம்

2007இல் பொறுப்பேற்ற பணிப்பாளர் சபை

1. திரு. அ. தற்பரானந்தன் - தலைவர்
2. திரு. க. மகேஸ்வரன் - உபதலைவர்
3. திரு. கா. நடராசா - உபதலைவர்
4. திரு. கே. வி. குணசேகரம் - செயலாளர்
5. திரு. சி. பத்மராஜா - உபசெயலாளர்
6. திரு. சோ. பத்மநாதன் - நிதிச்செயலர்
7. திருமதி சி. ராதாகிருஷ்ணன் - இல்லத் திட்டப்பணிப்பாளர்
8. வைத்தியகலாநிதி வி. வேதநாதன் - மருத்துவத் திட்டப்பணிப்பாளர்
9. திரு. வி. ஸ்ரீசக்திவேல் - கல்வித் திட்டப்பணிப்பாளர்
10. திரு. நா. நித்தியானந்தன் - பயிற்சித் திட்டப்பணிப்பாளர்
11. திரு. க.செ. துரைரத்தினம் - பண்ணைத் திட்டப்பணிப்பாளர்
12. திரு. தி. செல்வமனோகரன் - சமயத் திட்டப்பணிப்பாளர்
13. திரு. இ. தவராசா
14. திரு. சி. விஜயகுமார்
15. திரு. நா. கிருஷ்ணபிள்ளை
16. திரு. ஆ. வ. கணேசலிங்கம்
17. செல்வி இரத்தினம் சுப்பிரமணியம்
18. திருமதி ஹேமா குணபாலன்
19. திரு. சி. வீரகத்திப்பிள்ளை
20. திரு. க. நடராசா
21. திரு. ந. தவசோதிநாதன்
22. திரு. செ. த. குகானந்தா
23. திரு. ஆறு. திருமுருகன்
24. திரு. து. தனபாலசிங்கம்
25. திரு .நா. இராசநாயகம்

பெஷன் ஹவுஸ்

இல. 203 (65), கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

உங்களுக்குத் தேவையான சகல விதமான அன்பளிப்புப் பொருட்கள், எவர் சில்வர் சாமான்கள், அலுமினியப் பொருட்கள், பித்தளைக் குத்துவிளக்குகள், விளையாட்டுப் பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள் மற்றும் அன்றாட பாவனைக்குரிய சகல விதமான பாத்திர வகைகளையும்...

நியாயமான விலையில் பெற்றுக் கொள்ள நகரில் புகழ் பெற்ற ஸ்தாபனம்

FASHiON HOUSE

203 (65), K.K.S Road, Jaffna)

உங்கள் திருப்தியே எங்கள் வளர்ச்சி

- அழகு சாதனப் பொருட்கள்
- தையல் நூல் வகைகள்
- எவர் சில்வர் பிளாஸ்ரிக்
- அலுமினியப் பாத்திரங்கள்
- பாக் வகைகள்
- நவநாகரிக நங்கையருக்கு ஏற்ற லேஸ்
- சிறுவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள்

ஆகா அதுமட்டுமல்லாது!

சிறுவர்களுக்கு அதிநவீன விளையாட்டுப் பொருட்கள்

மொத்தமாகவும், சில்லறையாகவும் நியாய விலையில்

பெற்றுக் கொள்ள.....

வெளி

அழகு மாடம்

361, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 3227

யாழ் நகரின் மையத்தில் பஸ் நிலையம் முன்பாக

உங்கள் புடைவை மற்றும் ஆடைத் தேவைகளுக்கு......!

லைடன்

புடைவை நிலையம்

- யன்னல் திரைகள்
- படுக்கை விரிப்புக்கள்
- நுளம்பு வலைகள்
- துவாய்கள்
- T- ஷேட்டுக்கள்
- சூற்றிங் மற்றும்
- பெண்கள் சிறுவர்களுக்கான துணிவகைகள்
- றெடிமேட் ஆடைகளுக்கு

நீங்கள் நாடவேண்டியது....

லைடன் புடவை நிலையம்

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஆரம்பியுங்கள்!
சேமியுங்கள்!
வெல்லுங்கள்!

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி





உங்கள் குடும்பத்தின் புதிய உறவின் வருகைக்கு
முதலாவது அன்பளிப்பாக மக்கள் வங்கியின்

இசுறு உதான அன்பளிப்புச் சீட்டு



கல்விச் சிறார்களின் வளமான

எதிர்காலத்துக்கு

சிசு உதான கணக்கு

Sisu Udana

இளமைப் பராயத்தில் உயர் கல்வியைத் தொடரவும்,
வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்ளவும்

Yes Young Executive Savings

YES இளவயதினர் கணக்கு



பெறுமதியான பல்கலைக்கழக புலமைப்பரிசிலை வழங்கும்

YES FUTURE STARS கணக்கு

அதிஷ்டங்களை அள்ளித்தரும் மகளிருக்கான



வனிதா வாசனா கணக்கு

PEOPLE'S BANK
Vanitha Vasana

உங்கள் வயதிற்கும், தேவைக்கும் பொருத்தமான விதத்தில் மக்கள் வங்கியில்
சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பித்து வாழ்க்கையின் வெற்றிப் பாதைக்கு பிரவேசியுங்கள்

சிறிய முதலீடு... குறுகிய காலம்... மன ஆறுதல்... பெரியவனானதும் பெரிய தொகை...
இசுறு
சிறுவர் கணக்கு
உங்கள் பிள்ளைக்கு
18 வயதாகும் போது
ரூபா 1000,000
வரை
கொமர்சல் வங்கியின்
இசுறு சிறுவர் சேமிப்புத் திட்டம்
பிறந்த நாள் முதல் 16 வயது வரை உங்களுடைய பிள்ளைகளுக்கு அபூர்வமான சேமிப்புத்திட்டம்
உங்களுக்கு ஏற்ற மாதிரி இரண்டு முதலீட்டுத் தெரிவுகள்
மாதாந்தம் (ரூபா100 முதல் ரூபா 2500 வரை)
முழுத்தொகை (ரூபா 1000 முதல் ரூபா 117000 வரை)
வைப்பாளர்களுக்கு இலவச ஆயுள் காப்புறுதி
COMMERCIAL BANK
www.combank.lk

TAP YOUR POTENTIAL
REACH YOUR DREAMS






WITH A BOC Prestige PLUS PERSONAL CURRENT ACCOUNT AT YOUR SIDE

Bank of Ceylon proudly presents **Prestige** PLUS Personal Current Account Focusing exclusively on Professionals and Executives

BOC **Prestige** PLUS offers a host of facilities to match the imagination and catch the fascination of the busy Executive and the demanding Professional in you.

- Cheque Books - personalized to stamp your identify
- Free International Deposit Card - to surf through the continents
- Credit Cards sans joining fee - to march through a cashless society
- Internet and SMS banking - to access through the cyberspace
- Convenient Credit Facilities - to own a house, to roam on wheels

More and much more

For further Information Hotline : 2496196

Prestige PLUS
Personal Account

BANK OF CEYLON
BOC
Bankers to the Nation